
முத்துலட்சுமி ராகவன்
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ கை தொட்ட கள்வனே..! ★ முத்துலட்சுமி ராகவன்
கள்வனே..!

## முக்கிய அறிவிப்பு

இந்தக் கதை எனது சொந்தக் கற்பனையில் உருவானது.... இதன் பதிப்பிற்கான உரிமையை லட்சுமி பாலாஜி பதிப்பகத்திற்கு மட்டுமே தந்திருக்கிறேன்...

இதைத் தழுவி தொலைக்காட்சி தொடர்களையோ... திரைப் படத்தையோ எடுத்தாலும் இணையதளத்தில் என் அனுமதியின்றி வெளியிட்டாலும் நான் சட்ட பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்...

இப்படிக்கு

முத்துலட்சுமி ராகவன்

# முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# கை தொட்ட கள்வனே...!

## 1



கூட்டமாக இருந்த பஸ் ஸ்டாப்பில் நகத்தைக் கடித்துத் துப்பியபடி நின்று கொண்டிருந்தாள் மாளவிகா..

'இன்னும் பஸ்ஸைக் காணோமே..'

அவளுக்குப் பதட்டமாக இருந்தது.. அருகிலிருந்தவர்களில் வழக்கமாக அவளது பஸ்ஸிக்குள் ஏறிக்கொள்பவர்களை அளவெடுத்தாள்.. எண்ணிக்கை குறையாமல் அத்தனை பேரும் அங்கேயே இருந்து வைத்ததில் அவளுக்குள் டென்சன் கூடியது..

'எல்லாமே போகலைன்னா.. எப்படி..? இத்தனை பேரும் தொற்றினா நான் படியில் கால் வைக்கக் கூட முடியாது போல இருக்கே...'

அவளுக்கு அழுகை வந்து விடும் போல இருந்தது..

'இதுக்குத்தான் அப்பாகிட்ட தலைப்பாடாய் அடிசசுக்கறேன்.. ஒரு டூவீலர் வாங்கிக் கொடுங்கன்னு..

கேட்டாத்தானே... எப்பப் பாரு.. பணமில்லைங்கிற பல்லவிதான்.. இதுவே அக்கா வந்து நின்னு கண்ணைக் கசக்கினா... அடிச்சுப் பிடிச்சுப் பணத்தை புரட்டிடுவாரு..'

திருமணமாகி புகுந்த வீட்டிற்கு அனுப்பி வைத்து விட்ட பெண் கண்ணைக் கசக்குவதற்கும்.. கல்லூரிக்குப் போகும் பெண் கண்ணைக் கசக்குவதற்கும் உள்ள வேற்றுமையைப் பற்றி அவளுக்கென்ன தெரியும்..? அவளுடைய அக்கா பூமிகா.. பெயருக்கேற்றார் போல பொறுமையானவள்தான்.. அன்பானவள்தான். அழகானவள்தான்.. ஆனால் அவளைத் திருமணம் செய்து கொண்ட கங்காதரனுக்கு அவையெதுவும் தேவையில்லையே..

அவனுக்குத் தேவையானதெல்லாம் பணம்.. பணம்.. பணம்தான்.. ஆடுகிற மாட்டை ஆடிக் கறக்கனும். அடிக்கிற மாட்டை அடித்துக் கறக்கனும் என்கிற வித்தை தெரிந்தவன் அவன்..

எந்தத் தகப்பனாவது பணத்துக்காக பெற்ற பெண்.. கட்டின கணவனிடமிருந்து அடியையும்.. உதையையும் வாங்கிக் கொள்வதை பொறுத்துக் கொள்வானா..? கடன் பட்டாவது.. அந்தக் கொடுமையிலிருந்து மகளை மீட்கத் தானே அவன் நினைப்பான்..?

அதை நாடி பிடித்து வைத்திருந்த கங்காதரன்.. பணத்தேவை ஏற்படும் போதெல்லாம் பூமிகாவை நாலு மொத்து மொத்துவான்.. அவள் கணவன் முன்னால் கண்ணீர் விடாமல் பெற்றவர்கள் முன்னால் வந்து மௌனக் கண்ணீரை விடுவாள்.. தாங்க மாட்டாத சிதம்பரம் அடித்துப் பிடித்து.. யார் கையிலோ.. காலிலோ விழுந்தாவது அவள் கேட்கும் பணத்தை வாங்கிக் கொடுத்து விடுவார்..

"உங்க மருமகனைக் கெடுக்கிறதெல்லாம் நீங்கதான்.."

பூமிகாவுக்கும்.. மாளவிகாவிற்கும் தம்பியாக பிறந்து விட்ட அஸ்வின் சீறுவான்..

"ஒரு தடவையாவது அந்த ஆள் கேட்கிற பணத்தைக் கொடுக்காம இருந்து பாருங்க.. அதுக்கப்புறமா எவ்வளவுதான் அக்காவைப் போட்டு அடிச்சாலும் இங்கேயிருந்து பணத்தைப் பிடுங்க முடியாதுன்னு அந்த ஆளுக்கே தெரிஞ்சு போயிடும்.. இது தேறாத கேஸ்ன்னு வாலைச் சுருட்டிக்கிட்டு இருப்பாரு.."

அஸ்வின் இப்படிச் சொல்லும் போது.. பூமிகா குற்ற உணர்வுடன் தலை கவிழ்ந்து கொள்வாள்.. தன்னால்தானே தனது பிறந்த வீடு கஷ்டப்படுகிறது என்ற எண்ணம் அவளுக்கு...

'ஏன் பெண்ணாகப் பிறந்தேன்..?' மனதுக்குள் மறுகுவாள்...

"ஏன் அஸ்வின்..? என்னால்தானே அப்பா கையில பணம் தங்க மாட்டேங்குது..? அதனாலதான நீயும் என்னைக் கண்டுக்காம இருக்கச் சொல்கிற..?"

ஒரு தடவை பொறுக்க முடியாமல் பூமிகா தம்பியிடம் கேட்டபோது அவன் துடித்துப் போய் விட்டான்...

"என்னக்கா பேசற..? உன்னைவிட பணம் உயர்த்தியா..? நான் அதுக்காக சொல்லலைக்கா.. அந்த ஆள் உன்னை அடிச்சே கொல்கிறாரே.. அதுக்காகத்தான் சொல்றேன்க்கா.. அப்பா பணத்தைக் கொடுத்தா மட்டும்.. உனக்கு விழுகிற அடியும்.. உதையும் நின்று போயிருமா..? அந்தப் பணம் தீருகிற வரைக்கும் அது நிற்கும்.. அடுத்த பணத்தேவை ஏற்படறப்போ அது ஆரம்பிச்சிராதா..?"

வயதில் சிறியவனாக இருந்தாலும்.. எவ்வளவு தெளிவாக மனிதர்களை இவன் எடை போட்டு வைத்திருக்கிறான் என்ற ஆச்சரியம் பூமிகாவுக்குள் எழுந்து நிற்கும்.. இருந்தும் என்ன பயன்..? அவளால் கணவனைப் பிரிந்து இருக்க முடியும்.. அவன் மூலம் பெற்ற பிள்ளைகளைப் பிரிந்து இருக்க முடிந்ததில்லை..

"அவன் கெட்டிக்காரண்டி.. பசுவையும்.. கன்றுகளையும் பிரிச்சு வைச்சா.. பசு எப்படியும் கன்றுகளைத் தேடி ஓடிவந்துதானே ஆகணும்ங்கிற கணக்கைப் போட்டு வைச்சிருக்கான்.."

சிதம்பரம் மனைவியிடம் புலம்புவார்.. அவள் எதுவும் பேசாமல் மௌனம் சாதிப்பாள்.. அதைத் தவிர மதுராவினால் வேறு எதையும் செய்ய முடியாது.. காலம்.. காலமாக பெண்கள் எல்லோரும் அதைத்தானே செய்து



வருகிறார்கள்..? அவர்கள் பேச நினைப்பதை பேசி விட்டால் இந்த பூமி தாங்குமா..?

இப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்த மாளவிகாவுக்கு.. கல்லூரிக்குச் செல்ல ஒரு இருசக்கர வாகனம் கிடைக்கவில்லை..

"ஆம்பளைப் பையனே வாயைத் திறக்காம பஸ்ஸிலே காலேஜீக்குப் போயிட்டு வர்றான்.. நீ பொம்பளப் புள்ள.. உனக்கென்னடி டூவீலர் வேண்டிக் கிடக்கு..?" மதுரா அதட்டிய போது...

"அதென்னம்மா.. ஆம்பளைப் பையன்னா உயர்த்தி.. பொம்பளைப் புள்ளைன்னா மட்டமா..? இரண்டு பேரையும் பத்து மாதம் சுமந்துதானே பெத்தீங்க..?" என்று சண்டைக்குப் போனாள் மாளவிகா..

"அடியாத்தி.. உன்கூடப் பேசி மாளாதும்மா.. நானென்ன சொல்றேன்.. நீயென்ன சொல்ல வர்ற..? அவன் கூடப் படிக்கிற பசங்களெல்லாம் பைக்கில் போறப்போ.. அவன் மட்டும் மூச்சுவிடாம பஸ்ஸிலே போறானே.. அதைப் பத்தி நீ யோசிச்சு பார்த்தியா..? அதைச் சொல்ல வந்தா.. நீ எதையோ பேசிக்கிட்டு வர்ற.. அவன் மட்டும் போட்டிக்கு வந்தா.. உன் அக்காவுக்கு படியளக்க முடியாது.. அதை நினைப்பில வைச்சுக்கிட்டு பேசு.." மகளைக் கடிந்து கொண்டாள் மதுரா..

தாயுடன் வழக்கு வைத்து விட்டு முகத்தைத் தூக்கிக் கொண்டு வந்திருந்த மாளவிகாவிற்கு கால் கடுத்தது.. கடந்து போன பஸ்களில் படிகளில் தொங்கிக் கொண்டு போன இளைஞர்களின் மீது பார்வை பதிந்தது..

'ம்ஹீம்.. ஆம்பளைப் பையன் ஏன் டூவீலரைக் கேட்கப் போறான்..? அவனுக்குத்தான் எப்படியும் பஸ்ஸில இடம் கிடைச்சுருமே.. புட் போர்டில் தொங்கிக்கிட்டாவது காலேஜீக்குப் போய் சேர்ந்துருவான்... எனக்கு அப்படியா..?'

விட்டால் அழுது விடுபவளைப் போல மாளவிகா முகத்தை வைத்துக் கொண்டிருந்த போது.. அந்த டாடா சுமோ பஸ் ஸ்டாப்பில் வந்து நின்றது.. சளசளவென்று பேசிக் கொண்டிருந்த மக்கள் கூட்டம் அமைதியாகி விட.. மாளவிகா திரும்பிப் பார்த்தாள்...

அவளையே பார்த்தபடி டாடா சுமோவிலிருந்து இறங்கினான் ரமணன்..

"அண்ணன் வர்றாரு தள்ளி நில்லுங்கடா.."

அவன்கூட வந்திருந்த ரௌடிகளின் பட்டாளம் எச்சரித்ததில் அந்த பஸ் ஸ்டாப் ஒரு நொடியில் காலி மைதானமானது...

பஸ் பிடிக்காவிட்டாலும் பரவாயில்லையென்று ஒன்று சொன்னதைப் போல எல்லோரும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இடத்தைக் காலி செய்திருந்தனர்..

மாளவிகா போகவில்லை.. அவளுக்குத் தெரியும்.. அவள் போனாலும் அவன் அவளைத்தான் பின் தொடர்ந்து வருவானென்று.. அவன் வராத ஒரே இடம் அவளுடைய வீடு மட்டும்தான்.. அதற்காக அவனுக்குப் பயந்து அவள் கல்லூரிக்குப் போகாமல் வீட்டிலேயே முடங்கிக் கிடக்க முடியுமா..? அதோடு அவனால் அவளுக்கு எந்த விதமான தீங்கும் ஏற்படாது என்று அவளின் ஆழ்மனது அனுமானித்து சொல்லியிருந்ததால்.. வழக்கப்படி அவள் அசையாமல் அங்கேயே நின்றாள்..

கல் விழுந்த பறவைகள் கூட்டமாய் கலைந்து போய் விட்ட மக்களின் மத்தியில் அசையாமல் நின்ற அவளின் அந்த திடத்தை மெச்சும் புன்முறுவல் அவன் இதழ்களில் தோன்றியது...

அவளுக்கு மிக அருகில் நெருக்கமாக வந்து நின்றவன்..

"காலேஜீக்கா..?" என்று கேட்டான்..

'இல்லை.. சினிமாத் தியேட்டருக்கு..' என்று பதில் சொல்லத் தோன்றியது அவளுக்கு.. ஆனால் அவள் சொல்லவில்லை...

அவளுக்குத்தான் தெரியுமே.. அவள் ஒற்றை வார்த்தையைச் சொல்லிவிட்டால்.. அவன் அதையே பிடித்துக் கொண்டு ஓராயிரம் வார்த்தைகளை கொட்டி விடுவானே..

அதனால் அவள் மௌனம் சாதித்தாள்..

'அழகான மௌனம்..!' ரமணன் அதை ரசித்தான்..

"காலைநேரம்.. கூட்டமாக இருக்கும்.. நீ எதுக்காக அடிச்சுப் பிடிச்சுக்கிட்டு பஸ்ஸில் போகனும்..?"

அவனின் அக்கறையில் அவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது.. அவளையறியாமல்..

"பேசாம வீட்டுக்குப் போயிருன்னு சொல்ல வர்றீங்களா..?" என்று கேட்டுவிட்டாள்..

அவளின் மௌனம் கலைந்ததிலும்.. வெடுக்கென்ற அந்த பதிலிலும்.. அவன் கண்களில் மின்னல் வந்தது...

"அப்படிச் சொல்வேனா மாலு.. வீட்டுக்குப் போனா காலேஜ் வீட்டுக்கு வருமா..?" அவன் பரிவுடன் பேசினான்..

'மாலுவாமில்ல.. மாலு.. இவன் எனக்குச் செல்லப் பெயர் வைக்கிறானா..?' அவளுக்குள் கோபம் கிளர்ந்தது..

"இங்கே பாருங்க.. இந்த மாலு.. கீலுவெல்லாம் எனக்குப் பிடிக்காது.. நீங்க எதுக்காக இதையெல்லாம் என்கிட்ட வந்து கேட்கறிங்க..?" அவள் படபடத்தாள்..

"உனக்குத் தெரியாதா மாலு..?" அவள் விழிகளுக்குள் ஊன்றிப் பார்த்தான் ரமணன்..

அந்தப் பார்வையில் அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.. இந்த பஸ் சீக்கிரம் வந்தால் தேவலை



என்றிருந்தது அவளுக்கு.. பஸ் வந்தாலும் தப்பிக்க மார்க்கமில்லை என்பது அவளுக்குத் தெரியும்.. அவனிடமிருந்து தப்பித்து விடவும் முடியாது..

அவள் திரும்பிய பக்கம் அவன் வந்து நின்றான்.. மீண்டும் முகத்தைத் திருப்ப முடியாமல் அசையாமல் அப்படியே நின்றாள் மாளவிகா.. திரும்பிய பக்கமெல்லாம் அவன் வந்து நிற்பான் என்பது அவளுக்குத் தெரியுமே..

'ஏன் என்னை இந்த பாடு படுத்தறான்.. ஊரில்.. உலகத்தில் வேற பெண்களே இல்லையா..?' மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்..

யதார்த்தமான அவள் பார்வையில்.. ஆறடி உயரத்தில்.. கம்பீரமான முகத்துடன் நின்று கொண்டிருந்த ரமணன் தென்பட்டான்.. அவனின் முகத்திலிருந்த தாடி.. அவனுடைய முரட்டுத்தனத்தைச் சொல்லாமல் சொல்லியது.. உணர்வுகளைப் பிரதிபலிக்காத இறுக்கமான அந்த முகத்தில் அவளைக் கண்டதும் குடி கொள்கிற மென்மையில் அவள் சங்கடப்பட்டுப் போனாள்..

'ம்த்சு.. அமரக் காதலனைப் போல உருகி.. உருகி பார்த்து வைக்கிறானே.. இது நிறைவேறுமா.. நிறைவேறாதான்னு கூட இவன் யோசிக்க மாட்டானா..?'

அவன் நினைத்ததை முடிக்கும் பராக்கிரமசாலிதான்.. அதில் அவனுக்கும் சரி.. அவனுடைய கூட்டத்திற்கும் சரி.. கொஞ்சம் கூட ஐயமில்லை.. அவனின் தலையைக் கண்டு

விட்டால்.. எப்படிப்பட்ட ரௌடிகளின் கூட்டமும் பயந்து பின்வாங்கி விடும்..

"டேய்.. வந்திருக்கிறது ரமணாடா..."

அவனின் நிழலைத் தொடக்கூட யாரும் பயப் படுவார்கள்.. அதிகார வர்க்கத்தினால் அவனை நெருங்க முடியாது.. அரசியலில் உள்ள அனைத்துக் கட்சிகளிலும் அவனுக்கு வேண்டியவர்கள் உயர் பதவிகளில் இருந்தார்கள் என்பது மட்டுமில்லை.. அவனுக்கு எதிரான எந்தவொரு ஆதாரத்தையும் இதுவரை அவர்கள் கண்டு பிடித்ததில்லை..

"இதை ரமணா செய்திருக்கனும்.."

இப்படித்தான் அவர்களால் சொல்ல முடிந்தது.. அவன் தான் செய்தானென்று உறுதியாக அவர்களால் சொல்ல முடியவில்லை.. ரமணனுக்கு எதிராக சிறு துரும்பு கூட அசையாது...

அப்படிப்பட்ட பராக்கிரமசாலிதான்.. ஒரு பெண்ணுக்காக.. பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தான்..

"என் கூட வண்டியில் வாயேன்.." ரமணன் சொல்ல..

"என்னது..? !.." என்று அதிர்ச்சியுடன் நிமிர்ந்தாள் மாளவிகா...

"மெல்ல.. எதுக்காக இத்தனை அதிர்ச்சி மாலு..? உன்னை காலேஜில் டிராப் பண்றேன்.." அவளையே பார்த்தபடி சொன்னான் ரமணன்..



"தேவையில்லை.. நான் பஸ்ஸில் போய்க்குவேன்.. நீங்க உங்க வேலையைப் பார்த்துக்கிட்டுப் போங்க.." மாளவிகா வெடித்தாள்..

"இப்போதைக்கு இதுதான் என் வேலை மாலு.." அவன் அசையவில்லை..

அவன் அசையமாட்டான் என்பது தெரிந்திருந்தால் பஸ் வரும் வழியைப் பார்த்தாள் மாளவிகா..

"மாலு.."

மாளவிகா என்னவென்று கேட்கவில்லை..

'இவனுக்கும் எனக்கும் என்ன உறவிருக்கு..? என்னவோ சொந்த பந்தம கூப்பிறதைப் போல கூப்பிட்டு வைக்கிறானே..'

"என் கூட வர பயமா..?"

இப்படிக் கேட்பவன் ஊரறிந்த தாதா..! இருந்தும் இந்தக் கேள்வியை இருபத்தியொரு வயதான மாளவிகாவைப் பார்த்து அவன் கேட்டான்..

'பயமா..? இவனிடமா..?.. ஹ...!' என்று அவள் நினைத்தாள்..

இந்தக் காதல்தான் எப்படிப்பட்ட வல்லமை படைத்தாக இருக்கிறது..! சிங்கத்தை.. சின்னஞ்சிறு மானின் பின்னாலே சுற்றிவரச் செய்கிறது.. அந்தச்

சிறுமானும் சிங்கத்தை அச்சமின்றி முறைத்திட வைக்கிறது.. காட்டுக்கு ராஜா சிங்கம்தான்.. ஆனால்.. காதலுக்கு ராணி புள்ளி மானல்லவா...

ஊரே நடுங்கும் ரமணனைக் கண்டு ஒருநாள்கூட மாளவிகா நடுங்கியதில்லை.. மாறாக.. அலட்சியப் பார்வையைத்தான் அவனை நோக்கி வீசியிருக்கிறாள்..

## 2



கொட்டுகின்ற மழை நீரில் நனைந்தபடி வந்து கொண்டிருந்த ஒரு மழை நாளில்தான் மாளவிகாவை ரமணன் சந்தித்தான்...

அன்று துறைமுகத்தில் வந்து இறங்கியிருந்த பொருள்களை எடுப்பதில் இருந்த சிரமம் தொடர்பாக சில உயரதிகாரிகளை அவன் சந்திக்க வேண்டியிருந்தது.. சந்தித்து விட்டு வெளியே வந்தவனுக்கு தலை வலிக்க ஆரம்பித்திருந்தது.. மழையோ வானத்தை கிழித்ததைப் போல கொட்டோ.. கொட்டென்று கொட்டிக் கொண்டிருந்தது.. அந்தக் கொட்டும் மழையில் தலையைப் பிடித்துக் கொண்டவன்..

"சூடா காப்பி சாப்பிட்டா தேவலை தாமஸ்.. ஏதாச்சும் ரோட்டோரமா டீக்கடை இருந்தா அங்கே வண்டியை நிறுத்து.." என்றான்..

டாடா சுமோவை ஓட்டிக் கொண்டிருந்த தாமஸ் தலையை அசைத்தான்.. காரின் முன்பக்க கண்ணாடியில் கொட்டிக் கொண்டிருந்த மழை நீர் தாரைகளை வைப்பர் துடைத்துக் கொண்டிருக்க.. சாலையில் ஏதேனும் டீக்கடை தென்படுகிறதா என்று அவனின் விழிகள் துழாவின..

"அந்தா இருக்கிற பஸ் ஸ்டாப்பண்ட ஒரு டீக்கடை இருக்குடா மச்சான்.." என்றான் காரின் பின்பக்க சீட்டில் அமர்ந்திருந்த குமார்..

"ஆமாண்ணே.. அங்கே ஒரு டீக்கடை தெரியுது.. ஆனா சின்னக்கடை போல இருக்கேண்ணே.." தாமஸ் தயங்கினான்..

"அவசரத்துக்கு அதெல்லாம் பாத்தா முடியுமா.. நீ அங்க வண்டியை நிறுத்து.." ரமணன் உத்தரவிட்டான்..

பஸ் ஸ்டாப்பின் அருகேயிருந்த அந்த டீஸ்டாலின் முன்னால் வண்டி நின்றது.. திபுதிபுவென்று காரின் பின் சீட்டிலிருந்து இறங்கிய ரமணனின் ஆள்கள் அவனுக்கு சூடாக காபியை வாங்குவதற்காக நான் முந்தி.. நீ முந்தி என்று ஓடினார்கள்.. ஆளேயில்லாத டீக்கடையில் அடாது மழை பெய்தாலும்.. விடாமல் டீயை ஆற்றியே

தீருவேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டு.. கடமையுணர்ச்சியுடன் டீயை ஆற்றிக் கொண்டிருந்த நாயர்.. அவனைச் சுற்றி வளைத்த கூட்டத்தைக் கண்டு அரண்டு போனான்...

"ஏய்ய்.. காருக்குள்ள யாரு தெரியுமில்ல.. அண்ணன்..!" தாட்டியாக.. பயில்வானைப் போலத் தெரிந்த ஒருவன் மிரட்ட..

"எந்த அண்ணன்...?" என்று கேட்டு விட்டு முதுகில் ஓர் அடியை வாங்கினான் டீக்கடைக்காரன்..

"எங்க அண்ணனைப் பாத்தா எந்த அண்ணன்னு கேக்கிற.. ரமணா அண்ணன்னு சொன்னா.. அழுத புள்ளயும் வாய் மூடும்லே.."

திருநெல்வேலிப் பக்கத்து கிராமத்தில் பிறந்து வளர்ந்த கிருஷ்ணன் மிரட்டிய மிரட்டலில்.. வாங்கின அடியின் வலியில் அழுவதற்காக வாயைத் திறந்த டீக்கடைக்காரன் அவசரமாக வாயை மூடிக் கொண்டான்..

'ரமணா.. என் கடைக்கு டீ சாப்பிட வந்திருக்காரா..'

அவனுக்கு ஆனந்த அதிர்ச்சியில் கையும் ஓடவில்லை.. காலும் ஓடவில்லை.. அடுத்த ஒரு மாதத்திற்கு இந்த தலைப்புச் செய்தியை வைத்தே டீக்கடையின் வியாபாரத்தை அதிகப்படுத்தி விடலாம் என்ற உற்சாகத் தோடு அவசர கதியில் டீயைக் கலக்க ஆரம்பித்தான்..



"டேய்.. அண்ணன் டீயைக் கேட்கல.. காபி கேட்டார்.."

காருக்குள்ளே இருந்து சப்தம் வந்ததும்.. கலக்கிய டீயை அம்போவென விட்டுவிட்டு.. கணப்பொழுதில் காப்பியை கலக்கிக் கொடுத்தான் நாயர்..

"இந்தாங்கண்ணே காபி.."

கலக்கி முடித்த காபியை அவன் நீட்ட.. பல கைகள் முன்னால் நீண்டு அதைக் கைப்பற்ற முனைந்தன.. வெற்றி யென்னவோ கிருஷ்ணனுக்குத்தான் கிடைத்தது.. அவன் காபித் தம்ளரைக் கைப்பற்றி.. காருக்குள் அமர்ந்திருந்த ரமணனிடம் நீட்டினான்.. அதை வாங்கி உறிஞ்ச ஆரம்பித்த ரமணன் தலைவலி கொஞ்சமாக குறைவதைப் போல் உணர்ந்தான்..

"நீங்களும் சூடா டீயோ.. காபியோ குடிச்சுக்கங்க..."

அவன் அனுமதி தந்ததும்.. அதற்காகவே காத்திருந்ததைப் போல காரைவிட்டு இறங்கிய தாமஸ்.. டீக்கடையின் தாழ்வான கூரைப்பகுதிக்குள் சென்றான்..

போடுகிற 'டீ'க்களுக்கு பணம் கிடைக்குமோ.. கிடைக்காதோ என்ற அவநம்பிக்கையுடன் அவசர கதியாக வரிசையாக டீத்தம்ளர்களை நிரப்பிக் கொண்டிருந்தான் நாயர்..

மழையின் குளிர் காற்றில் சூடான காபியைப் பருகும் சுகத்தில் அமிழ்ந்திருந்த ரமணன் அப்போதுதான் அந்தக் காட்சியைக் கண்டான்...

டீக்கடைக்கு அருகேயிருந்த பஸ் ஸ்டாப்பில் பஸ்ஸிற்காக சிலர் காத்துக் கொண்டிருந்தார்கள்... அவர்களுக்கிடையே நின்று கொண்டிருந்த அந்த அழகான இளம் யுவதி.. பஸ் ஸ்டாப்பின் கூரை மீதிருந்து கொட்டிக் கொண்டிருந்த மழை நீர் தாரைகளை உள்ளங்கைகளை விரித்துப் பிடித்து சந்தோஷித்துக் கொண்டிருந்தாள்...

மழைநீர் தாரைகளின் இடையே தெரிந்த அவளின் முகம்.. வரிசையாகக் கோர்த்த பாசிமணி மாலைகள் தொங்க விடப் பட்டிருக்க.. அவற்றின் ஊடே தெரியும் முகவடிவைப் போல அழகாக இருந்தது.. ரமணனை மீண்டும் அவளைப் பார்க்கத் தூண்டிது..

ரமணன்.. அவளையே பார்த்தான்.. மழை நீரைக் கைகளில் ஏந்தும் போது உணரும் மழையின் குளிர்ச்சியை அவளின் முகத்தில் தெரிந்த உணர்வலைகள் பிரதிபலித்துக் கொண்டிருந்தன.. மழை நீரைப் பிடிப்பதும்.. அது கைகளில் நிரம்பி வழிந்ததும் கைகளை இழுத்துக் கொண்டு.. உள்ளங்கைகளை கன்னத்தில் வைத்து அந்த மழைநீரின் ஜில்லிப்பை உணர்ந்து அனுபவித்து கண்களை மூடுவதுமாக இருந்தாள் அந்தப் பெண்...

அங்கேயிருந்த மற்றவர்கள் மழை நீர் மேலே பட்டு விடாமலிருக்கும் பொருட்டு.. ஒதுங்கி நின்றிருந்தார்கள்.. மழைக்காற்றின் குளிரிலிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்காக.. சுடிதாரின் துப்பட்டாவையோ.. சேலையின் முந்தானையையோ..



துண்டையோ கொண்டு மேலே போர்த்திக் கொண்டிருந்தார்கள்..

அப்படி எதையும் செய்யாதவளாய்.. அப்படிச் செய்து கொண்டிருப்பவர்களை கண்டு கொள்ளாதவளாய்.. மழை நீரில் கை நனைத்து சந்தோஷித்த அந்தப் பெண் அவனுக்கு புதியவளாக தோற்றமளித்தாள்..

குழந்தையைப் போன்ற அவளின் குதூகலத்தை மற்றவர்கள் கவனித்துக் கொண்டிருப்பார்களோ என்ற என்னமோ.. தயக்கமோ அவளிடத்தில் கொஞ்சம் கூட இல்லை.. தனக்குத் தானே சிருஷ்டித்துக் கொண்ட ஒரு மாய உலகில் பிரவேசித்தவளாக அவள் இருந்தாள்..

அவளின் அந்தத் தன்மை ரமணனை வசீகரித்து விட்டது...

எதனால் அவளிடம் விழுந்தான் என்று இன்றுவரை மிகச் சரியாக அனுமானித்துக் கணித்துச் சொல்ல ரமணனால் முடியவில்லை..

அவளை முதன் முதலில் சந்தித்த பொழுது மழை பொழியும் குளிர்ச்சி நிறைந்த பொழுதானதாக இருந்ததாலா..? இல்லை.. கொட்டும் மழைநீரில்.. தூசும்.. குப்பையும் இன்றி.. துடைத்து கழுவி விட்டதைப் போலச் சாலையும்.. சுற்றுப்புறமும் சுத்தமாக இருந்த சுகந்தமான தருணத்தில் அவன் அவளைப் பார்த்ததாலா..? இல்லை.. எப்பொழுதும் சண்டை... சச்சரவு.. பிரச்னை..

தீர்வு என்று.. பொழுது விடிந்து பொழுது போகும்வரை போராடிக் கொண்டு.. போர்க்களமே வாழ்க்கையாக வாழ்பவனின் முன்னால்.. மழையை ரசித்து வாழும் வாழ்க்கையை அவள் மேற்கொண்டிருந்ததாலா..?

எது.. அது.. என அறுதியிட்டுச் சொல்ல ரமணனால் முடியவில்லை.. அந்த நொடியிலிருந்து அவன் அவளைக் காதலிக்க ஆரம்பித்து விட்டான்.. அது மட்டும்தான் அவனுக்குத் தெரிந்திருந்தது..

டீயைக் குடித்து விட்டுக் கிளம்பியவர்கள் ரூபாய் நோட்டுக்களை எடுத்து நீட்டியதில் டீக்கடை நாயர் மயக்கம் போடப் போனான்.. ரௌடிகள் டீக்குடிக்க வந்து விட்டு.. பணத்தை எடுத்து நீட்டுவதை அப்போதுதான் அவன் பார்க்கிறான்...

எதற்கும் இருக்கட்டுமென்று.. முன்ஜாக்கிரதை முத்தண்ணாவாக...

"வேணாங்க.." என்று மறுத்தான் அவன்..

"யோவ்.. ஓங்கி ஒரு போடு போட்டேன்னு வைய்யி.. உன் வாயி வெத்தல பாக்கை போட்டுக்கும்.. யாருக்கு ஓசி டீயைக் கொடுக்கப் பார்க்கிற..? ரமணா அண்ணனோட ஆளுகளுக்கா.. அண்ணனுக்குத் தெரிஞ்சதுன்னு வைய்யி.. உன் கடையும் கந்தலு.. நீயும் கந்தலு.. எப்படி வசதி..?" தாமஸ் உறுமினான்..



கந்தலாவதுதான் வசதி என்று சொல்ல டீக்கடை நாயருக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது..? அவன் அவசரமாக இருகைகளையும் நீட்டி பணத்தை வாங்கிக் கொண்டான்..

"மீதிச் சில்லறைங்க.." நாயர் கேட்டான்..

கேட்டவனை தாமஸ் முறைத்த முறைப்பில்.. டீக்கடைக்குள் பதுங்கியே விட்டான்..

"யாருக்கு சில்லறை கொடுக்கப் பாக்கிற..?"

தாமஸ் டீக்கடைக்குள் பாயப் போக.. அவனை தடுத்தாட் கொண்டான் கிருஷ்ணன்..

"விடுல்லே.. அவன் தெரியாம கேட்டுட்டான்.. அவனுக்கு என்னலே தெரியும்.. நம்ம அண்ணனோட மகிமையைப் பத்தி.. நீ வாலே.."

காருக்குள் ஏறியவர்கள் ரமணனின் தோற்றத்தைக் கண்டு திகைத்து விட்டார்கள்...

# 3



அதுவரை ரமணனை அவர்கள் அப்படிப்பட்ட மென்மையான முகபாவனையுடன் பார்த்ததில்லை..

எப்போதும் கடுமையான முகத்துடன்.. புருவங்களைச் சுளித்தபடி.. எதிராளியைத் துளைக்கும் கூர்மையான பார்வையுடன் இருப்பவனின் முகம் முற்றிலுமாக மாறியிருந்தது..

அவன் முகத்தில் பனியின் குளுமையிருந்ததை ஆச்சரியத்துடன் அவனுடைய ஆள்கள் உணர்ந்தார்கள்.. முன்பு எப்போதும் இல்லாதபடி அவன் முகத்தில் விரவிக் கிடந்த மென்மையில் அவர்கள் அதிசயித்துப் போனார்கள்..

"என்னலே.. அண்ணனின் முகத்தில் பல்பு எரியுது.." கிருஷ்ணன் கிசுகிசுத்தான்...

"ஆமான்டா.. என்னவா இருக்கும்..?" தாமஸ் நெற்றிப் பொட்டைத் தட்டியபடி ரமணனின் பார்வை போன திக்கில் பார்த்தான்..

அவனுக்கு தூக்கிவாரிப் போட்டது.. காருக்குள்ளிருந்த மற்றவர்களைப் பார்த்தான்.. அவனின் நிலைமையில்தான் அவர்களும் இருந்தார்கள்..

'பொண்ணுலே..'

வாய்விட்டுச் சொல்ல பயந்தவனாக மனதுக்குள்ளேயே நினைத்துக் கொண்டான் கிருஷ்ணன்..

அதுவரை ரமணன் பெண்களைத் திரும்பிப் பார்த்ததில்லை.. அந்த வகையில் மற்றவர்களிடமிருந்து முற்றிலும் வித்தியாசமானவனாக அவன் இருந்தான்...

"இதோ பார்.. நாம அன்டர் கிரௌண்டில் ஆட்டம் காட்டறவங்களா இருக்கலாம்.. அதுக்காக மனம் போனபடி ஆடக் கூடாது.. நாம வேற.. பப்ளிக் வேற.. உன்ன எதுக்கற எதிரியப் போட்டுத்தள்ளு.. ஆனா பப்ளிக் மேல சின்னத் தூசி கூடப் படாம பார்த்துக்க.. பசிக்கு சாப்பிட்டா பணத்தைக் கொடுத்துரு.. உனக்குச் சாப்பாட்டைக் கொடுத்தவனுக்கும் வயிறுன்னு ஒன்று இருக்கில்ல..? அவனும் சாப்பிடனுமில்ல.. நீ வேட்டையாட வேண்டியது மிருகங்கள.. மனுசங்கள இல்ல.. மக்கள் கூட்டத்திலே இருந்து தள்ளியே நில்லு..."

இப்படியெல்லாம் சட்டம் போட்டு வைத்திருக்கும் தாதா அவன்.. பெண்களைப் பற்றி அறிவுரை சொல்லக் கூடப் பேசமாட்டான்.. எவனாவது பேசி வைத்தால் ஒரு பார்வை பார்ப்பான்.. அதில் பற்றியெறியும் தீயில் பேசியவன் வாயை மூடிக் கொள்வான்..

அப்படிப் பெண்வாடையே படாத ரிஷியசிருங்கராக இருந்தவனா ஒரு பெண்ணை இத்தனை ஆவலுடன் பார்க்கிறான்..?

'காரைக் கிளப்பட்டுமா..?' என்று கேட்க பயந்தவனாக தாமஸ் பேசாமல் டிரைவர் சீட்டில் அமர்ந்து விட்டான்...

மற்றவர்களும் அவனைப் பின்பற்றியவர்களாக.. அமைதியின் சிகரமாய் காருக்குள் அடைந்தார்கள்..

நேரம் ஓடிக் கொண்டிருந்தது.. மழையும் நிற்கவில்லை.. ரமணனும் பார்வையைத் திருப்பவில்லை.. மழை நீரைக் கிழித்தவாறு ஒருபஸ் வந்து நின்றது.. மழைநீரில் கை நனைத்து.. ஆடிக் கொண்டிருந்த அந்தப் பெண் ஓடிப் போய் பஸ்ஸில் ஏறிவிட்டாள்.. பஸ் நகர்ந்து சென்றதும் காருக்குள் இருந்தவர்கள்..

'அப்பாடி..' என்ற நிம்மதிப் பெருமூச்சை விட்டார்கள்..

'இனியாவது காரைக் கிளப்பலாமா..?' எதிர் பார்ப்புடன் ரமணனின் முகத்தைப் பார்த்தான் தாமஸ்...

"அந்த பஸ்ஸை ஃபாலோ பண்ணு தாமஸ்.." ரமணன் உத்தரவிட்டான்..

தாமஸின் முகத்தில் ஈயாடவில்லை.. காருக்குள் இருந்தவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.. ரமணன் சொன்னதைச் செய்தான் தாமஸ்.. பஸ்ஸை டாடா சுமோ பின் தொடர்ந்தது.. ஒரு ஸ்டாப்பில் இறங்கினாள் மாளவிகா.. மழை விட்டிருந்தது.. லேசான தூறலில் துள்ளலுடன் நடைபோட்டு.. பக்கவாட்டில்



திரும்பிய தெருவில் அவள் விரைய தாமஸ் ரமணனின் முகம் பார்த்தான்..

"இடைவெளி விட்டு ஃபாலோ பண்ணு..."

மாளவிகாவைத் தொடர்வது போல இல்லாமல் இடைவெளி விட்டு மெதுவாகப் பின் தொடர்ந்து டாடா சுமோ.. ஒரு வளைவில் திரும்பியவள் அடுத்தடுத்து இருந்த வீடுகளில் ஒன்றில் மறைந்து போக.. ரமணன் கிருஷ்ணனைப் பார்த்தான்..

"நாங்க அந்தத் தெருவில வெயிட் பண்றோம்.. நீ அந்தப் பெண்ணைப் பத்தின விவரங்களை விசாரிச்சுட்டு வா.."

எப்படி என்று கிருஷ்ணன் கேட்கவில்லை.. அவன் மட்டுமில்லை.. ரமணனின் ஆள்கள் எவருமே ரமணனின் வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேச மாட்டார்கள்.. 'மலையுச்சியிலிருந்து குதி' என்று ரமணன் சொன்னாலும்.. அடுத்த நொடியே கேள்வியே கேட்காமல் குதித்து விடுவார்கள்..

இப்போது ரமணன் ஒன்றும் மலையுச்சியிலிருந்து குதிக்கச் சொல்லவில்லையே.. கிருஷ்ணன் இறங்கிக் கொள்ள டாடா சுமோ நகர்ந்து விட்டது.. விசாரிக்கப் போன கிருஷ்ணனுக்கு.. இதற்குப் பதில் மலையுச்சியிலிருந்தே குதித்து விடலாம் என்று தோன்றியது..

எவனையாவது போட்டுத்தாக்கு என்றால் தாக்கி விடலாம்.. ஆனால் ஒரு பெண்ணைப் பற்றிய விவரங்களை கொண்டு வா என்றால்.. எப்படிக் கொண்டு வருவது..?

ஆனாலும் அவன் அதைச் செய்துதான் ஆக வேண்டும்.. அவனறிந்த ரமணன்.. பெண்களைக் கசக்கி முகரும் ரகமல்ல.. இதுவரை அவன் விசாரிக்கச் சொன்ன தெல்லாம் எதிரியின் பின்புலத்தைப் பற்றிய தகவல் களாகத்தான் இருக்கும்..

முதன் முறையாக அவன் ஒரு பெண்ணைப் பற்றி அறிய விரும்புகிறான் அவன் கேட்டு அதைச் செய்து முடிக்காவிட்டால்.. கிருஷ்ணன் பிறந்த திருநெல்வேலிச் சீமைக்குத்தான் என்ன பெருமை இருக்கப் போகிறது..? தொண்டையில் இருப்பதைக்கூடத் தோண்டியெடுத்து விடும் திருநெல்வேலிச் சீமையின் துப்புத் துலக்கும் பெருமையைக் காக்க களம் இறங்கினான் கிருஷ்ணன்..

தெருமுனை டீக்கடை எதற்காக இருக்கிறது..? இதைப் போன்ற தகவல்களை சேகரிப்பதற்காகத்தானே இருக்கிறது.. ஒரு டீயை வாங்கிக் குடித்தபடி மாளவிகா மறைந்த வீட்டையே உற்றுப் பார்த்தவன்..

"ஏண்ணே.. அது வெங்கிடாசலம் வீடுதானே..?" என்று விசாரித்தான்..



"இல்லையே.. அங்கே சிதம்பரமில்ல குடியிருக்கார்.." என்றான் பக்கத்தில் டீ குடித்துக் கொண்டிருந்தவன்..

"இல்லண்ணே.. அவர் பேரு வெங்கடாசலம்தான்.. அவரோட பொண்ணோட பேரு கூட.. லலிதான்னு இருக்குமே.." கிருஷ்ணன் போட்டு வாங்கினான்..

"ஏங்க.. நான் இத்தனை வருசமா இந்தத் தெருவில குடியிருக்கேன்.. எனக்குத் தெரியாதா.. அவர் பேரு சிதம்பரம்.. அவருக்கு ரெண்டு பொண்ணு.. ஒரு பையன்.." என்று தனது ஞாபக சக்தியை நிலை நாட்டினான்.. தானாய் வந்து மாட்டிக் கொண்ட தகவல் சொல்பவன்..

"அப்படியா சொல்றிங்க.. அவரோட மூத்த பொண்ணு காலேஜிலதான படிக்குது..? லலிதான்னுதான பெயரு.." கிருஷ்ணன் அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டான்..

அவனுக்கு இயல்பாகவே முகத்தில் அப்பாவிக் களைதான் பொங்கி வழியும்.. அந்த ஒரு காரணத்துக்காகவே அவனை தகவலறிந்து சொல்லும் உளவுப் படையின் தளபதியாக ரமணன் வைத்திருந்தான்..

அப்பேற்பட்ட கிருஷ்ணனின் அப்பாவிக் களையில் ஏமாந்து போன அந்த ஆள்...

"நீங்க வேற.. சிதம்பரத்தோட மூத்த பொண்ணு பேரு பூமிகா.. அதுக்கு கல்யாணமாயிடுச்சு.. அடுத்த பொண்ணு

மாளவிகாதான் காலேஜில படிக்குது..", என்று சொல்லி வைத்தான்...

"அப்படிங்களா.. இப்பத்தான் தடுக்கி விழுந்தா இன்ஜினியருக்குப் படிக்கிற காலேஜூத்தானே இருக்குது.." தூண்டில் போட்டான் கிருஷ்ணன்..

"இதைத்தான் சரியாச் சொல்லியிருக்கீங்க.. அந்தப் பொண்ணு இன்ஜினியருக்குத்தான் படிக்குது.." வகையாக தூண்டிலில் சிக்கினான் அந்த தகவல் சொல்லி...

"என்னமோ போங்க.. நல்ல வேளையா நீங்க அந்த வீட்டில குடியிருக்கிறது வெங்கடாசலமில்ல.. சிதம்பரம்ன்னு சொன்னீங்க.. இல்லைன்னா நானு நேராப் போயி அந்த வீட்டுக் கதவைத் தட்டியிருப்பேன்.. ரொம்ப நன்றிங்க அண்ணே.." பாசத்துடன் தகவல் சொல்லி குடித்த டீக்கும் சேர்த்து பணத்தைக் கொடுத்து விட்டு இடத்தைக் காலி செய்தான் கிருஷ்ணன்..

"இந்தக் காலத்தில இப்படியொரு வெள்ளந்தி மனுசனப்பா.."

தகவல் சொன்னவன் டீக்கடைக்காரனிடம் வியந்து கொண்டிருந்த போது.. அந்த வெள்ளந்தி மனிதன் டாடா சுமோவில் ஏறி அமர்ந்து சேகரித்துக் கொண்டு வந்த தகவல்களை ரமணனிடம் கொட்டினான்..

"அது படிக்கிற காலேஜ் பேரு மட்டும் தெரியலைண்ணே.. அதையும் கேட்டா.. சந்தேகம் கிளம்பிரும்ன்னு கேட்காம விட்டுட்டேன்.."



"தேவையில்லை.. நாளைக்கே கண்டு பிடிச்சிரலாம்.."

சொன்னதைப் போலவே.. மறுநாள் காலையில் அவள் இறங்கிப் போன பஸ் ஸ்டாப்பில் காத்திருந்து அவள் பஸ்ஸில் ஏறியதும் பஸ்ஸை பின் தொடர்ந்து.. அவளுடைய காலேஜைக் கண்டு பிடித்து விட்டான் ரமணன்..

"கிருஷ்ணா.."

அடுத்த ஆறாவது நிமிடத்தில் மாளவிகா படித்துக் கொண்டிருந்த படிப்பின் பெயரும்.. வருடமும் ரமணனுக்கு வந்து சேர்ந்து விட்டன...

## 4



மாளவிகாவைத் தொடர ஆரம்பித்தான் ரமணன்.. முதலில் மாளவிகா அதைக் கவனிக்கவில்லை.. அவள் பாட்டுக்கு 'தேமே' என்று கல்லூரிக்குச் சென்று வந்து கொண்டிருந்தாள்.. அவள் கூட வந்த ஹாசினிதான் ஒருநாள் அதைக் கண்டு பிடித்து கூறினாள்..

"மாளவிகா.. உன்னை ரமணா ஃபாலோ பண்றாண்டி.."

"என்னது..?!"

மாளவிகா திரும்பிப் பார்த்தாள்.. அவளது பார்வையில் அவளைப் பின் தொடர்ந்து நடந்து வந்து கொண்டிருந்த ரமணனின் கண்களில் மின்னல் வந்தது..

'ஆள் பார்க்க ஜம்முன்னு ஹீரோ போலத்தான் இருக்கான்..'

அவனைக் கண்ட மாத்திரத்தில் இந்த எண்ணம் தான் மாளவிகாவின் மனதில் வந்தது.. அவனைப் போன்ற ஒருவன் பின்பற்றி வருவதாக இருந்தால்.. அவள் கொஞ்சமாவது பார்க்க நன்றாக இருக்கிறாளோ என்ற தன்னம்பிக்கை வித்து அவள் மனதில் விழுந்தது..

"இவனை நான் இதுக்கு முன்னாலே பார்த்த தில்லையே..."

"என்னடி இப்படிச் சொல்ற..? இந்த வாரம் முழுக்க நானும் நோட் பண்ணிட்டேன்.. இவன் உன்னைத்தான் ஃபாலோ பண்றான்.."

"கூட நீயும்தான் வர்ற.. ஒரு வேளை உன்னை அவன் ஃபாலோ பண்ணியிருக்கலாமில்ல..?"

"ஏண்டி வயித்திலே புளியைக் கரைச்சு வைத்தற..? அவன் உன்னை ஃபாலோ பண்றதுக்கே நான் கலங்கிப் போயிருக்கேன்.. இந்த லட்சணத்தில.. என்னை அவன் ஃபாலோ பண்ணியிருக்கலாமில்லன்னு நீ கேட்டு வைக்கிற..?"



பயந்து போய் பேசிய ஹாசினியை விசித்திரமாகப் பார்த்தாள் மாளவிகா.. ஒருவன் பின்னாடியே வந்தால் இந்த அளவுக்கு கலவரப் பட்டுப் போகிறவள் ஹாசினியில்லை.. அவள் ஒரு கலாரசிகை...

"அவனைப் பாரேன்.. கார்த்திக்கைப் போலவே இருக்கானில்ல.. ஆள் செம ஹேண்ட்சம்ய்யா.." என்பாள்..

"அடச்சீ.. பசங்களைப் போய் இப்படி ரசிக்கிறயே.." என்று மாளவிகாதான் அவளைத் திட்டுவாள்..

அந்த ஹாசினியா.. அவள் ரசித்த அந்த கார்த்திக்கைப் போல இருக்கிறவனை விட படு ஸ்மார்ட்டாக.. செம ஹேண்ட்சம்மா இருக்கும் இவனைப் பார்த்து பயப்படுகிறாள்..?

"ஏண்டி..? இவனென்ன சிங்கம்.. புலி.. கரடியா..?" மாளவிகா திரும்பிப் பார்த்தாள்.. ரமணன் கண்களில் மின்னலை வாங்கினான்...

"ஐயோ.. திரும்பிப் பார்க்காதேடி.." ஹாசினி நடுங்கினாள்..

"ஏண்டி..?"

"இவ ஒருத்தி.. ஏண்டி.. ஏண்டின்னு உயிரை வாங்குவா.. இவன் சிங்கம்.. புலி.. கரடியை விட பயங்கரமானவன்.."

"அப்படியா.. சொல்ற..?"

சந்தேகத்துடன் கேட்ட மாளவிகா.. ஹாசினி சொல்லச் சொல்லக் கேட்காமல் திரும்பிப் பார்த்து வைத்தாள்.. ரமணன் தேன் குடித்த நரியாக.. ஹாசினி தலையில் கை வைத்துக் கொண்டாள்..

ரமணனின் கம்பீரத் தோற்றத்தைக் கண்ட மாளவிகாவிற்கு ஹாசினி அபாண்டமாகப் பேசுகிறாள் என்று தோன்றியது..

"போடி.. நீயும்.. உன் ரசனையும்.. இவனா பயங்கரமானவன்.. செம ஹேண்ட்சம்மா.. ஹீரோக் கணக்கா இருக்கான்.. இவனைப் போயி பயங்கரமானவன்னு சொல்றியே..?"

"இவனா ஹீரோ..? இவன் வில்லண்டி..."

"வில்லனா..?"

"ஆமாம்.. இவன்தான் ரமணன்..!"

ஹாசினி சொல்லிய விதத்தில் மாளவிகாவிற்கு சிரிப்புத்தான் வந்தது.. ரமணன் என்ற பெயரை அவள் அதற்கு முன்னால் கேள்விப்பட்டது கூட இல்லை.. அந்தப் பெயரில் ஒரு திரைப்படம் வந்தது அவளுக்குத் தெரியும்.. ரமண மகரிஷி என்ற மகான் ஒருவர் இருந்ததைப் பற்றித் தெரியும்.. மற்றபடி பெயரைக் கேட்டவுடன் பயப்படுத்துகிற பூச்சாண்டியாய் ரமணன் என்ற பெயரை அவள் கேள்விப் பட்டதில்லை...



"இவன் பெயர் உனக்கெப்படித் தெரியும்..?"

"ஊருக்கே தெரியும்.."

"எனக்குத் தெரியாதே.."

"அந்த லட்சணத்திலே நீ இருக்கிற.."

ஹாசினி விமரிசித்த விதத்தில் மாளவிகாவிற்கு கோபம் வந்துவிட்டது.. ரமணன் என்ற பெயரைத் தெரியாமலிருக்கும் குற்றத்திற்காக.. அவளுடைய லட்சணத்தையே ஹாசினி விமரிசிப்பதா...?""

"சும்மா பூச்சாண்டி காட்டாதேடி.."

"அடி இவளே..! இவனே பூச்சாண்டிதாண்டி..."

"ஜோக்கடிக்காதே.."

"ஜோக்கில்லை மாளவிகா.. இவன் பெரிய தாதா.. இந்த ஊரே இவன் பெயரைக் கேட்டா அலறும்.. நீயென்னன்னா.. அப்படியான்னு சாதாரணமா கேட்டு வைக்கிற.."

அப்போதுதான் 'சுரீர்' என்று உறைத்தது மாளவிகாவிற்கு..

"என்ன சொல்ற..? இவன் தாதாவா..?"

"அப்படித்தான் சொல்லிக்கிறாங்க.."

"என் பின்னாலேயா வர்றான்..?"

"பின்னே..? என் பின்னாலேயா வர்றான்..? நா... வேணும்னா ஒதுங்கி நின்னுக்கறேன்.. நீ அதை முதலி... கன்பர்ம் பண்ணிக்க.."

அது தான் சாக்கென்று.. ரமணனின் பி... தொடர்தலில் பயந்து போயிருந்த ஹாசினி.. பின் தங்கி... கொண்டாள்.. அவளைத் தடுத்து நிறுத்த முடியா... மாளவிகா.. வேறு வழியின்றி நடையைத் தொடர்ந்தபடி... ஓரக்கண்ணால்... பின்னாலேயே அவன் வருகிறானா என்று... ஆராய்ந்தாள்..

ஹாசினியின் கணிப்பு சரியானதாகத்தான் இருந்தது. ரமணன் மாளவிகாவைத்தான் பின்தொடர்ந்து வந்... கொண்டிருந்தான்.. மாளவிகா நடையை எட்டி... போட்டாள்.. பஸ் ஸ்டாப்பில் பஸ் நின்று கொண்டிருக்... ஓடிப் போய் ஏறிக் கொண்டாள்.. அவன் பஸ்ஸில் ஏறவில்லை..

'அப்பாடி.. தப்பித்தேன்..' நிம்மதிப் பெருமூச்... விட்டாள்...

மறுநாள் ஹாசினியிடம் அதைப் பற்றிச் சொன்ன போது..

"அவன் பஸ்ஸிலெல்லாம் ஏற மாட்டான்.." என்றாள் அவள்..

"ஓ.. சாரோட ரேன்ஜ்க்கு பிளேனிலதான் பறப்பாராக்கும்.." என்றாள் மாளவிகா..



ஹாசினி ஆமாமென்று சொன்னாள்.. அத்தோடு நிறுத்தாமல் ரமணனைப் பற்றிய புள்ளி விவரங்களை அள்ளித் தெளித்தாள்..

"அவனுக்குச் சொந்தமா ஹெலிஹாப்டர் இருக்கு மாளவிகா.. வெளிநாட்டுக்குப் போகனும்னா தனிப் பிளேனா புக் பண்ணித்தான் போவானாம்.. அவனைப் போயி பஸ்ஸில் ஏறலைன்னு சொல்ற.." என்றாள்..

அந்த ரமணன் மாளவிகாவிற்காக பஸ்ஸிலேயும் ஏறினான்... பஸ்ஸிலிருந்த கூட்டமெல்லாம் பாதி வழியிலேயே இறங்கி ஓடிப்போய் விட.. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு.. பஸ்ஸை ஓட்டிய டிரைவரும்.. கண்டக்டரும்தான் மாளவிகாவிற்கு துணையாக பஸ்ஸில் இருந்தார்கள்...

எந்த ஸ்டாப்பிலும் நிற்காமல் பஸ் ஓடிக் கொண்டிருக்க.. மாளவிகாவையே மௌனப் பார்வை பார்த்த ரமணன் அவளைப் பார்க்கத் தோதாக நின்றபடி பயணித்தான்..

மாளவிகா இதை ஹாசினியிடம் சொன்ன போது அவள் விழிவிரித்தாள்..

"உனக்குப் பயமா இல்லையாடி..?"

"ஊஹூம்.. பஸ்ஸில் இருக்கிறவங்கதான் பயந்து போய் இறங்கி ஓடிட்டாங்க.. டிரைவரும்.. கண்டக்டரும் தான் பாவம்.. ஓட முடியல.."

கலகலத்துச் சிரித்த மாளவிகாவை இரக்கத்துட பார்த்தாள் ஹாசினி.. அவளின் இரக்கப் பார்வையி மாளவிகாவின் சிரிப்பு நின்று விட்டது..

"ஏண்டி அப்படிப் பார்க்கிற..?"

"உன்னாலேயும் ஓட முடியாது மாளவிகா.."

"ஏன் முடியாது..?"

"அது அப்படித்தான்.."

அவள் சொன்னதைப் பரிசோதித்துப் பார்க மாளவிகா நினைக்கவில்லை... யார் பின்னால் வந்தா எனக்கென்ன என்று அவள் தன்போக்கில் கல்லூரிக்கு போய் வந்து கொண்டிருந்தாள்.. ஒருநாள் மாலையில் கல்லூரிக்கு வெளியேயிருந்த சாலையின் ஓரத்தில் அவளை வழிமறித்த ரமணன் தன் காதலைச் சொல்லி விட்டான்..

அதுவரை அவன் பேசாமல் பின் தொடர்ந்து வந்ததி தைரியம் கொண்டிருந்தவளாக மாளவிகா நடந் கொண்டிருக்க.. வேக எட்டுடன் அவளை நெருங்கி ரமணன் அவளை வழிமறித்தான்..

"மாளவிகா.. கொஞ்சம் நில்லு.."

என்னதான் அவன் அவளைத் தினமும் தொடர்ந் வந்தாலும்.. என்னவோ காலங்காலமாய் பழகியதை போல பெயரைச் சொல்லி உரிமையுடன் ஒருமையி அழைத்ததில் மாளவிகாவுக்கு கோபம் வந்தது...

"ஹலோ.. யார் சார் நீங்க..? என் வழியை ஏன் மறிக்கறிங்க..?"

"நான் ரமணன்.."

"இருந்துட்டுப் போங்க.."

"உன்னைக் காதலிக்கிறேன்.."

அவள் விழிகளுக்குள் ஊடுறிவிப் பார்த்தபடி நிதானமாக ரமணன் சொல்ல "என்னது.." என்று அதிர்ச்சியை உள்வாங்கினாள் மாளவிகா..

அவன் அதைத்தான் சொல்லுவான் என்பதை நன்கு அறிந்திருந்த போதும்.. அவன் அதைச் சொல்லி விட்டதில் அவளுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது..

'இருந்திருந்து ஒரு 'தாதா'தான் என்னைக் காதலிக்கனுமா..?'






மாளவிகா விதியை நொந்து கொண்டாள்.. ஊருக்குள் அழகான பெண்கள் பலரிருக்க.. அவன் காதலுக்கு அவள்தான் ஆளாகியிருக்க வேண்டுமா..? மற்ற

பெண்களைப் பார்த்தால் அவனுக்கு காதல் வந்து தொலைக்கவில்லையா..?

'இல்லை' என்றான் ரமணன்.. அவளைப் பார்த்தவுடன் அவன் மனதில் மலரும் பூ.. மற்ற யாரையும் பார்த்து மலர்ந்ததில்லை என்றான்..

'இது என்னடா வம்பாப் போச்சு..' மாளவிகாவிற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை..

"அந்த மாதிரிப் பூவெல்லாம் என் மனசில மலரலை சார்.." என்றாள்..

அவளின் அந்த இயல்பான அப்பாவித்தனத்தை அவன் வெகுவாக ரசித்தான்..

"ஐ லவ் யு மாளவிகா.."

"சார் ஃப்ளீஸ்.. யாராச்சும் பார்த்துறப் போறாங்க.."

"பார்க்கட்டுமே.. நான் தள்ளி நின்னுதானே பேசறேன்..?"

'இது வேறயா..?' மாளவிகாவுக்கு எரிச்சல் வந்தது..

"தப்பா நினைச்சுக்குவாங்க சார்.."

"மத்தவங்க நினைப்பைப் பத்தி எனக்கு கவலையில்லை.. உன் நினைப்பை பத்தி மட்டும்தான் எனக்குக் கவலை.."

"நான் உங்களைக் காதலிக்கலை.."





"நான் உன்னைக் காதலிக்கிறேனே.."

"எனக்கு உங்க மேல காதல் வராது சார்..."

"பொய் சொல்லாதே.. என்னைப் பார்த்த முதல் பார்வையிலேயே நான் செம ஹேண்ட்சம்மா.. ஹீரோ மாதிரி இருக்கேன்னு உன் பிரண்ட்கிட்டச் சொன்னியே.. உனக்கா என்மேல் காதல் வராது..?"

'கடவுளே..! ஹாசினிகிட்ட நான் பேசினதை இவன் கேட்டுட்டான் போல இருக்கே..' மாளவிகா டென்சன் ஆனாள்..

அவளது டென்சனை அவள்முகம் பிரதிபலிக்க.. அவள் முகத்தையே ஊன்றிப் பார்த்துக் கொண்டிருந்த ரமணனின் பார்வை மிருதுவானது..

"ஏன் பயப்படற மாளவிகா..? உன் காதலை நீ ஒப்புக் கொள்ளற வரைக்கும் நான் காத்திருக்கேன்.." என்றான்..

சொன்னபடி அதற்குப் பின்னால் அவளிடம் காதலைச் சொல்லி அவன் வற்புறுத்தவில்லை.. ஆனால்.. அவளைப் பின் தொடர்வதையும் அவன் நிறுத்தவில்லை..

விடாமல் அவன் பின்தொடர்ந்து கொண்டிருந்ததில் மாளவிகா சங்கடப்பட்டுப் போனாள்.. ஊரறிந்த தாதா.. அவளைப் பின் தொடர்வதை சிதம்பரம் அறிந்தால் அவள் படிப்பையே நிறுத்தி விடமாட்டாரா..?

"தயவு செய்து என்னை ஃபாலோ பண்ணாதீங்க.." கெஞ்சதலாக ஒருநாள் அவளிடம் சொன்னான்..

அவன் என்ன நினைத்தானோ.. அவள் முகத்தையே பரிவுடன் பார்த்தான்..

"எனக்கு உன்னைப் பார்த்தாகனுமே மாலு.."

அவன் செல்லப் பெயர் சொல்லியதில் நொந்து போனாள் மாளவிகா.. அதைச் சொன்னால் அவன் கோபப் பட்டு பின் தொடர்வதை நிறுத்த மாட்டேன் என்று சொல்லி விட்டால் என்ன செய்வது என்ற எண்ணத்துடன் அதைக் கண்டு கொள்ளாதவளாக அவன் போக்கிலேயே தன்மையாகப் பேசினாள்...

"தினமும் என்னை நீங்க ஃபாலோ பண்ணினீங்கன்னா நாலு பேர் நாலு விதமா பேசுவாங்க சார்..."

"அப்ப நாம கல்யாணம் பண்ணிக்கலாமா..?" ஆவலுடன் அவன் கேட்டபோது..

'அதற்குத்தானே காத்திருக்கேன்..' என்று சொல்லத் தோன்றியது அவளுக்கு..

பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு.. ஏறக்குறைய அவனிடம் அவள் கெஞ்சினாள்...

"தடாலடியாய் எல்லாம் என்னால முடிவு சொல்ல முடியாது.. பட்.. என் பின்னாலேயே தினமும் வராதீங்க.. அதனால என் படிப்பே கெட்டுடும்.."

அந்த வார்த்தையைக் கேட்டவுடன் அவன் யோசனையுடன் தாடையைத் தடவினான்.. வானத்தைப் பார்த்தான்.. பூமியைப் பார்த்தான்...

ஏற்கனெவே யோசனை வந்தால் இந்த மக்கள் தாடையை ஏன் தடவுகிறார்கள் என்ற யோசனையிலிருந்த மாளவிகா அவன் வானத்தையும்.. பூமியையும் பார்த்ததும்.. 'இது என்னத்துக்காக..' என்ற நினைவில் மண்டை காய்ந்து போனாள்...

பூமியைப் பார்த்தவன் ஒரு முடிவுக்கு வந்தவனாக மாளவிகாவைப் பார்த்தான்.. அவன் என்ன சொல்லப் போகிறானோ என்ற பதட்டத்துடன் அவளும் அவனைப் பார்த்தாள்...

ரமணனுடைய தாடிக்கும்.. கதாநாயகனைப் போன்ற தோற்றத்திற்கும்.. அவன் வானத்தையும்.. பூமியையும் ஆராய்ச்சியாய் பார்ப்பது கூடாது என்ற கவலை அவளுக்குள் எழுந்தது.. அவள் பார்த்த ஒரு திரைப்படத்தின் கதாநாயகன் பாடி வைத்த பாடல் ஒன்று.. நேரம் கெட்ட நேரத்தில் அவளுக்கு நினைவுக்கு வந்து தொலைத்தது...

*'வானத்தைப் பார்த்தேன்..*
*பூமியைப் பார்த்தேன்..*
*மனுசனை எங்கும் காணலியே...'*

அந்தப் பாடலை இவனும் பாடிவிட்டால் என்ன செய்வது என்ற கலவரம் மனதுக்குள் படபடக்க..

இமைகளை பட்டாம் பூச்சிகளைப் போல படபடக்க வைத்தபடி ரமணனை ஏறிட்டாள் மாளவிகா..

அவளின் இமைகளின் படபடப்பையும்.. அந்தப் பயந்த பார்வையையும் அவன் ரசித்துப் பார்க்கவும் அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை...

"உன் பார்வை மானின் பார்வையைப் போல இருக்கு மாலு.." அவன் கவிதையாகப் பேசினான்..

"அது பாட்டுக்கு இருந்துட்டுப் போகட்டும் சார்.. என் ஆப்ளிகேஷனை கொஞ்சம் கன்சிடர் பண்ணுங்களேன்.." மாளவிகா கெஞ்சினாள்...

"உன் இமைகள் ரெண்டும் படபடன்னு அடிச்சிக்கிறதைப் பார்த்தா பட்டாம்பூச்சிக பறக்கறதைப் போலவே இருக்கு மாலு.." கண்கள் ஒளிர ரமணன் பேசினான்...

அவன் அதிலிருந்து வெளியே வருவதாகவே இல்லையென்று தெரிந்து போனதில்.. அதற்கு மேல் பேசி தொண்டைத் தண்ணீரையும்.. நேரத்தையும் வீணடித்துக் கொள்ள வேண்டாமென்ற எண்ணத்துடன் மாளவிகா நடக்கப் போனாள்..

"நில்..." என்றான் ரமணன்..

*'நில்லென்று சொன்னால்..*
*மனம் நின்றா போகும்...?'*



மாளவிகாவின் மனதில்தான் உடனுக்குடன் பாடல் தோன்றித் தொலைக்குமே.. அது வழக்கப்படி மனதில் எதிரொலித்து வைத்தது..

மாளவிகா நின்றாள்.. ரமணன் அவளருகில் வந்தான்.. மென்மையான குரலில்..

"இனித் தினமும் உன்னை ஃபாலோ பண்ண மாட்டேன்.." என்று சொன்னான்..

'அப்பாடி.. இம்சை விட்டது..' மாளவிகா உற்சாகமான போது...

"ஆனா உனக்குத் தெரியாம.. ஏன் மத்தவங்களுக்கும் தெரியாம உன்னைப் பார்த்துக்கிட்டேதான் இருப்பேன்.." என்று குண்டைத் தூக்கிப் போட்டான் ரமணன்..

'ஏண்டா இம்சை பண்ற..? தானிக்கு பேரு ஏமி..?' மனதுக்குள் நொந்து.. நொந்து.. நூலாகிப் போனாள் மாளவிகா.. அது போதாது என்று..

"உன்னை நேருக்கு நேரா பார்க்கணும்னு தோணினா மட்டும் வாரத்துக்கு ஒருதரம் உன் முன்னால் வருவேன்.." என்று அடுத்த வெடி குண்டைத் தூக்கிப் போட்டான் ரமணன்..

"அது என்ன தேவைக்கு..?" மாளவிகா பொறுமையை காற்றில் பறக்க விட்டாள்..

வீட்டுக்கு ஒரு பூமிகா போதும் என்ற நினைவு அவளுக்கு..

"அப்பத்தானே என் முகம் உன் மனசில மறையாம இருக்கும்..?" அவன் நியாயம் கேட்டான்..

"அதுவும்தான் என்ன தேவைக்குண்ணேன்..?" மாளவிகா படபடத்தாள்..

"எனக்கு நீ தேவை.." அவன் அழுத்தமான முகத்துடன்.. அதைவிட அழுத்தமான.. உறுதியான குரலில் சொன்னபோது.. மாளவிகா உறைந்து நின்று விட்டாள்...

'இவன் சொன்னதைச் செய்கிறவன்னு ஹாசினி சொல்லியிருக்காளே..'

அவளின் மனநிலையைப் பற்றிக் கவலைப் படாதவனாக அவன் அங்கிருந்து அகன்று விட்டான்..

பேசாமல் வீட்டில் சொல்லி விடலாமா என்று நினைத்தாள்.. சிதம்பரத்தின் கவலை படர்ந்த முகம் நினைவுக்கு வர.. அவசரமாக அந்த நினைவை அழித்தாள்..

'ம்ஹூம்.. அப்பாவாலே என்ன செய்ய முடியும்..? இன்னும் கொஞ்சம் சேர்த்துக் கவலைப் படுவார்.. அவசரமா என் படிப்பை நிறுத்திட்டு மாப்பிள்ளை தேட ஆரம்பிப்பார்.. அதுக்கு பணமில்லாம குடியிருக்கிற இந்த வீட்டையும் விற்று வைப்பார்...'




அஸ்வினிடம் சொல்லி விடலாமா என்ற அடுத்த யோசனை வந்தது.. அவள் சொல்லலாம் என்ற நினைவில் வீட்டுக்குப் போனபோது அவன் தலையில் கட்டுடன் படுத்துக் கொண்டிருந்தான்..

"என்னடா..?" மாளவிகா பதறினாள்...

"அதை என்னைக் கேளு சொல்றேன்.. காலேஜிக்குப் போனா.. நாம உண்டு.. படிப்பு உண்டுன்னு இருக்கனும்.. அதை விட்டுட்டு கூடப் படிக்கிற பொண்ணுகளுக்கு சப்போர்ட் பண்றேன் பேர்வழின்னு ரௌடிப் பையன்கிட்ட சண்டைக்கு போகக் கூடாது.." என்று சொல்லியபடி மதுரா கையில் காபியுடன் அறைக்குள் வந்தாள்..

மாளவிகாவிற்கு பேச நா அசையவில்லை...



அவள் என்ன நினைத்தாள்..? அங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது..? அஸ்வினின் அருகே அமர்ந்து விசாரித்தாள்..

அஸ்வினின் கூடப் படித்த பெண்ணை ஒருவன் பின் தொடர்ந்தானாம்.. காதலிக்கச் சொல்லி வற்புறுத்-

தினானாம்.. அந்தப் பெண் தோழர்களிடம் சொல்லி அழுதிருக்கிறாள்.. நியாயம் கேட்கப் போன அஸ்வினை அந்த ஒருவன் அடித்து உதைத்து அனுப்பியிருக்கிறான்..

"நல்ல வேளை.. கையைக் காலை உடைக்கலை.." ஆறுதல் பட்டாள் மதுரா..

"அம்மா.." அஸ்வின் வெறுத்துப் போய் விட்டான்..

"பின்னே என்னடா..? உனக்கு எதுக்குடா ஊர் வம்பு..? நீயென்ன சினிமாவில வர்ற ஹீரோவா..? அது சினிமாடா.. அதிலதான் ஒல்லிப் பாச்சானெல்லாம் ஊருபட்ட ஆளுகளை அடிச்சு.. உதைச்சு.. துவைச்சு காயப் போடுவாங்க.. இது வாழ்க்கைடா.. இதிலயெல்லாம் அடங்கி ஒடுங்கி.. இருக்கிற இடம் தெரியாம இருந்தாத்தான் பிழைக்க முடியும்.. ஓங்கி ஒரு போடு போட்டிருக்கான்.. உடனே மண்டை உடைஞ்சு.. தலையில.. உன் தலையை விடப் பெரிசா கட்டுப் போட்டுக்கிட்டு வந்து படுத்திருக்கே.. தேவையாடா உனக்கு..?"

பிடி.. பிடியென்று பிடித்து விட்டு மதுரா அவளின் ஆஸ்தான இடமான சமையலறைக்குள் போய் விட.. மாளவிகா தம்பியின் கையை ஆதரவாகப் பிடித்தாள்...

"அவனுக கூட்டமா இருந்தானுகளாடா..?"

"இல்லக்கா.. அவன் தனியாத்தான் இருந்தான்.. நாங்கதான் கூட்டமா போனோம்.."

தம்பியின் பதிலில் அவள் திகைத்து விட்டாள்.. கூட்டமாக பாதுகாப்பாக போனவன் எப்படித் தலையில் அடிவாங்கினான்..?

"நான் எங்கேக்கா.. அவன்கிட்டத் தலையைக் கொடுத்தேன்..? என்கூடவே வந்த எட்டப்பன் ஒருத்தன் பிடிச்சுத் தள்ளிட்டான்க்கா.. வகையாய் மாட்டிக்கிட்டேனா.. அவன் தலையிலேயே அடிச்சட்டான்.."

"அவனுகளுக்கெதுக்குடா உன்மேல அவ்வளவு காண்டு..?"

"அது அக்கா.. ஹி.. ஹி.." அஸ்வின் வழிந்தான்..

"என்னன்னு சொல்லித் தொலைடா.."

"அந்த சீனியர் சைட் அடிச்ச அந்தப் பெண்ணை நானும் சைட் அடிக்கிறேன்.. என்னைப் பிடிச்ச அவன் கிட்டத் தள்ளின என்னோட கிளாஸ் மேட்டும் சைட்டடிக் கிறான்.."

"ஓ.. எதிரிக்கு எதிரி நண்பனா..? ஆமா.. அந்த சீனியர் யாருடா..?"

அஸ்வின் சொன்ன பெயரைக் கேட்டதும் மாளவிகா நொந்தே போய் விட்டாள்.. அவன் மதுரா சொன்னதைப் போல.. அப்படியொன்றும் பலசாலியான பயில் வானில்லை.. ஒல்லியாக அஸ்வினை விட பலம் குறைந்த வனாகத்தான் இருப்பான்..

'அவன்கிட்டப் போய் இவன் அடிவாங்கிட்டு வந்திருக்கானே..'

அதற்குப் பின்னால் ரமணனின் பின்தொடரலைப் பற்றி அஸ்வினிடம் மாளவிகா வாயே திறக்கவில்லை.. அலுவலகத்திலிருந்து வந்த சிதம்பரம் மகனின் நிலையைக் கண்டதும் பண்ணிய உபதேசங்களில் அவரிடமும் அதைப் பற்றி வாயைத் திறக்கக் கூடாதென்ற தீர்க்கமான முடிவிற்கு அவள் வந்தாள்..

"இதையெல்லாம் தள்ளி நின்னு வேடிக்கை பார்க்கக் கூட நீ யோசிக்கனும்.. என்னையே எடுத்துக்க.. இந்தத் தெருவில போனவாரம் கூட ஒருத்தன துரத்தித்துரத்தி வெட்டினாங்க.. நான் ஜன்னல்கிட்டக் கூடப் போகலையே.. நான் பாட்டுக்கு ஜன்னலில் தலையைக் காட்டி வைக்க.. வெட்டறவன் என் முகத்தைப் பார்த்துட்டு சாட்சியை விட்டு வைக்கக் கூடாதுன்னு என்னையும் சேர்த்துப் போட்டுட்டா என்ன பண்றது..?"

அவர் அப்போது மட்டுமல்ல.. எப்போதுமே ஜன்னலின் கதவுகளைத் திறக்காமல் இறுக்கி சாத்தி வைத்திருக்கிறவர் தான் என்பதை நினைவு கூர்ந்தாள் மாளவிகா..

"துஷ்டனை கண்டா தூர விலகுன்னு பெரியவங்க எதுக்கு சொல்லி வைச்சிருக்காங்க..? இதுக்குத்தான் சொல்லி வைச்சிருக்காங்க.. ம்ம்ம்.. இப்ப என்ன செய்யலாம்..? வேற காலேஜீக்கு மாத்திரலாமா..?"



"அப்பா.. இதையே பேமண்டில வாங்கிக் கொடுத்திருக்கீங்க.. திரும்பவும் பணத்தைப் புரட்ட உங்களால் முடியுமா..?"

"நான் உன்ன வேற காலேஜீக்கு போகச் சொன்னது இன்ஜினியரிங் காலேஜ்ங்கிற அர்த்தத்தில இல்ல.. ஏதாச்சும் ஒரு டிகிரியப் படியேன்.."

"படிச்சுட்டு..?"

"பெட்டிக்கடை வைச்சாவது பொழச்சுக்க.."

சாப்ட்வேர் என்ஜினியராகும் கனவுகளோடு இருக்கும் மகனையே ஒரு அடிதடிக்கார மாணவனுக்கு பயந்து படிப்பை விட்டுவிட்டு பெட்டிக் கடை வைத்துப் பிழைத்துக் கொள்ளச் சொல்லும் சிதம்பரம்.. மாளவிகாவின் கதையை அறிந்தால் என்ன சொல்லுவார்..?

"என்னது..? ரமணா உன்னைக் காதலிக்கிறேன்னு சொல்றானா..? கடவுளே..! அவன் நினச்சத முடிக்காம விட மாட்டானே.. மதுரா அந்த விசபாட்டிலை எடுடி.. குடும்பத் தோட பரலோகம் போயிரலாம்.."

இதைத்தான் அவர் சொல்லி வைப்பார் என்று தெரிந்த பின்னால்.. அவரிடம் வாயைத் திறக்க மாளவிகா நினைப்பாளா..? அடுத்த நாள் காலையில் பூமிகா.. கண்ணீரும்.. கம்பலையுமாக வந்து நின்ற போது அவளின் முடிவு இரும்பாக இறுகியது..

'இப்படிப்பட்ட புருசன்கூட வாழனும்கிற தலைவிதி எதுக்காக இவளுக்கு வந்து வாய்ச்சிருக்கு..? அப்பா சொன்னாரேன்னு.. படிப்பை பாதியிலேயே விட்டுட்டு கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போனதினால்தானே.. நான் அப்படியிருக்க மாட்டேன்.. என் காலில் நான் நிற்க.. எனக்கு படிப்பு அத்தியாவசியம்..'

அந்த வார இறுதிவரை வாக்குக் கொடுத்தபடி அவள் கண்களில் ரமணன் தென்படவில்லை.. அந்த வார இறுதியில் சொன்னதைப் போலவே அவன் வந்து குதித்தான்..

"மாலு.." கண்ணும் முகமும் பிரகாசிக்க அவன் வந்து நின்றபோத அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை...

"ஏண்டா அஸ்வின்.. எப்படிடா அந்தப் பொண்ணு மேல உனக்கு காதல் வந்திருக்குன்னு சொல்ற..?" தம்பியின் காதல் கதையை விசாரித்தாள்..

"அதுவாக்கா.. அது அப்படித்தான்.. மனசுக்குள்ள ஒரு பூப்பூக்கும்.," அஸ்வின் கண்களை செறுகிய போது அவளுக்கு தூக்கிவாரிப் போட்டது..

'இதென்ன.. இவனும் இப்படிச் சொல்றான்.. மனசென்ன பயிர் நிலமா..? விதை விதைச்சு.. செடியாகி.. பூப்பூக்க..?'



அவளுடைய சந்தேகத்தை யாரிடம் நிவர்த்தி செய்து கொள்வது என்று அவளுக்குத் தெரியவில்லை.. ரமணன் அவளுடைய குழப்பத்தைப் பற்றியெல்லாம் கண்டு கொள்கிறவனாகத் தெரியவில்லை..

நினைத்தால் வந்து அவள் முன்னால் நிற்பான்.. கனிவாக பேசுவான்.. காதலுடன் பார்ப்பான்.. போய் விடுவான்..

'உபத்திரவமில்லாத காதல்..' மாளவிகாவிற்கு கவலை விட்டது.. ஹாசினியோ அதைப் பற்றி அதிசயித்தாள்..

"எப்படி டீ.. அவன் இப்படி சைவக் காதலனா இருக்கான்..?"

மாளவிகாவின் முறைப்பைப் பற்றிக் கவலைப் பட்டுக் கொள்ளாமல் அவள் சிரித்தாள்.. அது குறித்த பெருமையும்.. கர்வமும் மாளவிகாவுக்குள்ளேயும் உண்டு..

அன்றும் அதைப் போல வந்து நின்றவன்.. அவளை டாடா சுமோவில் கொண்டு போய் விடுவதாக சொல்லியபோது.. அவள் முறைப்புடன் திரும்பி நின்று கொண்டாள்...

"வா மாலு.." அவன் மிக லேசாக வற்புறுத்தினான்..

"ஹலோ உங்க வேலையைப் பார்த்துக்கிட்டுப் போறிங்களா..?"

"எவ்வளவு நேரமா நிற்ப..? நானும் அப்போதிருந்து உன்னை வாட்ச் பண்ணிக்கிட்டுத்தான் இருக்கேன்.. நீ டென்சன் தாங்கமா நகத்தைக் கடிச்சுத் துப்பி.. அதைக் காலி பண்ணிட்டு விரலைக் கடிக்க கிளம்பிட்ட... இதுக்கும் மேல பொறுக்க முடியாமத்தான் நேரில வந்தேன்.."

'இத்தனை நேரமா இவன் என்னையே பார்த்துக்கிட்டு இருந்தானா..?'

எங்கிருந்து பார்த்தான் என்று யோசித்தாள் மாளவிகா.. அவனிடம் அதைக் கேட்டு வைத்தால்.. அவனை அவள் தேடுவதாக தப்பர்த்தம் பண்ணிக் கொள்வானோ என்ற பயத்துடன் வாயை இறுக்கமாக மூடிக் கொண்டாள்..

"நம்மகிட்ட ஆயிரம் கார் இருக்கு.."

'போடா.. டேய்.. என்கிட்ட ஓட்டைசைக்கிள் கூட இல்ல...'

"நீ எதுக்காக கால் கடுக்க பஸ் ஸ்டாப்பில நிற்கனும்..?"

'என் கால்..! நான் நிற்கிறேன்.. உனக்கென்ன வந்தது..?'

"நிற்கிறது நீயாய் இருந்தாலும்.. வலிக்கிறது எனக்குத்தானே மாளு..?"



அவள் மனத்தைப் படித்தவனாக அவன் பேசியதில் அவள் திகைத்துப் போய் விட்டாள்.. அவன் மிருதுவாக அவளைப் பார்த்து புன்னகைத்தான்..

"உன் மனசில என்ன நினைக்கிறேன்னு எனக்குத் தெரியாதா மாளும்மா..?"


அவன் பேச்சில் அவளுக்குள் என்னவோ செய்தது. அவளுக்காக அவன் யோசிப்பதில் ஏதோ ஒரு இனம் விளங்காத ஆறுதல் அவளுக்குள் ஏற்படுவதை உணர்ந்தாள் மாளவிகா..

'ஊஹீம்.. இதை வளர விடக் கூடாது.. ஆரம்பத்திலேயே கிள்ளி எறிஞ்சிறனும்..'

நினைத்தவளுக்கு.. வந்து நின்ற பஸ்ஸில் ஏறும்போது அவனைத் திரும்பிப் பார்க்காமலிருக்க முடியவில்லை.. அப்போது தான் என்று இல்லை.. அதற்கு முன்னாலேயும்.. அவன் வந்து நிற்கும் போது அவள் கிளம்ப நேர்ந்தால் அவனை ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டுத்தான் போவாள்..

அந்த நொடிப் பொழுதிற்காக காத்திருப்பவனின் கண்களில் அவள் கண்களைச் சந்திக்கும் போது ஏற்படுமே ஒரு மின்னல்..! அது மாளவிகாவைத் தாக்கும்..

# 7



'இதுதான் காதலா..?'

மாளவிகாவிற்குப் புரியவில்லை.. ரமணனின் மனதிலும்.. அஸ்வினின் மனதிலும் பூத்ததாகச் சொல்லப் படும் பூ இதுதானா என்று தெரியாமல் அவள் தவித்தாள்.. அவள் பஸ்ஸில் ஏறும்போது அவன் பார்த்த பார்வையில் சிக்கித் தவித்தது அவளின் இளம் மனது..

அதுவும்.. அவளுக்காக அவன் தலையசைத்தபோது.. பதிலுக்கு தலையசைக்கச் சொல்லி.. அவளின் மனது அவளைக் கட்டாயப் படுத்தியது...

"என்ன சொல்கிறான் உன் கள்வன்..?"

மதிய உணவு நேரத்தின் போது ஹாசினி கேட்டாள்.. அவள் யாரைக் கேட்கிறாள் என்று புரியாமல் 'ஙே..' என்று விழித்தாள் மாளவிகா..

"அதாண்டி.. உன்னைக் காதலிக்கிற ரமணனைத் தான் சொல்றேன்.." அவளே விளக்கம் சொன்னாள்..

"அவன்.. கள்வனா..?"



ஏனோ மாளவிகாவினால் அவனை அப்படி நினைக்க முடியவில்லை.. சில தினங்களுக்கு முன்னால் சிதம்பரம் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த திரைப்படத்தின் பெயர் அவளுக்கு நினைவுக்கு வந்தது...

'கள்வனின் காதலி..!'

அது தான்தானோ என்ற நினைவில் உதட்டைக் கடித்துக் கொண்டாள் மாளவிகா..

"அவன் கள்வனில்லைதான்.. ஊரறிஞ்ச தாதாவை உன்னைக் காதலிக்கிறவனாச்சேன்னு.. போனாப் போகுதுன்னு கள்வன்னு சொன்னேன்.."

"ஏய்ய்.. நீ உதைதான் வாங்கப்போற.."

"எதுக்கு உன் ஆளை கள்வன்னு சொன்னதுக்கா..?"

"அவன் என் ஆளில்ல.."

"தோடா.. இதை நம்ப நானொன்னும் பப்பா இல்லை.."

"உன்னை பப்பான்னு இந்த காலேஜில ஒரு குருவி கூடச் சொல்லாது.."

"அதை விடுடி... இப்ப குருவிக்கும்.. நமக்கும் என்ன பிரச்னை..? உன் கதைக்கு வா.. இன்னைக்கு நீ அவனைப் பார்த்திருக்கணுமே.."

எப்படி அவன் இதைக் கண்டு பிடித்தாள் என்ற திகைவில் விழி விரித்தாள் மாளவிகா.. அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ஹாசினியின் புருவங்கள் உயர்ந்து இறங்கின..

"எப்படி.. கண்டு பிடிச்சிட்டேனா..? அதான் உன் முகத்தில எரியற பல்பே சொல்லிருச்சே.. அம்மணி அவனைப் பார்த்துட்டுத்தான் வர்றான்னு.. அது எப்படிடீ.. அவனைப் பார்த்தா மட்டும் உன் முகம் வெளிச்சமா ஆகிருது..?"

"ஆமாமா.. அதுக்கு முன்னாலே இருண்டுதானே இருந்துச்சு.."

"என்னவோ போடி மாளவிகா.. ஒரு அவசர ஆத்திரத்துக்கு உன்கிட்ட உதவி கேட்டு வந்துக்கலாம்.."

இப்படிச் சொன்ன ஹாசினி காரில் வந்து போகும் அளவிற்கு வசதியானவள்..

"கிண்டல் பண்றியா..? உனக்குப் போய் நான் உதவி செய்யணுமா..?"

"என்னடி இப்படிச் சொல்லிட்ட...? பெரிய தலையே உன் கைக்குள்ள இருக்குது.. அந்த ரமணனால முடியாததுன்னு ஒன்னும் இல்ல.. அவன் செல்வாக்கு.. குமரி முனையில இருந்து.. இமயம் வரைக்கும் பாயுமாக்கும்.."

"விட்டா அவனுக்கு ரசிகர் மன்றமே கட்டிருவ போல இருக்கே.. நான் வேணும்னா ஒன்னு செய்யவா..?"



"என்ன செய்யப் போற..?" ஹாசினி ஒரு மார்க்கமாக பார்த்தாள்..

"ஏண்டி இப்படிச் சந்தேகப் பார்வை பார்க்கிற..?"

"சும்மாவே நீ ஒன்னு செய்யவான்னு கேட்டுட்டு ஓராயிரம் செய்யற ஆளு.. உன்னோட பேக்ரவுண்டு வேற இப்ப பலமா இருக்கு.. அதான் சந்தேகமா இருக்கு.."

"அந்த பேக்ரவுண்டைத் தூக்கி உன் பின்னாலே நிப்பாட்டிரவா..?"

"என்னடி சொல்ற..?"

"அந்த ரமணன்கிட்டச் சொல்லி உன்னைக் காதலிக்கச் சொல்லவான்னு கேட்டேன்.." அமைதியாக மாளவிகா சொல்ல..

"அடிப்பாவி.." அலறினாள் ஹாசினி...

"நீதானேடி அவனோட பேக்ரவுண்டைப் பார்த்துப் பெருமூச்சு விட்ட...?"

"அதுக்காக..? இப்படியா சொல்லி வைப்ப..?"

"அவன் உயரத்தைப் பத்தி உயர்த்திப் பேசினதினால உன் மனசுக்குள்ள அவன் மேலே ஒரு ஃபீலிங்ஸ் இருக்குதோன்னு ஒரு சம்சயம்.."

"அப்படியெல்லாம் சம்சயப் பட்டுறாதேடி தாயே.. சூரியனைக்கூட உயரத்தில இருக்காருன்னு அண்ணாந்து

பார்க்கிறோம்.. அதுக்காக அதைத் தொட்டுப் பாருன்னு பக்கத்திலே தள்ளி விடுவியா.. பொசுங்கிப் போயிடுவேண்டி.."

"நீ மட்டும் பொசுங்குவ.. நான் மட்டும் பூவாய் பூப்பேனாக்கும்..?"

"அவனுக்கு உன்னைப் பார்த்தாத்தானே மனசுக்குள்ள பூப்பூக்குது..? அவன் மத்தவனுக்குத்தான் சூரியன்.. உனக்கு நிலாடி.. அதுவும் பௌர்ணமி நிலா.."

"சொல்லிக்கிட்டே இரு.. ஒருநாள் இல்லைன்னா.. ஒருநாள் உன்னை அவன்கிட்டக் கோர்த்து விட்டுட்டு நான் நிம்மதியா இருப்பேன்.."

"அதானே நடக்காது.." தலையை ஆட்டிச் சிரித்தாள் ஹாசினி..

"ஏன் நடக்காது..?" சண்டைக்கு வந்தாள் மாளவிகா..

"நீ எப்படியோ எனக்குத் தெரியாது.. ஆனா.. அவனைப் பொறுத்த வரைக்கும்.. ராமன்டி.." நிச்சயமாகச் சொன்னாள் ஹாசினி..

"ராமனா..?"

"ம்ம்ம்.. உன்னைத்தான் அவன் காதலிப்பான்.. என்னால நிச்சயமா இதைச் சொல்ல முடியும்.."

"நீ ரொம்பத்தான் கண்ட..."



"நான் கண்டதில்லைதான்.. ஆனா.. கண்டவங்க பேசினதைக் கேட்டிருக்கேன்.. ரமணன் பெண்களைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டானாம்.. அப்படிப் பட்டவன்.. உன்னை மட்டும் சுத்திவர்றான்னா அவன் ராமனாத்தானே இருக்க முடியும்..?"

ஹாசினியின் பேச்சில் மாளவிகாவின் மனம் சங்கடப் பட்டது.. அவன் ராமனாக இருந்தான்தான்.. ஆனால்.. அவள் அவனுடைய சீதையாக இருக்கிறாளா..?

அன்று இரவு.. அவள் தூங்க வெகு நேரமானது..

அதிகாலைக்கான அத்தனை அறிகுறிகளும் அந்த வீட்டில் ஆசம்பமாகியிருந்தன.. சிடியில் 'கௌசல்யா.. சுப்ரபாதம்..' ஒலித்துக் கொண்டிருந்தது.. பூஜையறையில் காமாட்சி விளக்கு ஒளிர்ந்து கொண்டிருக்க.. அகர்பத்தியின் மணம் வீட்டை நிரப்பியது.. சமையலறையில் மதுரா போட்ட காபியின் மணம் ஹாலைக் கடந்து அதை ஒட்டியிருந்த படுக்கையறைகளில் நுழைந்தது.. காபியின் மணத்தை நுகர்ந்தவளாய் கண் விழித்தாள் மாளவிகா..

எழுந்து அழகாக சோம்பல் முறித்தவள் குளியலறைக்குள் புகுந்து பல்துலக்கி முகம் கழுவி வெளிப்பட்டாள்..

"அம்மா.. காபி.."

சமையலறைக்குள் சென்றவளிடம் காபியை நீட்டிய மதுரா.. குளித்து முடித்து.. மங்களகரமாக இருந்தாள்..

"அழகா இருக்கீங்கம்மா.." மாளவிகா தாயின் கழுத்தைக் கட்டிக் கொள்ளப் போனாள்...

"ஐஸ் வைக்கறியா.. குளிக்காம தொடாதே.." கையிலிருந்த கரண்டியினால் மகளை ஒரு போடு போட்டாள் மதுரா..

"எப்படிம்மா அப்பாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க..?" காபியை உறிஞ்சியபடி கேட்டாள் மாளவிகா..

"நானெங்கே அவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்..? அவர்கூட எனக்கு கல்யாணம் ஆகிருச்சு.." இயல்பாக பதில் சொல்லியபடி சமையல் வேலைகளில் ஆழ்ந்தாள் மதுரா...

பெரும்பாலான இந்தியப் பெண்கள் இந்தப் பதிலைத்தான் சொல்வார்கள் என்ற நினைவுடன் காபித் தம்ளரை சிங்கில் போட்டு கழுவி வைத்தாள் மாளவிகா..

மகளின் பொறுப்புணர்ச்சியில் மதுராவின் முகத்தில் கனிவு வந்தது..

"நான் ஹெல்ப் பண்ணவாம்மா..?"

மாளவிகா கேட்டதும் இதமாக உணர்ந்தாள் மதுரா.. இந்த ஒரு சொல்லுக்காகத்தானே.. இந்திய குடும்பத் தலைவிகள் ஏங்குகிறார்கள்..?



'ஹவுஸ் வொய்ப்..' எனப்படும் இல்லத்தரசிகளுக்குத் தான் எத்தனை வேலைகள்..! காலையில் வீட்டிலிருக்கும் மற்றவர்கள் எழுந்து கொள்வதற்கு முன்னாலேயே எழுந்திருக்க வேண்டும்.. பம்பரமாய் சுழன்று காலை உணவைத் தயாரிக்கும் வேலையை முடிக்க வேண்டும்.. கணவரையும்.. குழந்தைகளையும் வெளியே அனுப்பி வைத்துவிட்டு வீட்டைப் பார்த்தால் அது பானிபட் போர்க்களம் போல காட்சி தரும்.. படுக்கையறைகளில் சுருட்டி வீசப்பட்டிருக்கும் ஈரத்துண்டுகளை சேகரித்து வாஷிங் மெஷினில் போடவேண்டும்.. சில நேரங்களில் அவை சோபாவின் அடியிலேயும்.. டிவியின் பின்புறத்திலும் கிடக்கும்.. அதைத் தேடிக் கண்டுபிடித்து துவைத்து உலர்த்தாவிட்டால் தேவையில்லாத வாசனைகள் அந்தத் துண்டில் வருவதோடு மட்டுமில்லாமல் வீட்டையும் அவை இட்டு நிரப்பக் கூடும்...

அழுக்குத் துணிகளை சேகரித்து வாஷிங் மெஷினில் போட்டுவிட்டு.. வீட்டை சுத்தம் பண்ணி.. சமையலறையில் குவிந்திருக்கும் பாத்திரங்களை கழுவித் துடைத்து அடுக்கி வைத்து விட்டு நிமிரும் போது நேரம் நண்பகலைத் தொட்டிருக்கும்.. துவைத்த துணிகளை காயப் போட்டு விட்டு.. பசிக்கும் வயிற்றுக்கு கொஞ்சம் சாப்பாட்டை போட்டு விட்டு நிமிர்ந்தால்.. பிற்பகல் வேளை வந்திருக்கும்..

பால் வாங்கித் திரும்பும் போது.. குழந்தைகள் வந்திருப்பார்கள்.. அவர்களுக்கு உடைமாற்றி.. அழுக்குத் துணிகளை காலி வாஷிங்மெஷினில் திணித்து.. அவர்களுக்கான பாலையும்.. பலகாரத்தையும் கொடுத்து முடிக்கும் போது இரவு வந்து சேர்ந்திருக்கும்.. கணவரும் வந்து சேர்ந்திருப்பார்.. அடுத்த காபி கலப்பு.. பலகார பரிமாற்ற வேலைகள் ஆரம்பிக்கும்.. அது முடியும் போது இரவுச் சமையல் வேலை ஆரம்பிக்கும்..

எல்லோருக்கும் இரவு உணவைக் கொடுத்து விட்டு.. மற்றவர்கள் சூடாக சாப்பிடுவதை.. இவள் ஆறி.. அவலான பின்பு சாப்பிட்டு.. சமையலறை விளக்கை அணைக்கும் போது.. வீட்டில் உள்ளவர்கள் நிம்மதியாக உறங்கியிருப்பார்கள்.. இதற்கு இடையில் வந்து போகிறவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டும்.. துவைத்து உலர்ந்த துணிகளை மடித்து வைக்க வேண்டும்.. காய்கறி வாங்க வேண்டும்.. கரண்ட் பில் கட்ட வேண்டும்..

அப்பப்பா..! சொல்லும் போதே கண்ணைக் கட்டுகிறது.. இல்லையா..?








"செய்யேன்.." மதுரா மகளின் உதவியை ஏற்றுக் கொண்டாள்..

"என்ன செய்யட்டும்..?" மாளவிகா தயாரானாள்...

"இந்தக் காயைக் கழுவி நறுக்கிக் கொடு.."

மாளவிகா மளமளவென்று காய்களை கழுவி நறுக்கிக் கொடுத்தாள்.. மதுரா கொடுத்ததை மிக்ஸியில் போட்டு அரைத்துக் கொடுத்தாள்.. அவள் ஊற்றித் தந்த காபித் தம்ளர்களை சிதம்பரத்திடமும்.. அஸ்வினிடமும் கொடுத்து விட்டு வந்தாள்...

"தேங்க்ஸ்டி.. உன்னால என்வேலை சீக்கிரமா முடிஞ்சிருச்சு.." மதுரா சொன்னபோது மனதுக்குள் நிறைவாக உணர்ந்தாள் மாளவிகா..

குளித்து.. உடைமாற்றி கல்லூரிக்குப் போகத் தயாரானவள் சாப்பாட்டு மேஜைக்கு வந்த போது.. அங்கே புதிதாக ஒருவன் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டதும் தயங்கி நின்றாள்..

"ஹேய்.. மாளவிகா.. ஆளே அடையாளம் தெரியலை.. வளர்ந்துட்ட.." அவன் ஆர்வமாக அவளைப் பார்த்து வரிசைப் பற்களைக் காட்டிச் சிரித்தான்..

'யார் இவன்..?' அறிமுகமற்ற பார்வை பார்த்தாள் மாளவிகா..

அவளைத் தெரிந்தவனைப் போலப் பேசியவன் யாரென்று அவளுக்குத் தெரியவில்லை..

"நம்ம கார்த்திக்தான் மாளவிகா.. உனக்குத் தெரியலையா..?" மதுரா கேட்டாள்..

"கார்த்திக்கா..!" விழி விரித்தாள் மாளவிகா..

சின்னவயதில் பார்த்த மதுராவின் ஒன்றுவிட்ட அண்ணன் மகனை மீசை வளர்ந்த முரட்டு ஆண்மகனாக அவள் பார்த்ததில் அவளுக்கு அவனை அடையாளம் தெரியவில்லைதான்..

"கார்த்திக்கேதான்.. உட்காரு.." அவன் சுவாதீனமாக எதிரே இருந்த நாற்காலியைக் காண்பித்தான்..

"என் வீட்டுக்குள்ளே வந்து எனக்கே உபசாரமா..?" மாளவிகா கேட்டு விட்டுத்தான் உட்கார்ந்தாள்..

"உன் வீடா..? இது என் அத்தை வீடாக்கும்.." உரிமையுடன் சொன்னான் கார்த்திக்..

'விட்டால் என்னையும்.. அஸ்வினையும் வீட்டை விட்டே ஓட்டி விடுவான் போல இருக்கே..' எரிச்சலுடன் நினைத்துக் கொண்டாள் மாளவிகா...



'இவன் மாறலை..'

கார்த்திக்கின் குணாதிசயம் அப்படிப்பட்டது.. அவன் எந்த வீட்டுக்குப் போனாலும்.. அந்த வீட்டைச் சேர்ந்தவர்களை மூன்றாம் மனிதர்களாக்கி விட்டு.. இவன் தான் அந்த வீட்டிற்கான வாரிசைப் போல உரிமை கொண்டாடுவான்..

'ஓசூரில இருந்தவனுக்கு சென்னையில என்ன வேலை..?'

மாளவிகா தட்டைப் போட்டு.. பூரியை எடுத்து வைத்துக் கொண்டே நினைத்தாள்..

'எதுக்கோ வந்திருப்பான்..! என்ற நினைவுடன் தட்டிலிருந்த பூரிகளைக் காலி செய்ய ஆரம்பித்த போது தான் அதை உணர்ந்தாள்..'

கார்த்திக் அவளையே ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்..

"என்னடா இது.. வம்பாப் போச்சு.." அவளுக்கு சங்கடமாக இருந்தது..

அவளுக்கும் கார்த்திக்கிற்கும் என்றுமே ஆகாது.. சிறுமியாக இருந்த மாளவிகாவை விட ஏழுவயது பெரியவனாக இருந்த திமிரில் அவன் மாளவிகாவின் தலையில் குட்டுவான்.. மாளவிகா பெரியவர்களிடம் புகார் சொன்னால் அவள் குறும்பு செய்ததால் குட்டியதாக பொய் சொல்லி விடுவான்..

இரட்டை சடையுடன் அலையும் மாளவிகாவின் குண்டுக் கன்னங்களைக் கிள்ளி விடுவான்.. வலியால் துடித்துப் போய் அழுபவள் மதுராவிடம் முறையிடுவாள்.. அவள் கூப்பிட்டு விசாரித்தால் 'கொஞ்சினேன் அத்தை..' என்று பதில் சொல்லி விடுவான்..

எல்லாவிதமான போக்கிரித்தனங்களும் அவனிடம் இருக்கும்.. ஆனால் பெரியவர்களிடம் சமர்த்துப் பிள்ளை என்ற பெயர் வாங்கி விடும் சாமர்த்தியம் அவனிடம் இருந்தது..

'அந்தச் சாமர்த்தியம் யாருக்கு வேணும்..?'

மாளவிகாவிற்குள் சின்னஞ்சிறு பருவத்தின் எரிச்சல்கள் வந்தன.. கார்த்திக் காட்டிய இரட்டை முகத்தை அவள் இன்னமும் மறக்கவில்லை..

'அப்படிப்பட்ட சாமர்த்தியமெல்லாம் எனக்கோ.. அஸ்வினுக்கோ இல்லை பூமிகாவுக்கோ சுட்டுப் போட்டாலும் வாராது..'

அவன் முகத்தைப் பார்த்தால்தானே வம்பு என்று அவள் நிமிராமல் பூரியை உள்ளே தள்ளி விட்டு.. மதிய உணவு டப்பாவை எடுத்துக் கொண்டு நிமிர்ந்தாள்..

அதுவரை அவளையே கவனித்தபடி சிதம்பரத்திடம் பேசிக் கொண்டிருந்த கார்த்திக்..

"எங்கே கிளம்பிட்ட மாளவிகா..?" என்று கேட்டான்.



'ஊர் சுற்ற..' என்று வார்த்தைகள் அவளின் தொண்டை வரை வந்து விட்டன.. மதுராவின் விரோதத்திற்கு ஆளாக வேண்டுமே என்று அவற்றை விழுங்கிக் கொண்டாள்..

"காலேஜீக்கு.."

"ஓ.. நீ என்ஜினியரிங் படிக்கிறேல்லை..?"

அவன் வந்தவுடனே அதைத்தான் முதலில் சிதம்பரம் சொல்லியிருப்பார் என்று மாளவிகாவிற்கு மிக நன்றாகவே தெரியும்.. வீட்டிற்கு எந்த விருந்தினர் வந்தாலும்.. பிள்ளைகளைப் பற்றியும்.. அவர்களின் படிப்பைப் பற்றியும் ஒப்பிக்காவிட்டால் அவருக்கு பேசியதைப் போலவே இருக்காது..

அப்போதும் அதைத்தான் அவர் செய்திருப்பார் என்பதில் மாளவிகாவிற்கு எள்ளளவும் சந்தேகமில்லை.. அதை ஊர்ஜிதம் செய்வதைப் போல..

"இப்பத்தானே அதைப் பத்தி சொன்னேன் கார்த்திக்..?" என்று கேட்டு வைத்தார் சிதம்பரம்..

"ஆமாமா.. சொன்னீங்கல்ல.. மறந்தே போயிட்டேன்.." கார்த்திக் சமாளித்தான்..

"ஆமாம்பா.. அவர் இதைக் கேட்டு வருசக்கணக்காய் ஆகியிருச்சில்ல..? மறந்துதான் போயிருப்பார்.." வாய்ப்பு கிடைத்தவுடன் வாரிவிட்டாள் மாளவிகா..

கார்த்திக்கின் முகம் கருத்தது.. இதைப் போன்ற மாளவிகாவின் புத்திசாலித் தனமான பேச்சுக்களை எப்போதுமே அவன் ரசித்ததில்லை..

'இவ அப்பயிருந்து இப்ப வரைக்கும் புத்திசாலித் தனமாவே பேசிவைக்கிறாளே..'

"எப்படிப் போகப் போற..?" அடுத்த கேள்வியை அவன் கேட்டான்..

"பஸ்லிலதான்.." எரிச்சலுடன் பதில் சொன்னாள் மாளவிகா..

"நான் டிராப் பண்றேனே.." அவன் எழுந்து கொண்டான்..

"நோ.. நோ.. நானே போய்க்குவேன்.." அவசரமாக மறுத்தாள் மாளவிகா..

"கமான் மாளவிகா.. டூ வீலர்ன்னு பயந்திட்டயா..? காரில்தான் வந்திருக்கேன்.. வா.. போகலாம்.."

கார்த்திக் பிடிவாதமாக வற்புறுத்த.. வேறு வழியில்லாமல் அவனைப் பின் தொடர்ந்தாள் மாளவிகா..

வாசலில் இருந்த காருக்கருகில் இரண்டு போலிஸ்காரர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.. கார்த்திக்கை கண்டதும் அவர்கள் சல்யூட் அடிக்க.. அதை மாளவிகா கவனிக்கிறாளா என்று ஓரக் கண்ணில் பார்த்துக் கொண்டான் கார்த்திக்..



'அல்பம்..! இன்னும் இந்தப் புத்தி போகலியே..' மாளவிகா அதை கண்டு கொள்ளாமல் தெருவை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்..

அவள் பார்க்கவில்லையே என்று பல்லைக் கடித்த கார்த்திக் மிதப்பாக தலையசைத்து விட்டு.. அந்தப் போலிஸ்காரர்களை அனுப்பி வைத்தான்..

"அவங்க எனக்கு எதற்காக விஷ் பண்ணினாங்கன்னு தெரியுமா..?"

'விட மாட்டானே.. இவனுக்கு அவங்க சல்யூட் அடிச்சதை எந்த வகையிலாவது என்கிட்ட சொல்லியேதீரனும்..' மனதுக்குள் கார்த்திக்கை அர்ச்சித்த மாளவிகா.. ஒன்றும் அறியாதவளைப் போல முகத்தை வைத்துக் கொண்டு..

"சல்யூட் அடிச்சாங்களா..? அவங்களா..? உங்களுக்கா..? நான் பார்க்கலையே..". என்று வழி விரித்தாள்..

"அவங்க சல்யூட்தான் அடிச்சாங்க.." எரிச்சலுடன் சொன்னான் கார்த்திக்..

"அப்படியா..?" அதற்கு மேல் அதற்கு முக்கியத்துவத்தை கொடுத்து ஒருவார்த்தை கூட மாளவிகா பேசவில்லை..

அப்படியே விட்டுவிட்டால் கார்த்திக்கின் பெருமை என்ன ஆவது..?

"என்ன அப்படியான்னு ஒத்தை வார்த்தையில கேட்டுட்ட..?"

"வேற என்ன செய்யனும்..?"

"எதுக்காக அவங்க சல்யூட் வைச்சாங்கன்னு கேட்க வேணாமா..?"

"சேச்சே.. அப்படிக் கேட்டா நல்லாயிருக்குமா..?" மாளவிகா அவனின் மூக்கை உடைத்தாள்..

எந்தப் பக்கம் போனாலும் அந்தப் பக்கம் வழியை அடைக்கும் மாளவிகாவின் மீது கார்த்திக்கிற்கு ஏற்பட்டிருந்த எரிச்சல் அதிகமானது.. சின்ன வயதில் குட்டிக் கிள்ளி வைத்ததைப் போல இப்போது செய்ய முடியாமல் போனதில் அவன் வெகுவாக வருத்தப் பட்டுப் போனான்...

அவள் எதற்காக என்று கேட்க வேண்டும்.. அவன் அதற்கான விளக்கத்தைத் தர வேண்டும்.. அவள் 'ஆ'வென்று பிரமிப்பாக அவனைப் பார்க்க வேண்டும் என்ற அவனின் எண்ணத்தை புரிந்து கொள்ளாமல் உனக்கெல்லாம் போய் எதுக்காக அவங்க சல்யூட் அடித்தாங்கன்னு கேட்டால் நன்றாயிருக்குமா என்று மூக்கை உடைப்பவளை அவன் என்னதான் செய்வது..?

# 9



"நான் ஒரு போலிஸ் ஆபிசர்.." கார்த்திக் பெருமையாகச் சொன்னான்..

இப்போதாவது அவள் பிரமிப்பாள் என்று பார்த்தால் அவள் லேசாக தலையை மட்டும் ஆட்டி விட்டு காரின் பின் சீட்டின் கதவைத் திறந்து ஏறி உட்கார்ந்து விட்டாள்..

இரண்டு வகையான ஏமாற்றங்களுக்கு ஆளானான் கார்த்திக் முதலாவது அவன் எதிர்பார்த்தபடி அவள் பிரமிக்காதது.. இரண்டாவது.. அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொள்ளாமல் காரின் பின்சீட்டில் உட்கார்ந்து கொள்வது..

'இவளுக்கு நானென்ன டிரைவரா..?'

கார் கதவை ஓங்கிச் சாத்தி தன் கோபத்தை வெளிப் படுத்தினான் கார்த்திக்.. அதைப் புரிந்தும் புரிந்து கொள்ளாதவளைப் போல முகத்தை வைத்துக் கொண்டு மாளவிகா ஜன்னல் பக்கமாக திரும்பி வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்..

காரின் முன்பக்க கண்ணாடியை சரிசெய்த கார்த்திக் அதன் வழியாக அவளைப் பார்த்தபடி காரை ஓட்ட ஆரம்பித்தான்..

'இல்லை..' மனதுக்குள் திட்டித் தீர்த்தபடி மாளவிகா நீ எதன் வழியாக என்னைப் பார்த்தாலும் எனக்கென்ன வந்தது என்று வெளியே பதித்த பார்வையை திருப்பாமலிருந்தாள்..

"க்கும்.." தொண்டையைக் கனைத்தான் கார்த்திக்..

'அப்படியே எருமை மாடு செருமுவதைப் போலவே இருக்கு..' என்று நினைத்துக் கொண்டாள் மாளவிகா..

அவள் திரும்பிப் பார்ப்பாள் என்று செருமிப் பார்த்த கார்த்திக் இது வேலைக்கு ஆகாது என்ற முடிவுடன்..

"ஆக்சுவலாய் மாளவிகா.." என்று ஆரம்பித்தான்..

'ஏம்பம் போட ஆரம்பிச்சுட்டியா.. கண்டுக்காம வெளியே பார்த்தாலும் விட மாட்டேங்கறியே..' மாளவிகா நகம் கடித்தாள்..

"நான் ஐ.ஏ.எஸ் ஆகனும்னுதான் ஆசைப்பட்டேன்.. ஆனா டாடிதான் ஐ.பி.எஸ் ஆகனும்னு சொல்லிட்டார்.."

ஒருவழியாக அவன் ஐபிஎஸ் ஆபிசர் என்ற பெருமையை நிலை நாட்டிவிட்டு இப்போதாவது அவள் பிரமிப்பாளா என்ற ஏக்கத்துடன் அவன் காத்திருந்தான்..

மாளவிகா அவன் சொன்னதை விட்டுவிட்டு வேறொன்றில் விளக்கம் கேட்டாள்..



"டாடியா..? நீங்க மாமாவை அப்பான்னுதானே கூப்பிடுவீங்க..?"

'ஞாபகம் வைத்திருக்காளே..' அவனுக்கு பற்றிக் கொண்டு வந்தது..

'இப்ப அதுதான் ரொம்ப முக்கியம்.. நீ பெரிய உலக அழகி..! இவ்வளவு தூரத்துக்கு அலட்டிக்கற.. உங்க அப்பனுக்கு இருக்கிற வசதிக்கு உனக்கெல்லாம் இவ்வளவு ஆணவம் கூடாது..'

"இல்லையே.. நான் டாடின்னுதான் கூப்பிடுவேன்.."

"இல்லவே இல்லை.. நீங்க அப்பான்னுதான் கூப்பிடுவீங்க.. வேணும்னா உங்க அப்பாகிட்டயே இதைப் பத்திக் கேட்டுப் பார்க்கலாமா..?"

"வேணாம்.. வேணாம்.." கார்த்திக் மறுத்தான்..

அவனுடைய அப்பாவான ஜெகநாதனுக்கு பொய் சொல்ல வராது..

"ஏன்..?" அறியாதவளைப் போல நமட்டுச் சிரிப்புடன் கேட்டாள் மாளவிகா..

"பூமிகா எப்படியிருக்கு..?" கார்த்திக் பேச்சை மாற்றினான்..

"ஃபைன்.."

"அப்படியா..? அதை நினைச்சு மாமா ரொம்ப புலம்பினார்.. நீ என்னன்னா 'ஃபைன்' அப்படின்னு ஒத்தைச் சொல்லில் முடிச்சுக்கறியே.."

கார்த்திக்கின் நோக்கம் எதுவென்று மாளவிகாவிற்கு தெளிவாக புரிந்தது.. பூமிகாவை அவனுக்குக் கொடுக்க வேண்டுமென்று மதுரா ஆசைப்பட்டாள்.. அதற்காக ஜெகநாதனிடம் இடைபட்ட உறவினர்களின் மூலம் தூதுவிட்டாள்.. பதிலுக்கு ஜெகநாதன் கேட்ட சீர்வரிசை பட்டியலைக் கேட்டவளுக்கு மூச்சடைத்துப் போனது.. பூமிகாவை வேறு இடத்தில் திருமணம் செய்து கொடுத்து விட்டார்கள்.. இப்போது அந்த மாப்பிள்ளை பூமிகாவை சரியாக வைத்துக் கொள்ளவில்லை.. அந்தப் பெருமையைத் தான் அவன் கொண்டாட நினைக்கிறான்..

"ஒவ்வொருத்தரின் பெர்ஸனல் ஃலைபிலும் ஆயிரம் இருக்கும் கார்த்திக்.. அது நமக்கு எதுக்கு..?"

கார்த்திக்கின் முகத்தில் ஈயாட வில்லை.. 'ஆமாம் கார்த்திக்.. உனக்கு கல்யாணம் செய்து கொடுத்திருந்தால் பூமிகா நல்லபடியாக வாழ்ந்திருப்பாள்.. இப்போது பார்.. அவளைக் கட்டிக் கொண்டவன் கொடுமை பண்ணுகிறான்..'

இப்படியெல்லாம் மாளவிகா சொல்லிப் புலம்பியிருந்தால் அவனுக்கு சந்தோசமாக இருந்திருக்கும்.. சிதம்பரமும்.. மதுராவும் அதைத்தான் செய்திருந்தார்கள்..



ஏன்.. அஸ்வின்கூட அதைச்சொல்லிப் புலம்பியிருந்தான்.. மாளவிகா மட்டும்தான்.. எதற்கும் அசைந்து கொடுக்காத கல்லூரி மங்கியாக அசையாமல் பேசினாள்..

"அப்படிச் சொல்லிற முடியுமா மாளவிகா..? அதைக் கல்யாணம் பண்ணிக்கிட்டவன் பணம் கேட்டு கொடுமை பண்ணுகிறானாமே.. செய்த சீர்வரிசைகளைப் போல நூறு மடங்கு வாங்கிட்டானாம்.. இன்னும் அவனுக்கு திருப்தியாகலையாமே..?"

'ஜெகந்நாதன் அண்ணனுக்கு சொந்தத்தை விட சீர்வரிசைதான் பெரிசாயிருக்கு' என்று இடைபட்ட உறவினர்களிடம் சொல்லி அனுப்பியிருந்தாள் மதுரா.. அதை இப்போது இவன் சொல்லிக் காட்டுகிறான் என்பது மாளவிகாவுக்குப் புரிந்தது...

"இதைப் பத்தியெல்லாம் எனக்கு பெரிசா எதையும் யோசிக்கவும் வராது.. பேசவும் வராது.. நீங்க அம்மா.. அப்பாகிட்டப் பேசுங்களேன்.. அவங்க நிறைய சொல்லுவாங்க.." எரிச்சலுடன் சொல்லி விட்டாள் மாளவிகா..

"என்னவோ போ மாளவிகா.. நான் கூட அப்பாகிட்டச் சொல்லிப் பார்த்தேன்.. அந்தஸ்து என்னப்பா அந்தஸ்து.. அத்தை பாவம் வசதியில்லாத குடும்பத்திலே வாழ்க்கைப் பட்டுச் சிரமப் படறாங்க.. அவங்க பெத்த பொண்ணுகள்ல

வாழ்க்கை கொடுக்கலாமேன்னு.. அப்ப ஒருத்திக்காவது வாழ்க்கை கொடுக்கலாமேன்னு.. அப்ப
அவர் அதை காதில போட்டுக்கலை.."

'ஒருத்தியா..?' அவனின் ஆணவமான பேச்சில் கொதித்துப் போனாள் மாளவிகா..

'இவன் வாழ்க்கை கொடுக்கிற அளவுக்கு நாங்க ஆகிட்டோமா..'

"என்ன மாளவிகா பேசாமல் வர்ற.."

"எத்தனை வருசமானாலும் சில பேர் மாறவே மாட்டாங்கிறாங்களேன்னு யோசிச்சுக்கிட்டு வர்றேன்.."

கார்த்திக்கின் முகம் கருப்பதை திருப்தியுடன் ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டாள் மாளவிகா.. அவளின் கல்லூரி வாசல் தெரிந்ததில் அவளுக்குள் எல்லையில்லாத நிம்மதி ஏற்பட்டது..

"என் காலேஜ் வந்துருச்சு கார்த்திக்.."

இறங்கியவள் ஒரு நன்றியைக் கூடச் சொல்லாமல்.. யாரோ ஒரு தோழியைப் பார்த்து 'ஹாய்..' என்று கையாட்டிய படி சென்று விட்டதில் கடுப்பாகிப் போனான் கார்த்திக்..

'இவ மாறாம இருந்துக்கிட்டு என்னை மாறலைன்னு குத்திக் காட்டிட்டு போறாளே..'

அன்று முழுவதும் எரிச்சலுடனே இருந்தாள் மாளவிகா.. எதைக் கேட்டாலும் சுள்ளென்று விழுந்தவளை..



"காலையில யார் முகத்தில முழிச்சடி.. இந்தப் பாடு படுத்தற.." என்று கடிந்து கொண்டாள் ஹாசினி..

"முழிச்சதெல்லாம் நல்ல மூஞ்சிதான்.. ஆனா.. அதுக்கப்புறமா வந்து சேர்ந்ததுதான் நல்ல மூஞ்சியில்லை.." என்றாள் மாளவிகா..

"யாரைடி பார்த்த..?" ஹாசினி கேட்டாள்..

"எங்க சொந்தக்காரன் ஒருத்தன்டி.. கடுப்படிச்சுட்டான்.." தலையைப் பிடித்துக் கொண்டாள் மாளவிகா..


"தலைவலியையே வர வைச்சிட்டானா.. ஐயோ பாவம்.." பரிதாபப் பட்டாள் ஹாசினி..

மாலையில் கல்லூரி முடிந்ததும் பஸ் ஸ்டாப்பிற்கு சென்றவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.. கண்கள் சிவக்க அங்கே வந்து இறங்கினான் ரமணன்...

"என்கூட காரில் வரமாட்ட.. ஆனா வேறொருத்தன் கூட காரில் வருவியா..?"

இவனுக்கு எப்படித் தெரிந்தது என்று யோசித்த போதே அதிலிருந்த அபத்தத்தை தெளிவாக உணர்ந்தாள் மாளவிகா..

என்று ரமணன் அவளிடம் காதலைச் சொன்னானோ.. அன்றிலிருந்தே அவனின் கண்காணிப்பு வட்டத்திற்குள் மாளவிகா வந்து விட்டாள்...



# 10

அவள் சம்பந்தப்பட்ட அனைத்து விவரங்களும் உடனுக்குடன் ரமணனுக்குப் போய் சேர்ந்து விடும். அதைப் போல்தான் அவள் கார்த்திக்கின் காரில் வந்து இறங்கியதும் போய் சேர்ந்திருக்கிறது..

"அது எவனோ இல்லை..."

விளக்கம் சொல்லத்தான் ஆரம்பித்தாள் மாளவிகா.. கார்த்திக் என்பவன் எவனோ இல்லை.. உறவுக்காரன்.. காலையில் வீட்டுக்கு வந்திருந்தான்.. கல்லூரியில் இறக்கிவிட்டுப் போவதாகக் கூறினான்.. வீட்டில் வற்புறுத்தியதால் வேறு வழியில்லாமல் அவனுடன் காரில் வர வேண்டியதாகி விட்டது..

இதையெல்லாம் சொல்லத்தான் நினைத்தாள்.. ஆனால் சொல்ல ஆரம்பித்த போதே.. இவனுக்கு எதற்காக விளக்கம் கொடுக்க வேண்டும் என்று தோன்றியது.. ரமணன் அதையே சாக்காக வைத்துக் கொண்டு அவள் ரமணனைக் காதலிப்பதாக நினைத்து விட்டால் என்ன செய்வது என்ற நினைவு வர பேச்சை நிறுத்திக் கொண்டாள்..

அவள் சும்மா நின்றிருந்தால் கூட ரமணன் அந்த அளவிற்கு கோபப் பட்டிருக்க மாட்டான்.. அந்த வார்த்தைகளைச் சொன்னதும் அதிகமாக கோபப் பட்டு விட்டான்..

"ஏய்ய்.." ஒற்றை விரலை உயர்த்தி எச்சரித்தான்..

அதுவரை அது போன்ற ரௌத்ரமான கோலத்தில் அவனைப் பார்த்திராத மாளவிகா வெலவெலத்து விட்டாள்..

"அவன் எவனோ ஒருத்தனில்லை.. உனக்குச் சொந்தக்காரன்னு எனக்கும் தெரியும்.. பெயர் கார்த்திக்.. போலிஸ்ன்னா நான் பயந்து உன்னை விட்டுக் கொடுத்துடுவேன்னு நினைச்சியா..? அந்தக் கதையெல்லாம் என்னிடம் செல்லுபடியாகாது.. நான் ரமணன்.. எனக்கு நீதான்னு நான் முடிவு பண்ணியாச்சு.. உனக்கு நான்தான் அதை நினைப்பில் வைத்துக்க.."

மாளவிகா பக்கத்திலிருக்கிறவர்கள் என்ன நினைப்பார்களோ என்ற பதட்டத்துடன் சுற்று முற்றும் பார்த்தாள்.. ஒரு குருவியைக் கூட பக்கத்தில் காணோம்.. எங்கே..? ரமணன் வந்து இறங்கியதும்தான் அவர்கள் கல் விழுந்த பறவைக் கூட்டம் போல பறந்து விட்டார்களே..

'இவன் கிட்ட இது ஒன்னு இருக்குது.. எப்பல்லாம் பஸ் ஸ்டாப்பில் கூட்டமா இருக்கோ.. பஸ்ஸில் கால் வைக்கக் கூட முடியாதுன்னு நான் கவலைப்படறேனோ.. அப்பல்லாம் வந்து நின்னு எல்லோரையும் ஒட்டிடுவான்..'

அவளுக்கு சிரிப்பு வந்து விட்டது.. ரௌத்திரமான ரமணனின் முன்னால் சிரித்து வைத்தால் அவன் சும்மா விடமாட்டான் என்று தோன்ற.. அவள் தலையை ஆட்டி சிரிப்பைத் துரத்தினாள்..

அதைச் சம்மதமாக எடுத்துக் கொண்டான் ரமணன்.. அவன் முகத்திலிருந்த ரௌத்ரம் கொஞ்சம் வடிந்தது..

"புத்தியோட நடந்துக்க.. உன் படிப்புக்காக பார்க்கிறேன்.. இல்லைன்னா எப்பவோ தூக்கிக்கிட்டுப் போயிருப்பேன்.. இதுவரை நீ இப்படி யார்கூடவும் வந்து இறங்கினதில்லைன்னு கேள்விப்பட்டேன்.. இப்ப இவன் சொந்தக்காரன்னு நீ கூட வந்திருக்கலாம்.."

ரமணன் சொல்லிக் கொண்டே போக அவன் அனுமானத்தில் ஆச்சரியப்பட்டுப் போன மாளவிகாவின் மனதில் நிம்மதி வந்தது...

அது எதனால் என்ற நினைவில் அது குறித்த கவலையும் அதைத் தொடர்ந்து வந்தது..

"இனி இப்படிச் செய்யாதே.."

'நீ சொன்னாலும்.. சொல்லாட்டியும் அவன் காரில் நான் ஏன் ஏறப் போறேன்..? அவன் பேச்சைக் கேட்கிறதுக்குப் பதிலா.. பஸ்ஸில் இடிபட்டு போகிறது பெட்டர்..'



"அவன் கூடக் காரில் வர்றது உனக்கு கம்பர்டபிளா இருக்கலாம்.."

'ஒரு மண்ணும் இல்லை.. தலைவலி வந்ததுதான் மிச்சம்...'

"எனக்கு கம்பர்டபிள் இல்லை..."

'எனக்கும் இல்லைன்னுதானே நான் புலம்பிக்கிட்டு இருக்கேன்..?'

"அதனால..."

'அதனால...?'

"உனக்கு காரில் போகனும்னா சொல்லு... தினமும் உன்னைக் காரில் கொண்டு வந்து காலேஜில் இறக்கிவிட்டு.. கூப்பிட்டுக்கிட்டுப் போறேன்.. என்ன சொல்ற..?"

'வேற வினையே வேண்டாம்..' அரண்டு போனாள் மாளவிகா...

"ப்ளீஸ்.. எனக்கு அதெல்லாம் வேணாம்.."

"இன்னைக்கு வந்திருக்கியே..."

"அவன் எனக்கு ரிலேடிவ்.. காலையில் வீட்டுக்கு வந்திருந்தான்.. நான் காலேஜீக்கு கிளம்பினப்போ போகிற வழியில் டிராப் பண்ணிடறேன்னு சொன்னான்.. அம்மாவும் அப்பாவும் அவன் காரில போகச் சொல்லி ஃபோர்ஸ்

பண்ணினாங்க.. நேர அதர் வே.. அவன் காரில் ஏறி வந்திட்டேன்.. மத்தபடி எனக்கு அவன் காரில் வர கொஞ்சங் கூடப் பிடிக்கலை.."

எங்கே ரமணன் காரைக் கொண்டு வந்து வீட்டிற்கு முன்னால் நிறுத்தி வைத்துக் கொண்டு அவளைக் கூப்பிட்டு விடுவானோ என்ற பயத்துடன் பேசியவளை கண்களில் மின்னலுடன் பார்த்தான் ரமணன்.. அவன் முகத்தில் காணாமல் போயிருந்த மென்மை மீண்டிருந்தது..

"உனக்கு அவனைப் பிடிக்காதா..?" ஆழ்ந்த குரலில் அவன் கேட்டபோது.. அவளையுமறியாமல் 'ஆமாம்..' என்ற பாவனையில் தலையை அசைத்து விட்டாள் மாளவிகா..

"ஓ..."

அந்த ஒற்றைச் சொல்லில்தான் எத்தனை உற்சாகம்..!

ரமணனின் முகம் பிரகாசித்தது.. அவன் வழக்கமான பரிவுடன் அவளைப் பார்த்தான்..

"நேற்றுத்தான் உன்னைப் பார்த்தேனா.. இன்னைக்கும் உன்னை டிஸ்டர்ப் பண்ண வேணாம்.. ஈவினிங் தூரமாய் காரில் உட்கார்ந்துக்கிட்டே பார்த்துட்டுப் போகலாம்ன்னு நினைச்சேன் கண்ணம்மா.. காலையில மும்பை வரை போய் வர வேண்டியிருந்துச்சு.."

என்னவோ.. இதோ இருக்கிற தி.நகர் வரை போய் வர வேண்டி இருந்தது என்று சொல்வதைப் போலச்



சொன்னவனை.. 'ஆ' வென்று வாய் பிளக்காத குறையாக பார்த்து வைத்தாள் மாளவிகா..

"நான் போயிருக்கக் கூடாதுதான்.. எப்பவும் நம்ம பசங்கதான் போவாங்க.. இந்தத்தடவை ஹாலந்தில இருந்து பிஸினெஸ் பேச ஒருத்தன் நேராவந்து இறங்கியிருந்தான்.. அவனைப் பார்க்க நான் நேரடியா போக வேண்டியதாப் போச்சு.."

அவன் விளக்கம் சொல்லிய விதத்தில் மாளவிகாவிற்கு கலவரம் வந்துவிட்டது.. பஸ் வந்து விடாதா என்ற ஏக்கத்தோடு பஸ் வரும் பாதையை பார்த்துக் கொண்டாள் மாளவிகா..

'என்னமா கேசவலா பேசறான்.. நம்ம பசங்கங்கிறான்.. ஹாலந்துங்கிறான்.. பிஸினெஸ்ங்கிறான்.. விட்டா இவனோட அன்டர்கிரௌண்டு பிஸினெஸ்ஸிக்கு என்னையே எம்.டியா ஆக்கிருவான் போல இருக்கே.. கடைசியில்.. 'என்ஜினியர் மாளவிகா..' வா நான் ஆகிறதுக்குப் பதிலா 'லேடி டாண் மாளவிகா..' வா ஆகப் போறேன்.. ராமா..!'

அவள் ராமனை மனதில் துணைக்குக் கூப்பிட்டுக் கொண்டிருப்பதை அறியாதவனாய் அவன் முகத்தையே ஆவலுடன் பார்த்தபடி பேசிக் கொண்டிருந்தான் ரமணன்..

"இப்பத்தான் வந்தேன்.. பசங்க விவரத்தைச் சொல்லி.. அவன் ஜாதகத்தையும் சொன்னாங்க.. உன்னைக்

கொன்று புதைச்சிரனும்னு கொலை வெறி வந்திருச்சு.. அந்தக் கோபத்தோட வந்து பேசிட்டேன்.. நீ பயந்துராதே.." பிரியத்துடன் அவளைப் பார்த்தான் ரமணன்..

அந்தப் பார்வை மயிலிறகாய் அவள் மனம் வருடிச் சென்றது.. ஏனென்று தெரியாத இனம் விளங்காத உணர்வொன்று அவளுக்குள் புகுந்து ஆட்டுவிப்பதை உணர்ந்த மாளவிகாவின் கலவரம் அதிகரித்தது...

*'இனம் விளங்கவில்லை - எவனோ..*
*என் அகம் தொட்டு விட்டான்...'*

பாரதி பாடி வைத்திருக்கிறானே.. அது உண்மையாகி விட்டதா..? மாளவிகாவின் அகத்தை ரமணன் தொட்டு விட்டானா..?

## 11



தூக்கம் வராமல் புரண்டு படுத்த மாளவிகா அருகிலிருந்த செல் போனை எடுத்து மணி பார்த்தாள்.. 'மூன்று' என்று அது சொன்னது..

'விடியப் போகுதா..?' மாளவிகாவிற்கு அதிர்ச்சியாக இருந்தது..



அதுவரை அவள் தூங்கவில்லையா..?

'கடவுளே..' கண்களை மூடித் தூங்க முயன்றாள்.. தூக்கம் வரவில்லை.. மனதில் ரமணன்தான் வந்து நின்றான்..

'என்ன இது..?' மாளவிகா எழுந்து உட்கார்ந்து விட்டாள்.. அவள் கண்களில் நீர் வழிந்தது.. இது என்ன துடிப்பு என்று சொல்லத் தெரியாமல் அவள் துயர் கொண்டாள்..

*'தூண்டிற் புழுவினைப் போல் - சிறு*
*சுடர் விளக்கினைப் போல்..*
*நீண்ட பொழுதாக - எனது*
*நெஞ்சம் துடிக்குதடி..'*

பாரதியின் கவிதை வரிகள் அவள் நெஞ்சத்தில் ஓடின.. பாரதியென்ன பெண்ணா..? பெண்ணின் மன உணர்வை துல்லியமாக அவன் எப்படி பிரதிபலித்தான்..?

'பாரதி..' அவள் நெஞ்சம் விம்மியது...

'அவன் கள்வன்..! அவனை நினைத்து என் நெஞ்சம் துடிக்கலாமா..? இனம் புரியாத உணர்வு என் நெஞ்சை நிரப்பலாமா..? தூண்டிற்புழுவினைப் போல் நான் துடித்து நிற்கலாமா..? அவனைக் காதலிப்பது தூண்டிற்புழுவின் நிலையைத்தான் எனக்கு உண்டாக்கும்...'

சிதம்பரமும்.. மதுராவும் இதை அறிந்தால் என்னவெல்லாம் சொல்வார்கள் என்ற நினைப்பில் அவள் பதைத்துப் போனாள்..

மறுநாள் காலையில் தூக்கம் கெட்டதால் வீங்கிய இமைகளுடனும்.. சிவந்த விழிகளோடும் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தவளைப் பார்க்க வந்து இறங்கினான் ரமணன்..

'இன்னைக்கும் வந்துட்டானா..?' என்று நினைத்த போதும் அவன் வரவில் மனதுக்குள் சொல்லத் தெரியாத சுகமொன்று பரவுவதை மாளவிகாவினால் தடுக்க முடியவில்லை...

"ஏன் முகம் வீங்கியிருக்கு..? நைட்டெல்லாம் தூங்காம கண் விழிச்சிருந்தியா..?" அக்கறையுடன் அவன் கேட்டபோது.. அந்த பாசத்தில் நெக்குருகி அவள் கண்கள் கலங்கிவிட்டன...

"த்ச்ச.. அழக் கூடாது.. நேத்து நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது.. கோபத்தில பேசிட்டேன்.. அப்புறமா ரொம்பவும் வருத்தப்பட்டேன்.. உனக்கு பூப்போல மனசு.. நான் பேசின கடுமையான வார்த்தைகளை உன்னால தாங்கிக்க முடியாதுன்னு தோணிச்சு.. நைட்டெல்லாம் தூக்கமில்லாம அதையே நினைச்சுக்கிட்டு இருந்திருப்பன்னு கவலைப்பட்டேன் நான் நினைச்சதுதான் நடந்திருக்கு.. நீ அதையே



நினைச்சு.. மனசைப் போட்டு உழட்டிக்கிட்டு தூங்காம இருந்திருக்க.." வருத்தத்துடன் அவன் பேசினான்..

அவன் வருத்தத்தைக் கண்ட மாளவிகாவிற்கு வருத்தமாக இருந்தது.. இத்தனை பாசமாய் இவன் இருக்க வேண்டாமே என்று அவள் மனம் தவித்தாள்.. திரும்பி வர முடியாத ஓர்வழிப் பாதையில் போய் விட்டவனின் காதலை ஏற்க முடியாத நிலையில் அவளைப் படைத்துவிட்ட கடவுளை நினைத்து மனதுக்குள் புலம்பினாள்..

"நான் கோபக்காரன்தான் மாலு.. ஆனா பாசக்காரன்.. உன்மேல அதிகமான பாசத்தையும்.. காதலையும் வைச்சிருக்கேன்.. நீ என்னுடையவ.. அந்த நினைப்பில தான் திட்டிட்டேன்.. அதையே மனசில வைச்சுக்கிட்டு கஷ்டப்படாதே.. ஐ ஆம் ஸாரி.." அவன் மன்னிப்புக் கேட்டான்...

"என்னது...!"

மாளவிகா அதிர்ந்து போனவளாக அவனை நிமிர்ந்து பார்த்தாள்.. ரமணன் அவளிடம் மன்னிப்புக் கேட்கிறானா..? எவன் பெயரைக் கேட்டால் எல்லோரும் அஞ்சி நடுங்குகிறார்களோ.. அந்த ரமணன் அவளிடம் மன்னிப்புக் கேட்கிறானா..?

"நீங்க எதுக்காக ஸாரி கேட்கனும்..?"

அதுவரை போட்டு வைத்திருந்த மனத் தடையை உடைத்துக் கொண்டு படபடத்தாள் மாளவிகா...

"உன் மனசை புண் படுத்திட்டேனில்ல.. அதுக்காகத் தான் ஸாரி கேட்கிறேன்.. ஸாரி கண்ணம்மா..."

"ப்ளீஸ்.. ஸ்டாப் திஸ் நான்ஸென்ஸ்.. யார் கிட்ட.. யார் ஸாரி கேட்கிறது..?"

"உன்னிடம்.. நான் கேட்கிறேன்.. ஏன் கண்ணம்மா..?"

"ம்ப்ச்சு... நான் கேட்டேனா..? உங்ககிட்ட ஸாரி சொல்லுங்கன்னு நான் கேட்டேனா..?" மாளவிகா கோபமாக கேட்டாள்..

"ஏன் கண்ணம்மா..? இன்னும் உனக்கு என்மேல இருக்கிற கோபம் போகலியா..?" அவன் தன்மையாகப் பேசினான்..

"ஏன் என்னைப் புரிஞ்சுக்கவே மாட்டேங்கறிங்க..? எனக்கொன்னும் உங்க மேல கோபமில்லை..."

விட்டால் விடிய.. விடிய அவன் மன்னிப்புக் கேட்பான் என்று தோன்றியதால் அதைப் பொறுக்க முடியாதவளாக மாளவிகா சொல்லி விட்டாள்..

"கோபமில்லையா..? உண்மையாகவா..?" அவன் விழிகள் பளபளத்தன...



"உண்மையாத்தான்.." மாளவிகா வேறு திக்கில் பார்த்தாள்.. இல்லாவிட்டால் அவளின் முகச் சிவப்பை அவன் கண்டு கொள்வானே..

"அப்புறம் எதுக்காக முகம் வீங்கியிருக்கு..?"

"கண் முழிச்சு படிச்சேன்..."

"அவ்வளவு தானா.." அவன் நிம்மதியானான்..

"அவ்வளவு தான்.. இனி மேலாவது இடத்தைக் காலி பண்றீங்களா..?"

"நான் வந்தது உனக்குப் பிடிக்கலையா..?"

ஏக்கத்துடன் கேட்டவனின் முகத்தை அவளையு மறியாமல் பார்த்து வைத்தாள் மாளவிகா.. கலைந்த முடியும்.. சிவந்த கண்களும் முரட்டுத்தனமான முகமுமாக நின்றவனிடமிருந்த ஆண்மை நிரம்பிய அழகு அவளை வசீகரித்தது...

'இவனையா எனக்குப் பிடிக்காது..?'

அவள் இதழ்களில் மெல்லிய புன்னகையின் கீற்று தோன்றி மறைந்தது...

"நீங்க வந்தது எனக்குப் பிடித்தமா.. இல்லையாங்கிறது வேற விசயம்.. ஆனா.. என்னைப் போல காலையில கரெக்டா அட்டெண்டன்ஸ் கொடுக்க வேண்டிய வேலையில எத்தனை மனுசங்க

தெரியுமா..? உங்களைக் கண்டதும் அவங்கள்லாம்.. ஓடியே போயிடறாங்க.. பாவம்.. எப்படித்தான் ஸ்கூல்.. காலேஜ்.. ஆபிஸிக்குப் போய் சேர்றாங்களோ.. அவங்களுக்காகவாவது.. நீங்க அடிக்கடி வராம இருங்களேன்..."

மாளவிகாவின் பேச்சில் ரமணன் உரக்கச் சிரித்தான்.. அவன்மேல் அவளுக்குக் கோபமில்லை என்ற விவரத்தில் அவன் உற்சாகம் கரை புரண்டு பொங்கிக் கொண்டிருந்தது.. இப்போது அவளின் பேச்சும் சேர்ந்து கொண்டதில் அவன் மனம் விட்டுப் பலமாக சிரித்தான்..

அவன் சிரிப்புச் சத்தம் கேட்டு.. தள்ளி நின்ற அவனின் ஆள்கள் திரும்பிப் பார்ப்பதைக் கண்டாள் மாளவிகா.. அவர்களுடைய தலைவனின் சிரிப்பில் அவர்கள் முகத்திலும் உற்சாகம் பரவுவதைக் கண்டாள்..

அவன் துக்கத்திலே துக்கம் கொண்டு அவன் சந்தோசத்திலே சந்தோசம் கொள்ளும் அற்புதமான உறவுப் பிணைப்பை அவர்களிடத்தில் அவன் ஏற்படுத்தியிருக்கிறான் என்று நினைக்கும் போது அவளுக்குள் நெகிழ்வும்.. அவனின் அந்த ஆளுமை குறித்தான பெருமிதமும் எழுந்தன..

"நான் வராம இருக்கணும்னா அது முடியாது.. வேணும்னா அடிக்கடி உன் கண்ணில் படாம தள்ளி நின்னு பார்த்துட்டுப் போயிடறேன்.."



"நானும் அதைத்தான் சொல்றேன்.. நேத்து ஈவினிங் தான் என்னைப் பார்த்தீங்க..."

"சும்மா பார்க்கலை.. மிரட்டிட்டுப் போனேன்.."

"எனக்கொன்னும் அது மிரட்டலா தெரியலை.."

"ஏய்.." அவன் கண்களில் மின்னல் வந்தது.. அதை கண்டு கொள்ளாதவளைப் போல மாளவிகா பேச்சைத் தொடர்ந்தாள்..

"திரும்பவும் இன்னைக்குக் காலையிலே வந்து நின்னா என்ன அர்த்தம்..?"

"ஸாரி சொல்ல வந்தேன் மாலு..."

"நான் ஒன்னு சொல்வேன்.. கேட்பீங்களா..?"

மாளவிகாவின் கேள்வியில் ரமணனின் மனதிற்குள் நீருற்று பொங்கி எழும்பியது...






"ஒன்னு என்ன.. ஓராயிரம் சொல்லு.. நான் கேட்டுக்கிறேன்.." கண்கள் பிரகாசிக்கப் பேசினான் ரமணன்...

இவன் இப்படித்தான் சொல்வான் என்ற நினைவில் மாளவிகாவின் முகத்தில் புன்னகை படர்ந்தது..

சற்றுத் தள்ளி நின்றிருந்த அவனுடைய ஆள்கள் "டேய்.. அண்ணனைப் பார்த்து அண்ணி சிரிக்கிறாங்கடா.." என்று பேசிக் கொண்டார்கள்...

"சொல்லு மாலு.. நான் என்ன செய்யனும்..?"

"நீங்க யார்கிட்டயும் ஸாரி கேட்கக்கூடாது..."

அவளின் வார்த்தையில் ரமணனின் முகத்தில் வெளிச்சம் படர்ந்தது.. அவளையே ஊன்றிப் பார்த்தவன்..

"நானும் யார்கிட்டயும் மன்னிப்புக் கேட்கிறவனில்லை.. என் மனசுக்கு சரின்னு படறதைச் செய்யறவன்.. அதைப் பத்தி திரும்பவும் யோசிச்சுப் பார்க்காதவன்.." என்றான்..

"அப்புறம் எதுக்காக என்கிட்ட மன்னிப்புக் கேட்டிங்க..?"

"நீயும்.. மத்தவங்களும் ஒன்னா..?" ஆழ்ந்த குரலில் அவன் கேட்டான்..

அந்த வார்த்தைகள் மனதில் இறங்க சட்டென்று அவன் முகம் பார்த்தாள் மாளவிகா.. அவனின் கண்களை அவளது கண்கள் சந்தித்தபோது அவளுக்குள் ஓர் அதிர்வு ... ஊடுறிவிப்



பார்த்தவனின் பார்வையில் இருந்த தீவிரத்தில் அவள் மிரண்டு போனாள்..

அவன் கால்களை லேசாக அகற்றி.. இரண்டு கைகளையும் அவன் அணிந்திருந்த முரட்டு ஜீன்ஸின் பாக்கெட்டிற்குள் விட்டபடி நின்றிருந்தான்.. இயல்பாக போடப் பட்டிருந்த சட்டை அவனது கம்பீரத்தை அதிகப் படுத்திக் காட்டியது.. எப்போதும் போல கலைந்திருந்த தலைமுடி அவள் மனதைக் கலைத்தது.. அவனிடம் தென்பட்ட செயற்கையில்லாத இயல்பு அவளை வசீகரித்தது...

அவன் மட்டும் சமூகத்தில் சாதாரணமான அடையாளத்துடன் இருந்திருந்தால் அவனின் காதலில் மாளவிகா மகிழ்ந்து போயிருப்பாள் என்ற நிதரிசனமான உண்மையை அவள்மனம் அறிவுறுத்தியது...

'ஏண்டா பாதை மாறிப் போன..?' மாளவிகா மனம் வருந்தினாள்..

"என்ன மாலு பேச மாட்டேங்கிற..?" அதே ஊடுறுவும் பார்வையுடன் அவன் கேட்டான்..

"என்கிட்டக்கூட நீங்க ஸாரி கேட்கக் கூடாது.." அவள் குரல் தழதழத்தது...

"ஏன்..?" அவன் பார்வை கூர்மையானது..

"ஏன்னா.. ஏன்னா.." அவள் பதில் சொல்லத் தெரியாமல் தவித்தாள்...

"மெல்ல.. மெல்ல.. ஏன் இப்படிப் பதட்டப்படற..?" பரிவுடன் அவன் கேட்டான்..

"தெரியல.. நீங்க மன்னிப்புக் கேட்டா என் மனசு கஷ்டப்படுது.." அவள் சொல்லி விட்டாள்...

அவளின் வார்த்தையில் அவன் கண்கள் ஒளிர்ந்தன..

"ஏன்..?" அதே கூர்மையான பார்வையுடன் அவன் கேட்டான்..

"அதான் தெரியலைன்னு சொன்னேனே..". அவள் குழந்தையாகத் தவித்தாள்...

அவளின் தவிப்பை இனம் கண்டு கொண்டவனின் முகத்தில் வெளிச்சம் அதிகரித்தது.. பரிவுடன் அவளையே பார்த்தவன் லேசாகச் சிரித்தான்...

"ஏன் சிரிக்கறிங்க..?" அதே குழந்தைத் தனத்துடன் அவள் கேட்டாள்..

"இல்ல.. எனக்குள்ள நானே பலதடவ கேட்டுக்கிட்டு இருக்கேன்.. ஏண்டா ரமணா.. நீ பொண்ணுக பின்னால சுத்தமாட்டியே.. அப்புறம் ஏண்டா இந்தப் பொண்ணு பின்னால பித்துப்பிடிச்சவனைப் போலச் சுத்துறேன்னு.. அதுக்கான பதில் இப்பத்தான் தெளிவா [illegible]



"என்னவாம்..?" மாளவிகாவிற்கு அவன் பதிலைக் கேட்கும் ஆர்வம் அதிகரித்தது...

அவன் ஒரு நொடி அவனது வழக்கமான துளைக்கும் பார்வையுடன் அவளை ஆழ்ந்து பார்த்தான்.. அந்தப் பார்வையின் வேகம் தாளாமல் அவள் தலை குனிந்தாள்.. இந்தமுறை அவளால் அவள் முகத்தின் நாணச் சிகப்பை மறைக்க முடியவில்லை...

அதைக் கண்டவனின் முகம் மேலும் மிருதுவாக ஆனது...

"நீ குழந்தை மாலு.." பிரியத்துடன் அவன் சொன்னான்...

"குழந்தையா..?" ரோசத்துடன் நிமிர்ந்தாள் மாளவிகா...

கடைசியில் அவளைக் குழந்தையாக்கி விட்டானே என்றிருந்தது அவளுக்கு.. அவளின் ரோசத்தைக் கண்டவனின் சிரிப்பு அதிகரித்தது...

"ம்ம்ம்.. நீ குழந்தைதான்.. மத்தவங்கள்ல இருந்து பல வகையில நீ வித்தியாசப் படற.."

"எனக்கொன்னும் அப்படித் தெரியல..."

"உனக்குத் தெரியாது.. உன்னையே பார்த்துக்கிட்டு இருக்கிற எனக்குத்தான் அது தெரியும்.."

"என்னவோ போங்க.. நீங்க பேசறது எனக்குப் புரியலை..."

"புரியாமலே இருக்கட்டும்.. எனக்கு உன்னைப் புரியுது..."

"புரிஞ்சா அதையே பிடிச்சுக்கங்க..."

விளையாட்டாகத்தான் கூறினாள் மாளவிகா.. ஆனால் அவன் தீவிரத்துடன் தலையை அசைத்தான்..

"விடமாட்டேன்.. பிடிச்சுத்தான் வைச்சிருக்கேன்.."

அழுத்தமான அந்த வார்த்தைகளுக்கு என்ன அர்த்தம் என்று மாளவிகாவிற்கு பிடிபடவில்லை..

"அப்படின்னா..?" அப்பாவியாகக் கேட்டாள்..

அவன் திரும்பவும் மெல்லச் சிரித்தான்..

"விட்டுரு.. அர்த்தம் தெரியலைன்னு குழம்பிக்காதே.. எனக்குத் தெரியுதில்ல.. உனக்கு அது போதும்.." என்றான்..

"ஓகே.. லீவ் இட்.. ஆனா.. நான் சொன்னா.. சொன்னதுதான்.."

"எதைச் சொல்ற..?"

அவன் புருவங்களை உயர்த்திய விதம் அவளை வசீகரித்தது..



"உங்க மன்னிப்பைத்தான் சொல்றேன்.. என்கிட்டக் கூட நீங்க மன்னிப்புக் கேட்கக் கூடாது..." கண்டிப்புடன் சொன்னாள் மாளவிகா...

"அடேங்கப்பா.. இந்த ரமணனையே மிரட்டறியே.." விளையாட்டாகச் சிரித்தான் ரமணன்...

சிரித்து முடித்தவனின் முகத்தில் தீவிரம் படர்ந்தது.. மாளவிகாவிற்குப் புரியாத வகையில் அழுத்தமான பார்வையொன்றைப் பார்த்தவன்.. அதே அழுத்தத்துடன் சொன்னான்...

"கேட்க மாட்டேன் மாளவிகா.. இனி உன்கிட்டக்கூட நான் எதுக்காகவும் மன்னிப்புக் கேட்கமாட்டேன்..."

அவன் எதற்காக அப்படிச் சொன்னான் என்று மாளவிகாவிற்கு பிடிபடவில்லை.. ஆனாலும் அவனது நிமிர்வை அவன் விட மாட்டான் என்பதே அவளுக்கு நிறைவாக இருந்தது...

"இன்னிக்கான பேச்சு வார்த்தை முடிஞ்சிருச்சு.. இனியாவது கிளம்பறிங்களா..?" அவள் தலையைச் சாய்த்து அவனைப் பார்த்துச் சிரித்தாள்..

இன்றைய விடியல் இனிதான ஓர் விடியல் என்று ரமணனுக்குத் தோன்றியது...

மாளவிகாவின் வாய்மொழி இத்தனை வார்த்தைகளைப் பூமாரியாய் பொழியுமென்று அவன் எதிர்

பார்த்திருக்கவில்லை.. எங்கே அவனின் முரட்டுத்தனமான கோபத்தில் அவள் பயந்து போய் அவனை வெறுக்க ஆரம்பித்து விடுவானோ என்று அவன் சங்கடப் பட்டுப் போயிருந்தான்...

அப்படியில்லாமல் அவனிடம் அவள் இயல்பாக பேசியதோடு நிற்காமல்.. அவளையுமறியாமல் அவள் மனதின் கதவை திறந்து காட்டி விட்டதில் அவன் மகிழ்ந்து போயிருந்தான்...

"கட்டாயம் கிளம்பித்தான் ஆகனுமா..?"

போக மனமில்லாமல் அவன் கேட்டதில் ஒரு பிடிவாதக்கார முரட்டுத்தனத்தைக் கண்டு ரசித்தாள் மாளவிகா...

"கட்டாயம் கிளம்பித்தான் ஆகனும்..."

"இன்னும் கொஞ்சநேரம் இருக்கேனே.. ப்ளீஸ்..."

அவன் கெஞ்சுதலில் அவள் மனதுக்குள் தென்றலடித்தது.. அவனைப் போன்ற ஒருவன் அவளைப் போன்ற ஒரு சிறு பெண்ணிடம் கெஞ்சுகிறானே..

"அந்தக் கதையே இங்கே வேணாம்.. கிளம்புங்க.. க்விக்.. நீங்க போனால்தான் ஒளிஞ்சிருக்கிற மக்கள் பஸ் ஸ்டாப்புக்கு வந்து நிற்பாங்க..."

அவள் செல்லமாக விரட்டியதில் அவன் கண்களில் மீண்டும் மின்னலடித்தது...



## 13



உற்சாகமாக விசிலடித்தபடி காரை ஓட்டிக் கொண்டிருந்தான் ரமணன்.. வண்டிக்குள் அமர்ந்திருந்தவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கண் சிமிட்டிக் கொண்டார்கள்..

"அண்ணன் செம மூட்ல இருக்கார்டா.." தாமஸ் கிசுகிசுத்தான்...

"அண்ணி கிரின் சிக்னல் கொடுத்தாட்டாங்களோ.." என்றான் ஒருவன்..

"யாருக்குத் தெரியும்..? அவங்க என்ன பேசினாங்கன்னு நமக்கு எப்படிடா தெரியும்..? நாமதான் தள்ளி நின்னோமே.." தாமஸ் சொன்னான்..

"அதில உனக்கு ரொம்ப வருத்தம் போல இருக்கேலே.. வேணும்னா உன்னோட இந்த மனக்குறையை அண்ணன் காதிலே போட்டு வைக்கட்டுமாலே..?" கிருஷ்ணன் முணுமுணுத்தான்...

அவன் 'போட்டு வைக்கவா..' என்று சொன்னதை என்னவோ 'வேட்டு வைக்கவா..' என்று அவன் கேட்டு விட்டதைப் போல தாமஸ் அரண்டே போனான்...

வேண்டா உனக்கு இத்தனை நல்லெண்ணம்..?"

"என்னலே தாமஸீ.. இப்படிச் சொல்லிப்புட்ட.. நான் உன் நண்பேன்ல.."

"ம்ஹீம்.. உன்னப்போல நண்பன் கிடைக்க கொடுத்து வைச்சிருக்கனும்டா.."

"எதைலே..?" கிருஷ்ணன் தாமஸின் சட்டைப் பையைப் பார்த்தபடி கேட்டான்..

"இதுக்குத்தானே அடி போடற..?" தாமஸ் சட்டைப் பையிலிருந்த ஆயிரம் ரூபாய் நோட்டை எடுத்து அவனிடம் நீட்டினான்..

"யாருக்குலே வேணும் உன் பணம்..?"

"உனக்குத்தான்.. வேற யாருக்கு..?"

"அப்படிங்கிற.." என்றபடி பணத்தை வாங்கிய கிருஷ்ணன் அதை தாமஸின் சட்டைப் பையிலே வைத்து விட்டான்...

"அவ்வளவு நல்லவனாடா நீ..?"

"ஏய்ய்.. அடங்குலே.. அண்ணன் என்னமோ சந்தோசம் அதிகமாகிப் போகி தானே காரை ஓட்டறேன்னு உன்ன ஓரமா உட்காரச் சொல்லிட்டாரு.. நீ உடனே சொகுசா வேலையில்லாம உட்கார்ந்துக்கிட்டு வெட்டிக் கதையப் பேசற.. இருலே.. உனக்கு ஒருநாள் இருக்கு.."





"அடப்பாவி.. அப்படியெந்தத் திருநாளைக் கொண்டு வந்துராதேடா..."

"பாக்கலாம்.."

"அப்படியெல்லாம் சொல்லிப் புடாதேடா மச்சான்.. நீ திருநெல்வேலி சீமைக்காரன்.."

"எட்டப்பன் பொறந்த தூத்துக்குடியும் அந்தச் சீமையிலதான்லே இருக்கு..."

என்னதான் தாமஸ் வெள்ளைக் கொடியை அசைத்து சமாதானப் புறாவை பறக்க விட்டாலும்.. விடுவேனா என்று சமாதானத்திற்கு வராமல் பீதியைக் கரைத்து தாமஸின் வயிற்றுக்குள் ஊற்றுவதே குறிக்கோளாக இருந்தான் கிருஷ்ணன்...

கார் ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குள் போனது.. திரும்பிப் பார்த்த அவனின் ஆள்கள் திகைத்துப் போனார்கள்...

"என்ன தாமஸ்..? அண்ணன் நம்மள இங்கே கூப்பிட்டுகிட்டு வந்திருக்காரு.." வீரபாகு முணு முணுத்தான்..

"நானும் உன் கூடத்தானே வர்றேன்.. உனக்குத் தெரியாதது எனக்கு மட்டும் தெரிஞ்சிருமா..?" தாமஸ் பதிலுக்கு முணுமுணுத்தான்...

"கிருஷ்ணன்கிட்டக் கேளு..."

"ஏன்..? அதை நீயே கேளு.."

"அட.. அவன் விவகாரம் பிடிச்ச ஆளுப்பா.."

"தெரியுதில்ல.. அப்ப அடக்கி வாசி.. நானே அவன்கிட்ட வாளைக் கொடுத்திட்டு வம்பாடு பட்டுக்கிட்டு இருக்கேன்.. இப்பத்தான் பேச்சை நிப்பாட்டினான்.. புதுசா ஆரம்பிச்சேன்னு வைய்யி.. இன்னைக்குப் பூரா... லே.. லேன்னு.. என்ன ஒட்டிக்கிட்டே இருப்பான்.. தேவையா எனக்கு..?"

"அதைச் சொல்லு.." என்ற வீரபாகு மதுரைப் பக்கமிருக்கும் கிராமத்தைச் சேர்ந்தவன்..

"என்னத்தச் சொல்லச் சொல்றேலே.." கிருஷ்ணன் புருவங்களை உயர்த்தினான்..

"ஏம்பா.. ஏய்ய்.. நானும் அவனும் நாலு நல்லது கெட்டதை பேசுவோம்.. உனக்கெதுக்குப்பா அது..?" வீரபாகு மூக்கை விடைத்தான்...

"கெட்டத மட்டும் பேசுவீங்கன்னு சொல்லுலே.. எதுக்காக நல்லதையும் கட்டி இழுக்கற..?" கிண்டலாகக் கேட்டான் கிருஷ்ணன்..

"இந்தா பாரு.. இந்த விகடப் பேச்சையெல்லாம் வேற பக்கம் வைச்சுக்க.. யாரப் பார்த்து என்ன வார்த்தை சொன்ன..? நானு மதுரைக்காரண்டி.. என் கிட்ட



வைச்சுக்கிட்ட பிரிச்சு மேய்ஞ்சிருவேன்.." வீரபாகு மீசையின் மேல் கைபோட.. தாமஸ் குதூகலமானான்..

"என்னலே தாமஸ்.. தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறயாலே.. இவன் மதுரைக்காரன்னா.. நான் திருநெல்வேலிக்காரன்.. இவன் பிரிச்சு மேயறதை நானு பிரிச்ச மேய மாட்டேனாலே..", கிருஷ்ணன் கேட்டான்..

காரை விட்டு இறங்கிய ரமணன் அவர்களைத் திரும்பிப் பார்த்ததும் அங்கே சுவிட்ச் போட்டதைப் போல அமைதி நிலவியது...

"என்ன..? எல்லோரும் காரிலேயே உட்கார்ந்துட்டா எப்படி..? வாங்க.. சாப்பிடப் போகலாம்.." ரமணன் உற்சாகமாக அழைத்தான்..

"அட்ரா சக்கை.. அண்ணி இன்னைக்கு கிரின் சிக்னல்தான் கொடுத்துட்டாங்க போல இருக்குடா.. அதான் அண்ணன் அத்தனை பேருக்கும் நட்சத்திர ஓட்டல்ல விருந்து கொடுக்கறாரு.." தாமஸ் உற்சாகமானான்..

"சரியாச் சொன்னேலே.." கிருஷ்ணன் ஆச்சரியப் பட்டான்..

"அதச் சொல்லுப்பா.. ஆயிரம் தான் இருந்தாலும்.. பொண்ணு புள்ளைக நல்லதா ஒருவார்த்தை சொல்லனும்ப்பா.. அப்பத்தான் நம்ம மனசும் நிறைஞ்சிருக்கும்.. என்னப்பா கிருஷ்ணா.. நான் சொல்றது சரியாப்பா.." வீரபாகு கேட்டான்..

"நீ எப்பலே தப்பாச் சொல்லியிருக்கே.." கிருஷ்ணன் வீரபாகுவின் தோள்மேல் கை போட்டுக் கொண்டான்...

சற்று நேரத்திற்கு முன்னால் அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலின் வாசலிலே ஒருவரையொருவர் வீடு கட்டி அடித்துக் கொள்ளும் உத்தேசத்துடனிருந்த அந்த இரண்டு பேரும்.. நட்புக்கு ஒரு எடுத்துக்காட்டாய் மாறிவிடும் உத்தேசத்தோடு கட்டியணைத்துக் கொள்ளாத குறையாக காரை விட்டு இறங்கினார்கள்...

மெல்லிய விளக்கொளியில் ஏஸி ஹாலில் அவர்கள் அமர்ந்தார்கள்.. வேண்டியதைக் கேட்டு வாங்கிச் சாப்பிட்டுக் கொள்ளும்படி மற்றவர்களிடம் கூறிவிட்டு உற்சாகமாக பேசிச் சிரித்துக் கொண்டிருந்தான் ரமணன்..

சாப்பிட்டு முடித்து வெளியே வந்தவர்கள் ரமணனின் வீடு போய் சேர்ந்தார்கள்.. வீட்டுப் படியில் கால் வைத்தவன் அவனுடைய ஆள்களைத் திரும்பிப் பார்த்தான்...

"இன்னும் என்னலே.." கிருஷ்ணன் கிசுகிசுத்தான்..

"அதை அங்கே கேளு.." என்றான் தாமஸ்...

அடுத்த சண்டைக்கு அங்கே அச்சாரம் ஆரம்பமாகிக் கொண்டிருக்க விரிந்த புன்னகையுடன் அவர்களின் அருகே திரும்பி வந்தான் ரமணன்...

"கிருஷ்ணா.."



"அண்ணே.."

"எல்லோரும் ஆளுக்கு பத்தாயிரம் எடுத்துக்கங்க.."

"அண்ணே..?"

"இன்னைக்கு நான் ரொம்ப சந்தோசமா இருக்கேன்.. நீங்களும் என்ஜாய் பண்ணுங்க.."

ரமணன் இரண்டிரண்டு படிகளாய் தாவிக் கடந்து அவனுடைய வீட்டுக்குள் போய் விட்டான்...

"ஏன்ப்பா.. அப்படியொன்னும் அண்ணனப் பார்த்து அண்ணி அதிகமா பேசினதா தெரியலியேப்பா.." வீரபாகு நெற்றியில் ஒற்றை விரலை வைத்து தட்டினான்...

"அதிகமா யோசிக்காதேலே.. அது என்னைக்குமே ஆபத்து.. அதிகமா பேசினா என்ன.. கொறைச்சு பேசினா என்ன.. அண்ணனப் பார்த்து அண்ணி பேசினாங்கல்ல..? அதுக்குத்தான் இந்த சந்தோசம்.. புரியுதாலே.." கிருஷ்ணன் கோபப் பட்டான்..

"ஊஹீம்.." வீரபாகு தலையை ஆட்டினான்..

"அது புரியனும்னா உனக்கும் காதல் வரனும்லே.." என்ற கிருஷ்ணன் வீரபாகுவின் முகத்தை ஒரு கையால் பிடித்து இப்படியும்.. அப்படியுமாகத் திருப்பிப் பார்த்து விட்டு..

"ஏன்லே தாமஸ்.. இந்த மூஞ்சிக்கு காதல் வரும்னு நீ நினைக்கிற..?" என்று கேட்டான்..

"நோ.. சான்ஸ்.." நிர்தாட்சண்யமாக மறுத்தான் தாமஸ்..

"விடுங்கப்பா.." கோபத்துடன் கிருஷ்ணனின் கையைத் தட்டி விட்டான் வீரபாகு..

அவர்கள் சளசளத்தபடி போய் விட்டார்கள்.. மாடியறையின் தனிமையில் அறையின் ஒரு பக்க சுவர் முழுவதும்.. மறைக்கும்படி மாட்டப் பட்டிருந்த மாளவிகாவின் மிகப் பெரிய புகைப்படத்தையே ஆசையுடன் பார்த்தான் ரமணன்..

'என்கிட்டக் கூட நீங்க மன்னிப்புக் கேட்கக் கூடாது..'

புகைப்படத்தில் இருந்த மாளவிகா உதட்டைக் குவித்துச் சொன்னதைப் போல உணர்ந்தவன்.. ஆசையுடன் படத்தில் இருந்தவளின் உதட்டை விரல்களால் தடவினான்...

"உனக்குத்தான் என்மேல எவ்வளவு காதல்டி.. ஆனா அதை புரிஞ்சுக்காம இருக்கியே மாலு.."

தாபத்துடன் புகைப் படத்திலிருந்தவளின் இதழ்களில் முத்தமிட்டான் ரமணன்..



# 14



"ஹப்பா.. ஒரு வழியா எக்ஸாம் முடிஞ்சாச்சு.." நெட்டி முறித்தாள் ஹாசினி...

"ஆமாமாம்.. நீ விழுந்து விழுந்து படிச்சு.. ஒருவழியாகிட்டில்ல.. இனி ரிலாக்ஸாத்தான்.. ஃபீல் பண்ணுவ.." கேலியாக சொன்னாள் மாளவிகா..

"திமிர்டி.. உனக்கு கேம்பஸ் இன்டர்வியுவிலே செலக்ட் ஆகிட்டோம்கிற திமிரு.. வேலை காத்திருக்குல்ல.. அந்தக் கொழுப்பில பேசற.."

"ஆமான்னு தான் வைச்சுக்கயேன்.. நினைச்சுப் பாரு ஹாசினி.. நான் சம்பாதிக்கப் போறேன்.. கை நிறைய சம்பளம்.. வாவ்.. எனக்கே எனக்குன்னு ஒரு டூவீலரை என்னால வாங்கிக்க முடியும்.. கிரேட்.."

"அல்பை மாதிரிப் பேசாதே.. நீ நினைச்சா டூவீலர் என்ன ஃபோர் வீலரே வாங்கலாம்.."

"எப்படி..? எப்படி..?"

"எதுக்கு இத்தனை எப்படி போடற..? கார் லோன் போட்டா கார் உன் வீட்டு வாசலிலே வந்து நிக்க போகுது.."

"எனக்கெல்லாம் லோன் கொடுப்பாங்களா..?"

"இத நான் சொல்லனும்.. உனக்குத்தான் கார் லோன் கொடுப்பாங்க.. ஏன்னா.. உனக்குத்தான் வேலை கிடைச்சிருக்கு.."

"அப்படிங்கிற..?" மாளவிகா சந்தோசமாக கேட்டாள்..

"அப்படித்தான்.." ஹாசினி தைரியம் கொடுத்தாள்..

அவர்கள் பேசியபடி கல்லூரிவாசலுக்கு வந்தார்கள்.. ஹாசினி காத்திருந்த காரில் ஏறிப் போக.. அவளுக்கு கையசைத்து விட்டு மாளவிகா மட்டும் தனியாக நடந்தாள்..

'எனக்கு கார் லோன் கிடைக்குமா..'

அவள் மனதில் கார் வந்து நின்றது.. அவள் அதில் ஏறி மிக ஸ்டைலாக ஓட்டினாள்..

'யு ஸி மதுரா.. நீங்களும் ஏறிக்கலாம்.. ஐ ஹேவ் நோ அப்ஜெக்சன்..' தாயிடம் அலட்டிக் கொண்டாள்..

'மிஸ்டர் சிதம்பரம்.. நீங்க எனக்கு ஒரு ஓட்டை சைக்கிள் கூட வாங்கித் தர மாட்டேன்னு சொல்லிட்டிங்க.. என்னைப் பார்த்தீங்களா சொந்தமாக கார் வாங்கியிருக்கேன்



சார்.. காரைப் பார்த்தீங்களா.. சும்மா.. பளபளன்னு இல்ல..' தகப்பனாரை கடுப்படித்தாள்..

'ஹேய்... அஸ்வின்.. வா மேன்.. உன்னை காலேஜில டிராப் பண்றேன்.. காரில் போய் இறங்கினேன்னு வைய்யி.. உன்னை சைட் அடிக்காத பிகர்கள் கூட சைட்டடிக்க ஆரம்பிச்சிரும்.. என்ன.. லிப்ட் கொடுக்கவா..?' தம்பியை வெறுப்பேற்றினாள்...

'பூமிகா.. என்கூட காரில் ஏறு.. இப்பவே உன் புருசன் கிட்டக் கூட்டிட்டுப் போயி என்னன்னு நியாயம் கேட்கிறேன்..?' தமக்கையிடம் வீரமாக மனதிற்குள் பேசிக் கொண்டிருந்த போது அவளை உராய்வதைப் போல ஒரு வெளிநாட்டுக் கார் வந்து நின்றது.. பதறி விலகி நின்றவளின் கற்பனை கலைந்து விட்டது..

கற்பனை கலைந்து விட்ட கோபத்துடன் காச்.. மூச்சென்று கத்தப் போனவள் நிதானித்தாள்.. கார் கதவைத் திறந்து கொண்டு ரமணன் இறங்கினான்..

"அதானே பார்த்தேன்.." வேகம் தணிந்தவளாகச் சொன்னாள் மாளவிகா...

"என்ன பார்த்த..?" ஸ்டைலாக புருவங்களை உயர்த்தினான் ரமணன்...

அவனது ஜீன்ஸிற்கும்.. கார்கோ சட்டைக்கும்.. கண்களில் மாட்டியிருந்த கூலிங் கிளாஸிற்கும் வெகு

...பொருந்திவர.. மாளவிகாவிற்கு அவனை இன்னொருமுறை பார்க்க வேண்டும் போல இருந்தது..

சும்மாவே அவளைச் சுற்றிச்சுற்றி வருகிறவனை திரும்பவும் பார்த்து வைத்தால் ஏற்படப் போகும் பின் விளைவுகளைப் பற்றிய முன்னெச்சரிக்கை உணர்வுடன் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டாள் மாளவிகா..

“இப்படி ரோட்டில போறவங்களை இடிச்சுத் தள்ற துணிச்சல் உங்களத் தவிர வேற யாருக்கு வரும்..?”

ஜாக்கிரதையாக அவனைப் பார்ப்பதை தவிர்த்தபடி பேசினாள் மாளவிகா.. அதை கண்டு கொண்ட சிரிப்பு அவன் உதடுகளில் தவழ்ந்தது...

“உன்னைத் தவிர வேற யாரையும் நான் இடிக்க மாட்டேன்... என்னைத் தவிர உன்னை இடிக்கிற துணிச்சல் வேற யாருக்கும் வரவும் வராது.. வரவும் நான் விடமாட்டேன்..”

அவன் தீவிரத்துடன் பேசினான்.. கொஞ்ச நேரத்துக்கு அவன் முகத்தில் காணாமல் போயிருந்த அந்த தீவிரம் மீண்டும் வந்ததில் மாளவிகா உதட்டைக் கடித்துக் கொண்டாள்..

“என்ன..?” அவன் அதற்கும் காரணம் கேட்டான்..

“இல்ல.. நீங்க எப்பவுமே சீரியஸ் மூடில்தான் இருக்கனுமா..? சிரிச்ச மாதிரியே இருக்க மாட்டிங்களா..?”



அவளின் கேள்வியில் அவன் மெல்லச் சிரித்தான்.. அடர்ந்த மீசையின் ஊடே தெரிந்த அந்தச் சிரிப்பில் அவள் மயங்கிப் போனாள்..

“போதுமா..?” அவன் கேட்டான்..

“போதாதுன்னு சொன்னா என்ன செய்வீங்க.. இன்னும் அதிகமா சிரிப்பீங்களா..?” அவள் தலையை சரித்து ஒயிலாக அவனைப் பார்த்தாள்..

என்றும் இல்லாத வகையில் வெகு இயல்பாக அவள் உரையாடிய விதத்தில் ரமணனுக்குள் சந்தோசம் பரவியது.. அதை முகத்தில் காட்டிக் கொள்ளாமல் அவளைவிட இயல்பாக பேச்சைத் தொடர்ந்தான் அவன்..

“இன்னைக்கு என்ன.. குஷி மூடில இருக்க போல இருக்கே..”

“ஊம்..”

“என்ன விசயம்..?”

“இன்னையோட படிப்புக்கு குட்பை சொல்லியாச்சு.. அதான் விசயம்.. ஃபைனல் எக்ஸாம் முடிஞ்சாச்சு.. இனி காலேஜிக்கு நேரத்துக்கு வரனும்னு பறக்க வேணாம்.. பஸ்ஸீக்கு நிக்க வேணாம்.. டீயைக் குடிச்சுக்கிட்டு நடுராத்திரிக்கும் மேலே கண்விழிச்சு படிக்க வேணாம்.. ஐ ஆம் ஃப்ரீ பேர்டு..”

அவள் இறக்கை விரித்துப் பறப்பதைப் போல கைகளை விரித்து அசைத்துக் காட்டினாள்.. அவளுடைய மகிழ்ச்சியை அவனிடம் அவள் பகிர்ந்து கொண்டதில் ரமணனின் சந்தோசம் அதிகரித்தது...

"இந்த சந்தோசத்தைக் கொண்டாட வேணாமா..?" அவள் முகத்தைப் பார்த்தபடி கேட்டான் ரமணன்..

"கொண்டாடனும்தான்.. ஆனா.. எப்படின்னு தெரியலையே.." அவள் குழந்தையாக விழி விரித்தாள்...

"என் கூட ஒரு கப் காப்பி சாப்பிட்டுக் கொண்டாடலாமே.." அவன் இலகுவாகக் கூறவும்...

"என்னது..!" என்று விழி விரித்தாள் மாளவிகா..

"மெல்ல.. எதுக்காக இப்படி முழிக்கற..?" வெகு சாதாரணமாக கேட்டான் ரமணன்...

"ஆர் யு ஜோக்கிங்..?"

"ஏய்ய்.. இது ஜோக்கா..?"

"உங்ககூட நான் காபி சாப்பிட வர்றதா..? நோ.. சான்ஸ்..."

"ஓ.. அப்ப வேற யார்கூட காப்பி சாப்பிட போவ..?"

அவன் ஒரு மாதிரியான குரலில் வினவவும் அவளுக்கு திக்கென்று ஆகிவிட்டது...

'கோவிச்சுக்கிட்டானோ...'



அவன் முகத்தைப் பார்த்தாள்.. கல்லாக இறுகியிருந்தது.. அவள் கேட்டதற்காக வந்திருந்த சிரிப்பு காணாமல் போயிருந்தது...

'நான் ஒரு மடச்சி...' தன்னைத்தானே கடிந்து கொண்டாள் மாளவிகா..

அவன் கேட்டவுடன் சட்டென்று மறுத்திருக்கக் கூடாது என்று அவளுக்குத் தோன்றியது.. அவளைப் புரிய வைத்திருக்க வேண்டும்..

"தப்பா எடுத்துக்காதீங்க.. நான் யார்கூடவும் காபி சாப்பிடன்னு போனதில்ல.." அவள் தயக்கத்துடன் தன்னிலை விளக்கத்தை ஆரம்பித்தபோது..

"ஸ்ஸ்ஸ்.." என்று கையமர்த்தினான் ரமணன்..

"நான் என்கூட காபி சாப்பிட வான்னு கூப்பிட்டேன்.." அழுத்தமான குரலில் சொன்னான்...

"அது வந்து.. நான் எப்படி.." அவள் மறுக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்த போது..

"நீ வர்ற.." என்று கட்டளையிட்டான் ரமணன்..

'இவன் யார் என்னை கமாண்ட் பண்ண..?' மாளவிகா கோபப் படத்தான் முயன்றாள்.. ஆனால்.. பாழாய்போன கோபம் அவளுக்கு வந்து தொலைக்கவில்லை...

மாறாக.. அவனருகில் நின்று கொண்டிருந்த காருக்குள் எட்டிப் பார்த்தாள்...

# 15



எதற்காக அவள் அப்படிப் பார்க்கிறாள்.. யாரை தேடுகிறாள்.. என்ற விவரம் சுத்தமாக ரமணனுக்குத் தெரியவில்லை...

"என்ன..?" என்று புருவங்களை உயர்த்தினான்..

'இவன் ஒருத்தன்.. இந்த மேனரிஸத்தை வைச்சே மயக்கிருவான்..' மாளவிகா கவனமாக அவனைப் பார்ப்பதை தவிர்த்தாள்..

"என்னன்னு கேட்டேன்.."

"இல்ல.. உங்ககூட ஒரு வண்டி நிறைய ஆளுக கோந்து போட்டு ஒட்டினதப் போலக் கூடவே வருவாங்களே.. அவங்களையும் கூட வைச்சுக்கிட்டு என்னைக் காபி சாப்பிடக் கூப்பிட்டிங்களோன்னு பார்த்தேன்.. எங்கே அவங்க..?"

அவள் கேள்வியில் அவன் முகம் மாறிப் போனது..

"அவங்க இன்னைக்கு என்கூட வரலை.." என்றான்.

"ஓ.. எப்படி உங்களை விட்டு இவ்வளவு நேரமா பிரிஞ்சிருக்காங்க.." மாளவிகா விடவில்...



"ஏய்ய்.. உன்னைப் பார்க்க வர்றப்ப வண்டி நிறைய ஆளுகளோட வந்தது என் தப்புத்தான் மாலு.. அப்பல்லாம் வேற வேலையா போவேன்.. போற வழியில உன்னைப் பார்த்துட்டுப் போவேன்.. இன்னைக்கு அப்படியில்ல.. உன்னைப் பார்க்கன்னே கிளம்பி வந்தேன்.. அதான் தனியா வந்தேன்.."

"ம்ம்ம்..."

"இப்பவாவது காரில் ஏறு.."

மாளவிகா யோசித்தாள்.. பிறவிப் பகைவனாக நினைக்கும் கார்த்திக்கின் காரில் ஏறலாம்.. ரமணனின் காரில் ஏறக்கூடாதா.. என்று தோன்றவும்.. அதற்கு மேல் மறுக்காமல் காரில் ஏறினாள்..

"இன்னைக்கு மட்டும்தான்.." என்றவளிடம்..

"பார்க்கலாம்.." என்று மிதப்பாக பதில் சொல்லிவிட்டு காரை ஓட்ட ஆரம்பித்தான் ரமணன்..

பயங்கரவாதி என்று ஊராலும்.. உலகாலும்.. அழைக்கப்படும் ஒருவனுடன் எந்த பயமுமின்றி பேசிக் கொண்டே காரில் போவதை நினைத்துப் பார்த்த மாளவிகாவிற்கு தன்மனநிலை குறித்து யோசனையாக இருந்தது...

*"என்னை விட்டு..*
*ஓடிப் போக முடியுமா..?*

அது முடியுமா..?
நாம் இருவரல்ல ஒருவர்..
அது தெரியுமா..? தெரியுமா..?"

காருக்குள் பாடல் ஒலித்ததும்.. மாளவிகாவிற்கு சிரிப்பு வந்தது...

"இந்த சிடியை தேடிக் கண்டு பிடிச்சு வாங்கினீங்களா..?"

"எப்படி கண்டு பிடிச்ச..?"

வரிசைப் பற்கள் தெரிய சிரித்து வைத்தான் அவன்.. மயங்கிய மனதை இழுத்துப் பிடித்தபடி.. மாளவிகா சாலையின் பக்கம் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்...

"கொடி அசைந்ததும்...
காற்று வந்ததா..?
காற்று வந்ததும்..
கொடி அசைந்ததா..?"

அவன் பாடலுடன் சேர்ந்து பாடியதை வியப்புடன் பார்த்தாள் மாளவிகா.. அவனுடைய 'தாதா' என்ற இமேஜிற்கும்.. அப்போது அவன் ரசித்துப் பாடிக் கொண்டிருந்த தோற்றத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை யென்று அவளுக்குத் தோன்றியது...

"பழைய பாட்டுன்னா இஷ்டமா..?"

"என் அம்மாவுக்கு இஷ்டம்.."



"ஓ.. உங்களுக்கு அம்மா இருக்காங்களா..?"

இப்படிக் கேட்டவளை விசித்திரமாகப் பார்த்தான் ரமணன்...

"அம்மா இல்லாம யாராச்சும் பிறக்க முடியுமா..?"

"ஐ ஆம் ஸாரி.. ஸாரி.. தெரியாம கேட்டுட்டேன்.."

"என்னைச் சொல்லிட்டு நீ ஸாரி கேட்கலாமா..?"

அவன் காரை ஓட்டிக் கொண்டே திரும்பிப் பார்த்துக் கேட்டபோது அவள் சொன்னதை அவன் நினைவில் வைத்திருக்கிறான் என்ற நினைவில் அவளுக்குள் தென்றலடித்தது...

"அதெல்லாம் நான் உங்ககிட்டக் கேட்கலாம்.. நீங்கதான் என்கிட்டக் கேட்கக் கூடாது.."

"ஏன்..?"

"அது அப்படித்தான்.. காரணமெல்லாம் கேட்கக் கூடாது..."

"அடேங்கப்பா.. பலமாத்தான் மிரட்டற..?"

அவன் பயந்து போன பாவனை காட்ட.. அவர்கள் இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.. சிரித்து முடித்ததும் அவள் கேட்டாள்..

"உங்க அம்மா உங்க கூட இருக்காங்களா..?"

"ஹூம்.. சாமிகிட்ட போயிட்டாங்க..."

அவன் பதிலில் அவள் முகத்தில் அதிர்ச்சி ஏற்பட்டது.. காருக்குள் கனத்த மௌனம் இருளாய் போர்வையாக கவிந்தது..

"ஐ ஆம் ஸாரி.." அவள் வருத்தத்துடன் சொன்னாள்..

"இன்னைக்கு திரும்பத்திரும்ப ஸாரி கேட்கணும்னு நேர்த்திக் கடன் வைச்சிருக்கியா..? தெரியாம கேட்டதுக்கு எதுக்காக ஸாரி கேட்கிற..?"

"இது அந்த ஸாரி இல்லை.. வருத்தம்.."

மாளவிகாவின் இரக்கத்தை அங்கீகரிக்கும் பார்வையொன்றை மின்னல் வெட்டும் நேரத்துக்கு அவள் மேல் செழுத்தியவன்..

"விட்டு விடு.." என்றான்...

திரும்பவும் காரில் மௌனம் சூழ்ந்தது...

*"இரவு வந்ததால்...*<br>
*நிலவு வந்ததா..?*<br>
*நிலவு வந்ததால்..*<br>
*இரவு வந்ததா..?"*

மௌனத்தை லட்சியம் செய்யாமல் பி.சுசிலாவின் குரல் ஒலித்துக் கொண்டிருக்க.. தனக்குத் தானே பேசிக் கொள்வதைப்போல சொல்லிக் கொண்டான் ரமணன்...



"இந்தப் பாட்டை ரசிக்கக் கத்துக் கொடுத்தது என் அம்மாதான்... ஒன்னோடடொன்னு பின்னிப் பிணைஞ்சிருக்கிற அற்புதமான வரிகள்.. இதை அனுபவிச்சுப் பாடச் சொல்லிக் கொடுத்தாங்க..."

"உங்க அப்பா..?"

அதைக் கேட்டவனின் முகம் இறுகியது.. கண்கள் சிவக்க.. சற்று நேரத்துக்கு மௌனம் சாதித்தான்...

"யாரோ ஒரு பொம்பளை.. அவளுக்கும் அந்த ஆளுக்கும் எப்படித் தொடர்பு ஏற்பட்டுச்சுன்னு தெரியலை.. ஒருநாள் அந்தப் பொம்பளையோட ஊரை விட்டே ஓடிட்டான் அந்த ஆளு.. அம்மா அப்பவே மனசுக்குள்ள பொடிப் பொடியா நொறுங்கிப் போயிருக்கணும்.. அதை மறைச்சுக்கிட்டு எனக்காக வாழ்ந்தாங்க.. என்னோட பதினாலாவது வயசில என்னை விட்டுட்டுப் போயிட்டாங்க.. கேன்சராம்.. என்கிட்டச் சொல்லாம கடைசி வரைக்கும் மறைச்சிட்டாங்க..."

மாளவிகா அழுது விட்டாள்.. அவளின் கண்ணீரை உணர்ந்தவன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.. அவன் முகம் மிருதுவானது..

"எனக்காகவும் கண்ணீர்விட.. கவலைப்பட ஒரு இதயமிருக்கு.. உன்னைப் பார்க்கிற வரைக்கும் நான் சபிக்கப் பட்டவன்னு நினைச்சுக்கிட்டு இருந்தேன் மாலு..

உன்னைப் பார்த்த பின்னால்தான் தெரியுது.. நா
ஆசிர்வதிக்கப் பட்டவன்னு..."

"காதல் வந்தால் சேயாவேன்...
கருணைவந்தால் தாயாவேன்..
கண்ணா உந்தன் நிழலாவேன்..
உனக்கென நான் வாழ்வேன்..."

சிடியில் பாடிக் கொண்டிருந்த பி.சுசிலாவின் பாடலை பாடி ரமணனின் முடி கோத ஆசைப்பட்டாள் மாளவிகா..

'உனக்காக நான் இருக்கிறேன்.. அழாதே..' என்று சொல்லத்தான் நினைத்தாள்.. அவளால் அது முடியவில்லை..

'வேண்டாம் மாளவிகா.. நிரந்தரமில்லாத நம்பிக்கையை இவனுக்கு கொடுத்து விடாதே.. இவனை உனக்குப் பிடித்திருக்கலாம்.. ஆனால்.. இவன் கூட வாழ்வதென்பது உன்னால் இயலாத ஒன்றாகும்.. இவன் பாதை வேறு.. உன் பாதை வேறு.. இரண்டு பாதைகளும் ஒருநாளும் இணையவே முடியாது..'

அவளின் அறிவு அவளை எச்சரித்தது.. மனம் தவித்தது.. எதிர் மறைத் துருவங்களுக்கு இடையில் அவள் சிக்கித் தவித்தாள்...



## 16



எப்போதுமே அறிவு... உணர்வு இரண்டுமே எதிர் மறைத் துருவங்களாகத்தான் இருக்கும்.. அறிவு சொல்லும் பாதையில் உணர்வு பயணிக்காது.. இந்த இரண்டில் எதைக் கேட்பது என்று புரியாமல் பாவம்.. மனம் தான் கிடந்து போராடும்...

மனம் என்றுமே உணர்வு பூர்வமானது.. அறிவைச் சார்ந்து செயல்பட அது மிகவும் சிரமப்படும்.. உணர்விலிருந்து விலக நேரிட்டால் உயிர் போவதைப் போன்ற துன்பம் கொள்ளும்.. உணர்வுடன் சேர்ந்த மனத்தை நிம்மதியாக இருக்க விடாமல் அறிவு அதை எச்சரித்துக் கொண்டேயிருப்பது அதைவிட அதிகமான துன்பத்தை அதற்குத் தரும்.. பாவம்.. மனம்தான் என்ன செய்யும்..?

"மௌனத்தில் விளையாடும்
மனச் சாட்சியே...!
ஆயிரம் நினைவாகி..
ஆனந்தக் கனவாகி..

"காரியம் தவறானால்..
கண்களில் நீராகி..
மௌனத்தில் விளையாடும்..
மனச்சாட்சியே...!"

காருக்குள் பாடல் தவழ்ந்து வந்தது.. மௌனத்தில் ஆழ்ந்திருந்த மாளவிகாவின் மனம் தாளமுடியாமல் ரகசிய கண்ணீரை உகுத்தது...

அவளின் மனப் போராட்டத்தை அறியாதவனாய் அவள் அருகிலிருந்தால் போதுமென்ற நிம்மதியுடன் காரை ஓட்டிக் கொண்டிருந்த ரமணனைப் பார்க்கும் போது அவள் மனதை துக்கம் பிசைந்தது..

'என் அருகாமை நிலைக்காது என்பதை இவன் அறிவானா..?'

எந்த நிச்சயத்தில் அவன் நிச்சிந்தையான போக்குடன் செயல்படுகிறான் என்று அவளுக்குப் புரியவில்லை..

'இவன் காதல் நிறைவேறும்ன்னு எந்த அடிப்படையில் இவன் நம்பறான்..?'

தனது அடையாளம் குறித்தான கவலையில்லாமல் அவள்மீது காதல் கொண்டிருக்கும் ரமணனின் மீது மாளவிகாவுக்கு கோபம் வந்திருக்க வேண்டும்... ஆனால் அவள் என்னதான் தலையால் தண்ணீரைக் குடித்து விட்டு



தலைகீழாக நின்று முயற்சி செய்தாலும் அவன் மீது துளிக்கூட அவளுக்கு கோபம் வந்து தொலைக்கவில்லை...

அது ஏன் என்பதை அவள் நன்கறிவாள்..

அவளுக்கு அவனைப் பிடித்திருந்தது.. மிக.. மிக.. அதிகமாக பிடித்திருந்தது.. ஊருக்கு முன்னால் வன்முறையாளனாக தோற்றமளிப்பவன் அவள் முன்னால் மென்மையே வடிவானவனாக மாறி நின்று காதலை யாசிப்பதில் அவள் பெண்மை கர்வம் கொண்டது.. யாருக்கும் அடங்காதவன் அவளின் ஒரு சிறு பார்வையிலே அடங்குவதில் அவள் பெருமிதம் கொண்டாள்.. இத்தனைக்கும் மேலாக.. அவன் அவளின் பிரியத்தை மட்டுமே யாசித்து.. விரல் நகம்கூடப் படாமல் விலகி நின்று கண்ணியம் காத்ததில் அவளின் கௌரவம் உயிர்த்தது..

"இறங்கலாமா மாலு..?"

ரமணன் கேட்ட போதுதான் அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலின் வளாகத்திற்குள் அவனின் கார் நிற்பதை உணர்ந்தாள் மாளவிகா.. இறங்கி நின்றவள் அழகிய பூங்காவைப் போன்ற ஹோட்டலின் வெளிப்புறத் தோற்றத்தை ரசித்துப் பார்த்தாள்..

"என்ன அப்படிப் பார்க்கிற..?"

அவளின் பார்வையில் தெரிந்த மின்னலையும்.. பரபரப்புக் கலந்த சந்தோசத்தையும் கவனித்தபடி ரமணன் கேட்டான்...

"வாவ்..! இந்த சிச்சுவேஷனே பெண்டாஸ்டிக்கா இருக்கில்ல..? ஐ லைக் திஸ்..."

"ஊம்..? இதைத்தான் நீ லைக் பண்ணுவியா..? என்னை லவ் பண்ண மாட்டியா..?" ரமணன் அவளின் துளைக்கும் பார்வையோடு கேட்டான்...

பதில் சொல்ல முடியாதவளாக மாளவிகா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அவளின் அந்த மௌனத்தில் மறுப்பில்லாததை கெட்டிக்கார ரமணன் உடனடியாக புரிந்து கொண்டான்.. அவன் கண்களில் மின்னல் வந்தது..

"நீ இதுக்கு முன்னாலே இங்கேயெல்லாம் வந்திருக்கியா..?"

"ம்ம்ம்.. சம் டைம்.. பிரண்ட்ஸோட வந்திருக்கேன்.. பட்.. அடிக்கடி வந்ததில்ல..."

பேச்சு மாறிய நிம்மதியில் பேசியவள் அவன் முகத்தைப் பார்த்ததும் திகைத்தாள்.. அவன் முகத்தில் ஏதோ ஓர் உணர்வு தெரிந்தது...

'என்னவாம்..?' அவள் மீண்டும் உதட்டைக் கடித்தாள்...

அடிக்கடி அவள் அப்படிச் செய்வதை ரசனையோடு உணர்ந்தவன் ஏதும் பேசாமல் சிரித்துக் கொண்டான்...



அவனின் முரட்டுத்தனமான முகத்தில் தோன்றும் மென்சிரிப்பு அவனின் அழகை அதிகரிப்பதை அவன் உணர்வானா என்ற நினைவில் அவளையுமறியாமல்

"நீங்க சிரிக்கும் போது அழகாயிருக்கீங்க.." என்று சொல்லி விட்டாள் மாளவிகா...

அவன் சட்டென்று திரும்பி அவளின் முகத்தைப் பார்த்தான்.. அதில் விரவிக் கிடந்த உணர்வினை மாளவிகாவினால் அனுமானிக்க முடியவில்லை..

"ஈஸ்.. இட்..?" என்றவனின் சிரிப்பு விரிந்தது...

அவனுடன் சேர்ந்து படியில் ஏறியபோது.. முன்பின் தெரியாத ஒருவனுடன் காபி சாப்பிட வந்திருப்பதைப் போல அவளுக்குத் தோன்றவில்லை..

மெல்லிய இசை பரவியிருந்த ஹாலில் அவர்கள் பிரவேசித்தார்கள்...

'ரிஸர்வ்டு..' என்ற சிறிய எழுத்துப்பலகை சாய்த்து வைக்கப்பட்டிருந்த மேஜைக்கு அவன் அழைத்துச் சென்ற போது...

"ஏற்கனெவே டேபிளை ரிசர்வ் பண்ணிட்டிங்களா..?" என்று வியப்புடன் கேட்டாள் மாளவிகா...

பதில் சொல்லாமல் சிரித்தவன் சிரிப்பில்.. 'ஆமாம்' என்ற பதில் அடங்கியிருந்தது...

அவள் அமர்வதற்கான நாற்காலியை அவன் இழுத்து விட்ட போது ஒரு இளவரசியைப் போல மனதுக்குள் அவள் உணர்ந்தாள்...

அவள் உட்கார்ந்த பின்னால்தான் அவளுக்கு எதிரே அவன் அமர்ந்தான்.. அவளையே பருகுவதைப் போலப் பார்த்துக் கொண்டிருந்த அவன் பார்வையில் ஒரு கோடி செய்திகள் ஒளிந்திருப்பதை மாளவிகாவினால் உணர்ந்து கொள்ள முடிந்தது...

அவன் பார்வையின் வீச்சைத் தாங்க முடியாமல் அவளின் கன்னி மனம் தத்தளித்தது...

"நேற்று இந்த நேரம்...
ஆற்றங்கரை யோரம்..
தென்றல் வந்து..
உன்னைத் தொட்டு
என்னைத் தொட்டு
பாடும் ராகங்கள்...
கோலங்கள்.. ஆஹா.."

மெலிதான பாடல் அறையை நிரப்பியிருந்தது.. அந்தச் சூழலில் அந்தப் பாடல் ஓர்விதமான ரம்யத்தை மனதுக்குள் திணித்ததில் மாளவிகா சிலிர்த்துப் போனாள்..

அவர்களைச் சுற்றிப் படர்ந்திருந்த இசையின் வெள்ளத்தில் அவர்கள் இருவருமே மூழ்கிப் போனவர்களாக.. பேச மறந்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி சிலையாக அமர்ந்திருந்தார்கள்...



## 17



"இது லதா ரஜனிகாந்த் பாடின பாட்டு..."

எதையோ சொல்ல வேண்டுமென்பதற்காகப் பேசினாள் மாளவிகா.. 'அப்படியா..' என்ற பாவனையில் தலையை அசைத்தான் ரமணன்...

"இந்த ஒரு பாட்டுக்கு அப்புறமாய் அவங்க பாடலைன்னு நினைக்கறேன்.."

அவன் பார்வையின் தீட்சண்மம் தாங்க முடியாதவளாய் தலையைக் குனிந்து கொண்டாள் மாளவிகா.. ரமணனின் முகத்தில் மெல்லிய சிரிப்பு படர்ந்திருந்தது...

"என்ன சாப்பிடற..?" மென்மையாக வினவினான்...

"காபி.." அவள் கேள்வியாகப் பார்த்தாள்..

"காபி சாப்பிடத்தான் கூப்பிட்டேன்.. இல்லைங்கள.. அப்படிச் சொன்னாத்தான் நீ வருவ.. நீ உன் எக்ஸாமை நல்லபடியா எழுதி முடிச்சதுக்கான ட்ரீட்டுன்னு சொன்னா வர மாட்டேன்னு அடம் பிடிப்பியேன்னு நான் அப்படிச் சொன்னேன்..."

"ட்ரீட்டா..?"

"யெஸ்.."

"பார்த்தீங்களா.. கடைசியில்.. நீங்க.. உடான்ஸ் விட்டிருக்கீங்க.."

"எதையும் விடல.. உன்கூட இன்னைக்கு லன்ச் சாப்பிடனும்னு ஆசைப்பட்டேன்.. தட்ஸ் ஆல்.. சொல்லு.. உனக்கு என்ன பிடிக்கும்..?"

'உன்னைப் பிடிக்கும்..' என்று சொல்லத் தோன்றியது.. அவள் அதைச் சொல்லவில்லை..

"உங்களுக்குப் பிடிச்சதை ஆர்டர் பண்ணுங்க.." என்றாள்..

"எனக்குப் பிடிச்சது உனக்குப் பிடிக்க வேணாமா..?" அழமான பார்வையுடன் அவன் கேட்டான்...

"அதெல்லாம் பிடிக்கும்.." இயல்பாக அவள் பதில் சொன்னாள்..

ரமணனின் முகத்தில் படர்ந்த உணர்வினை மாளவிகாவினால் உணர்ந்து கொள்ள முடிந்தது.. அவளையுமறியாமல் அவளது பதிலின் மூலம் அவனுக்குள் இதம் பரவச் செய்து விட்டதை உணர்ந்து கொண்டவளின் மனதில் இதம் பரவியது..

வேண்டிய உணவு வகைகளைச் சொல்லி விட்டு.. காத்திருந்த நேரத்தில் அவளைப் பார்த்து மென்மையாகச் சிரித்தான் ரமணன்..



"என்ன படிச்சிருக்கீங்க..?"

அவனின் பேச்சில் விரவிக்கிடந்த ஆங்கிலத்தில் ஆர்வம் கொண்டவள்.. கேட்டாள்..

"எம்.ஈ முடிச்சுட்டு.. எம்.பி.ஏ பண்ணினேன்.." என்ற அவனின் பதிலில் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது..

"வாட்..?"

ஆயிரம் வாட்ஸ் மின்சாரம் பாய்ந்ததைப் போன்ற அதிர்வுடன் அவள் கேட்டதை எந்தவிதச் சலனமுமில்லாமல் அவன் முகத்தில் தவழ்ந்து கொண்டிருந்த புன்சிரிப்புடன் அவன் எதிர் கொண்டான்..

"எதுக்கு இந்த அதிர்ச்சி..? ஊம்..?"

"ஷாக்காத்தான இருக்கும்..? இவ்வளவு படிச்சுட்டு ஏன்.. நீங்க..?" மேலே பேச முடியாமல் ஊமையானாள் மாளவிகா...

"துப்பாக்கியைத் தூக்கினேன்னு கேட்கறியா..?" அதே சலனமில்லாத முகத்துடன் அவன் கேட்டான்..

"அது.. அது.. வந்து.." மாளவிகா திணறினாள்...

"ரிலாக்ஸ்.. எதுக்கு இந்த தடுமாற்றம்..? என்கிட்ட எந்தக் கேள்வியையும் தைரியமா.. நீ கேட்கலாம்.. அதுக்கான உரிமை உன் ஒருத்திக்கு மட்டும்தான் இருக்கு.."

'கடவுளே..! நான் இதைக் கேட்டேனா..' மாளவிகா மனதுக்குள் புலம்பினாள்..

ஆனாலும்.. அவனைப் பற்றி அறியும் ஆர்வம் அவளுக்குள் கிளர்ந்து எழத்தான் செய்தது..

"அப்பான்னு சொல்கிறவன் ஒருத்திய இழுத்துக்கிட்டு ஓடிட்டான்.. அவனோட துரோகத்தில பாதி செத்துப் போன என் அம்மா என்னோட பதினா வயசில முழுசா செத்துப் போயிட்டாங்க.. அதுக்கப்புற நான் அனாதையா நின்னேன்.. அப்ப என்னைத் தத் எடுத்துக் கிட்டது அண்ணாச்சிதான்.." அவன் நெற்றியி ரேகைகள் வந்தன...

"அண்ணாச்சின்னா..?" சந்தேகம் கேட்டா மாளவிகா...

"அப்படித்தான் எங்க ஏரியாவில இருக்கிறவங் அவரைக் கூப்பிடுவாங்க.. அவர் பேச்சுக்கு எதிர் பேச்சு பே மாட்டாங்க.. எல்லாப் பஞ்சாயத்தும் அவர்கிட்டத்தா வரும்.. கல்யாணம் பண்ணிக்காம.. அவரைச் சுத்தி ஆளுகளை கூட்டமா வைச்சுக்கிட்டு வாழ்ந்தவர்.. என் நிலைமையைப் பார்த்து இரக்கப்பட்டு அவர்கூட கூப்பிட்டுக் கிட்டுப் போயிட்டாரு..."

"ஓ..."

"என்னைப் படிக்க வைச்சாரு.. அவரோட தொழிலின் நிழல்கூட என்மேல படாமத்தான் வளர்த்தாரு..."



"அப்புறம் எப்படி.. இப்படி..?" மாளவிகா சட்டென்று கேட்டு விட்டாள்..

ரமணனின் முகத்தில் லேசான வேதனையின் நிழல் படர்ந்தது...

"விதி..! வேறென்ன சொல்ல..? காலேஜில் நான் தான் பர்ஸ்ட்.. கோல்ட் மெடல் வாங்கினேன்.. எம்.ஈ. படிச்சேன்.. எம்.பி.ஏ.. படிக்கனும்னு நான் சொன்னதும் புனேவுக்கு அனுப்பி படிக்க வைச்சாரு அண்ணாச்சி.. உனக்கு இப்ப கேம்பஸ் இன்டர்வியூவில வேலை கிடைச்சிருக்கிறதைப் போலத்தான் எனக்கும் வேலை கிடைச்சுச்சு.. கனடாவில் வேலை.. படிப்பை முடிச்சதும் நாட்டை விட்டு பறக்க விசாவெல்லாம் ரெடியாகிருச்சு.. அண்ணாச்சிகிட்ட சொல்லிட்டுப் போக சென்னைக்கு வந்தேன்.."

"ம்ம்ம்.."

"அவர் பாசமா கட்டிப் பிடிச்சுக்கிட்டாரு.. நான் வெளிநாட்டில வேலை பார்க்கப் போகிறதுக்காக விருந்துக்கு ஏற்பாடு பண்ணியிருந்தார்.. ஆட்டம்.. பாட்டம்.. கொண்டாட்டம்ன்னு அந்த ராத்திரி அமர்க்களமா இருந்துச்சு.. விருந்து முடிஞ்ச அலுப்பில எல்லோரும் கண்ணசந்திருந்த சமயத்தில, 'டுமீல் காத்தவராயன்..' வீடு புகுந்து அண்ணாச்சியை வெட்டிட்டான்..."

"டுமீல் காத்தவராயனா..?"

"அவனை அப்படித்தான் கூப்பிடுவாங்க.."

"அவன் எதுக்காக அவரை வெட்டனும்..?"

கேள்வி கேட்ட மாளவிகாவைப் பார்த்த ரமணனின் இதழோரமாக விரக்திப் புன்சிரிப்பு நெளிந்தோடியது..

"குட் கொஸ்டின்.. எதுக்காக வெட்டனும்..! ஆனா அவன் அண்ணாச்சியை வெட்டினான்.. அதிகார போட்டி.. அண்ணாச்சியை போட்டுத் தள்ளினாத்தான் அவன் பெரிய ஆளா வர முடியும்.. பக்கத்து ரூமில படுத்திருந்த நான் அண்ணாச்சியோட சத்தம் கேட்டு எழுந்திருச்சு ஓடினேன்.. கையில கத்தியோட அவன் என் கண்முன்னாலேயே தப்பிச்சு ஓடிட்டான்.. என் மடியில அண்ணாச்சி உயிரை விட்டுட்டார்.."

அதற்கு மேல் என்ன ஆகியிருக்கும் என்று அவன் சொல்லாமலே மாளவிகாவிற்குத் தெரிந்து விட்டது...

வளர்ந்த இடம் வன்முறையாளனின் இடம் என்பதால்.. தங்கப் பதக்கம் வாங்கி வெளிநாட்டில் வேலை கிடைத்திருந்த இளைஞன் வன்முறையாளனாகி நிற்கிறான்.. இதற்கு யாரைக் குற்றம் சொல்வது..? அவனே சொல்வதைப் போல.. விதியைத்தானே குற்றம் சொல்ல முடியும்..?

'விதி வலியது..!'



மாளவிகாவின் தூண்டுகோல் இல்லாமலே மளமளவென்று மனதிலிருந்த கடந்த காலத்தை கொட்ட ஆரம்பித்து விட்டான் ரமணன்..

"யோசிச்சுப் பாரு.. தகப்பன் சரியில்லை.. தாய் செத்துவிட்டாங்க.. அண்ணாச்சி மட்டும் இல்லைன்னா என் நிலைமை என்னவாகியிருக்கும்..? அவர் தாய்க்குத் தாயா.. தகப்பனுக்குத் தகப்பனா எனக்கு பாசம் காட்டி.. நிழல் கொடுத்து வளர்த்தாரு.. நான் கேட்ட படிப்பை படிக்க வைச்சாரு.. அவரை என் கண் முன்னாலேயே ஒருத்தன் வெட்டிக் கொன்னான்.. நான் அவனை விட்டு வைக்கலாமா..?"

'விட்டு வைக்காமல் போனதினால உன் வாழ்க்கைப் பாதையே மாறிருச்சே...' அனுதாபத்துடன் அவனைப் பார்த்தாள் மாளவிகா...

"நான் வெளிநாட்டை மறந்தேன்.. என் வேலையை மறந்தேன்.. அவன் ஓடி ஒளிஞ்சுக்கிட்டான்.. அவனைத் தேடி அலைஞ்சேன்.. ஒருவருசம்..! ஒரு வருசமா அவன் என் கண்ணிலேயே சிக்காம தண்ணி காட்டினான்.. எந்த அதிகாரத்தை அண்ணாச்சிகிட்ட இருந்து பிடுங்கணும்னு அவரை அவன் போட்டுத் தள்ளினானோ.. அந்த அதிகார பலத்தை அதிகப் படுத்தினேன்.. அண்ணாச்சியின் கோட்டையை பலமாக்கினேன்.. அவரோட விசுவாசமான வேலையாள்கள் சிதறிப் போய் விடாம நான் தலைமைப்

பொறுப்பை எடுத்துக்கிட்டேன்.. ஒளிஞ்சிருந்தவளைத் தேடிக் கண்டு பிடிச்சு.. ஒருவருசம் கழிச்சு போட்டுத் தள்ளினேன்..."

ரமணனின் கண்களில் தெரிந்த வெறியில் மாளவிகா உறைந்து போனாள்..

## 18



ரமணன் சொல்லிய உணவுப் பதார்த்தங்கள் வந்து விட்டன... எதுவும் நடக்காததைப் போல மாளவிகாவின் முன்னால் தட்டுக்களை நகர்த்தி வைத்த ரமணன்...

"சாப்பிடு.." என்றான்...

மாளவிகாவினால் சாப்பிட முடியவில்லை.. துக்கம் அவள் தொண்டையை அடைத்தது.. சாப்பாட்டில் கவனம் போக மறுத்தது...

*"மேய்ப்பன் இல்லாத ஆடு..*
*வழி மாறுமே..."*

அவள் கேட்டிருந்த திரைஇசைப் பாடல் அவள் நெஞ்சத்தில் ஒலித்தது...



இதோ.. அவள் முன்னால் மேய்ப்பன் இல்லாத ஆடு வழி மாறியதைப் போல.. வழி மாறியவனாக அவன் உட்கார்ந்திருக்கிறான்.. அவன் மெத்தப் படித்தவன்.. உயர்ந்த வேலை அவனுக்காக காத்திருந்தது.. பார்வைக்கு பெண்களை வசீகரிக்கும் ஆண்மை மிகுந்த கம்பீரமான அழகோடு இருப்பவன்..

அவன் அவளைக் காதலிக்கிறான்.. அவளைக் காதலிப்பதற்கான கல்வித்தகுதியும்.. வேலைத்தகுதியும் அவனிடம் இருக்கின்றன.. கூடுதலாக.. அவனை அவளுக்கு ரொம்ப பிடிக்கும். ஆனால்.. அவனின் காதலை.. அவளால் ஏற்றுக்கொள்ள முடியாது..

ஏன்..?

அவன் வழி மாறிப் போனவன்..!

மாளவிகாவின் கண்கள் கலங்கின.. கண்ணீர் துளிகள் மேஜையில் சிதறி விடாமல் இமை கொட்டி அவள் தடுத்தாள்...

"ப்ளீஸ்.. இது சந்தோசமான நிமிசம்.. இப்பப் போய் நீ வருத்தப்படக் கூடாது.. சாப்பிடு.." என்றான் ரமணன்..

"என்னால முடியலையே.." துக்கத்துடன் சொன்னாள் மாளவிகா..

"முடியனும்.. என்னால முடியறப்போ உன்னாலேயும் அது முடியனும்.. சில நிமிசங்கள் நமக்கு பொக்கிச

மானவை.. இந்த நிமிசமும் அது போலத்தான்.. இந்த நிமிசத்தை நினைக்கும் போது நம் மனசில சந்தோஷம் மட்டுமே நிலைச்சிருக்கனும். எனக்காக இந்த சந்தோஷத்தை நிலைக்க விடு.. அழுகாம சாப்பிடு.." பிரியத்துடன் பேசினான் ரமணன்..

அவனது பேச்சிலும்.. செயல்களிலும் இயல்பாக படிந்திருந்த நாகரிகத்தின் சாயல் அவனது படிப்பின் மூலமும்.. குடும்பப் பின்னணியின் மூலமும் அவனிடத்தில் வந்திருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள் மாளவிகா..

"அவன் செத்ததும் என்னாச்சு..?"

"ஒன்னுமே ஆகலை.. அண்ணாச்சியின் கொலையைக் கண்டுக்காம விட்டதைப் போல.. டுமீல் காத்தவராயனின் கொலையையும் கண்டுக்காம விட்டுட்டாங்க.. அவங்களைப் பொறுத்தவரை இரண்டு ரவுடிகளை என்கவுண்டர் பண்ண வேண்டிய வேலை மிச்சமாகியிருச்சு.."

"நீங்க அதுக்குப் பின்னாலேயாவது பாரின் போயிருக்கலாமே..."

"போயிருக்கலாம்தான்.. என்கூடப் படிச்ச பிரண்ட்ஸ் அங்கே வேலையில இருக்காங்க.. நான் போயிருந்தா எனக்கும் வேலை வாங்கித் தந்திருப்பாங்க.. பட்.. இது புலிமேல சவாரி.. இறங்க முடியாது..."



"நீங்க இறங்க விரும்பலைன்னு சொல்லுங்க.."

மாளவிகாவின் கோபத்தைக் கண்ட ரமணன் அவளைச் சமாதானப் படுத்துவதைப் போலச் சிரித்தான்..

"இதை ஒன்னை கண்டுபிடிச்சு வைச்சிருக்கீங்க.." மனத்தாங்கலுடன் சொன்னாள் மாளவிகா..

"எதை..?" புன்னகையுடன் கேட்டான் ரமணன்...

"இந்தச் சிரிப்பைத்தான்.. எதைச் சொன்னாலும் சிரிச்சே தப்பிச்சிடுறீங்க.."

"ஹா... ஹா..."

"இதுக்கும் சிரிப்பா..?"

மாளவிகா குனிந்த தலையுடன் விழிகளை உயர்த்திக் கேட்ட விதத்தில் அவள் மீதான அவனின் பிரியம் அதிகரித்தது...

"துப்பாக்கியை எடுத்தவன் அவ்வளவு சீக்கிரமா அதை கீழே போட்டுற முடியாது மாலும்மா..."

"ஏனாம்..?"

"அது அப்படித்தான்.. சொன்னா உனக்குப் புரியாது.."

"ஆமாமாம்.. நான் ஃபீடிங் பாட்டிலோட இருக்கிற குழந்தை பாருங்க.. எனக்குச் சொன்னாப் புரியாதுதான்.." அவள் சிணுங்கினாள்..

"இல்லேங்கறியா..?" அவன் குறும்புடன் சிரித்தான்..

"அப்ப.. அமுல் பேபியைத்தான் நீங்க காபி சாப்பிடக் கூப்பிட்டிங்களாக்கும்..?"

"இது வெறும் காபியா..? ட்ரீட்ம்மா..."

பேச்சு திசை மாற.. மாளவிகா ரமணனின் கடந்த காலத்தை மறந்து உற்சாகமாக அவனிடம் பேசியபடி சாப்பிட ஆரம்பித்தாள்.. அவளின் குடும்பத்தைப் பற்றிச் சொன்னாள்..

"தெரியுமே.." என்றான் அவன்..

"தெரியாமல் இருந்தாத்தான் அதிசயம்.."

தலைசாய்த்து அவள் சிரித்த போது...

'இவள்தான் அதிசயம்..' என்று நினைத்துக் கொண்டான் ரமணன்..

சிரிப்பும்.. கேலியுமாக.. சாப்பாடு முடிந்தது.. காரில் ஏறியபோது..

"தேங்க்ஸ்.." என்றான் ரமணன்..

"அதை நான் சொல்லனும்.." என்றாள் மாளவிகா..

அவளின் வீட்டிற்குப் போகும் வழியில் அவள் இறங்கிக் கொண்டபோது ரமணனின் முகம் வாடி விட்டது..

"திரும்பவும் எப்பப் பார்க்கி



இனிப் பார்க்கவே முடியாது என்று எப்படி அவனிடம் சொல்வது என்று புரியாதவளாகத் தடுமாறிப் போனாள் மாளவிகா..

"தினமும் காலேஜிக்குப் போவ.. நீ பார்க்காதப்போ நான் மறைஞ்சிருந்து பார்த்துட்டுப் போயிடுவேன்.. இனி அது முடியாது.. நாளைக்கு என்னை பார்க்க வருவியா..?" ஏக்கத்துடன் கேட்டவனிடம்..

"நோ.. சான்ஸ்.." என்று மறுத்தாள் மாளவிகா...

அப்போது அவளுக்குத் தெரியாது.. மறுநாள் விடிந்தவுடன் அவனைத் தேடித்தான் அவள் ஓடப் போகிறாள் என்பது...

அதுபுரியாமல் தலையசைத்து விடைபெற்று விட்டு வீட்டைநோக்கி நடந்தாள்..

"எங்கேடி போயிட்டு வர்ற..? உனக்கு அப்பவே பரிட்சை முடிஞ்சிருக்கனுமே.." என்று கேட்டாள் மதுரா..

"பிரண்டோட சாப்பிடப் போனேம்மா.." பொய் சொல்லாமல் உண்மையைத்தான் சொன்னாள் மாளவிகா..

"ஓஹோ.." என்றதோடு அதற்கு மேல் கேள்வி கேட்காமல் விட்டுவிட்டாள் மதுரா...

அவள் மட்டும்.. 'யார் அந்த பிரண்ட்..?' என்ற கேள்வியைக் கேட்டிருந்தால் பதில் சொல்ல முடியாமல் திணறிப் போயிருப்பாள் மாளவிகா..

உடைமாற்றி முகம் கழுவியவளுக்கு.. தூக்கம் கண்களைச் சுழற்றியது.. ரமணனைப் பற்றிய நினைவுகளுடன் கட்டிலில் விழுந்தவள் மெல்லத் தூங்கிப் போனாள்...

சாயாங்காலம் கண் விழித்தபோது.. உடலில் அயர்வு மறைந்து சுறுசுறுப்பு திரும்பியிருந்தது.. முகம் கழுவி.. தலை வாரிப் பின்னலிட்டவள்.. மதுரா கொடுத்த பூவை வாங்கித் தலையில் வைத்துக் கொண்டு வாசல் பக்கமாக போனாள்.. மனதிலிருந்த உற்சாகத்தில் வாய்க்கு வந்தபடி பாடலைப் பாடியபடி தெருவைப் பார்த்தாள்..

தாடி மீசையுடன்.. வேட்டி சட்டை அணிந்து முண்டாசு கட்டி.. மஞ்சள் பையை கக்கத்தில் இடுக்கியிருந்த அந்த கிராமத்து வாசியின் முகம் அவளுக்குப் பரிச்சயமானதாகத் தோன்றியது..

'யாரா இருக்கும்..?' ஊன்றிப் பார்த்தவள் திகைத்துப் போனாள்..

அவன்.. ரமணன்..!

அவள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே லேசாக கண்சிமிட்டி விட்டு அவன் நடந்து தெரு முனையில் திரும்பிவிட்டான்..


'கள்ளன்..' அவள் முகம் சிவந்து விட்டது..



"ஹாய் அக்கா.. என்ன.. வாசலிலே ஹாயா நிக்கிற..?" அஸ்வின் வந்து விட்டான்...

தம்பியுடன் பேசியபடி வீட்டுக்குள் நடந்தவள் திரும்பிப் பார்த்தாள்.. தெருமுனையில் அவன் இல்லை...

## 19



அவள் மனதில் ஏமாற்றம் கவிந்தது...

"என்னக்கா.. யாரைப் பார்க்கிற..?"

அவள் திரும்பியதைப் பார்த்த அஸ்வின் கேட்டான்..

"ஒன்னுமில்லைடா.." மாளவிகா வீட்டுக்குள் நடந்தாள்...

அஸ்வின் தோளில் மாட்டியிருந்த பையைத் தூக்கி சோபாவில் போட்டுவிட்டு சரிந்தான்.. பழைய சோபா அவனின் கனத்தை தாங்க முடியாமல் ஆடியது...

"ம்ஹூம்.. இதைத் தூக்கிக் கடாசிட்டு புதுசா ஒரு சோபா செட்டை வாங்கிப் போடலாம்ன்னு அப்பாகிட்டச் சொல்லித்தான் பாக்கறேன்.. என் பேச்சு எடுபட மாட்டேங்குது.." அவன் அலுத்துக் கொண்டான்..

"அவரால முடிஞ்சது இவ்வளவு தாண்டா.. நீதான் பெரிய மனுசனா ஆகிட்டேல்ல.. இனி குடும்பப் பொறுப்பை நீ எடுத்துக்கிட்டு எல்லாத்தையும் புதுசாவே வாங்கிப்போடு.." காபியுடன் வந்த மதுரா சொன்னாள்..

"உங்க புருசனை ஒரு வார்த்தை சொல்லிடக் கூடாதே.." காபியை உறிஞ்ச ஆரம்பித்தான் அஸ்வின்..

"எதுக்குச் சொல்ற..?" மதுரா முறைத்தபடி எதிரே உட்கார்ந்தாள்..

"அப்புறம்.. இன்னியோட படிப்புக்கு டாட்டா போல இருக்கு..?" மாளவிகாவைப் பார்த்துக் கேட்டான் அஸ்வின்..

"ஆமாண்டா..." சந்தோசமாகச் சொன்னாள் மாளவிகா...

"கொடுத்து வைச்சவ..." ஏக்கப் பெருமூச்சு விட்டான் அஸ்வின்...

"இன்னும் ரெண்டு வருசத்தில நீயும் கொடுத்து வைச்சிருப்ப.." என்றாள் மதுரா...

"உன் மார்க்குக்கும்.. திறமைக்கும் கேம்பஸ் இன்டர்வியூவில வேலை கிடைச்சு.. காத்திருக்கு. இவனுக்கும் அப்படிக் கிடைக்கணுமே..", மதுரா சொன்னாள்..



"அது சந்தேகம்தான்.. ஐயாவுக்கு மேல் மாடி காலியாச்சே..." தலையைத் தொட்டுக் காண்பித்தாள் மாளவிகா..

"வேலைக்குப் போகப் போகிற திமிரா..?" அஸ்வின் முறைத்தான்...

"ஆமாண்டா.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?" சண்டைக் கோழியாய் மாளவிகா சிலிர்த்தாள்..

அவர்கள் இருவரும் போர் முரசை கொட்டி விட்டதை அறிந்ததும்..

"எக்கேடோ கெட்டுப் போங்க.." என்ற ஆசிர்வாதத்துடன் இடத்தைக் காலி செய்து விட்டாள் மதுரா...

மாளவிகா கையிலிருந்த புத்தகத்தை அஸ்வினின் மீது வீசினாள்.. அவன் நகர்ந்து தப்பித்து விட்டு அவனுடைய பையைத் தூக்கி அவள் மீது வீசினான்.. இப்போது அவள் நகர்ந்து கொள்ள.. பை பறந்து மிகச்சரியாக.. வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்த சிதம்பரத்தின் முகத்தின் மீது தாக்கியது...

"அப்பா.." தலையில் கைவைத்தான் அஸ்வின்...

பை தாக்கியதால் நிலை குலைந்து நின்ற சிதம்பரம்.. முகத்திலிருந்து நழுவிய மூக்குக் கண்ணாடி எங்கே பறந்து போனது என்று தேடினார்..

"இதோ.. இங்கே இருக்குப்பா..." மாளவிகா டிவி பெட்டியின் பின்னாலிருந்து அதைக் கண்டு பிடித்துக் கொடுத்தாள்..

அஸ்வின் சமர்த்துப் பிள்ளையாக அவனின் பையை எடுத்துக் கொள்ள.. மகனைப் பார்த்தார் தந்தை...

"அஸ்வின்.."

அவரின் குரலில் உபதேசம் ஆரம்பிக்கப் போவதின் அறிகுறி இருந்ததில் நொந்து போன அஸ்வின்..

"அப்பா.." என்றான்..

"வள்ளுவர் என்ன சொல்லியிருக்காருன்னு தெரியுமா..?"

"எந்த வள்ளுவர்ப்பா..? நம்ம தெருக்கோடியில பலசரக்குக் கடை வைத்திருக்காரே.. அந்த வள்ளுவரா..?"

மாளவிகாவுக்கு சிரிப்பு வந்து விட்டது.. அவள் வாயைப் பொத்திக்கொண்டு சிரித்ததில் அஸ்வின் கடுப்பாகிப் போனான்...

"ம்ஹீம்.. மாளவிகாவைப் பத்திக் கவலையில்லை.. அவள் படிப்பை முடிக்கும் போதே வேலையை தயாரா வைச்சுக்கிட்டா.. உன் கவலைதான்.. பூமிகாவோட கவலைய விட பெரிசா இருக்கப் போகுது..."



சிதம்பரம் இப்படிச் சொல்லியதில் அஸ்வினின் ஆண்மை சிலிர்த்துக் கொண்டது.. மீசை முளைத்த ஆண் பிள்ளையான அவன்.. கணவனை எதிர்த்து நின்று ஒரு கேள்வி கேட்கக் கூடாத துப்பில்லாத பூமிகாவை விட குறைவாகப் போய் விட்டானா..?

"அப்பா இது அநியாயம்.."

"எதுடா..?"

"வள்ளுவர் யார்ன்னு நீங்க கேட்டிங்க.. நான் பதில் சொன்னேன்.. அதுக்கு என் மரியாதையை தேவையில்லா நீங்க டேமேஜ் பண்ணக் கூடாது..."

"நான் வள்ளுவர் யாருன்னு உன்கிட்டக் கேட்கலியேப்பா..."

"வள்ளுவரோட பெயரை இழுத்தீங்களா.. இல்லையா..?"

"இழுத்தேன்தான்.. எதுக்காக இழுத்தேன்னு முழுசா என்னை நீ சொல்ல விடலியேப்பா.."

"நீங்க சொல்லிட்டாலும்.." வாய்க்குள் முணுமுணுத்தான் அஸ்வின்..

"பாருடா அஸ்வின்.." சிதம்பரம் ஆரம்பிக்க..

"இவர் கேளுடா அஸ்வின்னுல்ல சொல்லியிருக்கனும்..?" என்று தம்பிக்கு மட்டும கேட்கும்படி வினாவை எழுப்பினாள் மாளவிகா..

"கொழுப்பு..?" அஸ்வின் அடிக்குரலில் சீறினான்..

"வள்ளுவர் என்ன சொல்லியிருக்கார்னா.." சிதம்பரம் இழுக்க...

"இவர் இன்னைக்கு முழுவதும் சொல்லிக்கிட்டே இருக்கப் போறார்.." என்று அபாயச் சங்கை மெதுவான குரலில் அஸ்வினின் காதுக்கு மட்டும் கேட்கும்படியாக ஊதினாள் மாளவிகா..

"'மகன் தந்தைக்காற்றும் உதவி - இவன்தந்தை
எந்நோற்றான் கொள் எனும்சொல்..' ன்னு
சொல்லியிருக்கார்.."

"ஆஹா.. ஆஹாஹா.." மாளவிகா திருக்குறளில் புல்லரித்துப் போனவளாக குரல் கொடுக்க..

"ஏய்ய்.." என்று அடிக்குரலில் சீறினான் அஸ்வின்..

"என்னடா.."

"இவ்வளவு தூரத்துக்கு மகிழ்ந்து போறியே.. அந்தக் குறளில் என்ன சொல்லியிருக்குன்னு உனக்குத் தெரியுமா..?"

"அதை அப்பா சொல்லுவார்..."

"அப்ப.. தெரியாது..?"

"அதைச் சொன்னா கேம்பஸ் இன்டர்வியுவில வேலை கொடுக்க மாட்டாங்கடா அஸ்வின்.. அங்கே வேற சொல்லனும்.."



அவர்கள் அடித்துக் கொண்டிருக்க.. அதைக் கவனிக்காதவராக சிதம்பரம் தன் பணியை செவ்வனே ஆற்றிக் கொண்டிருந்தார்.. 'இப்படியாகத்தானே...' என்று தான் அவர் சொல்லவில்லை.. மற்றபடி அவருடைய பேச்சு.. அச்சு அசல் கதா காலட் சேபத்தைப் போலத்தான் இருந்து வைத்தது...

"மகனாகப் பட்டவன்.. பெற்ற தகப்பனுக்கு.. ஆஹா.. இவன் தகப்பன் இவனைப் பெற என்ன தவம் செய்தானோ என்ற சொல்லை வாங்கித் தரனும்..."

"கேட்டுக்கிட்டியா.." பக்க வாத்தியம் வாசித்தாள் மாளவிகா...

"ஏன்ப்பா..?"

"சொல்லுடா மகனே.."

"இந்த வள்ளுவர் அப்பாவைப் பத்தின குறள் எதையும் சொல்லலையா..?"

"ஏன் சொல்லாம..?" சமையலறையிலிருந்து கையில் காபிக் கோப்பை யோடு வெளிப்பட்டாள் மதுரா...

'இந்த அம்மாவையும்.. காபிக் கப்பையும் பிரிக்கவே முடியாது..' என்று நினைத்துக் கொண்டாள் மாளவிகா..

பெண்களுக்கான இருப்பிடம் சமையலறை என்று நிர்ணயித்து விட்ட கெட்டிக்கார ஆண்குலத்தை நினைத்துப் பார்த்தபோது அவர்கள் காலத்தை கணிப்பதில்

வல்லவர்கள் என்ற நிதரிசனமான உண்மையை மாளவிகாவினால் புரிந்து கொள்ள முடிந்தது..

அவர்கள் ஒரு காபியைப் போட்டால் கூட அது உதவி.. அதையே பெண்கள் முழுநேரத் தொழிலாகச் செய்தால் அது கடமை என்று மாறிப் போன நிலைமையை நினைத்து நொந்து கொண்டாள் அவள்..

வேலைக்குப் போகும் ஆண்களுக்கு வேலைக்கான கால நிர்ணயம் உண்டு.. வீட்டிலிருக்கும் இல்லத்தரசிக்கு அது உண்டா..? இருபத்தி நான்கு மணி நேர வேலையாளாக அவள் ஆகிப் போனாளா..? இல்லை ஆக்கி வைக்கப் பட்டாளா..?

கண்ணுக்குத் தெரியாத மாய வலைக்குள் சிக்கிவிட்ட இந்தியப் பெண்களின் நிலையை எண்ணி பரிதாபப் பட்ட மாளவிகாவிற்கு தானும் அதில் ஓர் அங்கம் என்ற உணர்வும் கூடவே வந்தது...

இன்று அவள் பிறந்த வீட்டில் மதுரா சமைத்துப் போட்டதை சாப்பிட்டுக் கொண்டு இருக்கலாம்.. எதிர் காலத்தில் அவளுக்கு திருமணம் என்ற ஒன்று ஆகும் போது அப்படியிருக்க முடியுமா என்று நினைத்துக் கொண்டவளுக்கு..

'*சீச்சி..* ரமணன் அப்படியெல்லாம் வேலை வாங்க மாட்டான்..' என்ற நினைவும்.. கூடவே எழுந்து வைத்தது..



# 20



இந்த நேரத்தில் ரமணனைப் பற்றிய நினைவு எதற்காக வருகிறது என்று கல்வரப் பட்டுப் போனாள் மாளவிகா...

'இது கூடாதே...' மனதிலிருக்கும் நினைவை அடித்து விரட்ட அவள் போராடிக் கொண்டிருந்த போது..

"*தந்தை மகற்காற்றும் உதவி - சபையில்*
*முன்னிருக்கச் செயல்..*" என்றபடி காபியை

சிதம்பரத்தின் கையில் திணித்தாள் மதுரா...

"அப்படின்னா என்னம்மா..."

திடிரென்று தமிழ் ஆர்வலராக மாறினான் அஸ்வின்..

"வேற என்ன.. தகப்பன் மகனுக்கு செய்கிற உதவி எதுன்னா.. சபையில முன்னாலே நிற்க வைக்கிறதாம்.. அதாவது அவனை எதற்கும் ஏங்க விடாம.. கவனி அஸ்வின்.. பஸ்ஸில போக முடியலைன்னு சொன்னா டூவீலரை வாங்கிக் கொடுத்து மனசு கோணாம வார்க்கிறதாம்.." மகனுக்கு எடுத்துக் கொடுத்தாள் மதுரா..

"ஏண்டி... வள்ளுவர் அப்படியா சொல்லியிருக்கார்..?"

அதில அர்த்தம் தேடினா.. இந்த அர்த்தமும் சேர்ந்து தான் வரும்.. எப்பப்பாரு.. வள்ளுவரையே பஞ்சாயத்துக்கு கூப்பிடறது.."

"இதுக ரெண்டும் என்ன செஞ்சுகிட்டு இருந்தது கன்னு உனக்குத் தெரியுமா..?"

"தெரியாம என்ன..? மல்லுக் கட்டிக்கிட்டு இருந்துச்சுக.."

"தெரிஞ்சும் கிச்சனுக்குள்ள போய் ஒளிஞ்சுக் கிட்டியா..?"

"ஆமாம் சாமி.. அங்கே ஊஞ்சல் கட்டித் தொங்க விட்டிருக்கீங்க.. அதில நான் உக்காந்து ஒயிலா ஆடிக்கிட்டு இருக்கப் போறேன்.. எனக்கு பத்திக்கிட்டு வருது.. பேசாம இருங்க.. இங்கேயே உக்காந்து பஞ்சாயத்து பண்ணி.. பையடி வாங்க நான் ஆளில்ல.."

"அப்ப நான் பையால அடிவாங்கினது உனக்குத் தெரியும்..?"

"தெரியும்.. வேலையைப் பாருங்க.."

மதுரா உள்ளே போய் விட்டாள்.. வீட்டில் தனக்கான அதிகார நிலவரத்தைக் குறித்த அவசர ஆலோசனையில் ஆழ்ந்தார் சிதம்பரம்.. திருமணத்தை நினைத்தால் ரமணனின் நினைவு எதற்காக வருகிறது என்ற கவலையுடன் தனிமையைத் தேடி அவளுடைய



அறைக்குள் போய் விட்டாள் மாளவிகா.. கிடைத்த வாய்ப்பை பயன் படுத்திக் கொண்டு சிதம்பரத்தின் உபதேசத்திலிருந்து தப்பித்து விட்டான் அஸ்வின்...

இரவு உணவு நேரம் வந்தது.. எல்லோரும் ஒன்று கூடிச் சாப்பிட்டார்கள்..

"எப்பம்மா வேலையில சேரணும்..?" மகளிடம் கனிவாகக் கேட்டார் சிதம்பரம்..

"நெக்ஸ்ட் வீக்ப்பா.." என்றாள் மாளவிகா...

"நீ வேலைக்குப் போறதில எனக்கு எவ்வளவு தெம்பாயிருக்குன்னு உனக்குத் தெரியாது மாளவிகா..."

"தெரியும்ப்பா.."

"பார்த்துப் பத்திரமா நடந்துக்கணும்.."

"ஆகட்டும்ப்பா.."

"நம்ம குடும்பத்தை நீயாவது முன்னுக்கு கொண்டு வரணும்.."

சிதம்பரம் நடிகர் திலகமாகி.. நாத்தழுதழுத்துக் கொண்டிருக்கும் போதே..

"ஆமாம் அக்கா.. நீ முன்னுக்கு கொண்டு வா.. பூமிகாக்கா பின்னுக்கு கொண்டு வரட்டும்.." என்று எடுப்படித்தான் அஸ்வின்...

"இந்த நேரத்தில எதுக்குடா அவ பேச்சை இழுக்கற..? நானே இந்த ஒரு மாசமா அவளை பிறந்த வீட்டுக்கு ஒட்டி விடாம குடும்பம் நடத்தற மாப்பிள்ளை.. எந்த நேரத்தில துரத்தி வைப்பாரோன்னு பக்கு.. பக்குன்னு பயந்துக்கிட்டு இருக்கேன்.. இதில நீ வேற பீதியைக் கிளப்பற.." என்று நெஞ்சை பிடித்துக் கொண்டாள் மதுரா..

"ம்ஹீம்.. அக்கா பேய்க்கு வாழ்க்கைப் பட்டா.. இங்கே அவ பிறந்த வீடே புளியமரத்தில தொங்குது.." மாளவிகா அலுத்துக் கொண்டே எழுந்து கை கழுவப் போனாள்...

மதுரா எந்த நேரத்தில் அந்த வார்த்தைகளைச் சொன்னாளோ.. விடியும் போதே.. தலையில் ரத்தம் வழிய கைக்குட்டையால் அதைக் கட்டுப் போட்டு தடுத்து நிறுத்தியபடி.. கண்ணீரும் கம்பலையுமாக ஆட்டோவில் வந்து இறங்கினாள் பூமிகா...

"அம்மா.." அவள் விம்மியழுத போது.. மதுராவின் பெற்ற வயிறு பற்றி எரிந்தது..

"மாசாமாசம்.. தீவட்டிக் கொள்ளைக்காரனைப் போல கழுத்தில கத்திய வைக்காத குறையாய் பொண்ண கொடும பண்ணி பொறந்த வீட்டுக்கு துரத்தி பணம் பறிக்கறான்.. இன்னும் அவனுக்கு திருப்தி வர மாட்டேங்குது.. இனிமே கொடுக்கிறதுக்கு எங்க கிட்ட



என்ன இருக்கு..?" மகளைத் தோளில் சாய்த்துக் கொண்டு பொருமினாள் மதுரா..

"இந்த வீடு இருக்காம்மா.." வீட்டில் உள்ளவர்களின் தலையில் இடியை இறக்கினாள் பூமிகா...

"என்னது..?" அனைவரும் ஒருமித்த குரலில் அலறினார்கள்..

"ஆமாம்மா.. இந்த வீட்டை அவர் பேருக்கு எழுதிக் கொடுக்கணுமாம்.. நான் கேட்க மாட்டேன்னு சொன்னதுக்கு என்னை அடிச்சு சுவரிலயே தலையை பிடிச்சு மோதினாரும்மா..." கொட்டிக் கொண்டிருந்த ரத்தத்திற்கான காரணத்தைச் சொன்னாள் பூமிகா...

"இதென்னங்க அநியாயமா இருக்கு..? குடியிருக்கிற வீட்டையும் குடுத்துட்டா நாம எங்கே போவோம்..?" மதுரா பரிதவித்தாள்..

"ஊம்..? நடுத்தெருவில நிப்போம்.." அஸ்வின் வெடித்தான்..

"டேய் அஸ்வின்.. பொறுமையா இருடா.."

"என்னத்தம்மா.. பொறுக்கிறது..? அந்த ஆள் கேட்கிறப்ப எல்லாம் படியளந்தீங்கல்ல.. அதான் ஆட்டைக் கடிச்சு.. மாட்டைக் கடிச்சு.. கடைசியில ஆளையே கடிக்க வந்துட்டான்..."

அஸ்வின் கோபப்பட்டுக் கொண்டிருக்க, அந்த நேரத்திலும் திருக்குறளைத் தெரியாதவனுக்கு இதுமட்டும் எப்படித் தெரிந்தது என்று குழம்பிப் போனார் சிதம்பரம்...

"எதுவா இருந்தாலும்.. அப்புறமாய் பேசலாம் அஸ்வின்.. இப்ப அக்காவ ஹாஸ்பிடலுக்கு கூப்பிட்டுக்கிட்டுப் போகனும்.. அதுதான் முக்கியம்.." அவசரத்திற்கு சுற்றப்பட்ட கைக்குட்டையின் மீது தனது சுடிதாரின் துப்பட்டாவை இறுகக் கட்டியபடி பேசினாள் மாளவிகா..

"அதைச் சொல்லு.. அந்த ஆளு மண்டையைப் பிளப்பான்.. நாம அதுக்கும் செலவு பண்ணி ட்ரீட்மெண்ட் கொடுத்து இந்தாடா சாமி.. திரும்பவும் மண்டையை உடைடான்னு திருப்பி அனுப்பி வைக்கனும்.. என்ன கொடுமைடா சாமி இது..." அஸ்வின் வெறுத்துப் போய் பேசினான்..

மதுரா மௌனமாக கழுத்தில் தாலிக் கொடியுடன் கிடந்த ஒற்றைமெல்லிய தங்கச் சங்கிலியை அவிழ்த்து கணவனிடம் கொடுத்தாள்.. மனம் வலிக்க அதை வாங்கிக் கொண்டார் சிதம்பரம்..

"அடுத்து தாலிச் செயினா..?" ஏளனமாக கேட்டான் அஸ்வின்..

இரண்டு பிள்ளைகளைப் பெறாமல் இருந்திருந்தால் பிறந்த வீட்டை இந்தக் கதிக்கு ஆளாக்காமல் செத்துத்



தொலைத்திருக்கலாமே என்று பரிதவித்துப் போனாள் பூமிகா...

அதை உணர்ந்து கொண்டவளாக தமக்கையின் தோள் மீது இதமாக விரல் அழுத்தி மௌனமாக ஆறுதலை உணர்த்தினாள் மாளவிகா..


"அடி இன்னும் கொஞ்சம் ஆழமா பதிஞ்சிருந்தாக் கூட உயிர் போயிருக்கும்.. வாட் இஸ் திஸ்..?" டாக்டர் கோபப் பட்டார்..

"மாடிப் படியில் கால் தடுக்கி.." மென்று விழுங்கினார் சிதம்பரம்..

"இந்தக் கதை இங்கே வேணாம்.. எத்தனை தடவைதான் இந்தப் பெண் மாடிப்படியில இருந்து உருண்டு விழுகும்..? எனக்கே கேட்டுக் கேட்டு அலுத்துப் போச்சு.. ரத்தம் கொதிக்குது.. மிஸ்டர் சிதம்பரம்.. ஒன்னு போலிஸ்கிட்ட உதவி கேளுங்க.. இல்லைன்னா இதைத் தட்டி கேட்கிற யாரிடமாவது பிரச்னையை கொண்டு போங்க.."

டாக்டர் சொல்லிக் கொண்டிருந்தபோது தான் மாளவிகாவுக்குள் அந்த மின்னல் வெட்டியது...

# 21



"என்னடா சொல்ற..?" ரமணன் அவசரமாக நாற்காலியை விட்டு எழுந்தான்...

"ஆமாண்ணே.. அண்ணி உங்களைத் தேடி வந்திருக்காங்க..." என்றான் தாமஸ்

"இங்கே வந்திருக்கிறாளா..? மாளவிகாவா..?"

தடதடவென்று மாடிப்படிகளில் இறங்கியவன் ஹாலில் அமர்ந்திருந்த மாளவிகாவின் முன்னால் போய் நின்றான்...

அறியாத இடத்திற்கு வந்திருக்கும் சங்கடத்துடன்.. கைவிரல்களின் மீது பார்வையைப் பதித்து விரல்கள் பின்ன அமர்ந்திருந்த மாளவிகா அவனைக் கண்டதும் பதட்டத்துடன் எழுந்து நின்றாள்...

"மாலு.. நீயா.." சந்தோசம் கொப்புளிக்க கேட்டான் ரமணன்..

"ம்ம்ம்.." மாளவிகா மிரண்ட பார்வையுடன் அந்த வீட்டைச் சுற்றிப் பார்த்தாள்..



"என்ன பார்க்கிற... இது நம்ம வீடுதான்.. உட்கார்.." ரமணன் சோபாவில் அமர்ந்து அருகில் கை காட்டினான்...

நீண்டிருந்த அந்த சோபாவில் இடைவெளி விட்டு தயக்கத்துடன் விலகி அமர்ந்தாள் மாளவிகா.. அவளுடன் பேசுவதற்கு வசதியாக ஒரு பக்கமாக சாய்ந்து அமர்ந்து கொண்ட ரமணன்..

"இங்கே நீ வருவேன்னு நான் எதிர்பார்க்கவே இல்லியா.. திடீர்ன்னு உன்னைக் கண்டதும் சந்தோசக் கூத்தாடனும் போல இருக்கு.. என்ன சாப்பிடற மாலு.." என்றான்..

"ஒன்னும் வேணாம்..."

"இதானே வேணாம்கிறது.. ஓகே.. நீ சொல்லலைன்னா என்ன.. என் சாய்ஸ் காபிதான்.. தாமஸ்.."

"அண்ணே.."

"சமையல்கார ராமையாகிட்ட இரண்டு கப் காப்பி கலந்து கொண்டு வரச் சொல்லு..."

"இதோ.. சொல்றேண்ணே..."

ஏறக்குறைய உள்ளே ஓடினான் தாமஸ்...

"அப்புறம்.. எப்படி வீட்டைக் கண்டு பிடிச்சே.." மாளவிகாவின் பக்கம் திரும்பிக் கேட்டான் ரமணன்..

"நேத்து பேசிக்கிட்டு இருந்தப்ப நீங்க இந்த ஏரியாவோட பெயரைச் சொன்னீங்க.. உங்க பெயரைச் சொன்னா ஊருக்கே தெரிஞ்சிருக்கு.. உங்க வீட்டைச் சொன்னா உங்க ஏரியா மக்கள் தெரியலைன்னு சொல்லிடுவாங்களா..?" கேலியாகத் தலையை சாய்த்துக் கேட்டாள் மாளவிகா...

"இன்ட்ரெஸ்டிங்.." ரசித்தான் ரமணன்...

மாளவிகா அதற்கு மேல் பேசாமல் யோசனையுடன் விரல்களைக் கோர்த்துப் பிரித்தபடி அமர்ந்திருந்தாள்..

"அண்ணே.. காபி.."

காபிக் கோப்பைகளுடன் வந்தவர்தான் சமையல்கார ராமையாவாக இருக்கக் கூடும் என்று யூகித்தாள் மாளவிகா..

"இதான் அண்ணிங்களா..? அந்த மகாலட்சுமியையே நேரில பார்க்கிறதைப் போல இருக்காங்க.." ராமையா வாத்சல்யத்துடன் மாளவிகாவைப் பார்த்தார்...

அவளைப் பார்ப்பதற்காகவே தாமஸிடம் காபியைக் கொடுத்து விடாமல் வேலை மெனக்கெட்டு அவரே காபிக் கோப்பைகளை எடுத்து வந்திருக்கிறார் என்று நினைத்துக் கொண்டாள் மாளவிகா..

அந்த நினைவு அவளுக்கு சங்கடத்தைக் கொடுத்தது.. என்னதான் ரமணனை அவளுக்குப் பிடித்திருந்தாலும்.. அவள் அவனைத் திருமணம் பண்ணிக்



கொள்ளப் போவதில்லை.. என்றிருக்கும் போது.. இப்படிப் பட்ட பாசப் பார்வைகளை எதிர் கொள்வதில் உள்ள சங்கடத்தை அனுபவித்தாள் மாளவிகா..

"இவதான் உங்க அண்ணி ராமையா..."

உல்லாசச் சிரிப்போடு காபிக் கோப்பையை வாங்கி அவளிடம் ரமணன் நீட்டிய போது நீ சொல்வது தவறு என்று ஆட்சேபிக்க அவளால் முடியவில்லை..

பார்த்தது போதுமென்று ராமையா போய்விட.. ரமணன் மாளவிகாவையே சந்தோசத்துடன் பார்த்தபடி காபியை உறிஞ்சிக் கொண்டிருந்தான்.. அவன் பார்வையில் கன்னம் சிவந்தவளாய் பார்வையை தழைத்துக் கொண்டு காபியை உறிஞ்ச ஆரம்பித்தாள் மாளவிகா... திடிரென்று எதையோ நினைத்துக் கொண்டவளாக ரமணனைப் பார்த்தாள்.. அவன் புருவங்களை உயர்த்தினான்...

"கேளு.."

"எதை..?"

"நீ எதைக் கேட்க நினைக்கிறயோ.. அதை.."

"உங்களைவிட வயசில் மூத்தவங்ககூட உங்களை அண்ணன்னு கூப்பிடறாங்களே.."

மாளவிகாவின் சந்தேகத்தைக் கேட்டவன் வரிசைப் பற்கள் தெரிய சிரித்தான்..

'இவன் சிரிக்கறப்போ அழகா இருக்கறான்..'

மாளவிகாவுக்கு முழுமனதாக அவனை ரசிக்கவும் முடியவில்லை.. ரசிக்காமல் இருக்கவும் முடியவில்லை..

"அது அப்படித்தான்.."

ரமணன் சிரித்து முடித்து விட்டு.. நிமிர்ந்து அமர்ந்தான்..

"இப்பச் சொல்லு.. எதுக்காக என்னைத் தேடிவந்த..? ஏதாவது அவசர காரியம் இல்லைன்னா நான் இருக்கிற இந்த வீட்டுக்கே நீ தேடி வந்திருக்க மாட்ட.. என்ன விசயம் மாளவிகா..?"

பிரச்னையுடன் தான் அவள் அவனைத் தேடி வந்திருக்கிறாள் என்பதை அவன் இனம் கண்டு கொண்டு விட்ட நன்றியுணர்வில் பொலபொலவென்று கண்ணீரை உகுத்துவிட்டாள் மாளவிகா..

"ஏய்.. மாளவிகா.. அழுகிறயா..?" அவன் பதறிப் போனவனாக அவளை நெருங்கி அமர்ந்தான்...

அவளுக்கு இருந்த துயரத்தில் அது அவளின் கவனத்தில் படவில்லை.. கண்ணீர் வழிய.. பூமிகாவின் பிரச்னையை சொல்லி முடித்தாள்..

"ஒவ்வொரு தடவையும் உயிர்தப்பி வந்து சேர்றா.. இப்படியே இருந்துருன்னு சொல்லலாமுன்னா.. அந்த ராட்சசன் அவகிட்டேயிருந்து பிள்ளைகளைப் பிடுங்கி



வைச்சுக்கிட்டுத்தான் துரத்தி விடறான்.. அப்பாவைத் துன்பப் படுத்தறோமேங்கிற குற்ற உணர்வு அவளுக்கும் இருக்கத்தான் செய்யுது.. ஆனா பிள்ளை பாசம் அவளை திரும்பவும் அந்த ராட்சசன் கிட்டேயே இழுக்குது..."

"ம்ம்ம்.."

"அவளுக்கு கல்யாணத்தப்போ கேட்ட நகை.. சீர்வரிசையைவிட.. நூறு மடங்கு அதிகமா.. மாசாமாசம் அப்பா அவனுக்கு கப்பம் கட்டிக்கிட்டு இருக்காரு.. மிச்ச மிருந்தது இந்த பழைய வீடுதான் அதையும் இப்ப எழுதி வாங்கிட்டு வான்னு அக்காவை துரத்தி விட்டிருக்கான்.."

மாளவிகா சொன்னதையெல்லாம் பொறுமையாக கேட்டுவிட்டு ரமணன் பேசினான்..

"தப்பு அவன் மேல இல்லை.. உன் அப்பா மேலயும் உன் அக்கா மேலயும்தான் தப்பு..."

"என்ன நீங்க..? இப்படிச் சொல்றிங்க..? விடிய விடிய ராமாயணம் கேட்டுட்டு.. விடிஞ்ச பின்னாலே கௌசல்யைக்கு மகன் அனுமான்னு சொன்ன மாதிரியில்ல இருக்கு.. அவன் செய்கிற அட்டூழியத்துக்கு அவங்க ரெண்டு பேரும் என்ன செய்வாங்க..?"

"எதுத்து நின்னிருக்க வேணாமா..? அவன் முதன் முறையாய் உங்க அக்காவை அடிச்சு விரட்டினப்பவே உன்

அப்பா ஊரைக் கூட்டி நியாயம் கேட்டிருக்கனும்.. உன் அக்கா அவன்கூட வாழ முடியாதுன்னு சத்யாக்கிரகம் பண்ணியிருக்கனும்.."

"அவன் பிள்ளைகளை பிடிச்சு வைச்சிருந்தானே.."

"நாள் பூராவும் அவன் குழந்தைககூடவா உட்கார்ந்திருக்கப் போறான்..? பிள்ளைகளை ஸ்கூலுக்கு அனுப்ப மாட்டானா..? அங்கேயிருந்து உங்க அக்கா பிள்ளைகளை கூப்பிட்டுக்கிட்டு வந்துட்டா அவனால என்ன செய்ய முடியும்..?"

"வீட்டுக்கு வந்து பிள்ளைகளை அனுப்பி வைன்னு தகராறு பண்ணினா என்ன செய்றது..?"

"அனுப்ப முடியாதுன்னு சொல்றது.. அவன் போலிஸீக்குப் போனா வரதட்சனை கேட்டுக் கொடுமை பண்றான்னு அவன் மேல நீங்க கம்ப்ளெயிண்ட் கொடுக்க வேண்டியதுதானே..? பிள்ளைகளை அவன்கிட்ட வளர விடுவது பாதுகாப்பில்லைன்னு சொல்ல வேண்டியது தானே.."

அவன் சொல்லச் சொல்ல.. இதையெல்லாம் ஏன் செய்யாமல் போனோமென்று திகைத்து விட்டாள் மாளவிகா...



# 22



"அது மிடில் கிளாஸ் தயக்கம்..." என்று சொன்னான் ரமணன்..

"எனக்குப் புரியல..."

"நாலு பேர் என்ன சொல்வாங்களோன்னு.. நம்ம வாழ்க்கையை நாலு பேருக்கு பயந்து வாழ்கிறதுக்குப் பெயர்தான் மிடில்கிளாஸ் வாழ்க்கை.. உன் அப்பாவையும்.. அக்காவையும் அந்த பயம்தான் தடுத்து கட்டிப் போட்டு வைச்சிருக்கு.. அவன் அதை அவனுக்குச் சாதகமா யூஸ் பண்ணிக்கிட்டான்.."

"ம்ப்ச்.. என்னவோ ஒன்னு.. நான் இதைப் பத்தியெல்லாம் யோசிக்கிறதில்ல..."

"யோசிக்காதே.. மூளை குழம்பிப் போகும்..."

"இப்ப நான் என்னதான் செய்யறது..?"

"கவலைப்படாம வீட்டுக்குப் போ.. உன் அக்கா புருசன் வந்து உன் அக்கா காலில விழுந்து கூப்பிட்டுக் கிட்டுப் போவான்.."

"நிஜமாவா சொல்றீங்க..?"

"உன்கிட்டப் பொய் சொல்வேனா மாலு..."

ரமணன் சொன்னதைச் செய்தான்.. மனதி... ரமணனின் பராக்கிரமத்தின் மீது நம்பிக்கையிருந்தாலு... பூமிகாவின் பிரச்னை தீருமா என்ற சஞ்சலத்துடன் வீட்ட... அடைந்தாள் மாளவிகா..

பூமிகா தலையில் கட்டுடன் கண்மூடி... படுத்திருக்க.. சேலை முந்தானையால் கண்ணீரை... துடைத்தபடி.. சமையலறையில் வேலைகளை... கவனித்துக் கொண்டிருந்தாள மதுரா...

சிதம்பரம் ஒரு பக்கம் விட்டத்தை வெறித்து... கொண்டிருக்க.. அஸ்வின் ஒரு பக்கம் சோபாவில் சரிந்... கிடந்தான்..

"என்னடா.. காலேஜீக்குப் போகலியா..?"

"முதல்ல.. நீ எங்கே ஊர் சுத்தப் போன..?"

"பிரண்டு வீட்டுக்குப் போயிருந்தேன்டா.. நா... கேட்டதுக்கு பதிலைச் சொல்லு..."

"காலேஜீக்குப் போனா சம்பள்மா கொடுக்கிறாங்க..?"

"உனக்கு அதையும் கொடுக்கணுமா..?"

"சம்பளம் வாங்கற அப்பாவே வேலைக்குப் போகல... அது உன் கண்ணில படவே படாதே..."

"ஏம்ப்பா ஆபிஸீக்குப் போகல..."



"ம்ப்ச்சு.. ஆபிஸீக்குப் போய் என்னத்தைக் கண்டேன்ம்மா..?"

"சம்பளத்தைக் காணலியா..?"

"லீவு போட்டுட்டேன்ம்மா.. இன்னைக்குப் போனா முழு மனசா வேலை பார்க்க முடியாதுன்னு தோணுச்சு.. அதான்.."

ஒருநாளும் அவர் இதுபோல் இருந்தவரல்ல.. அந்தத் திருநாளை பூமிகா கொடுத்து விட்டாளே என்ற நினைவுடன் மதுராவைத் தேடிப் போனாள் மாளவிகா...

சேலை முந்தானையால் கண்ணீரைத் துடைப்பதும்.. காய்களை வெட்டுவதுமாக இருந்தாள் மதுரா..

"நகருங்கம்மா.. நான் காயை நறுக்கறேன்.."

"வேணாம்.."

"ஏன்ம்மா..? நான் சும்மாதானே இருக்கேன்..? ஹெல்ப் பண்றேனே..."

"அதைத்தான் வேணாம்ன்னு சொன்னேன்.."

"நான் ஹெல்ப் பண்ணினா உங்களுக்கு வேலை சீக்கிரமா முடிஞ்சிரும்ல்ல..."

"அதையும்தான் வேணாம்ன்னு சொன்னேன்.."

பட்ட உபத்திரவத்தில் தாய்க்கு மூளை கலங்கி விட்டதோ என்று கலங்கிப் போனாள் மாளவிகா.. அதெல்லாம் இல்லையென்று சொன்னாள் மதுரா..

"மனசெல்லாம் வேதனை நிறைஞ்சிருக்குடி.. வேலை செஞ்சா அதை மறக்கலாம்.. என்னை வேலை செய்யவிடு.."

தாயின் நிலையைக் காணக்காண மாளவிகாவுக்கு உள்ளம் சகிக்கவில்லை.. சமையலறையை விட்டு வெளியே வந்தவள் பூமிகாவைத் தேடிப் போனாள்..

"அக்கா.."

கண்விழித்த பூமிகா.. மாளவிகாவை உயிரற்ற பார்வை பார்த்தாள்...

'எப்படியிருந்தவ..' மாளவிகாவின் மனம் வலித்தது..

"இப்ப எப்படியிருக்கு..? வலி இருக்கா..?"

"எந்த வலியைக் கேட்கிற மாளவிகா.. உடம்பில இருக்கிற வலியை விட.. மனசு அதிகமா வலிக்குதே.. நான் என்னடி தப்பு செஞ்சேன்..? அப்பா அம்மா பார்த்து கல்யாணம் செய்து வைத்த மாப்பிள்ளைக்கு கழுத்தை நீட்டினேன்.. அது தப்பா..?"

"விடுக்கா..."



"அவர் பண்ணின கொடுமைக்கெல்லாம் வெறுப்பைக் காட்டாம இந்தியப் பெண்களின் பிரதிநிதியா.. பெண்டாட்டியாய் லட்சணமா.. இணக்கமா குடும்பம் நடத்தினேன்.. அது தப்பா..?"

"அக்கா..."

"பிள்ளைகளுக்காக.. அவர் கட்டின தாலியை அவிழ்த்து வீசாம பொறுமை காட்டினேன்.. அது தப்பா..?"

"வேணாம்க்கா..."

"எதுக்காகடி இந்த சித்திரவதை..? பெத்தவங்களுக்கு அடங்கின மகளாய் இருந்தேனே.. அதுக்கா இந்த சித்திரவதை..? கட்டின புருசனை மதிச்சு காதலிச்சு குடும்பம் நடத்தினேனே.. அதுக்கா இந்த சித்திரவதை..? குடும்பம் உடைஞ்சிரக் கூடாது என் பிள்ளைக மனசு உடைஞ்சிரக் கூடாதுன்னு நினைக்கிறேனே.. அதுக்கா இந்த சித்திரவதை..?"

"போதும்க்கா.. அலட்டிக்காம படுத்துத் தூங்கு.."

"முடியலையே மாளவிகா.. மனசெல்லாம் ரணமாயிருக்கே.. முள் படுக்கைமேல படுத்திருக்கிறதைப் போல வேதனையாயிருக்கே.."

இந்தத் துக்கத்திலிருந்து இவளை எப்படி மீட்பது என்ற வழிவகை தெரியாமல் திகைத்தாள் மாளவிகா...

மீள முடியாத துன்பப் படு குழியில் மீண்டு மீண்டும் புதையுண்டு கிடப்பவளை இழுத்து வெளியே போடும் வழிவகை தெரியாமல் தவித்தாள்...

'உன் கையில் என்னைப் பெத்தவங்க பிடிச்சு கொடுத்தாங்களே.. நீயே கதின்னு நான் உன் பின்னால வந்தேனே.. நீ என்னை இந்தப் பாடு படுத்தறயே..' என்று துக்கம் கொள்ளும் அந்த உத்தமியின் கண்ணீருக்கு சக்தியில்லையா என்று கலங்கிப் போனாள்..

வாசலில் ஆட்டோ வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

"அம்மா..."

ஆவலுடன் ஓடிவந்த பூமிகாவின் பிள்ளைகள் தாயைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள்..

அந்த அழைப்பிற்குத்தான் எத்தனை சக்தி..!

எழுந்து கொள்ள முடியாமல் சோர்ந்து கிடந்த பூமிகா வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து இரு கைகளையும் விரித்து குழந்தைகளை அள்ளிக் கொண்டாள்...

"தன்யா.. தனுஷ்.. நீங்களா..? எப்படி வந்தீங்க..?"

"ஆட்டோவில..."

"தனியாவா வந்தீங்க.."

"ஊஹூம்.. அப்பா கூட்டிக்கிட்டு வந்தார்..."



அதற்குள் அறைக்குள் வந்து விட்ட கங்காதரன் இரு கைகளையும் கூப்பி..

"பூமிகா.. என்னை மன்னிச்சுரு.." என்றான்..

அந்த கண்கொள்ளாக் காட்சியினை யாராலும் நம்ப முடியவில்லை.. மாளவிகாவைத் தவிர.. மற்ற எல்லோரும் இமை கொட்டி.. கைகளைக் கிள்ளி.. அது கனவா.. இல்லை நனவா என்று ஊர்ஜிதம் பண்ணிக் கொள்ள முயன்றார்கள்..


'சொன்னதைச் செய்துட்டான்..'

மாளவிகாவின் மனதில் சந்தோசம் பொங்கியது.. அவள் கேட்டதை ரமணன் செய்து விட்டதில் அவள் மனம் ஆனந்தக் கூத்தாடியது...

"வா.. நம்ம வீட்டுக்குப் போகலாம்.. இனி உன்மேல என் விரல்கூட அடிக்கன்னு படாது.. நான் அடாவடியா மாமாகிட்டயிருந்து வாங்கின பணத்தை அவருக்கே திருப்பித் தந்துடறேன்.." கங்காதரன் பூமிகாவின் கால்களில் ஏறக்குறைய விழுந்தான்..

திரைப்படக் காட்சியில் கூட இப்படி ஒரு திருப்பம் நேராதே என்று குழம்பிப் போனார் சிதம்பரம்...

# 23



அது எப்படி.. ஒரே நாளில் ஒரு மனிதன் முற்றிலுமாக திருந்தி நல்லவனாக முடியும்..? அதுவும்.. அந்த ஒருநாள் கூட முழுமையாகக் கழியவில்லையே...

மாளவிகாவின் வீடே பிரமிப்பில் ஆழ்ந்திருந்தது.. கங்காதரன் பூமிகாவைத் தாங்காத குறையாக கையோடு அழைத்துக் கொண்டு கிளம்பிப் போய்விட்டான்..

சிதம்பரம்தான் தயக்கத்தோடு அவனை தடுத்து நிறுத்தி...

"மாப்பிள்ளை.. இந்த வீடு.." என்று மென்று விழுங்கி விட்டு அஸ்வினின் உக்கிரப் பார்வைக்கு ஆளானாள்...

"இது உங்க வீடு மாமா.. எனக்கும் இதுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை..". கங்காதரன் அலறினான்..

'எதுக்காக மனுசன் வீட்டைப் பத்திப் பேசினா.. பேயைப் பத்திப் பேசினதப் போல இப்படி அலறிவைக்கிறான்..' சிதம்பரத்துக்கு ஒரு மண்ணும் புரியவில்லை..

"அதெப்படி மாப்பிள்ளை.. இது உங்க மாமனார் வீடு.."



"அதைத்தான் நானும் சொல்றேன் மாமா.."

"நீங்க எப்பவும் போல வந்து போக இருக்கனும்.."

"கட்டாயம் மாமா.. முதல்ல நீங்க கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுத்துட்டு.. அதுக்கப்புறமா வந்து போறேன்.."

"அதெல்லாம் வேணாம் மாப்பிள்ளை.."

"நீங்க அப்படிச் சொல்லக் கூடாது மாமா.. நான் கொடுப்பேன்.. நீங்க வாங்கிக்கிட்டுத்தான் ஆகனும்.."

இவன் எதைக் கொடுப்பான் என்ற யோசனையுடன் பூமிகாவைப் பார்த்த சிதம்பரம்.. அவளின் தலைக் கட்டைக் கண்டு அரண்டு போனார்..

'மகளை அடிக்கிறது பத்தாதுன்னு.. அவளப் பெத்த அப்பனையும் அடிக்கக் கிளம்பிட்டானோ..'

"ஐயோ.. மாப்பிள்ளை.. நீங்க கொடுத்தா நான் தாங்க மாட்டேன்.."

"அதுக்காக கொடுக்க வேண்டியதை நான் கொடுக்காம இருக்க முடியுமா மாமா...?"

'விட மாட்டேங்கிறானே..' சிதம்பரத்திற்கு வியர்த்தது..

"நீங்க கொடுத்த பணத்தை திருப்பிக் கொடுக்கலைன்னா நான் நிம்மதியா தூங்க முடியாது மாமா.."

'அப்பாடி.. இவன் பணத்தைத்தான் சொல்றான்..' நிம்மதியாக மூச்சு விட்டார் சிதம்பரம்..

ஒருவழியாக.. பெண்டாட்டி பிள்ளைகளுடன் கங்காதரன் போய்விட.. அந்த வீட்டில் புயலுக்குப் பின் நிலவும் அமைதி நிலவியது..

"நம்பவே முடியலைடி மதுரா.." சிதம்பரம் வாய்திறந்த போது...

"அந்த ஆளே.. எதுவும் வேணாம்ன்னு அக்கா காலில விழுந்து கூப்பிட்டுக்கிட்டுப் போறான்.. அவனை நிப்பாட்டி.. இந்த வீடுன்னு இழுவை இழுக்கறிங்களே.. அவன் மறந்தாலும் நீங்க இந்த வீட்டை எழுதிவாங்காம விடாதேடான்னு அவனுக்கு நினைவு படுத்துவீங்க போல இருக்கே..", என்று பாய்ந்தான் அஸ்வின்...

"யாருடா இவன்..? அவன் வீட்டைப் பத்தின நினைப்போட இருந்தா.. அதை மறந்திருன்னு.. கட் அண்ட் ரைட்டா பேசி முடிச்சிரலாம்ன்னுதான் அந்தப் பேச்சை எடுத்தேன்.."

"கட் அண்ட் ரைட்டா..? நீங்க பேசுவீங்க..? ம்ஹும்.. நீங்க பேசின லட்சணத்தைத்தான் நாங்க பார்த்தோமே.."

"விடுடா.. மனுசனுக்கு நாக்கு ஸ்லிப் ஆகறதி [illegible]"



"அதுசரிப்பா.. உங்க மருமகன் அரண்டு போய் வந்து நின்னதைப் பாத்தா யாரோ அவனை வாங்கு வாங்குன்னு வாங்கி அனுப்பினதைப் போலவே இருக்கே.. அது என்னவா இருக்கும்..?"

"அதானே.. எனக்கும் அதுதான் புரிய மாட்டேங்குது.."

"ஏண்டி மதுரா.. உனக்கு ஏதாவது புரியுதா..?"

"உங்க ரெண்டு பேருக்குமே புரியலைங்கிறப்போ எனக்கு மட்டும் எங்கேயிருந்து புரியுமாம்..?"

அதைப் புரிந்தும்.. தெரிந்தும் வைத்திருந்த மாளவிகாவை விட்டுவிட்டு அவர்களுக்குள்.. அவர்கள் பேசிக் கொண்டார்கள்...

மாளவிகா மௌனப் புன்னகையுடன் நகர்ந்தாள்.. அறைக் கதவைத் திறந்து கட்டிலில் படுத்த போது அவன் முகம் மனதில் வந்தது...

'தேங்க்ஸ்..' மானசீகமாக அவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருந்தபோது.. போன் மணியடித்தது.. எடுத்துப் பார்த்தாள்... அறியாத நம்பர் என்று போன் அறிவுறுத்தியது..

'யாரா இருக்கும்..?' போனை காதுக்கு கொடுத்தாள்..

"ஹலோ.."

"என்ன ஆச்சு..? உன் அக்கா புருசன் வந்து உன் அக்காவை கூப்பிட்டுக்கிட்டுப் போயிட்டான் போல இருக்கு..?" என்று போனில் கேட்டான் ரமணன்..

"நீங்களா..?" மாளவிகா மலர்ந்து போனாள்..

"நானேதான்.."

"என் செல் நம்பர் உங்களுக்கு எப்படித் தெரிஞ்சது..?"

இதைக் கேட்கும் போதே.. இவனுக்குத் தெரியாதது எது இருக்கப் போகிறது என்ற நினைவில் உதட்டைக் கடித்துக் கொண்டாள் மாளவிகா..

அவன் சிரித்தான்..

"எனக்குத் தெரியாம இருக்குமா..?"

"இப்பத்தான் மனசுக்குள் உங்களுக்கு தேங்க்ஸ் சொல்லிக்கிட்டு இருந்தேன்.."

"அதை போனில் சொல்லட்டுமேன்னு தான் போன் பண்ணினேன்.. இதான் என்னோட நம்பர்.. என்கிட்ட ஏதாவது பேசணும்னு தோணினா இந்த நம்பருக்கு கூப்பிடு.."

"ம்ம்ம்.."

"வீட்டில் எல்லோரும் சந்தோசமா இருக்காங்களா..?"

"ரொம்ப சந்தோசமா இருக்காங்க.."



அவன் சிறிது நேரம் பேசிவிட்டு போனை அணைத்தான்.. மாளவிகாவிற்குள் உற்சாக ஊற்றெடுத்தது...

மிகவும் சந்தோசமாக.. 'லாலா..' என்று பாடியபடி அறையை விட்டு வெளியே வந்தவளின் பாட்டு வாய்க்குள்ளேயே புதைந்து போனது...

அங்கே ஹாலில் கால்மேல் கால் போட்டு தோரணையாக அமர்ந்திருந்தான் கார்த்திக்..

"கேட்டியா மாளவிகா.. பூமிகாவோட புருசனைக் கண்டிச்சு அனுப்பி வைச்சது கார்த்திக்தானாம்..", என்று வாயெல்லாம் பல்லாகச் சொன்னார் சிதம்பரம்...

"என்னது..?" மாளவிகாவுக்கு தூக்கிவாரிப் போட்டது..

'இதென்ன புதுக் கதை..?'

"ஆமாம்மா.. கார்த்திக் வந்தப்போ அஸ்வின் ஜோக்கடிச்சுக்கிட்டு இருந்தானா.. நாங்க அதைக் கேட்டு சிரிச்சுக்கிட்டு இருந்தோமா.. என்ன எல்லோரும் சந்தோசமா இருக்கீங்க போல இருக்கேன்னு கார்த்திக் கேட்டாரு.. நாங்க விசயத்தைச் சொன்னோம்.. பூமிகா ஹஸ்பெண்டை யாரோ அரட்டி வைச்சிருக்காங்க.. அது யாருன்னுதான் தெரியலைன்னு அஸ்வின் சொன்னான்.. அப்பத்தான் கார்த்திக் அவர்தான் கூப்பிட்டு அரட்டி வைச்சதா சொன்னாரு.."

...தேன்.. இவனாவது.. பூமிகாவோட புருசனை கண்டிச்சு வைக்கிறதாவது.. இன்னும் கொஞ்சம் படுத்தி எடுன்னு சொல்லியில்ல கொடுப்பான்.. வீட்டுக்குள்ள வந்து இவங்க வாயிலேயே விசயத்தைக் கறந்துட்டு.. அதைத் தான்தான் செய்தேன்னு பொய் சொல்றானே.. இவனையெல்லாம் என்னன்னு சொல்றது..?'

கார்த்திக்கை இகழ்ச்சியாகப் பார்த்தாள் மாளவிகா.. ஆண்மை ததும்பும் தோற்றத்துடன் நிமிர்ந்து நிற்கும் ரமணன் அவள் மனதில் வந்தான்..

'அவனெங்கே.. இவனெங்கே..'

அவளின் பார்வையில் தெரிந்த இகழ்ச்சியில் கார்த்திக்கின் முகம் சுருங்கி விட்டது...

## 24



'என்ன இப்படிப் பாக்கிறா..' கார்த்திக் யோசனையானான்..

அவனின் வசதியிலும்.. பதவியிலும் மயங்காத மாளவிகாவின் மீது அவனுக்குள் கோபம் துளிர்த்தது...



'பெரிய இவளைப் போல அலட்டிக்கிறா.. இந்த ஒட்டைவீட்டில பிறந்ததுக்கே இந்த அலட்டல்ன்னா.. இன்னும் வசதியான வீட்டில் பிறந்திருந்தான்னா இவளைக் கையில பிடிக்கவே முடியாது...'

"என்ன மாளவிகா.. காலேஜீக்குப் போகலையா...?" எரிச்சலை காட்டிக் கொள்ளாமல் அமர்த்தலாகக் கேட்டான் கார்த்திக்...

"அவளுக்குத்தான் படிப்பு முடிஞ்சிருச்சே.." வழக்கம் போல காபியுடன் வந்த மதுரா சொன்னாள்...

"அப்படியா..? ரிசல்ட் வந்ததும் சொல்லு.. எனக்குத் தெரிஞ்ச கம்பெனியில வேலைவாங்கித் தரேன்.." அலட்டலாகச் சொன்னான் கார்த்திக்...

"நீங்க வேற அத்தான்.. ஒரு வருசம் போனா.. அவளே பத்து பேருக்கு வேலை வாங்கித் தந்துருவா.. அம்மணி.. படிக்கிறப்பவே கேம்பஸ் இன்டர்வியூவில செலக்ட் ஆகிட்டாங்கள்ல.. ஹைடெக்.. இன்டர் நேசனல் கம்பெனி.. அடுத்த வாரமே வேலையில ஜாயின் பண்ணப் போறாங்க.. அதுக்கடுத்த மாசம் கனடாதான்..."

அஸ்வின் "ஸ்ஸ்ஸ்.." என்ற சப்தத்துடன் வலது கையை விமானம் பறப்பதைப் போல அசைத்துக் காட்டினான்..

அப்படியா என்றுகூட கார்த்திக்கினால் கேட்க முடியவில்லை.. அவனுக்கு முகம் விழுந்து விட்டது.. சமாளித்துக் கொண்டவனாக..

"ஆல் தி பெஸ்ட்.." என்று சொன்னான்..

மாளவிகா பதில் சொல்லாமல் லேசாக தலையை மட்டும் அசைத்தாள்.. கார்த்திக் பல்லைக் கடித்தான்..

'சும்மாவே இவளைப் பிடிக்க முடியாது.. இதில மல்ட்டி இன்டர் நேசனல் கம்பெனியில வேலையா..?'

பொதுவாக பேசிக் கொண்டிருந்தவன் கிளம்பின பாடாக இல்லை.. கொஞ்ச நேரத்துக்கு மேல் அஸ்வினால் பொறுமை காக்க முடியவில்லை.. அவன் ரிமோட்டை கைப்பற்றி டிவியில் ஆழ்ந்து விட்டான்.. சமையலறையில் ஏதோ தீய்வதைப் போன்ற வாசனையை உணர்ந்த மதுரா சமையலறைக்கு விரைந்து விட்டாள்.. சிதம்பரத்திற்கோ செல்போன் வந்து விட்டது.. மாளவிகா உன்னையெல்லாம் கண்டு கொள்வேனா என்று அஸ்வினுடன் பேசியபடி டிவி பார்த்துக் கொண்டிருந்தாள்.. அந்த வீட்டில் தன்னை ஆறாவது விரலாக உணர்ந்தான் கார்த்திக்..

"அப்ப நான் கிளம்பறேன் மாமா.." எழுந்து கொண்டான்..

ஒருழியாய் கிளம்பிட்டானே என்ற சந்தோசப் புன்னகையுடன் வாசல் பக்கமாக போயிருந்த சிதம்பரத்தை..



"அப்பா... அத்தான் கிளம்பறாராம்..", என்று அழைத்தபடி போய்விட்டான் அஸ்வின்...

தனித்து நின்ற மாளவிகாவின் முகத்தை மன்மத பார்வை பார்த்தான் கார்த்திக்...

'சகிக்கலை..' மாளவிகாவின் முகம் அஷ்ட கோணலாக விளக்கெண்ணை குடித்ததைப் போல மாறியது...

"நான் எதுக்காக பூமிகாவோட ஹஸ்பெண்டைக் கூப்பிட்டு மிரட்டி வைச்சேன் தெரியுமா..?" கார்த்திக் காலரை தூக்கி விட்டுக் கொண்டான்..

'அடப்போடா.. நீயா அவனை மிரட்டின..?'

"உனக்காகத்தான் மாளவிகா.. உன் சந்தோசத்துக் காகத்தான்.."

'வேணாண்டா.. வெறுப்பேத்தாதே..'

"அவன் முரடன்தான்.. யாருக்கும் அடங்காதவன் தான்.."

'நீயே உசுப்பேத்தி சொல்லிக் கொடுத்திருவ போல..'

"விட்டா உங்க வீட்டைப் பிடுங்கிட்டு வெளியே துரத்தி விட்டிருவான் தான்..."

'அதான் உன் ஆசை போல...'

"ஆனாப் பாரு.. நான் சொன்னா அவன் கேட்டுக்குவான்.."

'ஆமாமா.. நீயும் சொல்கிறவன்தான்.. அவனும் கேட்டுக்கிறவன்தான்.. எனக்கு உங்க ரெண்டு பேரோட லட்சணமும் தெரியும்டா.. வாயை மூடிக்கிட்டு போயிரு..'

"இனிமே அவன் வாலாட்ட மாட்டான்னு நினைக்கிறேன்.."

'நீ எதை நினைப்பன்னு எனக்குத் தெரியாதா..?'

"மீறி வாலாட்டினான்னா எங்கிட்டச் சொல்லு..."

'அது எதுக்குடா..? நீ வந்து அவனுக்கு இன்னும் கொஞ்சம் போட்டுக் கொடுத்து கிளப்பி விடறதுக்கா..? என்னையென்ன எங்க அப்பாவையும்.. அம்மாவையும் போல கேணைன்னு நினைச்சியா..?'

"நான் அவனைக் கண்டிச்சு வைக்கிறேன்.."

'நீ தானே.. செய்வ.. செய்வ...'

"இன்னைக்கு நான் போட்ட போட்டையே ஆயுசுக்கும் அவன் மறக்கமாட்டான்..."

விட்டால் அதையே அவன் நிலைநாட்டி விடுவான் என்று புரிந்துபோக.. மாளவிகா அவனைக் கூர்மையாக பார்த்தாள்...

"என்ன..? அப்படிப் பார்க்கிற..?"




"இன்னைக்கு நீங்கதான் பூமிகாவோட ஹஸ்பெண்டை கண்டிச்சு வைச்சீங்களா..?"

"பின்னே இல்லையா..?"

"இல்லை.."

"மாளவிகா..."

"சும்மா கத்தாதீங்க.. இந்த வீட்டில இருக்கிற மத்தவங்களுக்குத்தான் அக்காவோட ஹஸ்பெண்டை கண்டிச்சு வைச்சது யாருன்னு தெரியாது.. எனக்குத் தெரியும்.."

"உனக்குத் தெரியுமா..."

கார்த்திக்கிற்கு முகத்தை எங்கே போய் வைத்துக் கொள்வது என்று தெரியவில்லை.. அதுவரை மாளவிகா பார்த்த இகழ்ச்சிப் பார்வைக்கான காரணம் புரிந்தவனாக மனதிற்குள் குன்றிப் போனான்..

"யார்..?" என்று கேட்கும் போதே அவன் குரல் இறங்கி விட்டது...

"ரமணன்.." மாளவிகா அவன் முகத்தையே பார்த்தபடி அழுத்தமான குரலில் சொன்னாள்...

"வாட்..?" கார்த்திக் அதிர்ச்சியாகப் பார்த்தான்..

"என்ன அப்படிப் பார்க்கறிங்க..? ரமணன் சொன்ன பின்னாலும் பூமிகாக்காவோட ஹஸ்பெண்ட் மத்தவங்க

பேச்சைக் கேட்பாருன்னா நினைக்கறிங்க..?" அழுத்தமாக கேட்டாள் மாளவிகா...

கார்த்திக் அப்படித்தான் நினைத்து வைத்திருந்தான்.. கங்காதரனைக் கூப்பிட்டு.. தோள் மீது கை போட்டு.. நட்பு பாராட்டி அவனுக்கு துணையாக ஆவன செய்வதாகவும்.. அவன் அந்த வீட்டை பூண்டோடு அழிப்பதற்கு தன்னாலான அனைத்து உதவிகளையும் அளிப்பதாகவும் சொல்லிக் கிளப்பி விடுவதாகத்தான் இருந்தான்...

'இது இவளுக்கு எப்படித் தெரியும்..?' கார்த்திக் யோசிக்க...

'உன்னை எனக்குத் தெரியாதா..?' என்ற இகழ்ச்சிப் பார்வையை பார்த்தாள் மாளவிகா..

"ரமணன்தான் சொல்லி வைச்சான்னு உனக்கு எப்படித் தெரியும்..?" தாடையைத் தடவியபடி கேட்டான் கார்த்திக்..

"என்னா.. அவர்கிட்ட உதவி கேட்டதே நான்தான்.." குண்டைத் தூக்கிப் போட்டாள் மாளவிகா..

"நீயா..? உனக்கெப்படி அவனைத் தெரியும்..?" குறுக்கு விசாரணையை ஆரம்பித்தான் கார்த்திக்..


'என்னக் கேட்க நீ யார்..' மனதுக்குள் வெகுண்ட போதும் அவனுக்கான பதிலைக் கூறாவிட்டால் அவன்



மதுராவிடம் பற்ற வைத்து விடுவான் என்பதை உணர்ந்தவளாக பதில் சொல்ல ஆரம்பித்தாள் மாளவிகா..

"அவர் என் பிரண்டோட அண்ணனோட பிரண்டுக்கு தம்பியோட பிரண்டுக்கு பிரண்டாம்.."



இதுவரை இப்படிப்பட்டதொரு அறிமுகத்தை கார்த்திக் கேள்விப்பட்டதே இல்லை.. அவனுடைய உறவினர் வட்டாரத்தில் தான்..

'இவர் எப்படிச் சொந்தமாகனும்..?' என்று கேள்விக்கு..

'இவரோட தாத்தாவோட ஒன்னு விட்ட மச்சினனோட ரெண்டு விட்ட தம்பிக்குத்தான் என் பாட்டியோட பெரியம்மா பேரனுக்குப் பொறந்த பொண்ணோட கொளுந்தியாளோட நாத்தனாரைக் கொடுத்திருக்கு..' என்ற பதில் வரும்..

அடுத்து அந்தக் கேள்வியை கார்த்திக் கேட்கவே யாட்டான்...

'இவர் உனக்கு என்ன முறையாகனும்னு நீதான் சொல்லேன்..' என்று பதிலை அவன் தலையில் கட்டி விடுவார்களே..

ஆதலால்.. சமர்த்துப் பிள்ளையாக.. இவர் உனக்கு அண்ணன் முறையாக வேண்டும் என்றால் 'அப்படிங்களா அண்ணா..' என்றும் மாமன்.. மச்சான் முறையாக வேண்டும் என்றால் 'அத்தான்' என்று அன்புடனும் அழைக்கப் பழகியிருந்தான்..

இப்படியாகத்தானே சங்கிலித் தொடர் போன்ற உறவு முறைகளின் வம்சாவழி வரை படங்களை மனதுக்குள் வரைய முடியாமல் தத்தளித்து தடுமாறிக் கொண்டிருந்த வனிடம் நட்பைப் பற்றியும் ஒரு வரைபடத்தை மனதுக்குள் வரைந்து பார் என்று மாளவிகா சவால் விட்டால்.. அவன் பாவம் என்னதான் செய்வான்...

எப்படித் தெரியும் என்ற கேள்விக்கு.. இப்படிப்பட்ட பதிலை எதிர்பார்க்காத திகைப்பு அவன் முகத்தில் தெரிந்தது.. அதை அவதானித்த மாளவிகா மனதுக்குள் சிரித்துக் கொண்டவளாக...

"நான் என் பிரண்டுகிட்ட பூமிகாவோட விசயத்தைச் சொன்னேனா.. அவ அவளோட அண்ணன் காதில அதைப் போட்டு வைச்சிருக்கா.. அந்த அண்ணன் அவரோட பிரண்டுக்கு போன் போட்டு இந்த விசயத்தைக் கடத்தினாராம்.. அந்த பிரண்ட் என்ன செஞ்சாருன்னா..



சாப்பிடறப்ப தம்பியோட காதில இந்த விசயத்தை போட்டு வைச்சாராம்.. அந்த தம்பி என்ன செய்தாருன்னா.." என்று கண்களை உருட்டி கையைக் காலை ஆட்டி அவள் கதைசொல்ல ஆரம்பித்ததில் கார்த்திக் அரண்டே போனான்..

"அம்மா.. தாயே.. இனி அந்த ரமணனை உனக்கு எப்படித் தெரியும்ன்னு கேள்வியே கேட்கமாட்டேன்.. ஆளை விட்டால் போதும் சாமி.." என்று ஜகா வாங்கி விட்டான்...

'யாரு கிட்ட..?' கண்களில் வெற்றிக் குறியோடு நமட்டுச் சிரிப்பு சிரித்த மாளவிகாவைக் கண்டதும் என்ன தோன்றியதோ.. புருவங்கள் சுருங்க...

"நிஜமாவே உனக்கு ரமணனைத் தெரியுமா..?" என்று விசாரித்தான்..

"எனக்குத் தெரியாது.. என் பிரண்டோட அண்ணனோட..." மாளவிகா மறுபடி ஆரம்பிக்க..

"போதும்.. போதும்.." என்று அலறிவிட்டான்...

"நீங்கதானே கேட்டீங்க..?"

"அதில்லை மாளவிகா.. அவன் பக்கா ரௌடி.."

'நீ பெரிய ஜெண்டில் மேன்..' மனதுக்குள் மாளவிகா பொரும.. கார்த்திக் பேச்சை நிறுத்தி..

...தோ சொன்னாப்புல இருந்துச்சே.." என்று சந்தேகமாக கேட்டான்..

"இல்லையே.." மாளவிகா மறுத்தாள்...

"அப்படியா.. எதுக்கும் அவனிடம் இருந்து தள்ளியே இரு.."

'நான் தள்ளி நின்னாலும்.. அவன் தள்ளி நிற்க மாட்டான்..'

"இப்ப என்ன சொன்ன..?"

"இதென்னங்க.. வம்பாப் போச்சு.. நான் என்னவோ ஸ்கூல் சில்ரன் போல நீங்க டியுசன் எடுத்துக்கிட்டு இருக்கீங்க.. நானும் ஆன்னு உங்க வாயைப் பார்த்துக் கிட்டு அதைக் கேட்டுக்கிட்டு இருக்கேன்.. என்னைப் போய் நீ என்ன சொன்ன.. நீ என்ன சொன்னன்னு கேட்டுக்கிட்டே இருந்தா எப்படி..?"

"நிஜமாவே நீ எதையும் சொல்லலையா..?"

"வாயைத் திறந்து சொல்லலை.."

மாளவிகா கடுப்பாக பதில் சொன்னாள்.. அப்படியென்றால் மனதுக்குள் எதையும் நினைத்தாயா என்று கேட்கலாமா என்று நினைத்த கார்த்திக் அவசரமாக அந்த யோசனையை கைவிட்டான் ஆமாம்.. மனதுக்குள் உன்னைப் பொறுக்கியென்று நினைத்தேன் என்று



அவள் சொல்லி விட்டால் என்ன செய்வது என்ற தற்காப்பு உணர்வுடன் வாயை இறுக மூடிக் கொண்டான்...

மாளவிகா அப்படிச் சொல்லி விடுகிற ஆள்தான்.. அவள் பூமிகாவைப் போல பயந்த ரகமல்ல.. அஸ்வினும்.. அவளும்.. சரவெடிகள்.. எக்குத்தப்பாக வாய் விட்டு விட்டால் சராமரியாக வெடித்து விடுவார்கள்.. அதனால் தான் அஸ்வினிடம் வாய் கொடுக்காமல் தள்ளியே நின்று வந்தான்.. மாளவிகாவிடம் தான் அதைக் கடைபிடிக்க அவனால் முடியவில்லை..

மாளவிகா பூமிகாவை விட அழகியாக இருந்தாள்.. பூமிகா பட்டப் படிப்பை பாதியிலேயே விட்டவள்.. மாளவிகா அப்படியில்லை.. என்ஜினியரிங் படிப்பை முடித்து.. கெட்டிக்காரத்தனமாக கேம்பஸ் இன்டர்வியூவில் தேர்வும் ஆகி வேலைக்குப் போகப் போகிறவள்..

'இவ சம்பளம் எவ்வளவுன்னு கேட்டு வைச்சிக்கனும்..'

கார்த்திக் மனதுக்குள் கணக்குப் போட்டுக் கொண்டான்.. வரதட்சணை.. நகையென்று வருகின்ற பெண் ஒருமுறைதான் சீர் வரிசையோடு வருவாள்.. திரும்பத்திரும்பக் கேட்டு விட்டால் பூமிகாவின் கணவன் கங்காதரனின் கதிதான் வந்து விடும்..

அதற்குப் பதிலாக இப்படிச் சுளையாக எடுத்த எடுப்பில் அரை லட்சத்துக்கு மேல் சம்பளம் வாங்கும்

பெண்ணை திருமணம் செய்து கொண்டால் ஆயுளுக்கும் சீர்வரிசை கிடைத்துக் கொண்டேயிருக்குமே...

மாளவிகாவை கை நழுவ விடக் கூடாது.. எதற்கும் இதைப்பற்றி பெற்றவர்களிடம் பேசி வைத்துக் கொள்ள வேண்டும் என்று மனதுக்குள் குறித்துக் கொண்டான் கார்த்திக்..

"உன்னை அம்மா கேட்டாங்க மாளவிகா.."

"என்னையா..? உங்க அம்மாவா..? ஆச்சரியமாயிருக்கே.."

"இதில ஆச்சரியப்பட என்ன இருக்கு..? உன்னைப் பத்தி என்கிட்ட ரொம்ப விசாரிப்பாங்க.. 'நீ'ன்னா.. அவங்களுக்கு உயிர்.." என்று சொன்னவன் அடுத்ததாக..

'எனக்கும்தான்..' என்று சொல்லப் போனான்...

அதற்கு இடம் தராமல் மாளவிகா அவன் பேச்சை இடைமறித்து விட்டாள்...

"இந்த வேடிக்கையை எங்கேயும் கண்டதில்ல.. நேத்துத்தான் உங்க அம்மாவ கோவிலில் பார்த்தேன்.. கூட யாரோ ஒரு ஜட்ஜ் வீட்டு லேடி இருந்தாங்க.. எப்படி இருக்கீங்க அத்தைன்னு விசாரிச்சேன்.. அதுக்கு என்னவோ எதிரியைப் பார்க்கிறதைப் போல என்னை முறைச்சுப் பார்த்துட்டு 'ம்ம்'ன்னு உறுமினாங்க.. கூட




இருந்தவங்க இது யாருன்னு என்னைப் பார்த்துக் கேட்டாங்க.. அதுக்கு உங்க அம்மா தூரத்துச் சொந்தம்ன்னாவது சொல்லியிருக்கலாம்.. அதை விட்டுட்டு தெரிஞ்சவங்க வீட்டுப் பொண்ணு.. பொது இடத்திலே தள்ளி நின்னு பேசுவோம்ன்னு இல்லாம சரிக்குச்சரியா உரிமையெடுத்துக் கிட்டு பக்கத்தில வந்து நின்னு பேசுதுன்னு முகத்தில் அடிச்சதைப் போலச் சொன்னாங்க.. உங்க அம்மாவைப் போய் நலம் விசாரிச்சு வைச்ச எனக்கு அது தேவைதான்னு நானும் பேசாம வீடுவந்து சேர்ந்திட்டேன்.. அவங்க என்னைப் பத்தி உங்ககிட்ட விசாரிச்சாங்களா..? குட்ஜோக்.. "

மாளவிகாவின் நையாண்டியில் கார்த்திக் நொந்து போய் விட்டான்.. 'ஒரு மனுசன் எத்தனை நேரம்தான் அடிமேல அடி வாங்கிக்கிட்டு வலிக்காததைப் போலவே பாவ்லா பண்றது..' அவனுக்கு இம்சையாக இருந்தது...

கார்த்திக்கின் அம்மா கோதாவரிக்கு அவளது சிநேகிதியின் வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலிருக்கும் ஓய்வு பெற்ற நீதிபதியின் மகளை தன் மகனுக்கு திருமணம் முடித்துவிடும் ஆசை இருந்தது.. அவளும் சிநேகிதியின் மூலமாக காய் நகர்த்தி.. அந்த நீதிபதியின் மனைவியை சிநேகிதம் பிடித்து விட்டாள்.. அவளுடன் கோவிலுக்கு போய்வர பகீரதப் பிரயத்தனம் செய்து.. அதிலும் வெற்றி கண்டவளை கோவிலில் பார்த்து மாளவிகா நலம் விசாரித்திருக்கிறாள்.. அப்போது போய் அவள்

மாளவிகாவிடம் பல்லைக் காட்ட முடியுமா..? அப்படிக் காட்டினால்.. அந்த நீதிபதியின் மனைவிக்கு சந்தேகம் வந்து விடாதா.. மாளவிகாவை ஒன்று விட்ட நாத்தனாரின் பெண் என்று அறிமுகம் செய்து வைத்தால் இந்தப் பெண் எதற்காக உங்க மகனைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்லிவிட்டது என்பது போன்ற எக்குத் தப்பான கேள்விகளை அந்த நீதிபதியின் மனைவி கேட்டு விட மாட்டாளா...?

இவையெல்லாம் மக்கு மாளவிகாவின் மண்டைக்கு உறைக்கவில்லையே என்று கோபப்பட்டான் கார்த்திக்..

## 26



மனிதராக பிறந்தவர்களுக்கு ஆயிரத்துக்கும் மேலே பிரச்னைகள் இருக்கும்.. அதையெல்லாம் உணராமல் மாளவிகா பேசினால் எப்படியென்ற கோபம் அவனுக்குள் எழுந்தது.. அப்படி உணராமல் இருக்க அவள் கார்த்திக்கைப் போல கொடுத்து வைத்த பிறப்பையா பிறந்திருக்கிறாள் என்ற கேள்வியும் அவனுக்குள் முளைத்தது.. சிதம்பரத்திற்கும் - மதுராவிற்கும் மகளாகப் பிறந்தவளுக்கு ரோசம் என்ன வேண்டிக்கிடக்கிறது என்ற எண்ணமும் அவனுக்குள் உதித்தது.



"அம்மாவுக்கு அன்னைக்கு தலைவலியாம்..?"

"என்னைக்கு..?"

"உன்னைக் கோவிலில் பாத்த அன்னைக்குத்தான்.."

"அவங்களைக் கோவிலில் நான் பாத்ததை நான் சொல்லித்தான் நீங்களே தெரிஞ்சுக்கிட்டிங்க.. அப்புறம் எப்படி அவங்களுக்கு அன்னைக்குன்னு பார்த்து தலைவலின்னு சொல்றிங்க..?"

இவளை யார் இந்த அளவுக்கு யோசிக்கச் சொன்னது என்று ஆத்திரப்பட்டான் கார்த்திக்.. அவனைப் பொறுத்த வரையில் பெண்கள யாருமே ஓர் அளவுக்கு மேல் பேசக்கூடாது.. யோசனை என்பது கூடவே கூடாது.. அவனுடைய அம்மா கோதாவரிக்கு மட்டும் இந்த விதிமுறைகள் பொருந்தாது என்பது வேறு விசயம்..

"இந்தப் பேச்சுக்கு முடிவே கிடையாது மாளவிகா.. விட்டா நீ பேசிக்கிட்டே இருப்ப.. முடிக்க மாட்ட.."

"ஆரம்பிச்சது நானில்லை..."

"அதைவிட.. வேற ஒன்னைக் கேளு..."

"கேட்டுட்டா போச்சு.. நல்லா ஞாபகத்தில் வைச்சுக்கங்க.. இந்தப் பேச்சையும் நீங்கதான் ஆரம்பிக்கிறிங்க.. நானில்லை..."

"ஸ்ஸ்.. கூடக் கூடப் பேசாம சொல்கிறதைக் கே மாளவிகா.."

கார்த்திக் அதட்டும் தொனியில் பேசிவைக்க மாளவிகாவிற்கு கோபம் வந்துவிட்டது.. 'போடா நீயுமாச்சு உன் பேச்சுமாச்சு..' என்று தூக்கிப் போட்டு விட்டுப் போ விடலாமா என்று அவள் யோசித்தாள்.. ஆனால்.. அவ என்னதான் சொல்கிறான் என்பதைக் கேட்டு வைத்து கொள்ளலாமே என்ற எண்ணத்துடன் மௌனமாக அவ பேச்சைக் கவனித்தாள்...

அவள் நினைத்ததுதான் சரியாக இருந்தது.. கார்த்திக் கண்களை முகத்தை படுதீவிரமாக வைத்துக் கொண்டு...

"அந்த ரமணன் பெரிய ரௌடி.." என்றான்..

"அதைத்தான் ஏற்கனெவே சொல்லிட்டிங்களே.." பல்லைக் கடித்தாள் மாளவிகா..

"அதனாலே.. அவனிடம் நீ உதவி கேட்டதை வீட்டில் சொல்றது அவ்வளவு நல்லதில்லை.."

"நான் அவரிடம் உதவி கேட்கலையே.. என்பிரண்டு கிட்டத்தான் கேட்டேன்.. அவ அவங்க அண்ணன் காதில.."

"மறுபடியும் ஆரம்பிச்சிராதே.. தாங்காது.. அதை விட்டு வெளியே வா.. எப்படின்னாலும் இந்த விவகாரத்தை



ஒரு ரௌடி தலையிட்டிருக்கான்கிற விவரம் வெளியே தெரியறது சரியா வராது.."

"அதுக்கு என்னதான் செய்யனும்கறிங்க..?"

"ரமணன் விசயத்தை மனசிலயே போட்டுக்க.. வெளியே விடாதே.. இப்போதைக்கு அத்தையும்.. மாமாவும்.. அஸ்வினும் என்ன நினைச்சுக்கிட்டு இருக்காங்களோ அப்படியே இருக்கட்டும்.."

"அதாவது.. நீங்கதான் பூமிகாவோட ஹஸ்பெண்டைக் கூப்பிட்டு லெப்ட் அன்ட் ரைட் வாங்கி வெளுத்துக் கட்டியிருக்கீங்கன்னு நினைச்சுக்கிட்டு இருக்கட்டும்ன்னு சொல்றீங்க..?"

மாளவிகாவின் கிண்டலைப் புரிந்து கொண்ட கார்த்திக்கின் முகம் சுண்டிப் போனது...

'கொழுப்பு..! இவ கொழுப்பை அடக்கியாகனும்..'

அவனின் முகமாற்றத்தைப் பற்றி அலட்டிக் கொள்ளாத மாளவிகா..

"கார்த்திக்.. எப்பவுமே நம்ம செஞ்ச செயலுக்குத்தான் நாம பெருமைப் பட்டுக்கனும்.. மத்தவங்க செஞ்சதை நாம செஞ்சதா சொல்லிக்கிட்டு ஹீரோ போல பிலிம் காட்டக் கூடாது.." என்று அவன் முகத்துக்கு நேரேயே சொல்லி விட்டாள்...

'என்ன திமிர்..!' கார்த்திக் அவளிடம் [illegible] பேசிவிடத் துடித்தான்.. அதற்குள் மற்றவர்கள் [illegible] விட்டார்கள்...

"என்ன மாளவிகா.. கார்த்திக்கிட்ட அப்படியென்ன பேசிக்கிட்டு இருக்க..? ரெண்டு பேரும் ரொம்ப நேரமா பேசிக்கிட்டு இருக்கீங்க போல இருக்கே.." சிதம்பரம் கேட்டார்...

"அதுவாப்பா.. சார் செஞ்ச வீரதீரமான செயலை பாராட்டிக்கிட்டு இருக்கேன்.. இல்லையா கார்த்திக்..?" மாளவிகா இகழ்ச்சியாக கேட்டாள்...

கார்த்திக்கிற்கு அந்தச் சூழலில் மூச்சு முட்டியது.. அவன் அங்கிருந்து கிளம்பி விடவேண்டுமென்ற வேகம் காட்டினான்...

"நான் கிளம்பறேன் மாமா..."

"அதுக்குள்ளேயா..? உங்களுக்காக மதுரா விருந்து சமைச்சுக்கிட்டு இருக்கா.. அதைச் சாப்பிடாம கிளம்புவீங்களா..?"

"எதுக்காக விருந்தாம்ப்பா..?"

"என்ன மாளவிகா இப்படிக் கேட்டுட்ட.. கார்த்திக் பண்ணியிருக்கிற காரியத்துக்கு அவருக்கு விருந்து கொடுக்கலைன்னா எப்படி..?"



"ஆமாமாம்.. கொடுக்கனும்தான்.."

மாளவிகாவின் கண்கள் ஏளனத்துடன் பளபளத்தன.. சமையலறையின் உள்ளேயிருந்து வந்த விதம் விதமான வாசனைகள் கார்த்திக்கின் பசியைக் கிளறி விட்டன.. மதுராவின் கை மணத்தைப் பற்றி அவன் நன்கு அறிவான்..

'ம்ஹீம்.. பிரியாணியும்.. கோழி வறுவலும் அத்தை கைப்பக்குவத்திலே தயாராகிக்கிட்டு இருக்கு.. சாப்பிடத்தான் எனக்கு கொடுத்து வைக்கலே..'

மாளவிகாவிற்கு உண்மை தெரியாமல் இருந்திருந்தால் அவன் சாப்பாட்டை ஒரு கை பார்த்திருப்பான்.. அப்படியில்லாமல் அவளுக்கு உண்மை தெரிந்திருந்தது.. அதைச் சொல்லிச் சொல்லி வேறு காண்பித்துக் கொண்டிருந்தாள்.. அவளின் ஏளனப் பார்வையின் முன்னால் அவன் தொண்டையில் ஒரு பிடி பிரியாணி இறங்குமா..?

எங்கே போய் விடப் போகிறது பிரியாணி..? இன்றில்லா விட்டால் இன்னொரு நாள் ஒரு பிடிபிடிக்காமலா போய் விடப் போகிறோம் என்று தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டு அவன் கிளம்பி விட்டான்..

அவன் போன பின்னால் விழுந்து விழுந்து சிரித்தாள் மாளவிகா.. அவள் சிரிப்பு அடங்க வெகு நேரமானது.. வீட்டிலிருந்த மற்றவர்களும் சிரிக்கும் மனநிலையில்

இருந்ததினால் மாளவிகாவுடன் சேர்ந்து சிரித்து முடித்து விட்டு.. சிரிப்பு அடங்கிய பின்பு காரணத்தை வினவினார்கள்..

"சிரிப்பு வந்தது சிரிச்சேன்.." காரணம் சொன்னாள் மாளவிகா...

அவர்கள் அதற்கும் சிரித்தார்கள்.. அன்றைக்கு அவள் ஒரு மார்க்கமாக இருப்பதாக அஸ்வின் கூறினான். ஒரு மார்க்கமான ஆளைப் பார்த்ததினால் வந்த வினை அதுவென்று மாளவிகா சொன்னாள்.. எல்லோரும் கங்காதரனைத்தான் அவள் சொல்கிறாள் என்ற நினைவில் மீண்டும் சிரித்தார்கள்..

வீட்டுக்கே வந்து பூமிகாவின் கையில்.. காலில் விழுந்து கங்காதரன் அவளை அழைத்துக் கொண்டு போன பின்பு.. அவள் தாய் வீட்டிற்கு பிரச்னைகளைச் சுமந்து கொண்டு வரவேயில்லை.. சிறிது நாள்வரை மதுரா பெரிய மகள் எந்த நேரத்தில் கண்ணீரும் கம்பலையுமாக வந்து நிற்பாளோ என்ற பயத்துடன் நாள்களை ஓட்டினாள்.. அப்படி ஏதும் நிகழாததை உணர்ந்தவள் ஆச்சரியப் பட்டுப் போனாள்..

"நிஜமாவே மாப்பிள்ளை திருந்திட்டாராடி..?" மாளவிகாவிடம் கேட்டாள்..

"அப்படித்தான் தோணுது.." என்றாள் மாளவிகா..



கங்காதரன் பூமிகாவை அடித்து அனுப்பி வைக்காததோடு.. சிதம்பரத்திடம் மிரட்டி வாங்கிய பணத்தையும் கொண்டு வந்து கொடுத்தபோது.. சிதம்பரத்தினால் அதை நம்பவே முடியவில்லை..


"வேணாம் மாப்பிள்ளை.. இதை என் மகளுக்காகத் தானே கொடுத்தேன்.." அவர் வாங்க மறுத்தார்...

"இருக்கட்டும் மாமா.. நீங்க செய்து போட்ட நகைகளையும்.. அனுப்பி வைச்ச சீர்வரிசையையுமா திருப்பித் தர்றேன்..? இதையெல்லாம் அடாவடியாத்தானே உங்ககிட்டயிருந்து பிடுங்கினேன்..? இதை நான் வைச்சிருக்கக் கூடாது.. உங்க கிட்டத் திருப்பித் தர்றதுதான் நியாயம்.." கங்காதரன் பிடிவாதமாக அதை அவர் கையில் திணித்து விட்டுத்தான் போனான்..

இவன் எப்போதிருந்து இவ்வளவு நியாயவாதியாக மாறினான் என்று அஸ்வின் ஆச்சரியப்பட்டுப் போனான்.. மருமகன் தங்கம்தான்.. ஊடே கிரகக் கோளாறுகள் நேர்ந்து விட்டதால் ஏதேதோ நடந்துவிட்டது என்று மதுரா சொன்னாள்.. தெய்வங்கள் கண் திறந்து விட்டன என்று சிதம்பரம் உணர்ச்சி வசப்பட்டார்..

மாளவிகாவோ.. இவை அனைத்தையும் சாதித்த தெய்வதூதனான ரமணனை நினைத்து மனதிற்குள் நன்றி சொல்லிக் கொண்டாள்...

# 27



மாளவிகா வேலைக்குப் போக ஆரம்பித்து ஆறுமாதங்கள் ஓடிவிட்டன.. அவளின் சம்பளம் எவ்வளவு என்ற விவரத்தை கார்த்திக் அறிந்து வைத்திருந்தான். அவன் எதிர்பார்த்ததை விட அதிகமான தொகையில் சம்பளம் இருந்ததில் அவனின் முடிவு வலுவானது.. மாளவிகாவின் கம்பெனியில் அவளை வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்கும் சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும்.. அப்படி அவள் போகும் பட்சத்தில் அவளின் சம்பளம் இரண்டு லட்சமாக உயரக்கூடும் என்று அவனுக்கு தகவல்கள் கிடைத்தன..

கோதாவரி கொக்கி போட்ட ஓய்வு பெற்ற நீதிபதியின் மகளுக்கு வேறு இடத்தில் திருமணமாகி விட்டது.. திருமணத்திற்குப் போய் வந்த கோதாவரி.. மணப் பெண்ணிற்கு ஒன்றரைக் கண் என்ற தனது புதிய கண்டுபிடிப்பை அறிவித்தாள்.. அப்படிப்பட்ட மனநிலையில் அவள் இருக்கும் போது மாளவிகாவைப் பற்றிய பேச்சை ஆரம்பிப்பது உசிதம் என்று கணக்கிட்ட கார்த்திக்.. அந்த சுபயோக.. சுபதினத்தில் மாளவிகாவைப் பற்றிய பேச்சை கோதாவரியின் காதில் போட்டு விட்டான்..



"அந்த சிதம்பரம் அப்பிராணியாச்சேடா.." என்றாள் கோதாவரி...

"அப்படியிருந்தாத்தானேம்மா உங்களுக்கு பிடிக்கும்.." என்று வினயமாக எடுத்துச் சொன்னான் கார்த்திக்...

"அந்த அப்பிராணித்தனத்தைச் சொல்லலைடா.. அதெல்லாம் அந்த ஆளுக்கு ஏழைக்குசும்பு ஜாஸ்தி.. வியாக்கினம் பேசவிட்டா விடிய விடிய பேசவாரு.. பணம் காசு அவ்வளவா இல்லாத அப்பிராணின்னு சொன்னேண்டா கார்த்திக்..."

"ஓ.. நீங்க இந்த அப்பிராணித்தனத்தை சொன்னீங்களா..? நான் அந்த அப்பிராணித்தனத்தை சொல்றீங்களோன்னு நினைச்சிட்டேன்..."

"அந்த ஆளுகிட்ட என்ன இருக்கப் போகுது..? நீ சாதாரண உத்தியோகத்தில இருந்தப்பவே அவரோட மூத்த பொண்ணை வேண்டாம்ன்னு சொன்னவங்க நாம.. இப்ப நீ ஐ பி எஸ் ஆபிசர்.. உன் தகுதி என்ன? தரம் என்ன? நீ போய் அந்த ஆளோட ரெண்டாவது மகளைக் கட்டறேன் கறியே..?"

"அம்மா.. அந்த பூமிகா வெத்து வேட்டு..."

"இவ சரவெடியாக்கும்..?"

நீ சொன்னாலும்.. சொல்லாவிட்டாலும் அவள் அப்படித்தான் என்று நினைத்துக் கொண்டான் கார்த்திக்...

..இனியார்..."

மகன் சொல்வதிலும் ஓர் அர்த்தம் இருப்பதை அப்போதுதான் புரிந்து கொண்டாள் கோதாவரி...

"ஓ.. நீ அப்படி வர்றியா..?"

"ஆமாம்மா.. ஆமாம்.. அவ படிப்பை முடிச்சவுடனே வேலை அவளுக்காக காத்திருந்துச்சுன்னா அவ எவ்வளவு பெரிய கெட்டிக்காரின்னு நினைச்சுப் பாருங்களேன்.."

"வேலையும் பார்க்கிறாளா..?"

"மல்ட்டி இன்டர் நேசனல் கம்பெனியில வேலை.. சம்பளம் எவ்வளவு தெரியுமா..?"

கார்த்திக் சொன்ன தொகையைக் கேட்ட கோதாவரி ஆச்சரியப்பட்டுப் போனாள்..

"நிஜமாவாடா கார்த்தி சொல்ற..?"

"ஆமாம்மா.. ஆமாம்.. அவ வெளிநாட்டுக்குப் போனா.. சம்பளம் லட்சக் கணக்கில கிடைக்குமாம்.. யோசிங்கம்மா.. இவ தங்க முட்டை போடற வாத்து.. சீர்வரிசை.. சீதனம்ன்னு நாம பேரம் பேசினா ஒரே ஒரு தடவைதான் அது கிடைக்கும்.. இது.. காலமெல்லாம் நமக்கு கிடைச்சுக்கிட்டே இருக்கும்.."

கார்த்திக் சொன்னதை யோசித்துப் பார்த்த கோதாவரிக்கு.. அவன் சொல்வது சரியென்று பட்டு



விட்டது.. அவள் மகனுக்காக மாளவிகாவைப் பெண் கேட்கும் முடிவை எடுத்து விட்டாள்.. அதை கணவரிடம் அறிவித்தும் விட்டாள்.. மனைவி கிழித்த கோட்டை தாண்டியறியாத தண்டபாணியும் அதற்கு தலையைத் தலையை ஆட்டி சம்மதித்து விட்டார்...

சிதம்பரத்திற்கு தகவல் போன போது.. அவரால் அதை நம்ப முடியவில்லை..

"கேட்டியா மதுரா.. நம்ம மாளவிகாவுக்கு ஐ பி எஸ் மாப்பிள்ளை கிடைச்சிருக்கார்.." என்று மகிழ்ந்து போனாள்..

"ஆமாங்க.. கொஞ்ச நாளா நம்ம வீட்டிலே நல்லதாவே நடக்குது..."

"கோதாவரி வீட்டிலே சம்பந்தம்ன்னு சொன்னா நம்ம உறவு ஜனமெல்லாம் அசந்து போயிருவாங்க..."

"அதைத்தான் நானும் நினைச்சேன்..."

அஸ்வினிடம் விவரம் போனபோது அவன்..

"சாப்ட்வேர் என்ஜினியரா இருந்தால் தேவலைன்னு தோணுதுப்பா.. இருந்தாலும்.. பரவாயில்லை.." என்று சொன்னான்..

கடைசியாக மாளவிகாவின் செவிகளை விவரம் எட்டியபோது அவள் துடித்துப் போய்விட்டாள்..

ஒரு நாளை சந்திக்க நேரிடும் என்பதை அவள் அறிவாள் தான்.. இத்தனை சீக்கிரமாக சந்திக்க நேரிடும் என்பதை அறியவில்லை..

அவளும் ரமணனும் தினமும் போனில் மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருந்தார்கள்.. வார இறுதி நாள்களில் தவறாமல் சந்தித்துக் கொண்டிருந்தார்கள்.. ரமணன் அவளிடம் தன் காதலைக் கூறிக் கொண்டேயிருந்தான்.. மாளவிகா அதை ஏற்கவில்லை யென்றாலும்.. மறுக்கவும் இல்லை.. அவளின் மனநிலையை அறிந்திருந்ததைப் போல ரமணனும் அவளை வற்புறுத்தவில்லை...

அவனுக்கும்.. அவளுக்குமான பேச்சுக்களில் ஒரு நாள் கூட அவன் திருமணத்திற்கு வற்புறுத்தியதில்லை...

தனிப்பட்ட ஓர் உலகை சிருஷ்டித்துக் கொண்டு அதில் ரமணனுடன் இனிமையாக பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தவளின் முன்னால் நிஜம் வந்து நின்று அச்சுறுத்தியது...

“அப்பா.. நான் கல்யாணத்தைப் பத்தி யோசிக்கவே இல்ல..” பதட்டத்துடன் சொன்னாள் மாளவிகா..

“இனிமே யோசிம்மா...”

“எனக்கு இப்போ கல்யாணம் வேண்டாம்ப்பா...”

“ஏன்..?”



அந்தக் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியாதவளாகத் திணறிப் போனாள் மாளவிகா..

நான் ஒருவனைக் காதலிக்கிறேன்.. அவன் ஊரறிந்த ரௌடி... என்று அவளால் எப்படி அந்த அப்பாவி தந்தையிடம் சொல்ல முடியும்...?

'கடவுளே..' மாளவிகா பரிதவித்தாள்.. எதையாவது சொல்ல வேண்டுமே என்பதற்காக...

"அஸ்வினின் படிப்பு முடியட்டும்ப்பா.." என்று சொல்லி விட்டாள்..

ஆனால்.. அதற்கான எதிரொலிதான் அவளுக்கு கிடைக்கவில்லை...

"த்ச்சு.. த்ச்சு.." என்று பல்லியைக் கூப்பிட்டான் அஸ்வின்...

“ஏண்டா..?” பரிதாபமாகக் கேட்டாள் மாளவிகா...

“நீ தியாகச் செம்மலாக்கும்..? சும்மா கருப்பு வெள்ளை சினிமா ஹீரோயினைப் போலப் பேசி கடுப்படிக்காம காகாலகாலத்திலே கல்யாணம் பண்ணிக் கிட்டுப் போய் சேரு.. எனக்கு ஒருவருசப் படிப்புதான் பாக்கியிருக்கு.. அதை அப்பா பார்த்துக்குவார்.. என்னவோ ஆறுமாசம் சம்பளம் வாங்கினதுக்கே இந்த அலட்டு அலட்டறயே... அதுக்கு முதலில் உன்னையும் சேர்த்து அப்பாதான் படிக்க வைச்சார்.. ஞாபகத்தில் வைச்சுக்க..”

அவளின் காரணத்தை பொடிப் பொடியாக்கி விட்டுப் போய் விட்டான் அஸ்வின்.. வேறு எந்தக் காரணத்தைச் சொல்லித் தப்பிப்பது என்ற யோசனையில் ஆழ்ந்தாள் மாளவிகா...

## 28



"அப்பா.."

"என்னம்மா..."

"நம்ம பூமிகா வாழற வாழ்க்கையைப் பார்த்ததில இருந்து எனக்கு கல்யாணம்ன்னாலே அலர்ஜியாகிருச்சுப்பா..."

அடுத்த காரணத்தைக் கண்டுபிடித்தாள் மாளவிகா..

"அவளுக் கென்னம்மா.. ராணியைப் போல இருக்காளே.. மாப்பிள்ளை ஆரம்பத்தில அப்படி.. இப்படி இருந்தாலும் இப்ப மனசு மாறி பூமிகாவை தாங்கு.. தாங்குன்னு தாங்கறாரே.. இதைச் செய்ய வைத்தது யாரும்மா..?"

'ரமணன்...'



"அந்த நல்ல மனுசனுக்கு வாழ்க்கைப்பட உனக்கு வாய்ப்பு கிடைச்சிருக்கப்ப கண்டதையும் நினைச்சு மனசை குழப்பிக்கலாமா..?"

'அப்படியா..? நான் ரமணனைக் கல்யாணம் பண்ணிக்கவா..?'

"கார்த்திக் மட்டும் இல்லைன்னா பூமிகாவோட புருசன் திருந்தியிருப்பாரா..?"

'ஐயோ அப்பா.. அவனைத் திருத்தினது இந்த பொய் சொல்லியில்லை.. ரமணன்..'

"கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு முன்னாலேயே நம்ம குடும்பத்து மேலே இத்தனை அக்கறையும்.. பரிவும்.. பாசமுமா இருக்கிறவர் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட பின்னாலே எப்படியெல்லாம் இருப்பார்..?"

'கடைஞ்செடுத்த அயோக்கியனா இருப்பான்.. இவனுக்கு பூமிகாவோட புருசனே தேவலைன்னு நினைக்க வைச்சிருவான்...'

"இவரைப் போல நல்லவங்க பூமியிலே இருக்கிறதாலே தான் கொஞ்சமாவது மழை பெய்யுது..."

'இவன் வில்லாதி வில்லன்ப்பா.. அது தெரியாம பேசறிங்களே..'

"போம்மா.. போய் மனதைக் குழப்பிக்காம தயாராகு.."

"எதுக்குப்பா..?" அதுவரை தகப்பன் பேசியதற் கெல்லாம் மனதுக்குள் பதிலளித்துக் கொண்டிருந்த மாளவிகா கேட்டாள்..

"என்னம்மா இப்படிக் கேட்டுட்ட.. உனக்கு விசயமே தெரியாதா..?"

"என்ன விசயம்..?"

"இன்னும் கொஞ்ச நேரத்தில.. கார்த்திக் பெத்தவங் களோட முறைப்படி உன்னைப் பெண் கேட்டு வரப் போகிறாரும்மா..."

"அப்பா..."

மாளவிகாவின் திகைப்பை கவனிக்காமல் வீட்டை ஒழுங்கு பண்ணக் கிளம்பி விட்டார் சிதம்பரம்.. சமையலறையில் விதம்.. விதமான பதார்த்தங்களை செய்து தள்ளி கொண்டிருந்த மதுரா.. ஊடே கிடைத்த நேரத்தில் மகளை அதட்டி உடை மாற்றிக் கொள்ள வைத்து.. ஒப்பனை செய்து விட்டாள்.. .

'அந்த கார்த்திக் சும்மாவே என்கிட்ட கெத்து காட்டுவான் இப்ப பெண் பார்க்கன்னு வந்தா என்ன திமிர் காட்டப் போறானோ...' மாளவிகா தலையில் கை வைத்துக் கொண்டாள்..

அவள் நினைத்தபடிதான் நடந்தது.. கார்த்திக் தோரணையாய் கால் மேல் கால் போட்டுக் கொண்டு



அமர்ந்து மாளவிகா அத்தனை நாள்களாய் அவனைப் பார்த்த இகழ்ச்சிப் பார்வையை அவளை நோக்கி பார்த்து வைத்தான்.. அவனைப் பெற்ற கோதாவரியோ மதுராவை 'எனக்கு நீ இணையா..?' என்று கேட்கும் பார்வையை பார்த்து வைத்தாள்.. இவை எதையும் செய்யாமல் பொம்மை போல வந்து அமர்ந்தது தண்டபாணி மட்டும்தான்..

சம்பிரதாய பேச்சு வார்த்தைகள் தேவையில்லாத சொந்தக்காரர்களாக அவர்கள் இருந்து விட்டதினால் ஒருவரையொருவர் நலம் விசாரித்துக் கொண்டார்கள்.. மாளவிகாவை அழைத்தபோது வர மாட்டேன் என்று சொல்ல முடியாமல் அவளும் அவர்களுடன் சேர்ந்து அமர்ந்து பேசி வைத்தாள்..

"வளர்ந்துட்டா.." மகனைப் பார்த்துச் சொன்னாள் கோதாவரி...

"யெஸ்.." என்ற கார்த்திக்கின் பார்வை.. உரிமையுடன் மாளவிகாவை உச்சிமுதல்.. உள்ளங்கால் வரை மேய்ந்தது..

அத்தனை நாள்களாக கடைபிடித்து வந்த நல்லவன் வேடத்தை கடைபிடிக்க வேண்டிய அவசியமில்லாத அவனின் அந்த துச்சாதனப் பார்வையில் அருவெறுத்து விட்டாள் மாளவிகா...

"சின்னப் பிள்ளையில பார்த்தது.." என்ற கோதாவரியிடம்...

"இல்லையே.. ஊடே ஒருநாள் கோவிலில் உங்களைப் பார்த்தேனே..." என்று கேட்டு கடுப்படித்தாள் மாளவிகா..

'திமிர்..' தாயும்.. மகனும் ஒன்று போல நினைத்தவர்களாய் பல்லைக் கடித்தனர்..

கோதாவரி அதைக் கண்டு கொள்வேனா என்று இயல்பாக முகத்தை வைத்துக் கொண்டு பேச்சை தொடர்ந்தாள்..

"அப்பறம் அண்ணா.. என் தங்கை வீட்டிலே பெண்ணெடுத்துத்தான் ஆகனுமுன்னு இவர் கட்டாயப் படுத்திட்டாரு.. நம்ம கார்த்திக்கோ ஐ பி எஸ் ஆபிசர்.. எங்க தகுதிக்கும்.. கார்த்திக்கோட பதவிக்கும்.. உங்க வீட்டிலே சம்பந்தம் பண்றது சரிவராதுதான்.. என்ன செய்யறது..? கார்த்திக்கோட அப்பாதான் பாசமழையை கொட்டறாரே.. சரி.. அவரோட ஆசையைக் கெடுப்பானேன்னு அவரு தங்கச்சி மகளைப் பெண் கேட்டு வந்திருக்கோம்..."

"அதுக்கென்னம்மா.. கார்த்திக்கிற்கு மாளவிகாவைக் கொடுக்க நான் கொடுத்தில்ல வைச்சிருக்கனும்..?"

"தெரிஞ்சா சரி.. இவனுக்கு ஜட்ஜ் வீட்டிலே தான் பெண் எடுக்கிறதா இருந்தோம்... அந்தப் பொண்ணு வீட்டுக்கு ஒரே வாரிசு.. அவருக்கு சென்னையிலேயே நாலு பங்களா இருக்கு..."



"நாங்களும் மாளவிகாவை வெறும் கழுத்தா அனுப்ப மாட்டோம்.. சீர் வரிசையை குறைக்க மாட்டோம்..."

"கல்யாணத்துக்கான தாலியையும்.. முகூர்த்தப் புடவையையும் நாங்க எடுத்துருவோம்.. கல்யாணத்தை நீங்க நடத்தி வச்சிரனும்..."

மறுக்க முடியாத சிதம்பரம் ஐபிஎஸ் மாப்பிள்ளையின் மீதிருந்த மோகத்தினால் அதை ஒப்புக் கொண்டார்..

"பொண்ணு வேலைக்குப் போகிறா.. சரி.. கல்யாணத்துக்கு அப்புறம் இவ எங்க வீட்டுப் பொண்ணா ஆகிருவா.."

"நிஜம்தானேம்மா..."

"அதுக்கப்புறமா பிறந்த வீட்டுக்கு அதைச் செஞ்சேன்.. இதைச் செஞ்சேன்னு ஆரம்பிச்சா நல்லாயிருக்காது அண்ணா.. எதையும் தெளிவா முன்னால பேசிடறது நல்லதில்லையா...?"

"மாளவிகாவோட கையை எதிர்பார்த்து இந்தக் குடும்பம் இல்லைம்மா..."

"அப்புறம்.. இன்னொரு விசயம்.. எங்க வீட்டிலே ஆம்பளைகளுக்கு கட்டுப்பட்டுத்தான் பொம்பளைக இருக்கனுமுன்னு நினைப்போம்..."

அதுவரை கணவனை வாய் திறக்க விடாமல் பேசிக் கொண்டிருந்த கோதாவரி இப்படிச் சொன்னதும்..

அப்பாவியான சிதம்பரத்துக்கே சிரிப்பு வந்து விட்டது.. மகளின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு சிரிப்பை அடக்கிக் கொண்டார்.. அதற்கு அவசியமில்லாத அளவில் வாய் விட்டுச் சிரித்து வைக்க.. மதுரா.. சமையலறைக்குச் சிரிப்பதற்காகவே சென்று விட்டு வந்தாள்..

"எங்க வீட்டிலேயும் அப்படித்தான்ம்மா..."

"எதுக்குச் சொல்றேன்னா.. கல்யாணத்துக்கு அப்புறமா.. அவளோட சம்பள கவரை புள்ளி விவரத்தோட கார்த்திக் கையில கொடுத்துரனும்.. இதை கட் அண்ட் ரைட்டா மனசில பதிய வைச்சுக்கங்க..."

"இப்ப என்கிட்ட கொடுக்கிற கவரை கல்யாணத்துக்கு அப்புறமா மாப்பிள்ளை கையில கொடுக்கப் போறா.. அவ்வளவுதானே..."

அவ்வளவுதானா என்று துயரத்துடன் நினைத்துக் கொண்டாள் மாளவிகா.. அவள் சம்பள கவரை பெற்றவரின் கையில் கொடுத்தது அவளைப் பெற்று வளர்த்து.. படிக்க வைத்து ஆளாக்கியவரின் நன்றிக்கடனை கழிப்பதற்காக.. அதை கார்த்திக்கிடம் கொடுக்க வேண்டியது எந்தக் கடனைக் கழிப்பதற்காக..?



## 29



அந்த வார இறுதியில் அவளைச் சந்தித்த ரமணனின் முகம் இறுகியிருந்தது.. கடலோரமாக அமைந்திருந்த அந்த ரெஸ்ட்டாரெண்டின் மேல் மாடியில்.. திறந்த வெளியில்.. கடலைப் பார்த்தபடி போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்து மாளவிகாவை அவன் வெறித்துக் கொண்டிருந்தான்...

ஒரு பெருமூச்சுடன் பார்வையைத் திருப்பிய மாளவிகா அப்போதுதான் அவனுடைய கூர்மையான பார்வையை சந்தித்தாள்.. அதில் வழக்கமான சிரிப்பில்லை.. மாறாக.. ஓர் கடினம் தெரிந்தது..

"என்னாச்சு ரமணன்..?"

"ஏன் சொல்லலை..?"

"எதை.."

"உனக்கு அந்த கார்த்திக்கோட கல்யாணம் நிச்சயமாகியிருக்கிற விவரத்தை..."

அழுத்தமாக அவனின் வார்த்தைகள் வெளி வந்து விழுந்தன..

...தெரியும்..?' அபத்த...
நினைத்துவிட்டு மானசீகமாக தலையில் குட்டி...
கொண்டாள் மாளவிகா..

'இவனுக்கு தெரியாம இருந்தாத்தான் ஆச்சரியம்..'
குற்ற உணர்வுடன் தலை குனிந்து கொண்டாள்..

"நான் எதிர்பார்க்கல..."

"அவன் உன் சொந்தக்காரன்தானே.. இந்த என்னைத்...
தோட அவன் இருக்கிறான்ங்கிறதை ஏன் நீ முன்னாடியே...
என்னிடம் சொல்லலை..."

"அவன் மனசில இப்படியொரு எண்ணம்...
இருக்கும்ன்னு நான் நினைச்சே பார்க்கலை.. ஆரம்பத்தில...
அவன் ஒரு பிரைவேட் கம்பெனியிலதான் வேலை
பார்த்தான்..."

"சென்னையிலயா..?"

"ஊஹீம்.. சேலத்திலு இருந்தான்.. பூமிகாவை
அவனுக்கு கொடுக்கனும்னு எங்க வீட்டிலே கேட்டாங்க..
அவங்க வீட்டிலே எக்கச்சக்கமா சீர்வரிசை கேட்டாங்க..
எங்க அப்பாவாலே அதைச் செய்ய முடியலை.. பூமிகாவை
வேற இடத்திலே கல்யாணம் பண்ணிக் கொடுத்திட்டாரு..
இவன் அப்பவே கோச்சிங் கிளாஸீக்கு எல்லாம் போவான்..
விடாம பரிட்சை எழுதி ஐ பி எஸ் ஆகிட்டான்.. இப்பத்தான்
சென்னைக்கு வந்திருக்கான்.."



"ம்ம்ம்..."

"வீட்டுக்கு வரப் போக இருப்பான்.. மத்தபடி என்னைக் கல்யாணம் பண்ணிக்கனும்னு அவன சொன்னதும் இல்லை.. நான் அதைப் பத்தி நினைச்சே பார்த்ததில்லை.. அவனோட வீட்டில பெரிய இடமாத்தான் தேடிக்கிட்டு இருந்தாங்க.."

"அப்புறம் எப்படி இது நடந்துச்சு..? காதலா..?" ரமணன் ஒரு மாதிரியான குரலில் வினவினான்..

"காதலுக்கும்.. அவனுக்கும் காத தூரம்.." வெறுப்புடன் சொன்னாள் மாளவிகா...

"வேற என்ன...?"

"என் வேலை.." பெருமூச்சுடன் சொன்னாள் மாளவிகா...

"ஓ..." ரமணனின் புருவங்கள் முடிச்சிட்டன..

"அதிகமான சம்பளம்.. என்னதான் பெரிய இடத்தில பெண் எடுத்தாலும்.. வாழ்நாளில் நான் சம்பாதித்துக் கொடுக்கப் போகிற பணத்தை விடக் குறைவாத்தான் கொடுக்கப் போகிறான்னு அவங்க மனக் கணக்கு போட்டுட்டாங்க..."

"ம்ம்ம்.." யோசித்தான் ரமணன்...

"நான் இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்கலை.. அவங்க திடிர்ன்னு வந்து உட்கார்ந்து பேசிட்டுப்

போயிட்டாங்க.. என்னால அவனைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறோம்ன்னு நினைச்சுக் கூடப் பார்க்க முடியல.. நானே பித்துப் பிடிச்சுப் போய் உட்கார்ந்திருக்கேன்.."

"எதுக்காக..?" கூர்மையாக கேட்டான் ரமணன்..

"இந்தக் கல்யாணத்தில இருந்து எப்படி தப்பிக்கிறதுன்னுதான்.."

"ஓ.. உனக்கு அவனைப் பிடிக்காதில்ல..?"

"இதென்ன கேள்வி ரமணன்.. அது உங்களுக்குத் தெரியுமே..."

"ஒருவேளை.. இவனை உனக்குப் பிடிச்சிருந்தா நீ என்ன செய்திருப்ப..?" கத்தி முனையின் கூர்மையோடு ரமணனின் வார்த்தைகள் வந்து விழுந்தன...

"ரமணன்.." திகைத்துப் போய் விட்டாள் மாளவிகா..

"சொல்லு.." நிதானமாக கேட்டான் ரமணன்...

அவள் என்ன சொல்லுவாள்..? எதைத்தான் சொல்ல முடியும்...? இவனைப் பிடிக்காது என்பதினால் இந்தத் திருமணத்தை தவிர்க்க நினைக்கிறாய்... அப்படியில்லாமல் இருந்திருந்தால் நீ என்ன செய்திருப்பாய் என்ற கேள்விக்கு பதில் அவளிடம் இல்லையே...



'கேள்வியின் நாயகனே...
இந்தக் கேள்விக்குப்
பதில் ஏதய்யா..?'

மனதுக்குள் பாடல் ஒலித்து.. மாளவிகா மௌனப் போராட்டத்துடன் தலைகுனிந்தாள்.. அவள் எதிர் கொள்ள வேண்டிய இந்தத் தருணத்தில் எப்படிப் பேசுவது என்பதை அவள் யோசித்து வைத்திராததால் வார்த்தைகள் வலுவிழந்து வெளிவராமல் வாய்க்குள்ளேயே புதைந்து போயின...

"அப்ப கல்யாணத்துக்கு சம்மதிச்சிருப்ப.. இல்லையா..?" ரமணன் அழுத்தமாக கேட்டான்..

"ரமணன்.." மாளவிகாவின் விழிகள் கண்ணீரில் பளபளத்தன..

"ஒரு வாரம்..! ஒரு வாரமா.. இதைப் பத்தி என்னிடம் பேசாம நீ இருந்திருக்க.. வேலை செய்கிற இடத்தில உன் பிரண்ட்ஸ் கிட்ட புலம்பியிருக்க.. உன் கூடப் படிச்ச ஹாசினியைத் தேடிப் போய் அழுதிருக்க.. ஆனா.. என் கிட்ட.. ஒரு வார்த்தை. ஒரேயொரு வார்த்தை கூட இதைப் பத்திச் சொல்லணுமுன்னு உனக்குத் தோணலை ஏன்..?"

அனைத்தையும் அறிந்தவனாக அவன் கேட்டான்.. அவள் திகைத்தாள்.. ரமணன் அவளைக் கண்காணிப்பதை அவள் அறிவாள்.. இந்த அளவுக்கு கண்காணிப்பான் என்று அவள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை...

ஏன்னா.. உன்னைப் பொருத்தவரை நான் இதில் சம்பந்தப்படாதவன்.. இல்லையா...?"

"ரமணன்.."

"உனக்கும்.. எனக்கும் சம்பந்தமிருக்குன்னு நீ நினைச்சிருந்தா முதலில் என்னிடமில்ல இதை நீ சொல்லியிருக்கனும்..?"

"ரமணன்.."

"அப்படி நீ சொல்லாதப்பவே உன் மனநிலை என்னவா இருக்கும்ன்னு எனக்குத் தெரிஞ்சு போச்சு மாளவிகா..."

'மாலு' என்று அவன் அழைக்கவில்லை என்பதை துக்கத்துடன் உணர்ந்தாள் மாளவிகா.. அவன் முகத்தில் ரௌத்திரம் வந்திருந்தது...

"உன் அக்கா புருசன் உன் குடும்பத்தை ஆட்டி வைக்கிறான்.. உன் அக்காவை கொடுமை பண்றான்னு என்கிட்ட ஓடி வந்தியே.. அது என்மேல உனக்கிருக்கிற உரிமையாலேன்னு நான் தப்புக்கணக்கு போட்டுட்டேண்டி.. அப்படியில்லடா மடையா.. நீ ரௌடி.. அடி உதைக்கு உன்னைத்தாண்டா தேடிவரனும்னு நீ அடியாளா என்னை நினைச்சிருந்தேன்னு எனக்கு அப்ப தெரியாமப் போச்சுடி.." கண்கள் சிவந்தான் ரமணன்..



அதுவரை அவளை அவன் 'வாடி.. போடி..' என்று அழைத்ததில்லை.. முதன் முறையாக அதை உணர்ந்தவளின் முகம் பயத்தில் வெளுத்தது.. அதுவரை அவள் காணாத அவனின் முரட்டுத்தனமான மறுபக்கத்தில் அவள் அதிர்ந்து விட்டாள்..

"உனக்கு ஒரு துன்பம்ன்னா உதவிக்கு நான் ஓடிவரனும்.. அப்ப நான் ரௌடிங்கிறது உனக்குத் தெரியாது.. ஆனா.. கல்யாணம்ன்னு வந்தா மட்டும் இந்த ரௌடி உனக்கு வேணாம்.. சொஸைட்டியில மதிப்பான வொயிட் காலர் அயோக்கியன்தான் உனக்கு வேணும்.. என்ன நியாயம்டி இது..?"

"வேணாம் ரமணன்..."

"வேணாம்ன்னு நீ சொன்னா உன்னை விட்டிருவேனா..? நீ யூஸ் பண்ணிக்கிட்டு கருவேப்பிலையாய் தூக்கி எறிய நான் ஏமாந்த சோணகிரி இல்லைடி.. ரமணன்..!"

"இப்ப நீங்க கோபமாய் இருக்கீங்க.. அப்புறமாய் இதைப் பத்தி நாம பேசலாம்..."

மாளவிகா எழுந்து கொள்ள முயன்றபோது.. ரமணன் முரட்டுத்தனமாக அவளின் கையைப் பற்றி இழுத்து உட்கார வைத்தான்..

"ஏய்ய்.. அடங்கி உட்காருடி..."

# 30



முதல் முறையாக அவள் கை தொட்டு அவன் இழுத்ததில் உடலில் மின்சாரம் பாய்ந்ததைப் போன்ற உணர்வை உணர்ந்தாள் மாளவிகா.. அதுவரை அதுபோன்ற நூதன உணர்வுகளை அவள் உணர்ந்ததில்லை.. ஆண்களிடம் எட்டி நின்று பேசும் சூழ்நிலையில் அவள் வளரவில்லை.. கூடப் படித்த நண்பர்களைத் தொட்டுப் பேசும் பழக்கமுள்ளவள்தான் அவள்.. அவளின் நட்பு வட்டாரத்தில்.. ஆணும்.. பெண்ணும் சரிசமமான எண்ணிக்கையில் இருப்பார்கள்...

அவர்களைத் தொட்டுப் பேசும் போது.. சக மனித ஜீவனிடம் பேசிக் கொண்டிருக்கும் உணர்வுதான் அவளுக்கு வரும்.. ஒரு ஆணிடம் தொட்டுப் பேசிக் கொண்டிருக்கும் உணர்வு அவளுக்குள் வந்ததில்லை.. அவர்களில் யாரின் தொடுகையும் பெண்ணென்று அவளை உணர வைத்ததில்லை...

அன்று அவளைப் பெண்ணென்று உணர வைத்தான் ரமணன்.. அவனின் இறுக்கமான பிடியில் வலித்த அவளின் கை.. இதமான இம்சையை அவள் மனதுக்கு உணர்த்தியது...



"இது வரை
இல்லாத உணர்விது..
இதயத்தில் உண்டான அதிர்விது.."

ரெஸ்டாரெண்டின் மூலையில் ஒலித்துக் கொண்டிருந்த பாடல் அவள் மனதை படம் பிடித்துக் காட்டியது..

ரமணனின் இறுக்கமான பிடியிலிருந்து விடுபட முடியாதவளாய் அவள் உட்கார்ந்தாள்..

"உன் மனசில என்னடி நினைச்சுக்கிட்டு இருக்கிற..? நான் உன்னைக் காதலிக்கிறேன்னு உனக்குத் தெரியுமா.. தெரியாதா..?"

"தெரியும்.."

"அப்புறமும் ஏண்டி நீ கல்யாணத்தைப் பத்தி என்கிட்டப் பேசலை..."

"ரமணன்.. நீங்க உங்க பக்கத்தையே பேசறிங்க.. என்பக்கமும் கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க..."

"என்னத்தைடி யோசிக்கச் சொல்ற..?"

"என் குடும்பம் மிடில் கிளாஸ் குடும்பம்.. நான் தனி மனுஷியில்லை.. என் கூடப் பிறந்தவங்க.. பெத்தவங்க.. இவங்களையும் நான் பார்க்கனும்.. உங்களைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு இவங்ககிட்ட நான் சொல்ல முடியுமா..?" மாளவிகா கேட்டு விட்டாள்...

ரமணன் அவளைப் பார்த்த பார்வையை ஆயுளுக்கும் மறக்க முடியாது என மாளவிகா துயரம் கொண்டாள்..

அடிபட்ட பறவையின் ஆக்ரோசத்தை அந்தப் பார்வையில் அவள் கண்டாள்.. அவனுடைய ரௌத்திரம் அதிகரித்தது...

"ஆமாண்டி.. என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு உன்னால சொல்ல முடியாதுதான்.. கட்டின பெண்டாட்டின்னு பாக்காம.. பேடித்தனமா பொம்பளையை அடிச்சு.. மண்டையை உடைச்சு.. பணம் கேட்டு துரத்தி விட்டானே உன் அக்கா புருசன் சங்காதரன்.. அவனைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன்னு உன் அக்கா சொல்லலாம்.. என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன்னு நீ சொல்லிர முடியாது தான்.. இல்லையா..?"

அவன் கேள்வியில் தாக்கப்பட்டாள் மாளவிகா..

"ஆக்சுவலா.. அவன் மேல கொலை முயற்சி.. பிளாக் மெயில்ன்னு.. ஆயிரம் கம்ப்ளெயிண்ட்களா கொடுக்கலாம்.. ஆனா நீங்க அதைச் செய்ய மாட்டிங்க.. ஏன்னா.. இந்த சொஸைட்டியிலே அவன் மேல ரௌடின்னு முத்திரை குத்தி வைக்கலியே.. அதையெல்லாம் செய்யாம.. கொலைகாரன்களைத் துரத்திக் கொண்ட என்மேலதானே அந்த முத்திரை குத்தப் பட்டிருக்கு..?"



அவனின் வார்த்தைகளில் வெளிப்பட்ட மனவேதனையை தாங்க முடியாதவளாக கண்மூடிக் கொண்டாள் மாளவிகா...

"ஏய்ய்.. இந்த சொஸைட்டியில நல்லவன்னு முத்திரை குத்தப் பட்டிருக்க ஒவ்வொருத்தனோட பொய் முகத்துக்குப் பின்னாலே ஒரு அயோக்கிய முகம் ஒளிஞ்சிருக்குடி.. அது உனக்குத் தெரியாது.. எனக்குத் தெரியும்.. நான் ரௌடியாகனும்னு ஆசைப்பட்டா ரௌடியானேன்..? உனக்கு கிடைச்சதைப் போல நல்ல தகப்பன் எனக்குக் கிடைக்கலியே.. உங்க அம்மா உன் பக்கத்திலேயே இருந்து பார்த்துக்கிறாங்க.. எனக்கு அந்தக் குடுப்பினை இல்லையே.."

அவனின் வார்த்தைகளில் துடித்துப் போனாள் மாளவிகா...

'உன் கண்ணில் நீர்வழிந்தால்..
என் நெஞ்சில்..
உதிரம் கொட்டுதடி...'

என்று ஆண்தான் சொல்ல வேண்டுமா.. பெண் அதைச் சொல்லக் கூடாதா...?

'என் கண்ணில் பாவையன்றோ..
கண்ணப்பா...
என்னுயிர் நின்னதன்றோ...'

என்று அவன் சாய்ந்து கொள்ள தோள் கொடுக்க கூடாதா...?

அவள் கொடுக்கத்தான் நினைத்தாள்.. தாயின் மடியாய் தன் மடியைக் கொடுத்து அவனைத் தாங்கிக் கொள்ளத்தான் நினைத்தாள்.. உனக்காக நான் இருக்கிறேன் என்று தேற்றத்தான் நினைத்தாள்.. உன்னோடு வாழாத வாழ்வென்ன வாழ்வு என்று கேட்கத்தான் நினைத்தாள்..

நினைப்பதையெல்லாம் சொல்ல முடியும் வரம் இந்த மனித ஜீவன்களுக்கு வாய்க்கவில்லையே...

அந்த வரம் கிடைக்காத மாளவிகாவும் துக்கத்துடன் தன் நினைவை ரமணனிடம் சொல்ல முடியாமல் மனதுக்குள்ளேயே புதைத்தாள்...

"ஓடிப்போன தகப்பன்.. செத்துப் போன அம்மா.. இவங்களுக்கு பிள்ளையாய் பிறந்தவன் ஒண்ட இடம் கிடைச்சா.. அது முள் மரமா இருந்தாலும் அதை ஆலமர நிழலாத்தான நினைப்பான்..? நானும் அப்படித்தாண்டி நினைச்சேன்..."

ரமணன் அழவில்லை.. அவன் கண்களில் கண்ணீரின் சாயல் துளிக்கூட இல்லை.. ஆனால் அவனின் வார்த்தைகள் துயரத்தில் தோய்ந்து வெளிவந்தன..

"ஓடி போன என் தகப்பன்.. ஊருக்கு முன்னாலே உத்தமனாத்தான் வேசம் போட்டான்.. ஒதுக்கப்பட்ட



மகனா நான் தெருவில் நின்னப்ப ஆதரவு கொடுத்த அண்ணாச்சியை இந்த ஊரும்.. உலகமும்.. அயோக்கியன்னுதான் சொல்லுச்சு.. ஆனா.. கடவுளுக்குத் தெரியும்டி.. நல்லவன் யாரு... கெட்டவன் யாருன்னு..."

ரமணனிடமிருந்து தீக்கங்குகளாய் தெறிந்து விழுந்த வார்த்தைகள்... அவனின் அவலத்தை வெளிப்படுத்தின...

"அண்ணாச்சி மனுசன்டி.. அண்டி வந்தவருக்கு நிழல் கொடுத்த ஆலமரம்.. அவர் செய்த வேலை தப்பாயிருக்கலாம்.. அவர் தப்பான மனுசனில்ல.. அனாதையா தெருவில நின்ன சின்னப் பையனை தத்தெடுத்துக்கனும்னு எந்த மனுசனுக்குடி தோணும்..? நீ சொல்றியே.. இந்த வொயிட் காலர் உத்தமன்கள்.. அவனுகளில யாராவது ஒரு ஆளுக்கு அது தோணுமா..? அவருக்கு தோணுச்சேடி.. அவர்தான் மனுசன்டி.."

மாளவிகா உதட்டைக் கடித்துக் கொண்டு தலை குனிந்தாள்.. ரமணனின் கேள்விக் கணைகளுக்கான பதில் அவளிடத்தில் இல்லை..

"அவரை ரௌடின்னு இந்த உலகம் சொல்லுச்சு.. அவர் வளர்த்த எனக்கும் அந்தப் பெயர் வந்திரக்கூடாதுன்னு அவர் அரும்பாடு பட்டாருடி.. அவரோட நிழலில்தான் வளர்ந்தேன்.. ஆனா.. என்னை படிக்க வைச்சு.. வேலை பார்க்கிறதுக்கான தகுதியைக் கொடுத்து.. உயரத்தில உட்கார வைச்சார்.. என்ன செஞ்சு என்ன பண்ண..? ந்ச்சு..

நீ கேட்டியே ஒரு கேள்வி.. உன்னை மாப்பிள்ளையென்று என் வீட்டுக்கு எப்படி அடையாளம் காட்ட முடியுமென்று இந்த ஜென்மத்துக்கும் அந்த ஒரு கேள்வி போதுமடி.. மறக்க முடியாதுடி.."

ஏன் இந்த ஜென்மத்தை எடுத்தோமென்று அந்த நொடியில் வெறுத்துப் போனாள் மாளவிகா.. அப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லி காதலித்தவனின் மனதை சல்லடையாக்கி விட்ட துக்கத்தில் நொந்து போனாள்...

## 31



பேசியது போதும் என்று நினைத்தவனைப் போல ரமணன் எழுந்து கொண்டான்.. கூட வந்த மாளவிகாவிடம் எதையும் பேசாமல் கார் கதவை அவளுக்காக திறந்துவிட்டான்.. அவனுடன் வெளியே வரும்போது அவன் காரிலேயே வருவதை வழக்கமாக வைத்திருந்த மாளவிகாவும்.. எந்தவித நினைவுமில்லாமல் இயந்திரத்தைப் போலக் காரில் ஏறி உட்கார்ந்தாள்.. காரைக் கிளப்பிய ரமணன் வேகம் கூட்டினான்.. கார் பறந்தது.. ரமணனின் பேச்சினால் துயரம் கொண்டிருந்த மாளவிகா



மௌனமாக சாலையை வெறித்தபடி இருந்தாள்.. அப்போதுதான் அது நிகழ்ந்தது..

தனித்தனியாக.. பிரம்மாண்டமான பங்களாக்கள் அணி வகுத்திருந்த அமைதியான அந்தச் சாலையின் முனையிலிருந்த பூமரத்தின் அடியில் கார் நின்றது.. ரமணன் அவள் பக்கம் திரும்பினான்.. என்ன நிகழப் போகிறது என்று அவள் அனுமானிப்பதற்குள் அவளை இழுத்து அணைத்து அவள் உதடுகளில் முத்தத்தை பதித்து விட்டான்..

கண்ணிமைக்கும் நேரத்திற்குள் அவனின் இறுக்கமான அணைப்பையும்.. அழுத்தமான முத்தத்தையும் உணரவைத்தவன் நெருக்கத்தை அதிகப் படுத்த.. மாளவிகா அவனுக்குள் புதைந்து போனாள்...

அதற்கு முன்னால் அப்படிப்பட்ட பேரலைக்குள் அவள் அமிழ்ந்ததில்லை.. விடுபட முடியாத சுழலில் சிக்கிக் கொண்டவள்.. கண் செருக.. கிறங்கிப் போனாள்.. ஆண்மை ததும்பிய அவனின் தொடுகையை உணர்ந்தவளுக்கு.. அவனது பிரத்யேக வாசனையில் மனம் மயங்கிப் போனது..

அதுவரை கண்ணியமான இடைவெளி விட்டுப் பழகிய ரமணன்.. அந்த இடைவெளியை அழித்து முன்னேறுவான்.. அவளைக் கைப்பற்றுவான் என்று கொஞ்சம்கூட எதிர்பார்த்திராத மாளவிகா தொய்ந்து போனாள்...

நீண்ட முத்தத்திற்குப் பின்னால்.. அவ்.. உதடுகளிலிருந்து விலகிய ரமணனின் முகம்.. அவளது காதோரமாக கிசுகிசுத்தது...

"இந்த நிமிசத்தை உன் ஆயுளுக்கும் நீ மறப்பியா மாளவிகா..?"

'முடியாது..' என்று நினைத்தவளால் அதை வாய் திறந்து சொல்ல முடியவில்லை...

"இந்த சந்தோசத்தை உன்னால மறக்க முடியாது. ஆனாலும் நீ என்கூட வாழ வரமாட்ட.. அப்படித்தானே..?"

அப்படித்தான் என்ற துயரத்துடன் மாளவிகாவின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது.. அதை உணர்ந்தவனின் மனம் இளகவில்லை.. மாறாக இரும்பாக இறுகியது...

"உன்னைத் தொட்ட இந்தக் கையால் என்னால வேறொருத்தியைத் தொட முடியாதுடி.. ஆனா.. என்னைத் தொட்ட உன்னால வேற ஒருத்தனோட வாழ முடியும். அப்படித்தானே...?"

"ரமணன்.." மாளவிகா விசும்பினாள்.. அவனிடம் கண்ணீர் மல்கும் குரலில் இறைஞ்சினாள்...

"நான் என்ன செய்யட்டும்..? என்னைச் சுத்தியிருக் கிறவங்க கேள்வி கேட்பாங்களே.. என் குடும்பம் என்னை ஒதுக்கி வைச்சிருமே..."



"ஓ.. என்கூட வாழ வந்தா.. என்னை உன் புருசனா எத்துக்கிட்டா.. உன்னைச் சுத்தியிருக்கிறவங்க கேள்வி கேட்பாங்க.. உன் குடும்பம் உன்னை ஒதுக்கி வைச்சிரும். அதனால.. நீ இன்னொருத்தன் கூட வாழப் போவ.. அப்படித்தானே..?" ரமணனின் கேள்வி தீயாக அவளைச் சுட்டது..

"சும்மா.. அப்படித்தானே.. அப்படித்தானேன்னு பேசினா எப்படி ரமணன்..? நீங்க வந்து என் வீட்டில பெண் கேட்க முடியுமா..? இல்லை.. நான் தான் வீட்டை விட்டு உங்ககூட ஓடி வர முடியுமா..?" மாளவிகா சள்ளென்று பேசிவிட்டாள்...

"முடியாதில்ல..? நீ சொன்ன எதையும் செய்ய உன்னால முடியாதில்ல..? ஆனா.. என்னால எதுவும் முடியும்..."

பேசியபடியே காரிலிருந்த சிறிய ஷெல்பைத் திறந்த ரமணன் சிறிய அளவிலிருந்த ஏதோ ஒரு பொருளை எடுத்தான்.. மாளவிகாவின் மனதில் அது பதியவில்லை.. அவள் ரமணனை மறுக்க நேரிடும் துயரத்தில் இருந்தாள்.. ரமணன் அவள் மூக்கருகே கை வைத்தபோது.. அவனின் விரலின் தொடுகையில் கண்மூடி உதட்டைக் கடித்தவளுக்கு மயக்கம் வந்தது.. இவன் தொட்டாலே மயங்கிப் போகிறேனே.. என்ற நினைவோடு மயங்கி ரமணனின் தோள்மீது சரிந்தாள்...

அவன் மீது விழுந்தவ...
பிரியத்துடன் முடி கோதி.. அவள் நெற்றியி...
முத்தமிட்டான் ரமணன்...

“நீதானேடி உன் வீட்டை விட்டுட்டு என்கூட ஓடி வ... மாட்ட..? நான் உன்னைத் தூக்கிக்கிட்டு போகலாமில்ல..” மயங்கிச் சரிந்திருந்தவளிடம் கேட்டான்...

மாளவிகாவிடமிருந்து பதில் வரவில்லை.. சீரா... சுவாசத்துடன் கண்மூடிக் கிடந்தாள் அவள்.. அவளி... கன்னம் தொட்டு முத்தம் பதித்தவன்.. அவளைத் தன் மே... சாய்த்துக் கொண்டு.. கையிலிருந்த மயக்க மருந்... ஸ்பிரேயரை ஷெல்பில் வைத்து மூடியவன்.. காரை... கிளப்பினான்.. அது பறந்தது...

மாளவிகா கண் விழித்த போது.. புதிய இடத்தி... சூழலை உணர்ந்தாள்.. திறந்திருந்த ஜன்னலி... வழியாக.. சிலுசிலுவென்ற குளிர் காற்று.. ஈரப் பசையுட... வந்து அவள் உடலைத் தழுவியது.. பூக்களின் இதமா... நறுமணம் அறையெங்கும் நிரம்பியிருந்தது.. அதை நுகர்ந்தவள்.. மயக்க மருந்தை நுகர்ந்த நினைவி... தடுமாறிப் போனாள்..

‘என்ன ஆச்சு..? காருக்குள்ளே உட்கார்ந்திருந்தே... ரமணன் என்னைத் தொட்டாரு...’

அந்த நிலைமையிலும்.. அவன் நினைவில் கன்ன... சிவந்தாள் அவள்.. அவனின் விரல் தொட்ட அந்...



நிமிசத்தில் நிலைத்திருந்தவளுக்கு.. அது கார் இல்லை.. வீடு என்பது அறிவில் பதிந்தது...

‘இங்கே எப்படி வந்தேன்..’ திகைத்தாள்...

‘ரமணன் என்னைத் தொட்டாரு.. அப்புறம்..?’

திரும்பத் திரும்ப அந்த நினைவு மட்டும்தான் அவள் மனதில் சுழன்றது.. எப்படி அங்கு வந்தாள் என்ற விவரம் மட்டும் தெரியவில்லை.. கண்மூடிக் கிறங்கியிருந்த வளுக்கு ரமணன் மயக்க மருந்தைப் பீய்ச்சியதோ.. அவள் அதை நுகர்ந்து மயங்கிச் சரிந்ததோ தெரியாமல் போனது...

‘என்ன ஆச்சு..? காரில் உட்கார்ந்திருந்தேன்.. ரமணன் என்னைத் தொட்டாரு..’

கட்டிலில் அமர்ந்து.. காற்றில் கோலம் போட்டுப் போட்டு யோசித்தவளுக்கு விடை கிடைக்கவேயில்லை.. தலையை மட்டும் வலித்து வைத்தது..

‘இது என்ன இடம்.. எங்கேயிருக்கோம்ன்னாவது பார்த்து வைப்போம்..’ தள்ளாடியபடி எழுந்தவள்.. ஜன்னல் பக்கமாக சென்று வெளியே பார்த்தாள்.. பிரமித்தாள்...

அவள்கண்ணுக்கு முன்னால்.. காட்டாறு ஓடிக் கொண்டிருந்தது.. அதன் கரையோரமாக செழித்து வளர்ந்திருந்த மலர்ச்செடிகள் கண்ணுக்கு குளுமையாக இருந்தன..

'அற்புதமான அழகு...'

மாளவிகாவிற்கு எல்லாம் மறந்து போனது.. அது எந்த இடம் என்ற ஆராய மறந்து.. அதன் அழகில் மயங்கி நின்றாள்...






அதற்கு முன்னால் அப்படிப்பட்ட ஆற்றங்கரையை அனுபவித்துப் பார்த்தறியாத மாளவிகா.. ஜன்னலின் கீழ்பக்கமாக பார்த்தாள்.. அவள் மாடியறையில் இருப்பது தெரிந்தது.. கீழ்பக்கமாக தெரிந்த தோட்டத்தின் அழகு ஒரு பூங்காவைப் போல இருக்க.. ஆற்றை மறந்து.. தோட்டத்தை ரசிக்க ஆரம்பித்தாள்...

அறைக்கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டதும் திரும்பிப் பார்த்தாள்.. கூர்மையான பார்வையுடன்.. ரமணன் உள்ளே வந்தான்.. அவன் கையில் டிரே இருந்தது.. அமைதியாக அங்கே இருந்த டீப்பாயின் மீது டிரேயை வைத்தவன்...

"வா.. காபி சாப்பிடலாம்.." என்று கூப்பிட்டான்...

"ரமணன்..?" மாளவிகா விழி விரித்தாள்...



"வேற யாரா இருக்கும்ன்னு நினைச்ச..? உன் கார்த்திக்குன்னு நினைச்சியா..?" கண்கள் இடுங்கக் கேட்டான் ரமணன்..

"அவன் என் கார்த்திக்கில்லை.." வெடித்தாள் மாளவிகா...

"ஊஹூம்..? அப்ப.. நான் உன் ரமணன்தானே..?" நிதானமாக கேட்டான் ரமணன்...

இல்லையென்று பதில் சொல்ல முடியாமல் ஜன்னல் பக்கமாக திரும்பி நின்று கொண்டாள் மாளவிகா.. ரமணனின் கண்கள் மின்னின...

"காபி சாப்பிட வான்னு கூப்பிட்டேன்..."

"நான் எப்படி இங்கே வந்தேன்.."

"உனக்கு தலை வலிக்கும்.. காபியைச் சாப்பிடு.."

"வலித்தா வலிக்கட்டும்.. உங்களுக்கென்ன வந்தது..?"

மாளவிகா கண் கலங்கினாள்.. அவளுக்குள் பதட்டம் வந்திருந்தது.. அந்த வீட்டின் அழகும்.. ஆற்றங்கரையின் அழகும் மறந்து போக.. சென்னையிலிருந்த அவளுடைய பழைய வீடும்.. அந்த வீடு இருந்த புழுதியான.. சந்தடி நிறைந்த தெருவும் நினைவுக்கு வந்தன...

ரமணன் எழுந்தான்.. அவளருகில் வந்தான்.. அவ
தொட்டால் என்ன ஆகும் என்பதை அனுபவத்தி
உணர்ந்திருந்த மாளவிகா முன் ஜாக்கிரதையாக தள்
நின்று கொண்டாள்.. அதைக் கவனித்த ரமணனின்
கண்களில் சிரிப்பு வந்தது...

"கற்பைக் காப்பாத்திக்கிறயா..?" அழுத்தமாக
கேட்டான்..

மாளவிகாவின் முகம் சிவந்தது.. உதடுகளை
அழுத்திக் கடித்தபடி.. விரல் பார்த்தாள்...

"கவலைப்படாதே.. அந்த உத்தேசம் எனக்கில்லை.."
சிரிப்பு மாறாமல் அவன் சொன்னான்..

"இங்கே எப்படி வந்தேன்..?" மாளவிகா அழுத்தமாக
கேட்டாள்...

"இதென்ன கேள்வி..? என் கூட வந்த.." நிதானமாக
பதில் சொன்னான் ரமணன்..

"அதுதான் எப்படின்னு கேட்டேன்..?" விடாமல்
அந்தக் கேள்வியிலேயே நின்றாள்..

"அதைத்தான் நானும் சொன்னேன்.." என்றான் அந்த
அழுத்தக்காரன்..

"ரமணன்... நீங்க இப்படிச் செய்வீங்கன்னு நான்
நினைச்சுக் கூடப் பார்க்கல.." குமுறினாள் மாளவிகா..



"நான் மட்டும் நினைச்சுப் பார்த்தேனா..?"
கூர்மையாகக் கேட்டான் ரமணன்..

"சொல்லுடி.. எனக்கு மட்டும் உன்னை
கடத்திக்கிட்டு வந்து சிறை வைக்கனும்னு நேர்த்திக்
கடனா..? அந்த நிலைமைக்கு என்னைத் தள்ளினது
யாரு..? நீதானே.." சூடாக கேட்டான் ரமணன்...

"நீங்க நல்லவர்ன்னு நினைச்சேன்.."

"அதாவது.. நீ என்னை விட்டுட்டு
வேறொருத்தனுக்கு கழுத்தை நீட்டுவ... நான்
கண்ணெல்லாம் சிவக்க.. மனசை அடக்கிக் கிட்டு உனக்கு
அட்சதைப் போட்டு.. எங்கிருந்தாலும் வாழ்கன்னு
பாட்டுப் பாடனும்.. அப்படிச் செஞ்சிருந்தா உன்
பார்வையிலே நான் நல்லவனாத் தெரிஞ்சிருப்பேன்..
அப்படித்தானேடி.. என் அன்புக் காதலியே..?"
புருவங்களை உயர்த்தினான் ரமணன்..

"ரமணன்.." மாளவிகா பேச முடியாமல்
தடுமாறினாள்..

"அந்தப் பருப்பெல்லாம் என்கிட்ட வேகாது.. இப்பச்
சொல்றேன் கேட்டுக்க.. நான் கெட்டவன்தான்.. ரொம்ப..
ரொம்பக் கெட்டவன்.. என் காதலிய இன்னொருத்தன் கூட
வாழ விட்டுத்தான் அந்த நல்லவன் பட்டத்தை சம்பாதிச்
சுக்கனும்னா.. அந்தப் பட்டமே எனக்குத் தேவையில்லை..
புரிஞ்சதா..?" அதட்டினான் ரமணன்...

"என் நிலைமையை கொஞ்சமாவது நினைச்சு பார்த்தீங்களா..?" மாளவிகா குற்றம் சாட்டினாள்..

"உன் நிலைமைக்கு என்னடி கேடு..? காதலிக்கிறவனை விட்டுட்டு இன்னொருத்தன் கூட வாழ வேண்டிய அவசியமில்லாம போனதுக்கு நீ சந்தோசம் தானே படணும்.. அத விட்டுட்டு.. துக்கப் படற..?"

"இவ்வளவு இரக்கமில்லாதவரா நீங்க..?"

மாளவிகா வெறுப்புடன் சொன்னாள்.. ரமணன் ஒரே எட்டில் அவளை நெருங்கி.. அவள் முகத்தை இறுக்கிப் பிடித்து கண்களுக்குள் உற்றுப் பார்த்தான்.. அவனின் இரும்புப் பிடியில் முகம் வலிக்க.. வலி தாங்காமல் கண் கலங்கினாள் மாளவிகா.. அவன் அதைப் பொருட் படுத்தவில்லை..

"என்னடி இரக்கமில்லாம நடந்துக்கிட்டேன்..? நூறுபவுன் கொடு.. இருநூறு பவுன் கொடுன்னு இரக்கமில்லாம உன் அப்பனைக் கசக்கிப் பிழிஞ்சேனா..? உன்னை அடிச்சு நொறுக்கி.. ரத்தம் கொட்ட உன் வீட்டுக்கு இரக்கமில்லாம துரத்திவிட்டு உன் அம்மாவின் பெத்த வயிறை பதறடிச்சேனா..? இருக்கிற கொஞ்சக் காசையும் இரக்கமில்லாம.. உன் கழுத்தில கத்திய வைச்சு.. உங்க வீட்டிலே இருந்து பிடுங்கி.. உன் தம்பியை கதற வைச்சேனா..? சொல்லுடி.. நான் சொன்னதில ஒன்னையாவது நான் செஞ்சிருந்தா



என்னை இரக்கமில்லாதவன்னு நீ சொல்லலாம்.. இதை எதையும் நான் செய்யலையே..."

கங்காதரன்.. பூமிகாவிற்கு செய்த அத்தனை கொடுமைகளையும் ரமணன் பிட்டுப் பிட்டு வைத்த போது.. மாளவிகாவிற்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.. அவளைத் தள்ளி விட்டு.. வெறுப்புடன் பார்த்தான் ரமணன்...

"பேசுடி.. வக்கணையாய் வாய்கிழிய பேசின.. உன் பேச்சு எங்கே போச்சு...?"

"ஆயிரம்தான் இருந்தாலும்.. அதைச் செய்தது பூமிகாவோட புருசன்.." மாளவிகா சொல்லி விட்டாள்...

"புருசன்.." ரமணன் பயங்கரமாகச் சிரித்தான்.. மாளவிகாவின் அருகே வந்து குனிந்து அவள் முகத்தைப் பார்த்துக் கேட்டான்...

"அப்ப.. உனக்கு நான் யாருடி..?"

அழுத்தமாக வந்த அந்தக் கேள்வியில் வாயடைத்துப் போனாள் மாளவிகா..

"கழுத்தில தாலியைக் கட்டி.. கூடக் குடும்பம் நடத்தினாத்தான் அவன் புருசனா..? ஒரு செகண்ட்.. ஒரேயொரு செகண்ட் போதும்.. அதையெல்லாம்.. இங்கே.. இந்த இடத்தில.. இப்பவே.. நான் நடத்திக் காட்டவா..?"

விரல் சொடுக்கி.. கண்கள் சிவக்க.. ரௌத்திர முகத்துடன் ரமணன் கேட்ட போது பயந்து பின் வாங்கினாள் மாளவிகா...

“புருசனாம்.. புருசன்..! உனக்கு நான்தான்டி புருசன்.. நான் மட்டும்தான் புருசன்..” விரல் நீட்டி எச்சரித்தான் ரமணன்..

“வேணாம் ரமணன்.. குற்றத்துக்கு மேலே.. குற்றம் செஞ்சுக்கிட்டுப் போகாதீங்க...” பதிலுக்கு எச்சரித்தாள் மாளவிகா..

“ஹ..” கைகளை காற்றில் வீசி தன் கோபத்தை வெளிப்படுத்தினான் ரமணன்..

“குற்றமாம்.. எதுடி குற்றம்..? நான் காதலிக்கிறவளை.. என்னைக் காதலிக்கிறவளை.. அடுத்தவனுக்கு விட்டுக் கொடுக்க மாட்டேன்னு சொன்னா... அது குற்றமா..? உன் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லு.. நீ என்னைக் காதலிக்கலை..?”

மாளவிகா பதில் சொல்ல முடியாமல் தலை கவிழ்ந்தாள்...

“பேச மாட்டியே.. இதுக்குப் பதில் சொல்ல மாட்டியே.. நீதானேடி கேட்ட.. உன்கூட என்னால ஓடிவர முடியுமான்னு.. உன்னால அது முடியாதுதான்.. என்னால உன்னைத் தூக்கிக்கிட்டு வரமுடியும்.. அதான்.. உன்னைத் தூக்கிட்டேன்..”

அவன் வெற்றிச் சிரிப்பைச் சிரித்தான்...



## 33



மாளவிகா பொல பொலவென்று கண்ணீர் விட்டாள்.. அவளின் அந்தக் கண்ணீர் ரமணனைக் கரைக்கவில்லை.. கண்;ணீர் வற்றும் வரை அழுது முடித்தவளிடம் மீண்டும் காபிக் கோப்பையை நீட்டினான் ரமணன்.. வெறுப்புடன் அதைத் தட்டி விடப் போனாள் மாளவிகா.. லாவகமாக கையை விலக்கி காபிக் கோப்பையை காப்பாற்றி விட்டான் ரமணன்...

“இந்த மூணு நாளா மயக்கத்தில வச்சிருந்ததைப் போலவே கொஞ்ச நாளைக்கு வைத்திருந்திருக்கனும்.. அதை விட்டுட்டு.. மயக்கம் தெளிய விட்டதுதான் தப்பாப் போச்சு...”

“என்னது...?”

மாளவிகா அரண்டு போனவளாக சுவரைப் பார்த்தாள்.. நாள்காட்டியின் தேதி.. ரமணன் சொன்னதை உண்மையென்று சொன்னது.. நம்ப முடியாதவளாக அவளுடைய செல் போனைத் தேடினாள்.. கிடைக்கவில்லை.. அருகிலிருந்த ரமணனின் செல் போனைக் கைப்பற்றி தேதியைப் பார்த்தாள்.. அது நாள் காட்டி சொன்னதை உண்மையென்று ஊர்ஜிதம் செய்தது...

"மூணு நாளா மயக்கத்தில் இருக்கேனா..?"

"யெஸ்.. ஜூஸ்.. பால்ன்னு எதைக் கொடுத்தாலும் மயக்கத்தில கேள்வியே கேட்காம குடிச்சு வச்சிருக்க.. என்மேல உனக்கு இருந்த மயக்கம் தெளிஞ்சதைப் போல இந்த மயக்கமும் இப்ப தெளிஞ்சிருச்சில்ல.. என்னைத் தட்டிக் கழிச்சதைப் போல.. காபியையும் தட்டி விடப் பார்க்கிற..", குத்தலாகப் பேசினான் ரமணன்..

"என் வீட்டிலே தேடுவாங்க ரமணன்.."

"தேடினாங்களாம்.. ஆனா.. உன் செல்லில இருந்து அஸ்வினோட செல்லுக்குப் போன மெஸேஜைப் பார்த்ததும் தேடறதை நிப்பாட்டிட்டாங்களாம்.. தாமஸ் போனில் சொன்னான்..."

"என் செல் போனில் இருந்து அஸ்வினோட செல்லுக்கு மெஸேஜ் போச்சா..? எப்படி..? நான் அனுப்பலையே..."

"நான் அனுப்பினேனே..."

"நீங்களா...?"

"நானேதான்.."

"என் செல் உங்க கைக்கு எப்படி வந்துச்சு..?"

அபத்தமாகக் கேட்டுவிட்டு.. தன் புத்திசாலித் தனத்தை நொந்துபோனவளாக தலையில் கை வைத்துக் கொண்டாள் மாளவிகா..



"நீயே என் கைக்கு வந்தாச்சு.. உன் செல் என் கைக்கு வராதா..?" ஏளனமாகக் கேட்டான் ரமணன்...

"என்னன்னு மெஸேஜ் அனுப்பினீங்க..?" துடிக்கும் இதயத்துடன் கேட்டாள் மாளவிகா..

"கார்த்திக்குடன் கல்யாணம் பேசினது பிடிக்கவில்லை.. என் காதலரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு அவருடன் வாழப் போகிறேன்னு நீ சொன்னதா மெஸேஜ் போயிருக்கு.."

"கடவுளே..."

"அவரை எதுக்காக டிஸ்டர்ப் பண்ற..?"

"என்னைப் பத்தி என் வீட்டில் என்ன நினைச்சுக்குவாங்க...?"

"எங்கிருந்தாலும் வாழ்கன்னு நினைச்சுக்கிட்டு இருக்காங்களாம்.."

"யார் சொன்னது..?"

"உங்க வீடு இருக்கிற தெருவே சொல்லுது.. நீ அருமையான பெண்ணாம்.. உன் மனசில காதலிருக்காதுன்னு அவங்களா நினைச்ச கல்யாண ஏற்பாட்டை பண்ணிட்டாங்களாம்.. இப்படி நடக்கும்ன்னு அவங்களுக்கு தெரியாம போச்சாம்.. அதனால உன்மேல ... சொல்றாங்களாம்.. நீ உன் புருசனோட

திரும்பிப் போனா வாழ்த்தி வரவேற்க தயாரா இருக்காங்களாம்..."

"என்னது..?" கண் சிவந்தாள் மாளவிகா..

"இத்தனை கோபமும் எதுக்காகன்னுதான் எனக்குப் புரிய மாட்டேன்குது.. உன் வீடுதான் பிரச்னைன்னு சொன்ன.. இப்ப உன் வீடு.. உன் புருசன்னு யாரை நீ அறிமுகம் பண்ணி வைச்சாலும் ஏத்துக்கத் தயாரா இருக்கு.. அப்புறமும் உனக்கு என்னதாண்டி பிரச்னை..?" கேள்வி கேட்டான் ரமணன்..

"நீங்கதான் பிரச்னை.." பட்டென்று சொன்னாள் மாளவிகா..

"நானா..? சரியாப் போச்சு போ.."

"ஊஹீம்.. எதுவும் சரியாகலை.. என் வீட்டில் என் புருசன்னு யாரைக் கொண்டு போய் நான் நிறுத்தினாலும் ஏத்துக்குவாங்க.. உங்களை மட்டும் ஏத்துக்கவே மாட்டாங்க.. அதிலும் என் அப்பா ஹார்ட் பேசண்ட்.. அவருக்கு ஹார்ட் அட்டாக்கே வந்திரும்.. அந்த விசப் பரிட்சையில் இறங்க என்னால் முடியாது..."

"ஓகே.. நீ எந்தப் பரிட்சையிலயும் இறங்க வேணாம்.. விட்டிரு.." இலகுவாகச் சொன்னான் ரமணன்...

"விட்டு விடுவதா..?



"லுக் மாளவிகா.. நீ ஒருவழிப் பாதையில் வந்திட்ட.. திரும்பிப் போகிறதுங்கிறது நடக்காத விசயம்.. இனி உன் வாழ்க்கை என்னோடு தான்.. உன் கழுத்தில் தாலியைக் கட்டி.. உன் புருசனா.. உன் கூட குடும்பம் நடத்தினாத் தான் வாழ்க்கைன்னு இல்லை.. எனக்கு என் பக்கத்தில நீ இருந்தாப் போதும்.. வா.. இந்த வாழ்க்கையை நாம வாழலாம்.."

மாளவிகா சுற்றிலும் பார்த்தாள்.. ஆற்றங்கரையோரமாக அமைந்திருந்த அந்த வீட்டைச் சுற்றி மரங்களும்.. தோப்புக்களும் அடர்ந்திருந்தன.. ஆற்றுக்கு அந்தப் பக்கமாக தெரிந்த அடர்ந்த காடு அவளை அச்சுறுத்தியது...

"இது எந்த இடம்..?"

"தெரிஞ்சு என்ன செய்யப் போற..?"

"என் செல் போன் எங்கே ரமணன்..?"

"வேலை முடிஞ்சதும்.. சிம் கார்டை எடுத்துட்டு.. தலையைச் சுற்றித் தூக்கியெறிஞ்சுட்டேன்.."

"என் வேலை..?"

"இப்போதைக்கு உன் சார்பில டைப்படிச்ச லீவ் லெட்டர் போயிருக்கு..."

"நான் சைன் பண்ணலியே..."

உன் கையெழுத்தை நான் போட மாட்டேனா..?"

"நீங்க அதையும் செய்வீங்களா..?"

"எவ்வளவோ செஞ்சுட்டேன்.. இதைச் செய்ய மாட்டேனா..?"

மாளவிகா சோர்ந்து போனவளாக தரையில் சரிந்து அமர்ந்து முழங்கால்களைக் கட்டி அதில் முகம் புதைத்தாள்..

அவளைத் தனிமையில் விட்ட ரமணன் கீழே இறங்கிச் சென்று விட்டான்.. வெகு நேரம் கழித்து மாளவிகா தலை தூக்கிப் பார்த்தபோது இருள் படலம் கவிழ ஆரம்பித்திருந்தது.. பகலில் அழகாகத் தெரிந்த ஆறும் காடும்.. இரவில் அவளை அச்சுறுத்தின...

'அந்தப் பக்கம்.. சிங்கம் புலி கரடியெல்லாம் இருக்குமோ...'

வந்தால் வரட்டும்.. போய்ச் சேர்ந்து விடலாம் என்ற விரக்தி எண்ணமும் அவளுக்கு வரவில்லை..

ஏதோ ஒரு வகையில் கார்த்திக்குடனான அவளின் திருமணம் நின்று போனதில் என்று மனதுக்குள் லேசாக உணர்ந்தாள் மாளவிகா.. இப்போது ரமணன் இருக்கும் மனநிலையில் அவனிடம் எதைப் பேசினாலும் எடுபடாது.. போகப் போக எடுத்துச் சொன்னால் கேட்டுக் கொள்வான்

என்ற நம்பிக்கை அவளுக்குள் வந்தது.. அப்போது அவளை சென்னைக்கு கொண்டு போய் கட்டாயம் விட்டு விடுவான் என்று அவள் நினைத்தாள்..

அவளுடைய குடும்பம் அவள் சொல்வதைக் கேட்டுக் கொள்ளும்.. மற்றவர்களிடம் வேலை விசயமாக வெளிநாடு போனேன் என்று சொல்லிக் கொள்ளலாம் என்ற அவசர முடிவையும் அவள் தீர்மானித்தாள்...

இந்த தீர்மானங்களுக்குப் பின்னால்.. அவளால் இயல்பாக நடமாட முடிந்தது.. சோர்வுடன் படியிறங்கிப் போனாள்.. சிறிய ஹால் வெளிச்சத்துடன் இருக்க.. அதையொட்டிய சமையலறையில் அவளுக்கு முதுகு காட்டி நின்றிருந்தான் ரமணன்.. உள்ளே எட்டிப் பார்த்தாள்.. சப்தம் கேட்டுத் திரும்பியவன்..

"வந்துட்டியா.. இப்பவாவது காபி சாப்பிடறியா..?" என்று கேட்டான்..


"ம்ம்ம்.." அவள் மறுக்காமல் வாங்கிக் கொண்டாள்.. ரமணன் மீண்டும் எதையோ கிளற ஆரம்பித்தான்...

"என்ன செய்கிறீங்க..?" என்று கேட்டாள்..

"பூரியும்.. உருளைக்கிழங்கும்.. பண்ணிக்கிட்டு இருக்கேன்.. உனக்குப் பிடிக்குமில்ல..?"

பிடிக்கும் என்று தலையாட்டிய போது.. அந்தச் சூழலையும் மாளவிகாவுக்கு பிடித்துப் போனது...

# 34



சமைத்தவைகளை டைனிங் டேபிளில் பரத் வைத்தான் ரமணன்.. மாளவிகாவின் வயிற்றை ப கிள்ளியது.. மூன்று தினங்களாக திரவ உண உட்கொண்டதின் விளைவு என்று நினைத்து கொண்டவள்.. கையைக் கழுவி விட்டு சாப்பிட அமர்ந்தாள்.. திடிரென்று மின்சாரம் நின்றுவிட வீட்டுக்குள் இருள் சூழ்ந்தது.. மாளவிகா பயந்து போய்..

"ரமணன்.." என்று குரல் கொடுத்தாள்..

"டோன்ட்.. வொர்ரி.."

மெழுகுவர்த்தியின் வெளிச்சம் முகத்தில் படிய கையில் அழகான வேலைப்பாடு மிகுந்த மிகப் பெரிய மெழுகுவர்த்தியைக் கொண்ட பித்தளையிலான ஸ்டாண்டோடு அங்கே வந்தான் ரமணன்.. அந்தப் பொன்னிற வெளிச்சத்தில் அவன் முகம் அழகான கந்தர்வனின் முகம் போல தோன்றியது..

'இவன் கந்தர்வன்தான்..' உதட்டைக் கடித்துக் கொண்டாள் மாளவிகா..

மெழுகுவர்த்தி ஸ்டாண்டை டைனிங் டேபிளின் மத்தியில் வைத்த ரமணன்.. அவளை ஊடுறிவிப் பார்த்தான்.. அவன் பார்வை மடித்துக் கடித்த அவளின் உதடுகளின் மீது படிய.. காருக்குள் நடந்த நிகழ்வின் ஞாபகத்தில் மாளவிகாவின் முகம் சிவந்தது..

"மயக்கமா..?" புருவங்களை உயர்த்தினான் ரமணன்..

"என்.. என்.. என்னது..?" வார்த்தைகளால் தந்தியடித்தாள் மாளவிகா..

"இல்ல.. இன்னும் உனக்கு ! யக்க மருந்தின் மயக்கம் தெளியலையான்னு கேட்டேன்..", கேலியாகச் சொன்னான் ரமணன்..

அவன் அந்த மயக்கத்தைக் குறிப்பிடவில்லை யென்று மாளவிகாவிற்கு மிக நன்றாகவே தெரியும்.. அவன் குறிப்பிட்ட மயக்கமே வேறு.. அதை மாளவிகாவினால் சொல்ல முடியுமா..? அதனால் அவள் மெல்லிய குரலில்..

"ம்ம்ம்.." என்று முணுமுணுத்து வைத்தாள்...

அவளின் தடுமாற்றத்தைக் கண்டு கொண்டவனாக ரமணன் மெல்லச் சிரித்தபடி.. அவள் முன்னால் தட்டை நகர்த்தினான்...

"நான் எடுத்து வைச்சுக்க மாட்டேனா..? உங்களுக்கு எதுக்கு சிரமம்..", சங்கடத்துடன் கூறினாள் மாளவிகா..

கூட்டையும் செய்யறதில எனக்குச் சிரமமில்ல.. அதை உன் தட்டில் எடுத்து வைக்கிறதுதான் சிரமமா..? சாப்பிடு.." ரமணன் சாப்பிட ஆரம்பித்தான்...

"ஸாரி.." மாளவிகா வருத்தத்துடன் சொன்னாள்..

"எதுக்கு ஸாரி சொல்ற..?" சாப்பிட்டபடியே கேட்டான் ரமணன்...

"உங்களைச் சமைக்க வைச்சிட்டேன்.." குற்ற உணர்வுடன் அவள் சொன்னாள்...

ரமணன் அவளை ஒரு ஊடுறுவும் பார்வையைப் பார்த்து விட்டு தட்டில் கவனமானான்...

"நீ அதைச் சொல்றியா.. நான் வேற என்னவோ.. ஏதோன்னு நினைச்சிட்டேன்..."

"என்னன்னு நினைச்சீங்க..?"

"என்னை தூக்கியெறிஞ்சிட்டயே.. அதுக்காக வருத்தப் படறியோன்னு ஒரு செகண்ட் பேராசைப் பட்டுட்டேன்.."

வார்த்தைகளை கூர்மையான கத்திகளாக எறிவதில் இவனுக்கு நிகர் இவன்தான் என்று நினைத்துக் கொண்டாள் மாளவிகா.. அவளுக்கு மனம் வலித்தது.. ஏதும் பேசாமல் மௌனத்தில்குடி புகுந்தாள்.. அவனுக்கு அதுவும் பொறுக்கவில்லை...

"என்ன.. பேச்சையே காணோம்..?" என்றான்..

"பேசினாத்தான்.. ஒவ்வொரு வார்த்தையிலயும் குற்றம் கண்டு பிடிக்கறிங்களே.." மனத்தாங்கலுடன் சொன்னாள் மாளவிகா...

"அப்ப நீ குற்றமாவே எதையும் பேசலைங்கறியா..?" நிதானமாகக் கேட்டான் ரமணன்...

மாளவிகா மௌனத்தை மீண்டும் துணைக்கழைத்-தாள்.. அந்த மெல்லிய வெளிச்சத்தின் மத்தியில்.. நிசப்தம் சூழ்ந்த இரவில்.. காட்டுக்கு மத்தியிலிருக்கும் வீட்டில்.. அவனோடு பேசிக் கொண்டே சாப்பிடுவது அவளுக்குப் பிடித்தமானதாக இருந்தது. அவனும் அதை உணர்ந்தானோ என்னவோ..

"நாம ஃபைவ் ஸ்டார் கேஹாட்டலிலே முதன் முதலா சேர்ந்து லன்ச் சாப்பிட்டோமே.. அது நினைவுக்கு வருதில்ல.." என்று கேட்டான்..

அவன் இயல்பாக பேசியதில் மாளவிகாவிற்கு சந்தோசமாகி விட்டது..

"யெஸ்.. நீங்கதான் எனக்கு ட்ரீட் கொடுத்தீங்க.." உற்சாகத்துடன் தலையை ஆட்டினாள்...

அவளின் அந்த உற்சாகத்தில் அவன் முகம் மென்மையானது...

"சாப்பாடு நல்லாயிருக்கா..?" என்று மிருதுவான குரலில் கேட்டான்...

"சூப்பர்.. உங்களுக்கு நல்லா சமைக்கத் தெரியும்ன்னு தெரியுது.." விரலைச் சுவைத்தபடியே சொன்னாள் மாளவிகா...

"உனக்கு நல்லாச் சாப்பிடத் தெரியும்ன்னும் தெரியுது..." கேலியாகச் சொன்னான் ரமணன்...

"நானும் நல்லாச் சமைப்பேனாக்கும்.." ரோசப்பட்டாள் மாளவிகா..

"அப்படின்னு யார் சொன்னது..?" கேலி மாறாமல் கேட்டான் அவன்...

"என் பேரண்ட்ஸ் சொல்லுவாங்க..."

"பெற்ற பாசம்..! உன் தம்பி சொல்லுவானா..?" ரமணன் மடக்கி விட்டான்..

"அது.. அது.. அதுவந்து.." மாளவிகா பதில் சொல்ல முடியாமல் திணறினாள்..

அஸ்வின் அவள் சமையலை வாசனையிலேயே கண்டு பிடித்து விடுவான்.. முகம் அஷ்ட கோணலாக..

"ச்சீ.. த்தூ.. இதை மனுசன் சாப்பிடுவானா..?" என்று கேட்பான்..

மாளவிகாவிற்கு கோபம் வந்து விடும்.. அவனை மாட்டி விடவேண்டும் என்பதற்காகவே.. ரசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் சிதம்பரத்தைச் சுட்டிக் காட்டி..



"அப்பா சாப்பிடறாரேடா.." என்று கேட்டு வைப்பாள்..

'மாட்டிக்கிட்டியா..?' என்ற சந்தோசம் அவள் விழியில் தெரியும்.. அஸ்வின் அதற்கெல்லாம் அயர மாட்டான்...

"அப்பா மனுசனே இல்லைக்கா.." என்று ஒரு போடு போட்டு விடுவான்..

"என்னது..? கேட்டிங்களாப்பா.." மாளவிகா தூண்டிவிட...

"அப்பா தெய்வம்க்கா..." என்று சிதம்பரத்திற்கே சாம்பிராணி காட்டி விடுவான் அஸ்வின்...

"தெய்வமே இதைச் சாப்பிடறப்போ.. நீ நொட்டை சொல்லலாமா..? சாப்பிடுறா ராஜா.." மாளவிகா தாஜா செய்தால்..

"நான் தெய்வப் பிறவியில்லையேக்கா.. சாதாரண மனுசனாச்சே... நான் என்ன செய்வேன்.. நான் என்ன செய்வேன்.. லொக் லொக்..". என்று நடிகர் திலகமாகி மாளவிகாவை கடுப்பாக்கி விடுவான்...

மாளவிகா அந்த நினைவில் சிரித்து வைத்தாள்.. ரமணன் காரணம் கேட்டான்.. மாளவிகா சொன்னதைக் கேட்டவனின் புன்னகை விரிந்தது...

"ஹௌ நைஸ்.. அழகான குடும்பச்சூழல்.. நீ கொடுத்து வைத்தவ..."

பொறாமையில்லாத அவனின் பேச்சில் மாளவிகாவின் மனம் வலித்தது.. அவன் டேபிளைச் சுத்தம் பண்ண முனைய...

"நான் பார்த்துக்கறேன்.." என்று தடுத்தாள் மாளவிகா..

சமையலறையை ஒழுங்கு பண்ணி விட்டு.. ஹாலுக்கு வந்தார்கள்.. மின்சாரம் இல்லாத இரவு.. ஹாலின் மூலையில் கணப்பிற்காக கட்டப்பட்டிருந்த இடத்தில் தீ எரிந்து குளிரை விரட்டிக் கொண்டிருந்தது.. அது மலை வாசஸ்தலமாக இருக்கக் கூடுமோ என்று யோசித்தாள் மாளவிகா.. அவனிடம் அது பற்றிக் கேட்க முடியாது.. பதில் சொல்ல மாட்டான்...

குளிருக்கு அடக்கமாக கம்பளியைப் போர்த்திக் கொண்டு.. கால் மடக்கி சோபாவில் உட்கார்ந்து கொண்டாள்.. ரமணன் கிட்டாரை எடுத்து வாசித்தான்.. மெலிதான இசை அறையெங்கும் பரவியது.. இவனுக்கு வாசிக்கக் கூடத் தெரியுமா.. என்ற ஆச்சரியம் அவளுக்குள் வந்தது.. அவன் காட்டிய பல வேறுபட்ட பரிணாமங்களில் அவள் மனம் சிக்கி ஊசலாடிக் கொண்டிருந்தது..


*"ஓடும் மேகங்களே..!*
*ஒரு சொல் கேளீரோ..*
*ஆடும் மனதினிலே..*
*ஆறுதல் தாரீரோ..."*



அவனின் சோகக் குரல் அறையில் நிரம்ப.. மாளவிகாவின் இதயம் சுருண்டது.. அந்தப் பாடலின் தாக்கத்தில் அவள் தவித்துப் போனாள்...

*"நாடாளும் வண்ண மயில்..*
*காவியத்தில் நான் தலைவன்..!*
*நாட்டிலுள்ள அடிமைகளில்*
*ஆயிரத்தில் நான் ஒருவன்..!*
*மாளிகையில் அவள் வீடு...!*
*மரக்கிளையில் என் கூடு..!*
*வாடுவதே என் பாடு..!*
*இதில் நான்.. அந்த மான்..*
*நெஞ்சை நாடுவதெங்கே கூடும்..?"*

## 35



மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் தள்ளி அமர்ந்திருந்த அவனின் ஆண்மை ததும்பிய வடிவத்தின் அவள் ஆகர்ஷிக்கப்பட்டாள்.. குளிர் நிரம்பிய அந்த இரவின் நிசப்தத்தை அவனின் பாடல் அசைத்துக் கொண்டிருந்ததை துக்கத்துடன் அவள் உணர்ந்தாள்..

பாடிய படியே நிமிர்ந்த ரமணனின் துளைக்கும் பார்வையில் அவள் பார்வை சிக்கித் தவித்தது.. மீள முடியாத சுழலுக்குள் தான் அமிழ்வதைப் போல உணர்ந்தாள் மாளவிகா.. அவளாகப் போட்டுக் கொண்டிருந்த அத்தனை மனத்தடைகளையும் அவனின் ஊடுறுவும் பார்வை உடைத்தெறிந்தது.. அவனை மனம் தேடுவதை நடுக்கத்துடன் கட்டுப்படுத்த முயன்று தோல்வி கண்டாள் மாளவிகா.. நில்லென்ற அவளின் வார்த்தைக்குக் கட்டுப் பட்டு நிற்க.. மனம் என்ன அவளுக்கு அடிமையா..? கட்டுக்கடங்காத கடலைப் போல.. விரைந்து செல்லும் காற்றைப் போல.. சக்திகொண்ட மனதை அடக்க அவளால் முடியுமா..?

அது கட்டுக்கடங்காமல் திமிறி.. கரைகளை உடைத்து ரமணனின் பக்கமே பாய்ந்தது.. அவளின் மனப் போராட்டத்தை அறிந்தும் அறியாதவனைப் போல ரமணன் பாடலைத் தொடர்ந்தான்...

"ஊரெல்லாம் தூங்கையிலே..
விழித்திருக்கும் என் இரவு...
உலகமெல்லாம் சிரிக்கையிலே..
அழுதிருக்கும் இந்த நிலவு..."

அதற்கு மேல் தாங்க முடியாதவளாக மாளவிகா விசும்பிக் கொண்டே எழுந்து.. ரமணனின் அருகே சென்று கால்களை மண்டியிட்டு அவன் முன் அமர்ந்து கை குவித்தாள்..



"வேணாம் ரமணன்.. இதுக்கு மேலே பாடாதீங்க.. அதைக் கேட்கிற சக்தி எனக்கில்லை.."

ரமணன் கிடாரை வைத்து விட்டு.. கண்ணீர் வழிந்த அவளின் முகத்தை கைகளில் ஏந்தி.. விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான்...

"ஏன்..? ஏன் நான் பாடக்கூடாது..?"

"என் மனசுக்கு கஷ்டமாயிருக்கு ரமணன்.." மாளவிகா கதறினாள்...

"மனசு..!" கசப்புடன் சிரித்தான் ரமணன்...

"அது உனக்கு இருக்கா மாளவிகா..?"

அவனின் கேள்வியைத் தாங்க முடியாதவளாக அவன் மடியில் முகம் புதைத்து.. கால்களை இறுக்கமாக பற்றிக் கொண்டாள் மாளவிகா..

அவளின் அந்த சரணாகதியில் ரமணனின் வேகமும் தணிந்து விட்டது.. குனிந்து.. அவன் மடியில் முகம் புதைத்திருந்தவளின் கூந்தலில் அவன் முகம் புதைத்தான்..

"மாளவிகா.." அவள் காதோரமாக முணுமுணுத்தான்..

அவள் பேசவில்லை.. மாறாக அவனின் கால்களை இறுக்கமாக்கினாள்.. ரமணன் பிடித்திருந்த பிடியை இறுக்கமாக்கினாள்.. ரமணன் அவளின் தோள் தடவி அணைத்துக் கொண்டான்...

பேச்சுக்களில்லாத மௌனத்தில் அவர்கள் புதைந்தார்கள்.. ரமணன் அவளின் தோள் தொட்டு எழுப்பினான்.. அவனின் கையை இறுக்கிப் பற்றி கோலைப் பிடிப்பதைப் போல பற்றிக் கொண்டு எழுந்த மாளவிகா நிற்க முடியாதவளாக கொடி போல அவன் மேல் படர்ந்தாள்...

தன்மீது படர்ந்தவளை இறுக்கிக் கொண்ட ரமணன் பூமாலையாய் அவளைக் கைகளில் ஏந்திக் கொண்டான்.. மாளவிகாவின் கைகள் அவன் கழுத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டன.. அவன் மாடிப் படிகளில் ஏறினான்..

மாடியறையின் கட்டிலில் அவளைக் கிடத்த முயன்ற போது அவனை விட மறுத்தாள் மாளவிகா.. அவளின் பிடியில் சிக்கியவன் அவள் மேல் சரிந்தபோது.. அவனைத் தழுவிக் கொண்டாள் அவள்...

ரமணனின் முகமெங்கும் அவள் முத்தங்களைப் பதித்தபோது.. ரமணன் விலகவில்லை.. அவள் கைகளுக்குள் தன்னை ஒப்புக் கொடுத்திருந்தவனாய்.. அவள் இழுத்த இழுப்புக்கு வளைந்து கொடுத்தான்..

"ரமணன்.." அவனை இறுக்கிக் கொண்டவளின் கைகள் அவன் முதுகின் மீது பரவிப் படர்ந்த போது.. அவளின் இதழ்களில் அழுத்தமான முத்தத்தைப் பதித்து விட்டு விலகி எழுந்தான்



"ஏன் ரமணன்..?" மாளவிகாவின் குரலில் தவிப்பு இருந்தது.. அவளின் முடி கோதி நெற்றியில் முத்தமிட்டான்..

"தூங்கு.." என்று புன்னகை செய்தான்...

"நீங்க..?" பயத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தாள் மாளவிகா...

"நானும் இங்கேதான் தூங்குவேன்.. பயப்படாதே.."

குழந்தையைச் சமாதானப் படுத்துவதைப் போல அவளின் கன்னத்தில் தட்டிச் சமாதானப் படுத்தி விட்டு விலக முனைந்தான் ரமணன்...

"ரமணன்.." மாளவிகா அவன் கைபற்றித்தடுத்தாள்...

"மாலு.." அவன் குரல் கரகரத்தது...

'மாலுன்னு கூப்பிட்டுட்டான்..' அவள் மனம் சிறகடித்தது...

"வேண்டாம்.. நீ தூங்கு.." அவள் கைகளை விலக்கினான்...

"அதுதான் ஏன்..?" மாளவிகா பிடிவாதமாக அவனைத் தடுத்தாள்..

"இல்லை.. எனக்கு வேண்டியது இது இல்லை..." அவள் கைகளை விலக்கி.. அவளை படுக்கவைத்தான் ரமணன்...

"என்மேல உங்களுக்கு பிரியமில்லையா..?" குழந்தையாகக் கேட்டாள் மாளவிகா...

எல்லையில்லாத பிரியம் விழிகளில் ததும்ப.. அவள் கன்னதில் செல்லமாகத் தட்டினான் ரமணன்...

"உன்மேல மட்டும்தாண்டி பிரியம் வைச்சிருக்கேன் உனக்கு இது தெரியாதா..?"

"அப்புறமும் ஏன் விலகிப் போறிங்க..."

"இப்ப வேணாம்.. காலையில் சொல்றேன்.."

பிடிவாதம் பிடித்தவளை சமாதானப் படுத்தி. கம்பளிப் போர்வையால் போர்த்தி.. பக்கத்தில் அமர்ந்து. தட்டிக் கொடுத்தான் ரமணன்... கண்மூடி தூங்க முயன்றாள் மாளவிகா.. அறையின் மூலையிலிருந்த கணப்பை சரிசெய்ய ரமணன் எழுந்து கொள்ள முனைந்த போது.. உடல் பதற தடுத்தாள்...

"உன்னை விட்டுட்டு நான் எங்கேயும் போக மாட்டேண்டி.. கணப்பை சரி செய்யனும்.. கதவை தாழ் போடனும்.. அதுக்கப்புறமா இங்கேதான் வருவேன்.. சரியா..?"

குழந்தையிடம் பேசுவதைப் போல பிரியத்துடன் பேசியபடி அவளின் கைகளுக்குள் இருந்த தன் கையை உறுவிக் கொண்ட ரமணன் எழுந்து கதவருகே சென்று கதவைத் தாழிட்டான்.. கணப்பில் விறகுகளைப் போட்டு



எரிய விட்டவன்.. அறையின் மூலையில் கிடந்த மற்றொரு கட்டிலை இழுத்து மாளவிகாவின் கட்டிலை ஒட்டிப் போட்டான்.. படுத்து கம்பளியால் போர்த்துக் கொண்டவன் மாளவிகாவின் பக்கமாக திரும்பிப் படுத்தான்...

அதுநேரம் வரை அவன் செய்வதை கவனித்துக் கொண்டிருந்தவளின் விழிகள் பளபளத்ததைக் கண்டவன்..

"அதான் வந்துட்டேனில்ல..? இனியாவது தூங்கு.." என்று கனிவுடன் சொன்னான்..

மாளவிகா கை நீட்டி.. அவன் கையை இறுக்கிப் பற்றிக் கொண்டாள்.. அந்தக் கைகள் தந்த நிம்மதியான தெம்பில் மனதில் பாதுகாப்புணர்வை உணர்ந்தவளாக தூங்கிப் போனாள்..

வெகு நேரம்வரை உறங்காமல் கண் விழித்திருந்த ரமணன் அவன் கையை இறுக்கிக் கொண்டிருந்தவளின் முகத்தையே ஆதுரத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்...

மாளவிகா காலையில் கண் விழித்த போது.. அருகிலிருந்த கட்டிலில் ரமணன் இல்லை.. எழுந்து கண்களை கசக்கிக் கொண்டவளுக்கு முதல் நாளின் இரவு நினைவுக்கு வந்தது...

'ஏன் அப்படி நடந்துக்கிட்டேன்..?' அவளின் மனமும்.. உடலும் கூசிப் போயின..

அவன் என்னை என்னன்னு நினைத்திருப்பான்..? என் உடம்பில பேய் புகுந்திருச்சா..? என்னை அப்படி ஆட்டி வைச்சுச்சா..? அவனை என் காதலன்னு எப்படி என்னால சொல்ல முடியும்ன்னு நானே கேட்டுட்டு.. அவன் கையை பிடிச்சு இழுத்து வைச்சிருக்கேனே.. என்னைப் பத்தி அவன் மோசமா நினைச்சிருக்க மாட்டானா..? காதலுக்கு நான் வேணாம்.. கட்டிலுக்கு மட்டும் நான் வேணுமான்னு அவன் ஒரு வார்த்தை கேட்டு விட்டால் என் உயிர் போய் விடாதா..? நானா அப்படி செய்தேன்..?'

அவனை முகத்துக்கு நேரே பார்க்க முடியாது என்று தோன்றிவிட கீழே போகாமல் அங்கேயே உட்கார்ந்து விட்டாள் மாளவிகா...

## 36



அறைக்கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டதும்.. பேயைக் கண்டதைப் போல அரண்டு போனாள் மாளவிகா..

'அவன் வர்றானே.. அவன் முகத்தை எப்படிப் பார்ப்பேன்...'



சட்டென்று கட்டிலில் இருந்து குதித்து இறங்கியவள் ஜன்னலுக்கு அருகே போய் அவனுக்கு முதுகு காட்டி நின்று விட்டாள்..

"காபி சாப்பிட வா மாளவிகா..."

எதுவுமே நடக்காததைப் போல இயல்பான குரலில் அவளை அழைத்தான் ரமணன்.. அவள் திரும்பவில்லை.. ஜன்னலோடு ஜன்னலாக பொருந்தி.. அதில் முகம் புதைத்து நின்றாள்.. அவனைத் திரும்பிப் பார்க்க முடியாமல் அவள் மனம் குன்றியிருந்தது..

"மாலு..."

அவனின் அந்த அழைப்பில் அவள் மனம் பொங்கியது...

'எல்லாம் இவனால் வந்தது...' அவளுக்கு கண்ணீர் வந்தது...

'ஏன் அந்தப் பாட்டைப் பாடித் தொலைச்சான்..? அப்படிப் பாடினா என் மனசு தாங்குமா..? நானே இந்த ரௌடியைக் காதலிச்சு தொலைச்சிருக்கேன்.. இவன் வேணும்னு கேட்கிற மனசை கட்டிப் போட்டு வைச்சிருக்கேன்.. அது புரியாம இவன் பாடிவைச்சா என் மனசு கட்டறுக்காதா..?'

அவனின் அழைப்புக்களுக்கு அவள் திரும்பாததில் அவனின் புருவங்கள் மேலேறின.. அழுத்தமான

காலடியோசை அவளை நெருங்கியதில் அவள் உடல் விதிர்த்தாள்...

'இங்கே வர்றானே...'

அப்படியே பூமிக்குள் புதையுண்டு விட்டால் என்ன என்று அவளுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது...

முகம் திருப்பாமல் அசைவற்று நின்றிருந்தவளின் முதுகை வெறித்தவன் அவள் மனதை கண்டு கொண்டவனாய் அவள் தோள் தொட்டுத் திருப்பினான்..

அவன் பக்கமாக திரும்பிய மாளவிகா தலையை குனிந்து விட்டாள்.. அவன் தலை நிமிர்த்தி அவள் முகத்தைப் பார்க்க முயற்சித்தபோது கண்களை மூடிக் கொண்டாள்..

"மாலு.." அவன் திகைத்தான்...

"என்னடி ஆச்சு..?" அவனின் கேள்வியில் அவள் விசும்பி அழுது விட்டாள்...

"என்னை என்னன்னு நினைச்சீங்க..?"

அவனுக்கு அவளின் கேள்வி புரிந்தது.. செல்ல கோபத்துடன் அவளின் கன்னம் தட்டி...

"முட்டாள்..." என்று அணைத்துக் கொண்டான்...

"மோசமா நினைச்சிட்டிங்களா..?" அவள் விசும்பிக் கொண்டிருந்தாள்..



"அடிதான் வாங்கப் போறடி.. யார் யாரை அப்படி நினைக்கிறது..? உன்னை நான் அப்படி நினைப்பேனா..? அப்படின்னா.. உன்னைக் கடத்திட்டு வந்து சிறை வைச்சிருக்கேனே.. என்னை நீ என்னன்னு நினைப்பே..? வில்லன்னுதானே...?"

'இவன் வில்லனா..?' மாளவிகாவிற்கு துக்கமாக இருந்தது...

"இருந்தாலும்.. நான் அப்படி நடந்துக்கிட்டேன்னு நினைக்கிறப்ப.. எனக்கே நம்ப முடியல.. நான் ஏன் அப்படி நடந்துக்கிட்டேன்...?"

"நான் சொல்லவா..?" அவன் மெல்லச் சிரித்தபடி அவள் கண்ணிமைகளில் முத்தமிட்டான்..

"வேணாம்.." அவள் விலகி நின்றாள்...

"இப்ப வேணாம்கிற.. நேத்து ராத்திரி அப்படிச் சொல்லலையே..." அவன் சீண்டினான்...

"சொல்லிக் காட்டறிங்களா..?" அவள் கண்களில் கண்ணீர் ததும்பி விட்டது...

"அடச்சீ.. நீயென்ன தொட்டாச் சிணுங்கியா..? முதல்ல என் கேள்விக்கு பதில் சொல்லு மாளவிகா.. உன்னைக் கடத்திட்டு வந்தது நானா இல்லாம வேற ஒருத்தனா இருந்திருந்தா நீ என்ன பண்ணியிருப்ப..?" அவன் கேள்வியில் அர்த்தம் இருந்தது...

எதுவும் செய்திருப்பாள்.. கையில் கிடைத்ததை எடுத்து அவனைக் குத்திக் கொன்றிருப்பாள்.. தப்பி யோடியிருப்பாள்.. கிடைத்த பொருள்களை அடித்து நொறுக்கியிருப்பாள்.. எதுவும் முடியவில்லையென்றால் நிச்சயமாக உயிரை விட்டிருப்பாள்...

அவற்றையெல்லாம் செய்யாமல் சுற்றியிருக்கும் இயற்கையின் அழகை ரசித்திருக்க மாட்டாள்.. இயல்பாக வீட்டுக்குள் நடமாடியிருக்க மாட்டாள்.. பசிக்கு உணவை உட்கொண்டிருக்க மாட்டாள்.. அவன் பாடும் பாடலில் தன்னைக் கரைத்துக் கொண்டிருக்க மாட்டாள்...

இதையெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தவளின் தலையில் செல்லமாக குட்டை வைத்து...

"என் முட்டாள் காதலியே.. உன்னைக் கடத்திக்கிட்டு வந்திருக்கது நான்.. எனக்கெதிரா நீ சுட்டு விரலைக்கூட அசைக்க மாட்ட.. புரிந்ததா..?" என்று சொன்னான் ரமணன்..

மாளவிகாவுக்கு புரிந்தது...

"உன் மனசில நானிருக்கேன்.. இதை நீ வாய் விட்டு சொல்லாட்டியும் அதுதாண்டி உண்மை.. நேத்து ராத்திரி நடந்தது இயல்பான ஒருவிசயம்.. அதுக்காக உன்னையே நீ வருத்திக்கிற.. என் இடத்தில வேற ஒருத்தன் இருந்து பாட்டுப் பாடியிருந்தா.. அவன் நிலைமைக்கு நீ இரக்கப்



பட்டிருப்பியா..? அவன் நிழலைக் கூட உன் விரல் தொட்டிருக்குமா..?"

அவனின் வழக்கப்படி அவள் முகத்தை இறுக்கிப் பற்றி அவள் கண்களுக்குள் உற்றுப் பார்த்து ரமணன் கேட்ட போது...

"ச்சீச்சி.." என்று அருவெறுத்தாள் மாளவிகா...

"என் மாலு.." அவளின் அந்தச் செய்கையில் மனம் நிறைந்தவனாய் அவளை அணைத்துக் கொண்டான் ரமணன்...

அவன் மார்பில் முகம் புதைத்து நின்றவளின் மனச்சங்கடம் விலகி ஓடியிருந்தது.. அவள் முடி கோதி விலகிய ரமணன்...

"வா.. காபி சாப்பிடலாம்.." என்று அன்புடன் அழைத்தான்...

காபியை உறிஞ்சியபடி ரமணனைப் பார்த்தாள் மாளவிகா.. அவனும் அவளையேதான் பார்த்துக் கொண்டிருந்தான்.. வெட்கத்துடன் நிலம் பார்த்தவள்...

"ஆனா.. ஏன்னுதான் எனக்குப் புரியல..." என்றாள்...

அவள் கேட்பது எதை என்று ரமணனுக்குப் புரிந்தது.. லேசான குறுஞ்சிரிப்போடு அவளின் வெட்கத்தை ரசித்தான்...

க்கு நீ வேணும்தான்.. ஆனா இப்படியில்ல.." என்று சொன்னான்...

"புரியல..."

"ஐ லவ் யு.. இது நிதரிசனமான உண்மை.. எனக்கு நீ வேணும்.. இதுவும் நிதரிசனமான உண்மை.. ஆனா.. இப்படி கள்ளத்தனமா உன்கூட குடும்பம் நடத்த வேணாம்.."

மாளவிகாவின் விழிகளில் கேள்வி வந்தது. ரமணனின் முகத்தில் இருந்த சிரிப்பு மறைந்து தீவிரம் வந்தது...

"நான் கள்வன்தாண்டி.. இல்லைன்னு சொல்லலை. ஆனா உன் ஒருத்தியை மட்டுமே நினைச்ச கள்வன்.. நான் ராமன்டி.. ராவணனில்ல.. என் பெண்டாட்டியத்தான் நான் தூக்கிக்கிட்டு வந்து சிறை வைச்சிருக்கேன். அடுத்தவன் பெண்டாட்டியத் தூக்கிட்டு வரலை.. எங்கேயாவது சீதையை ராமன் அசோக வனத்தில சிறை வைத்தான்கிற ராமாயணக் கதையை நீ கேட்டிருக்கியா..? நம்ம வீட்டு ராமாயணம் இப்படித்தான் ஆகிப் போயிருக்கு.. இதை எங்கே போய் சொல்றது...?"

ரமணன் அலுத்துக் கொண்டதில் மாளவிகாவிற்குச் சிரிப்பு வந்தது... ஜன்னல் வழியே தெரிந்த அடர்ந்த கானகத்தை பார்த்தவளுக்கு அது வனம்தான் என்பது புரிந்தது...

'ஆனா இது அசோக வனமில்லை.. பிருந்தாவனம்..'



அவள் காதலுடன் அவள் கை தொட்ட அந்தக் கள்வனைப் பருகுவதைப் போல பார்த்து வைத்தாள்.. அவளின் பார்வையில் அவன் கண்கள் மின்னின...

"இந்தப் பார்வைக்கொன்னும் குறைச்சலில்லடி.. உன் மனசு பூரா என் மேல காதலிருக்கு.. அதை உன் வாயாலே சொல்ல மாட்ட..."

"அது.. அது வந்து.."

"தடுமாறாதே.. உனக்கு பொய் சொல்ல வராது.. நேத்து ராத்திரிக்குப் பின்னாலேயும் நீ பொய் சொன்னா.. அது நல்லாவும் இருக்காது..."

"ரமணன்.."

"சொல்லிக் காட்டனும்னு சொல்லலை.. உன் அடி மனசில நான் தான் இருக்கேன்னு உனக்கு நினைவு படுத்தறேன்.. அவ்வளவுதான்.. நீ தெம்பாயிருக்கப்ப உன் மனசை மறைச்சு வேசம் போட்டுடறே.. நேத்து ராத்திரி.. நீ தெம்பாயில்ல.. இது காடு.. கரண்ட் இல்லாம துளியூண்டு வெளிச்சத்தில இருக்க வேண்டிய நிர்பந்தம்.. கணப்பையும் தாண்டி.. உடம்பை விறைக்க வைக்கும் குளிர்.. என்னைத் தவிர வேறு மனுசனில்லாத தனிமை.. உன் அடிமனசு மேலே வந்திருச்சு.. உன் வேசத்தைக் கலைச்சு.. நீ என்னைத் தேடிட்ட.."

ரமணன் அவளின் மனநிலையை பிட்டுப் பிட்டு வைக்க.. ஆவென்று வாய் பிளந்தாள் மாளவிகா...

# 37



ரமணனின் வார்த்தைகள் ஒவ்வொன்றும்.. தேர்ந்தெடுத்த மனோ வைத்தியரின் வார்த்தைகளைப் போல வெளியில் வந்து விழ.. இதுதானா என்று பிரமித்துப் போனாள் மாளவிகா..

"என் மனசும்.. உடம்பும் கல்லில்ல.. அதுவும் உன்னை வெறிபிடிச்சதைப் போல காதலிக்கிறவன் நான்.. என் மனசும் உனைத் தேடுச்சு.. உடம்பும் அதைப் போலத்தான் தேடுச்சு.. உனக்குத் தெரியாது.. என்னைக் கண்ட்ரோல் பண்ணிக்க நான் எத்தனை தூரத்துக்கு சிரமப் பட்டேன்னு.."

ரமணன் சொல்லச் சொல்ல தலை கவிழ்ந்து விட்டாள் மாளவிகா..

"ஐ ஆம் ஸாரி..."

"இதுக்குப் பதிலா ஐ லவ் யுன்னு சொல்லி-யிருக்கலாம்.. போகுதுபோ.. என்னைக்கு நீயா வாயைத் திறந்து அந்த வார்த்தையைச் சொல்றியோ.. அன்னைக்கு நான் உன்னை கவனிச்சுக்கறேன்.."



ரமணனின் பார்வை தாகத்துடன் அவள் மேல் படிய.. மாளவிகாவிற்கு என்னவோ போல ஆகிவிட்டது.. அவள் சங்கடத்துடன் வேறுபக்கம் திரும்பிக் கொண்டாள்...

"அது மட்டுமில்லை.. உனக்கு ஒரு சங்கடம் இருக்கு.. என்னை நீ ஒரு கேள்வி கேட்டிருக்க.. அது உனக்கு நினைப்பில இருக்கும்ன்னு நம்புறேன்..."

அவளுக்கா நினைவில்லை..? நன்றாக நினைவில் இருந்ததால் உதட்டைக் கடித்துக் கொண்டாள்...

"என்னை உன் புருசன்னு உன் அப்பா அம்மாகிட்டச் சொல்ல முடியுமான்னு கேட்ட.. நான்தான் உனக்கான மாப்பிள்ளைன்னு தெரிஞ்சா உன் அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக்கே வந்திரும்ன்னு சொன்ன.. நல்லாக் கவனி மாளவிகா.. உன் வாயாலே என்னை உன் காதலன்னும்.. உன் புருசன்னும்.. என்னைக்கு உன் அப்பா.. அம்மாவுக்கு துணிச்சலா அறிமுகப் படுத்தி வைக்கறியோ.. அன்னைக்குத்தான் உன்னை நான் சூறையாடுவேன்.. அப்ப நீ தெரிஞ்சுக்குவடி.. இந்த ரமணன் உன்னை எந்த அளவுக்கு தேடியிருக்கான்னு..."

சட்டென்று அவள் அருகில் வந்த ரமணன் அவளை எழும்புகள் நொறுங்கும் அளவிற்கு இறுக்கி அணைத்து.. உதட்டில் அழுத்தமான முத்தத்தைப் பதித்தான்.. மறு நொடியில் அவளை விடுவித்தவன் படிகளில் இறங்கி வேகமாக போய் விட்டான்...

...து துரும்பாக.. அசைவற்று நின்றா[ள்] மாளவிகா.. சற்றுமுன் நிகழ்ந்த நிகழ்விலிருந்[து] வெளிவர அவளால் முடியவில்லை.. ஜன்னலில் தலை சாய்த்து வெளியே பார்த்தவளுக்கு மனதில் துக்கம் பொங்கியது...

'ஏன் அப்படிப் பேசினேன்..?' மனது அலை பாய்ந்தது..

மௌனமாக படியிறங்கிப் போனாள்.. சமையலறைக்குள் எதையோ செய்து கொண்டிருந்த ரமணனைக் கண்டதும்...

'ம்ஹீம்.. சிங்கத்தை சமைக்க வைச்சுக்கிட்டிருக்கேன்...' என்று அவளுக்குத் தோன்றிவைத்தது..

சேலை முந்தானையை இழுத்துச் சொறுகிக் கொண்டு சமையலறைக்குள் நுழைந்தாள்...

"விலகுங்க..." என்றாள்...

"எதுக்கு..?" என்றான் ரமணன்...

"சமைக்கத்தான்..." அவள் கத்தியை எடுத்தாள்..

"நீ சமைக்கப் போறியா..?" அவன் சந்தேகத்துடன் கேட்டான்...

"நீங்களே சமைக்கிறப்ப.. நான் சமைக்க மாட்டேனா.. வெளியே போங்க.. இனிமே இது என் இடமாக்கும்..."



"அப்படியெல்லாம் பட்டாப் போட்டுக் கொடுக்க முடியாது.. இருக்கிறது இரண்டு பேர்.. இதில பொம்பளை சமைக்க.. ஆம்பளை உட்கார்ந்து சாப்பிடனும்னா.. அவனுக்கும் பொழுது போக வேணாமா..? கத்தியைக்கொடு.."

"எதுக்கு..?"

"காய் நறுக்கத்தான்ம்மா.. இது கத்தியைப் பிடிச்ச கை.. சும்மா விட்டு வைக்க முடியாது..."

"த்ச்சு.. இதென்ன பெருமைன்னு பேசறிங்க.." அவள் முகம் சுளித்தாள்...

"ஓகே.. இனி பேசலை.. நீ காயைக் கொடு..." அவள் வார்த்தைக்கு அவன் கட்டுப்பட்டான்...

அதில் அவள் மனம் லேசானது.. அவர்கள் பேசியபடியே உணவை தயாரித்து டைனிங் டேபிளில் பரத்தி வைத்தார்கள்...

"குளிச்சுட்டு வர்றேன்.." கிளம்பிய மாளவிகா...

"அச்சச்சோ.." என்று கை உதறினாள்...

"என்னடி..?" அவன் புருவங்களை உயர்த்தினான்..

"மாற்று டிரெஸ் இல்லையே..."

"அப்படின்னு யார் சொன்னது..? உன் அளவுக்கு ஜாக்கெட் தைக்கனும்னா நேரமிருக்காதுன்னு..

ரெடிமேட்டில் சுடிதார்.. நைட்டின்னு அள்ளிப் போட்டுக் கிட்டு வந்தேன்.. மாடியில நம்ம ரூமில இருக்கிற ஷெல்பை திறந்து பார்.. பைகளா குமிஞ்சிருக்கும்.."

அவன் இயல்பாக 'நம்ம ரூம்' என்று சொன்னதில் அவள் வசீகரிக்கப் பட்டாள்..

அந்த வீடு.. அவனுக்கும்.. அவளுக்குமான வீடு.. மாடியிலிருக்கும் அறை.. அவர்களின் அறை என்பதில் அவளுக்குள் ரகசிய சந்தோசம் வந்தது.. அந்த வாழ்க்கையை அவள் மனதுக்குள் விரும்பி ரசித்தாள்...

"நீங்க குளிக்கலையா..?"

"காலையிலேயே ஆச்சு.. நீதான் கும்பகர்ணி.. எட்டு மணிக்கு முன்னாலே முழிக்க மாட்டேன்னு அடம் பிடிச்சுக்கிட்டுத் தூங்கினியின்னா.. நானும் அதைப் போலத்தான் இருப்பேனா..? அதெல்லாம் டான்னு ஆறு மணிக்கே எழுந்திருச்சிட்டேன்..."

"எங்கே குளிச்சீங்க..?"

"நம்ம ரூமிலதான்.."

அவன் இயல்பாகச் சொல்லியதில் அவளுக்குள் ஏதோ ஓர்விதமான பரவசம் உண்டானது.. மாடியறையின் அலமாரியைத் திறந்தாள்.. அவனின் உடைகளும்.. அவளின் உடைகளும் கலந்து அடுக்கப்பட்டிருந்தன.. அவற்றையே பார்த்தபடி சிறிது நேரம் நின்றாள்.. இனி



இந்த வாழ்விலிருந்து விடுபட முடியுமா.. விடுபட்டாலும் இந்த நிழல்கள் மனதிலிருந்து மறையுமா என்ற கேள்வி அவளுக்குள் தோன்றியது.. கேள்வியைத் துரத்திவிட்டு.. மாற்றுவதற்கான ரோஜா வண்ண சுடிதாரைத் தேர்ந்தெடுத்தாள்.. குளியலறைக்குள் போனாள்.. அவளின் துணிகளோடு.. ரமணனின் அழுக்குத் துணிகளையும் உரிமையுடன் துவைத்துக் குளித்து வெளியே வந்தாள்.. ஈர உடைகளை உலர்த்த பால்கனிக் கதவைத் திறந்தாள்.. அங்கே நின்றிருந்த ரமணன் அவள் கையிலிருந்த அவனின் துணிகளைக் கண்டதும்.. அர்த்தம் பொதிந்த ஆழமான பார்வையை பார்த்தான்.. அவன் பார்வையின் வேகத்தில் உதட்டைக் கடித்தபடி..

"இதை எங்கே காயப் போடறது..?" என்று கேட்டாள்..

"இங்கே வெயில் வராது.. என்கிட்டக் கொடு.. கீழே கட்டியிருக்கிற கொடியில் காயப் போடறேன்..", ரமணன் கை நீட்டினான்...

"என் சேலையும்.. துணிகளும் சேர்ந்து இருக்கே.." மாளவிகா தயங்கினாள்...

"உன் துணியை நீ துவைக்கலாம்.. உன் துணியை நான் காயப் போடக் கூடாதா..? அபத்தமா உளறி வைக்காம குடுடி.." ரமணன் அதட்டியபடி துணிகளைப் பிடுங்கிக் கொண்டான்...

அவனுடைய அதட்டல் மாளவிகாவிற்கு இன்பத்தைக் கொடுத்தது.. 'லா.. லா..' என்று பாடியபடி..

தலையைப் பின்னி முடித்தாள்.. ஸ்டிக்கர் பொட்டிருக்குமா என்று தேடினாள்.. அலமாரியில் ஒப்பனைப் பொருள்கள் அடங்கிய டப்பாவே கிடைத்தது...

'எல்லாத்தையும் யோசிச்சு வாங்கியிருக்கான்...'

மனதிற்குள் மெச்சிக் கொண்டவள்.. சிரத்தையாக தன்னை அலங்கரித்துக் கொண்டாள்.. துள்ளலுடன் படியிறங்கி வந்தவளிடம் ரோஜாப்பூவை நீட்டினான் ரமணன்...

"உன் டிரெஸ்ஸீக்கு மேட்சாயிருக்கும்..."

அவனை சொந்தத்துடன் பார்த்தபடி அவள் பூவை வாங்கி பின்னலின் ஓரமாக செறுகிக் கொண்டாள்..

அவளை ரசித்துப் பார்த்தவனைப் பார்த்து அவள் புருவங்களை உயர்த்தவும்..

"ஒரு ரோஜாப்பூவே.. ரோஜாப்பூவை வைத்திருக்கிறதே..." என்று கவிதை சொன்னான்..

மாளவிகா தலையைச் சரித்து அவனைப் பார்த்துச் சிரித்த போது.. பழைய மாளவிகா மீண்டு விட்டதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது..



# 38



கார்த்திக் கொதித்துப் போயிருந்தான்.. திடிரென்று ஓர்நாளில் மாளவிகா யார் கண்ணுக்கும் தென்படாமல் மறைந்து போய் விடுவாள் என்று அவன் எதிர்பார்த்திருக்கவில்லை..

"அவ போனா போயிட்டுப் போறாடா.. உன் தகுதிக்கும்.. பதவிக்கும் உனக்கு ஆயிரம் பொண்ணுக கிடைப்பாங்க..", கோதாவரி பொரிந்து தள்ளினாள்..

'மாளவிகா கிடைப்பாளா..?' கார்த்திக் வெறி பிடித்தவனைப் போல ஆனான்...

அதுநாள் வரை அவனை இகழ்ச்சிப் பார்வை பார்த்துக் கொண்டிருந்த மாளவிகாவின் திமிரை அடக்க.. அவன் தாலிக்கயிற்றைத்தான் ஆயுதமாக நினைத்துக் கொண்டிருந்தான்..

'அவளைக் கதற வைக்கனும்.. என் காலடியில் போட்டு மிதிக்கனும்.. சாப்பிட வாயைத் திறக்கிறதுன்னாக் கூட அவபயந்து நடுங்கி என்கிட்ட பர்மிசன் வாங்கனும்.. என்னைப் பார்க்கிற பார்வையில திமிரிருக்கக் கூடாது.. பயம் ...ணும்...'

...யெல்லாம் மனக் கோட்டை கட்டியிருந்தவன்.. அந்த மனக்கோட்டை இடிந்து தவிடு.. பொடியாகி.. நொந்து நூல்.. நூலாகிப் போயிருந்தான்...

அவனைத் துச்சமாக மதித்து அவள் தப்பியோடி விட்டதில் அவனின் ஆணவம் பலத்த பாதிப்பிற்கு உள்ளானது...

'கடைசியில இதிலயும் அவ ஜெயிச்சிட்டாளா..?'

மாளவிகாவை ஜெயிக்க முடியாத தகிப்பு அவனுக்குள் கனன்றது.. திருமணப் பேச்சு ஆரம்பித்த பின்னாலாவது மாளவிகா மனம் மாறியிருப்பாள்.. அவனிடம் தன்மையாகப் பேசுவாள் என்ற நப்பாசையுடன் அவளின் வீடு தேடிப் போனபோது.. அவள் காதலனுடன் சென்று விட்ட செய்தி அவனுக்கு கிடைத்தது...

"இப்படின்னு ஒரு வார்த்தை அவ சொல்லலியே.. சொல்லியிருந்தா அவ காதலிச்சவனுக்கே அவளைக் கல்யாணம் பண்ணி வைச்சிருப்போமே.. தங்கமான பொண்ணாச்சே.. அவ வீட்டை விட்டு வெளியே போக நாங்களே காரணமாகிட்டோமே..."

மதுரா சொல்லிச் சொல்லி அழுதபோது அவனுக்கு பற்றிக் கொண்டு வந்தது.. ஓடினவளின் மீது தப்பில்லை யென்ற பாவனையில் பேசியவர்கள் அவனை வில்லனைப் பார்ப்பதைப் போலப் பார்த்தும் வைத்ததில் அவனின் கோபம் அதிகரித்தது.. அதிலும் அஸ்வின் வாய் விட்டே சொல்லி விட்டான்...



"அப்பவே தலைப்பாடாய் அடிச்சுக்கிட்டேன்.. என்ஜினியரிங் முடிச்சவளுக்கு அதே ஃபீல்டில இருக்கிற மாப்பிள்ளையைக் கண்டு பிடிங்கன்னு.. அதை விட்டுட்டு போலிஸீக்கு பொண்ணு கொடுக்கிறேன்னு போனா இப்படித்தான் நடந்து வைக்கும்..."

விரோதியைப் பார்ப்பதைப் போல கார்த்திக்கை அவன் பார்த்த பார்வையில் கொலைவெறி தாண்டவமாட...

'ஏம்ப்பா.. நானா உன் அக்காவுக்கும்.. அவ காதலனுக்கும் டிக்கெட் எடுத்துக் கொடுத்து ஊரை விட்டு பற்றி விட்டேன்..?' என்று கேட்கலாமா என்ற காண்டு கார்த்திக்கின் மனதில் எழுந்து வைத்தது...

எரிகிற கொள்ளியில் எண்ணெயை விட வேண்டாம் என்று வாயை அடக்கிக் கொண்டு வந்து விட்டான்...

அதற்குப் பின்னால் மாளவிகாவின் வீட்டிற்கு அவன் போன போது.. சிதம்பரம் தலையை மட்டும் ஆட்டி விட்டு வெளியே போய் விட்டார்.. அஸ்வின் அதையும் ஆட்டாமல் அவனை முறைத்துப் பார்த்தபடி.. அவனை உதைக்க முடியாத உதையை ஹீரோ ஹோண்டா வண்டியை உதைப்பதில் காட்டி.. வண்டியைக் கிளப்பிக் கொண்டு போய் விட்டான்.. அவர்கள் இருவரையும் போல வெளியே தப்பித்துப் போக முடியாமல் 'இல்லத்தரசி' என்ற பெயரில் வீட்டின் நான்கு சுவர்களுக்குள் சிறைபட்டிருந்த மதுரா மட்டும்.. வேண்டா வெறுப்பாக...

"வாப்பா.." என்று சொல்லி வைத்தாள்...

'வாங்க..' என்ற வரவேற்பு.. 'வாப்பா..' என்று விட்டதில் கார்த்திக்கின் தன்மானம் அடிவாங்கியது...

'யானை இருந்தாலும் ஆயிரம் பொன்.. போனாலும் ஆயிரம் பொன்.. அப்படின்னு சொல்கிறதைப் போல.. அந்த மாளவிகா.. இருந்தப்பயும் என் மரியாதையைக் குறைச்சா.. ஓடிப் போன பின்னாலேயும் என் மரியாதையை குறைத்து வைக்கிறா..' கடுப்பாகி போனான் கார்த்திக்...

"மாளவிகாவைப் பத்தி ஏதாச்சும் தகவல் கிடைச்சுச்சா அத்தை..."

"ஒரு தகவலும் இல்ல.. நாங்களும் அவ கூடப் படிச்ச சிநேகிதக கிட்டயெல்லாம் சொல்லிட்டோம்.. அவ புருசன்னு யாரைக் கை காட்டினாலும் கண்ணை மூடிக்கிட்டு அதை ஏத்துக்கறோம்.. அவளை வீட்டுக்கு மட்டும் திரும்பிரச் சொல்லுங்கன்னு.. ஒன்னும் நடந்த பாடில்லை.. யாருக்குமே அவ இருக்கிற இடம் எதுன்னு தெரிய மாட்டேங்குது.." மதுரா புலம்பியதில் அவனின் கடுப்பு மேலும் அதிகமாகி வைத்தது...

'ஒரு வர்ர்த்தையாவது.. அவ இப்படிச் செஞ்சிட்டுப் போயிட்டாளேன்னு இந்தப் பொம்பளை சொல்லுதா..? இது புருசன் என்னடான்னா நான்தான் அவரு மகளை வீட்டை விட்டு ஓட்டி விட்டதைப் போல முறைச்சுக் கிட்டுப் போறாரு.. இந்தம்மாவோட மகன்...



அவனோட அழகு ரதியான அக்காவை நான் பொண்ணு கேட்டுட்ட கொடுமையாலேதான் அவ ஊரை விட்டு ஓடிட்டாங்கிறதைப் போல வெட்டவா.. இல்ல.. குத்தவான்னு பார்த்து வைக்கிறான்.. இந்தப் பொம்பளை என்னடான்னா இப்படிப் புலம்புது. ஊஹீம்.. இதுகளுக் கெல்லாம் கங்காதரன்தான் லாயக்கு.. அவன் கொஞ்ச நாளா அந்த பூமிகா கழுதையை பத்தி விடாம இருக்கானில்ல.. அதான் இதுகளுக்கு குளிர் விட்டுப் போச்சு...'

கார்த்திக் கங்காதரனைத் தூண்டி விட வேண்டும் என்று மனதுக்குள் தீர்மானித்துக் கொண்டான்...

'அவன் போடற ஆட்டத்தில இதுக உதவி கேட்டு ஐயோ.. அப்பான்னு என்காலில வந்து விழனும்.. அப்பப் பார்த்து மாளவிகாவப் பத்தின விவரத்த இதுக வாயில இருந்து நான் கறக்கனும்...'

திட்டப்படி கங்காதரனைத் தேடிப் போனான் கார்த்திக்.. வீட்டுக்குப் போனால் பூமிகாவிற்கு மூக்கு வியர்த்துவிடும் என்பதினால் கங்காதரனின் அலுவலகத்திற்கே போனான்.. அவனை வரவேற்று கேண்டினுக்கு அழைத்துப் போய்.. காபி டிபனை வரவழைத்துக் கொடுத்த கங்காதரனின் முகத்தில் கார்த்திக்கின் வருகையை எதிர்பார்க்காத வியப்பு.. அப்பட்டமாகத் தெரிந்தது...

"பாருங்க சகலை.." கார்த்திக் ஆரம்பித்தபோதே..

"சகலையா..? யாரைச் சொல்றிங்க..?" என்று கங்காதரன் சுற்று முற்றும் பார்த்து வைத்தான்..

இவனை என்ன செய்தால் தேவலாம் என்று கொலைவெறி கொண்ட கார்த்திக்..

"உங்களைத்தான் சொல்றேன் சகலை.." என்று பல்லைக்கடித்தான்...

"நான் உங்களுக்கு சகலையா..? அதான் மாளவிகா ஓடிப் போய் காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டாளே.." என்று கங்காதரன் விளக்கம் கேட்டுவைத்தான்..

'அவ கல்யாணம் பண்ணிக்கிட்டதை நீ பக்கத்தில இருந்து பார்த்தியா..' என்று கோபம் கார்த்திக் மனதில் எழுந்தது..

மாளவிகாவின் குடும்பமே அவனை கொலைகாரனாக்கித் தீரும் முடிவுடன் இருக்கிறது என்று கண்டு கொண்ட கார்த்திக்.. கோபத்தை அடக்கியபடி பொறுமையாக பேச முயன்றான்...

"அதை விடுங்க சகலை.. நான் கேள்விப்பட்டது உண்மையா..?"

"என்ன கேள்விப் பட்டிங்க..?"

"நீங்க என்னவோ சிதம்பரம் மாமாவுக்கு பயந்துட்டிங்களாம்.. அந்த அஸ்வின் பய உங்க கையைக்



காலை முறிச்சிருவேன்னு எச்சரிக்கை பண்ணியிருக்-கானாம்.. மதுரா அத்தைவேற அவங்க பங்குக்கு போடற சாப்பாட்டில விசத்தைக் கலந்து வைச்சிருவேன்னு உங்களை மிரட்டி வைச்சிருக்காங்களாம்.. நீங்க அதனால உங்க பெண்டாட்டி காலிலே விழுந்து அவளை தாஜா பண்ணிக் குடும்பம் நடத்தறீங்களாமே..?"

நீளமாகச் சொன்ன கார்த்திக்கை நிதானமாகப் பார்த்த கங்காதரன்...

"இந்த உண்மைகளையெல்லாம் உங்களுக்கு யார் சொன்னது தம்பி..?" என்று கேட்டு வைத்து கார்த்திக்கை மயக்கத்துக்குள் தள்ளினான்...

"வாட்...?"

"ஆமாம் தம்பி.. எதுக்கும் நீங்க மாமா வீட்டுப் பக்கம் போனா நான் அடங்கி.. ஒடுங்கி.. பூமிகா காலிலே விழுந்து குடித்தனம் பண்ணிக்கிட்டு இருக்கேன்னு நல்லவிதமா நாலுவார்த்தைய அவங்க காதில போட்டு வையுங்க.." என்ற கங்காதரனின் விழிகளில் அப்பட்டமான பயம் தெரிந்தது..

# 39



கங்காதரனை அதற்கு முன்னால் கார்த்திக் பலமுறை பார்த்திருக்கிறான்.. ஒரு முறை பொது இடத்தில் வைத்து அவன் பூமிகாவை புரட்டிப் போட்டு அடித்ததையும்.. அதைக் கண்டு சிதம்பரத்தின் குடும்பம்.. குய்யோ.. முறையென்று அழுது புலம்பினதையும்.. கண்ணாரக் கண்டு.. காதாரக் கேட்டிருக்கிறான்...

'அந்த தன்மானச் சிங்கம்.. ஆண்குலச் செம்மல்.. கருணையே இல்லாத கங்காதரனா.. இவன்..?' என்று தன் கையைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டான் கார்த்திக்...

அந்த கண் சிவந்த கங்காதரன் எங்கே.. இப்படி கண்களில் பயத்தை தேக்கி வைத்திருக்கும் கங்காதரன் எங்கே...

இவன் கங்காதரனே அல்ல என்ற முடிவுடன்.. காணாமல் போய் விட்ட அந்தப் பழைய கங்காதரனின் நினைவு தந்த பெருமூச்சுடன் எழுந்து கொண்டான் கார்த்திக்...

அடுத்து யாரைப் பிடித்து சிதம்பரத்தின் குடும்பத்தை ஆட்டி வைப்பதென்று அவனுக்குத் தெரியவில்லை..



'அந்த மாளவிகாதான் அப்பவே சொன்னாளே.. இந்த கங்காதரனை ரௌடி ரமணன் அரட்டி வைச்சிருக்கான்னு.. அப்புறம் எப்படி இவன் ஆட்டம் போடுவான்..?' என்று நினைத்தவனின் மூளையில் மின்னல் வெட்டியது...

'அந்த ரௌடியைப் பத்தி விசாரிச்சப்ப அவ சந்தி விட்டாளே.. அந்த ரௌடிக்கும்.. இவனுக்கும் என்ன சம்பந்தம்..?'

எதற்கும் அந்த வழியிலும் போய் விசாரித்துப் பார்க்கலாம் என்று மறைமுக விசாரணையை ஆரம்பித்தான்..

"ரமணன் கொஞ்ச நாளா சென்னையில இல்லை சார்..."

ரமணனின் ஏரியாவிலிருந்த இன்ஸ்பெக்டர் சொன்னதில் அவனின் சந்தேகம் அதிகரித்தது...

ரமணன் ஒரு இடத்தில் தேங்கி நிற்கிறவனல்ல என்றாலும்.. கார்த்திக்கின் மனதை சந்தேகம் குடைந்து கொண்டேதான் இருந்தது...

தாதாக்களுக்கு உதவி செய்யும் குணமுண்டு என்பதை அவன் அறிந்தவன்தான்.. அவர்களின் முரட்டுத் தோற்றங்களுக்கு பின்னாலே ஈரமான மனதிருக்கும் என்பதை தெரிந்தவன்தான்.. அவர்களின் வன்முறைகளுக்கு பின்னணியில் ஏதேனும் ஓர் காரணம் புதைந்திருக்கக் கூடும் என்பதை உணர்ந்தவன்தான்..

ஆனாலும் கூட... எல்லாவழிகளும் அடைபட்டுப் போயிருக்கும் அது போன்ற சூழ்நிலையில் புத்திக்குத் தென்படும் அந்த ஒர் வழியிலும் முயற்சிசெய்து பார்த்தால் என்ன என்று அவன் நினைத்தான்...

'இவளோட பிரண்டோட அண்ணணோட..'

மாளவிகா சொன்ன மூலத்தை யோசித்துப் பார்த்தவனுக்கு தலை சுற்றி.. மூளை குழம்பியது...

'ஊஹீம்.. நம்ம மூளையை நாமளே கெடுத்துக்கக் கூடாது..' என்று அந்த யோசனையை கைவிட்டு விட்டான்..

அவள் சொன்னது உண்மைதானா என்று விசாரிக்க ஆரம்பிப்பதற்கு... நதி மூலம்.. ரிஷி மூலம்.. போல நட்பின் மூலம் தேவைப் பட்டது...

'கழுதையில.. அந்த ஒன்னை மட்டும் பிடிச்சு விசாரிச்சு வைக்காம.. கண்டதையும் யோசிச்சா.. மூளை குழம்பாம என்ன செய்யும்..?'

மாளவிகாவின் தோழியாக யாரைத் தேர்வு செய்து விசாரிப்பது என்பதில் அவனுக்கு அடுத்த குழப்பம் ஆரம்பமானது...

'எப்பப் பார்த்தாலும் கூட்டத்துக்கு மத்தியிலேயே இருந்து தொலைப்பா.. இதில யாரு அந்த பிரண்டுன்னு



அனைவரையும் விசாரித்து.. அவர்களிடம் விவரம் 'ஜொள்ளு'வதில் அவனுக்கும் உடன் பாடுதான்.. ஆனால் அதற்கான காலமும்.. நேரமும் தோது படாததினால் அந்த யோசனையை கைவிட்டு.. அடிக்கடி அவளுடன் தனியாக ஜோடி போட்டு அலையும் ஒற்றைப் பெண்குலத்தைப் பற்றி யோசித்துப் பார்த்தான்...

ஹாசினி மட்டும்தான் அவன் நினைவுக்கு வந்தாள்.. மாளவிகாவைப் பார்க்கவென்று சிதம்பரத்தின் வீட்டிற்கு அவன் வந்த சமயத்தில் ஹாசினி மாளவிகாவுடன் பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்திருக்கிறான்.. அவளின் தெற்றுப்பல் சிரிப்பில் நாட்டம் கொண்டவனாக அவளை மீண்டும்.. மீண்டும் கள்ளப்பார்வை பார்த்து. அதைக் கண்டு பிடித்த ஹாசினியின் ரகசிய முறைப்புப் பார்வைக்கும் ஆளாகியிருக்கிறான்.. இவனின் பார்வை பொறுக்க முடியாமல் கிளம்பிப் போனவளை காரில் பின் தொடர்ந்து போய் அவளின் வீட்டையும் கண்டு பிடித்திருக்கிறான்...

'அவகிட்டப் பேச்சு இது ஒரு சான்ஸ்...'

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடித்து விடப் போகும் உற்சாகத்துடன் அவளைத் தேடி அவளின் வீட்டிற்குச் சென்றான் அவனின் உத்தியோகத்தை கேட்ட ஹாசினியின் பெற்றோர் அவனுக்கு பலமான வரவேற்பையும்.. ருசியான டிபன் காபியையும் கொடுத்து அவன் வந்திருந்த நோக்கத்தை [illegible]க்கார்கள்...

அறிந்தவுடன் அவர்களின் மகளுடன் தனியாகப் பேச அனுமதியையும் கொடுத்து அவனை ஆனந்தப் பரவசத்தில் ஆழ்த்தினார்கள்...

தாடையைத் தடவியபடி ஹாசினியை ஏற இறங்கப் பார்த்த கார்த்திக்கின் பார்வையில் ஹாசினிக்கு எரிச்சல் வந்தது...

"எனக்கு எதுவும் தெரியாது சார்..?" அவள் படபடத்தாள்...

"இன்னும் நான் விசாரிக்கவே ஆரம்பிக்கலை.. அதுக்குள்ள முந்திக்கிட்டுச் சொல்றீங்க..?" மிதப்பாக கேட்டான் கார்த்திக்..

"நீங்க விசாரிக்க ஆரம்பிக்கிற மாதிரியும் தெரியலையே.." பதில் கொடுத்துக் கட்டினாள் ஹாசினி...

"கெட்டிக்காரங்கதான்.. நான் நேரடியாவே விசயத்துக்கு வர்றேன்.. ரமணனுக்கும்.. மாளவிகாவுக்கும் என்ன சம்பந்தம்..?"

கார்த்திக் இடுங்கிய கண்களுடன் கேட்ட போது.. ஹாசினிக்கு தூக்கி வாரிப் போட்டு விட்டது.. ஹாசினியின் முகத்தில் தெரிந்த அதிர்வை கார்த்திக் கண்டு கொண்டான்..

'நிஜமாவே.. அந்த ரெளடிக்கும்.. மாளவிகாவுக்கும் நேரடியான சம்பந்தம் இருக்கோ..'



குருட்டாம் போக்கில் செயல்பட ஆரம்பித்தவன் அதிர்ந்தே போனான்.. அவனுக்கு ரமணனின் பலத்தைப் பற்றியும் தெரியும்.. பராக்கிரமத்தைப் பற்றியும் தெரியும்..

"எனக்கொன்னும் தெரியாது சார்.. ரமணன்தான் மாளவிகாவின் பின்னாடி சுத்திக்கிட்டு இருந்தாரு.."

'மாமோவ்.. உன் பொண்ணு பிடிச்சாலும் பிடிச்சா.. புளியங்கொம்பில தொங்குற பேயையே பிடிச்சிருக்கா.. அதான் உன் பெரிய மருமகன் பேயைக் கண்டு விட்டதைப் போல அந்த அலறு.. அலறுகிறானா..?' சிதம்பரத்திடம் மானசீகமாக கேட்டுக் கொண்டான் கார்த்திக்..

"மாளவிகா தள்ளித்தான் நிப்பா.. ஆனாலும் ரமணன் பேச வந்தா அவாய்ட் பண்ணாம பேசிருவா.."

இந்த ஒரு தகவலே அவனுக்கு போதுமானதாக இருந்தது.. அந்த நூலைப் பிடித்து அவன் ரமணனின் எதிரிகள் முகாமில் விசாரித்ததில் மாளவிகாவை அண்ணியென்றே ரமணனின் ஆள்கள் அழைத்து வந்திருக்கும் விவரம் அவன் காதுகளை எட்டியது..

'என்னடா இது.. கிணறுவெட்டப் போனா பூதம் கிளம்புது.. இவனுக்காக ரமணனுக்கு நான் எதிரியாகணுமா..?'

# 40



சுழித்தோடும் ஆற்று நீரில் கால் வைத்து சிலிர்த்த மாளவிகா.. அங்கிருந்த பாறையில் அமர்ந்து.. அருகிலிருந்த பூங்கொத்தை ஒடித்து.. அதைக் கொண்டு நீருக்குள் அளைவதும்.. விடுவதுமாக இருந்தாள்...

"அதுசரி.. அம்மையாருக்கு காபியை அங்கேயிருந்து இங்கே கொண்டு வரனுமா..?" என்ற ரமணனின் குரல் கேட்டதும் திரும்பிப் பார்த்தாள்...

கையில் காபிக் கோப்பைகளுடன் சரிவான பாதையில் இறங்கி வந்து கொண்டிருந்தான் ரமணன்...

"உங்களை அங்கேயிருந்து.. இங்கே வரைக்கும் காபியை சுமந்துக்கிட்டு வரச் சொல்லி நான் சொன்னேனா..?" தலையை சரித்து அவனைப் பார்த்து ஒயிலாகக் கேட்டவளை ரசனையுடன் பார்த்தான் ரமணன்..

"வீட்டுக்குள்ள தேடிப் பார்த்தேன்.. காணோம்.. ஜன்னல் வழியாப் பார்த்தா.. அம்மணி நதியோரமா நடந்துக்கிட்டு இருந்தீங்க.. சரி.. நிலாச்சோறு சாப்பிடறதைப் போல.. ஆற்றுக் காபியைக் குடிச்சிடலாமுன்னு இங்கேயே



கொண்டு வந்திட்டேன்.." ரமணன் காபிக் கோப்பையை நீட்டினான்..

"ஆற்றுக் காபியா..?" என்ற கேள்வியுடன் காபியை வாங்கிக் கொண்ட மாளவிகாவின் விழிகளில் வியப்புத் தெரிந்தது...

"ம்ம்ம்.. நிலா வெளிச்சத்தில் நனைந்துக்கிட்டே சோறு சாப்பிட்டா.. அது நிலாச்சோறு.. ஆற்றுத் தண்ணியில காலை நனைச்சுக்கிட்டே காபியைக் குடிச்சா.. அது ஆற்றுக்காபிதானே..?" கேள்வி கேட்டான் ரமணன்...

"அட..! ஆமாம்.." ஆச்சரியத்துடன் நதிநீரில் கால்களை நனைத்து ஆட்டியபடி சூடான காபியை உறிஞ்சினாள் மாளவிகா...

"ஹௌ.. நைஸ்..!" அவளுக்கு அந்த வாழ்க்கை பிடித்திருந்தது..

ரமணன் எப்போது வெளியே போகிறான் என்றே அவளுக்குத் தெரியாது.. அவள் உறங்கி எழுந்திருக்கும் போது.. வீட்டுக்குள் பொருள்கள் பரத்தப்பட்டிருக்கும்.. அவளுக்கான புதிய சேலைகளை எடுத்து.. அவற்றுக்குப் பொருத்தமான ஜாக்கெட்டுகளை தைத்துக் கூட வாங்கி வந்து விட்டான்...

"எப்படி..?" என்று ஆச்சரியப் பட்டவளிடம்...

"நீ வந்தப்ப.. சேலைதானே உடுத்தியிருந்த.. அந்த ஜாக்கெட்டை அளவு கொடுத்து தைத்து வாங்கிட்டு வந்தேன்.." என்று இயல்பாகச் சொன்னான்...

பெயர் சொன்னால் தெரியுமளவிற்கு பயங்கரமாதி என்ற பெயர் கொண்டவன்.. அவளுக்கான உடைகளை தைக்கக் கொடுத்து வாங்கி வருகிறான் எனும் போது அவளுக்கு என்னவோ போல ஆகி விட்டது...

"நீங்க போய் இதையெல்லாம் செய்யணுமா..?" சங்கடப்பட்டாள்..

"வேற யாரு செய்வா..?" அவன் புருவங்கள் உயர்த்தினான்..

"இங்க எனக்கான டிரெஸ்தான் குமிஞ்சு கிடக்கே.. அது போதாதா..?"

"எனக்குப் போதாதுடி.. சேலையில உன்னைப் பார்த்தா தேவதை போல இருக்க மாலு..." ரசனையுடன் சொன்னான்..

"சுடிதாரில பாத்தா கோரமா இருப்பேனா..?" மாளவிகா வம்புக்கு இழுத்தாள்...

"தேவதைகள் சேலையில்தான் வருவாங்க..."

"நீங்க ரொம்பத்தான் கண்டீங்க..."

நொடித்துக் கொண்டாலும்.. ரமணனின் ஆசைப்படி சேலைகளைத்தான் கட்டுவாள் மாளவிகா.. குளித்து உடைமாற்றும் போதே இந்தக்கலர் அவனுக்குப் பிடிக்குமா என்று நினைக்காமலிருக்க அவளால் முடியவில்லை.. அவளைக் கண்டதும் அவன் கண்களில் தோன்றும்



மின்னலைக் கண்டால்தான் அவள் மனதுக்குள் நிறைவே வரும்.. இல்லையென்றால்.. இந்தச் சேலை நல்லாயில்லையே என்று தோன்றி விடும்...

"ஷாப்பிங் போறப்ப என்னையும் கூப்பிட்டுக்கிட்டுப் போகலாமில்ல..?" இயல்பாக ஒரு நாள் கேட்டு விட்டாள்..

அவளை ஊன்றிப் பார்த்த ரமணனின் விழிகளில் ஏதோ தெரிந்தது...

"என்ன..?" அவளுக்குப் புரியவில்லை..

"அப்படியே சென்னைக்கு தப்பிச்சு ஓடிடலாம்னு ஐடியா பண்றியா..?" ஒரு மாதிரியான குரலில் அவன் வினவிய போது...

'ஓடுவதா..? நானா..? இவனை விட்டா..? நெவர்..' என்று மாளவிகாவுக்கு தோன்றியது..

அந்த நினைவு வர.. அவனையே பார்த்தபடி காபியைக் குடித்து முடித்தாள் மாளவிகா.. அவள் பார்வையை உணர்ந்த ரமணன் புருவங்கள் உயர்ந்து இறங்கின...

"என்னடி..?" என்று கேட்டான்..

எதுவும் சொல்லாமல் குனிந்து காபிக் கோப்பையை நதிநீரில் கழுவி பக்கத்திலிருந்த பாறையில் வைத்தவள்.. நதிநீரைக் கைகளால் அள்ளி அவன் மேல் வீசினாள்...

பூத்தூறல்களாக.. அவன் மேல் விழுந்த நதிநீர் திவலைகளை கைகளால் முகத்தை மூடித் தடுக்க முயன்றபடி...

"ஏய்ய்.. மாளவிகா.." என்று சப்தமாக சிரித்தா[ன்] ரமணன்..

"உன்னை விட்டு
ஓடிப்போக முடியுமா..?
அது முடியுமா..?
என் உள்ளம் காணும்
கனவு என்ன தெரியுமா..?
உனக்குத் தெரியுமா..?"

மாளவிகா ஒற்றை விரலை உயர்த்தி... தலையை ஆட்டிப் பாடினாள்.. ரமணன் காபிக் கோப்பையை வைத்து விட்டு அவளைப் பிடிக்கத் தாவினான். அவன் கைகளுக்குள் அகப்படாமலிருக்க.. சேலை முந்தானையை இழுத்துச் செறுகி.. முன் கொசுவத்தை தூக்கிப் பிடித்தபடி.. ஆற்றோரமாக ஓடினாள் மாளவிகா. அவளின் சிவந்த கணுக்கால் களையும்.. முயல்குட்டி போன்ற பாதத்தையும்.. அதைச் சுற்றி வளைத்திருந்த கொலுசின் அழகையும் ரசித்தபடி அவளைப் பின் தொடர்ந்து ஓடிய ரமணனுக்கு கள்வெறி மூண்டது..

புள்ளி மானாக.. துள்ளிக் குதித்து ஓடிக் கொண்டிருந்தவளை விரைவு காட்டிப் பிடித்து விட்டான் ரமணன்.. மூச்சு வாங்க நின்றிருந்த மாளவிகாவின் முகத்தை கைகளில் ஏந்தி அவள் முகம் பார்த்தவனுக்கு ...னை அடக்கிக் கொள்ள முடியவில்லை



ஓடி வந்ததினால் கலைந்திருந்த அவள் முடியைக் கோதி விட்டவன்.. களைத்திருந்த அவள் முகத்தில் முத்தமிட்டான்... கண்மூடி அவன் கொடுத்த முத்தத்தை ஏற்றுக் கொண்ட மாளவிகா அவன் மார்பில் தலை சாய்த்தாள்.. சாய்ந்திருந்தவளின் முதுகின் மேல் பரவிப் படர்ந்தன ரமணனின் கைகள்.. அவளின் உச்சந்தலையில் முகம் புதைத்து அவனும் கண்மூடி நின்றான்...

அந்தி மறைந்து இருள் சூழும் வரை.. சுற்றுப்புறத்தின் நினைவை மறந்து இருவரும் அப்படியே நின்றிருந்தார்கள்.. ஏதோ நினைவில் கண்விழித்த மாளவிகா.. இருளைக் கண்டு அச்சம் கொண்டவளாய்..

"ரமணன்.." என்று பயத்துடன் அழைத்தாள்...

"ம்ம்ம்.." கண்விழித்த ரமணன் இருட்டி விட்டதை உணர்ந்தவனாக புன்னகை செய்தான்...

"ரொம்ப நேரமா.. அப்படியே நின்னுட்டோமில்ல..."

"ம்ம்ம்.."

"இருட்டைக் கண்டு பயந்துட்டியா..?"

"ம்ம்ம்..."

"உன் கூட நானிருக்கப்ப உனக்கெதுக்கு பயம்..?" ரமணன் மாளவிகாவிடம் கேட்டுக் கொண்டிருந்த அதே

நேரத்தில்.. சென்னையில் கார்த்திக்கிடம் ரமணனுக்கு எதிராக செயல்படும்படி மணி பேரம் பேசிக் கொண்டிருந்தான்...

"இதில யோசிக்க எதுவுமில்ல சார்.. நம்ம பசங்க சொன்னாங்க.. நீங்க கட்டிக்க இருந்த பொண்ண அவன் கூப்பிட்டுக்கிட்டு போயிட்டதா..."

மணியின் பார்வையிலிருந்த ஏளனம் கார்த்திக்கை உசுப்பி விட்டது...

"இன்னும் அது கன்பர்ம் ஆகலை மணி..."

"ஆ... எனக்குத் தெரியும் சார்.. சும்மா பாவ்லா காட்டாதீங்க... அவன் உங்களைப் பாடாய் படுத்தறான்னு எங்களுக்குத் தெரியும்..."

மணி அப்படி ஒரே சொல்லில்... கார்த்திக்கை ரமணனின் எதிரியாக உருவகித்ததில் கார்த்திக்கிற்கு உடன்பாடில்லை...

அவனே.. அடித்துப் பிடித்து.. அப்போதுதான் ஐபிஎஸ்யை பாஸ் பண்ணி அதிகாரமான ஒரு வேலையில் உட்கார்ந்திருக்கிறான்.. இனி அதை வைத்துத்தான் அவனின் வாழ்க்கையை அவன் வளப்படுத்திக் கொள்ள வேண்டும்.. அதை விட்டுவிட்டு ரமணனைப் போன்ற மிகப்பெரிய பின்புலம் உள்ளவனிடம் மோத அவனுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது..?



அவன் ஒன்றும்.. நாட்டை சீர்திருத்த வேண்டும் என்ற கொள்கைப் பிடிப்புடன் அந்த பதவியில் அமரவில்லையே.. குருட்டாம் போக்கில் பரிட்சை எழுதினான்.. அதிர்ஷ்ட தேவதை அவனைக் கண்திறந்து பார்த்தாள்.. ஐபிஎஸ் ஆகிவிட்டான்.. அப்படிப்பட்டவனைப் போய் ரமணனிடம் மோதச் சொன்னால்.. அவன் மோதிவிடுவானா..?

கார்த்திக்கிற்கு மாளவிகாவின் மீது ஒன்றும் காதல் பொங்கி விடவில்லையே.. அவளுடைய அக்காவை அவனுக்குக் கொடுக்க வேண்டும் என்று இருதரப்பு பெரியவர்களும் பேசினார்கள்.. சாதாரண வேலையிலிருந்த கார்த்திக்கும்.. பூமிகாவைத்தான் திருமணம் செய்து கொள்ளப் போகிறோம் என்ற நினைவில் அவளை மன்மதப் பார்வை பார்த்து வைத்தான்.. இருக்கும் வீட்டை விற்றாவது கோதாவரி கேட்ட சீர்வரிசைகளை சிதம்பரம் செய்திருக்க வேண்டும்.. அவர் அதை விட்டுவிட்டு பூமிகாவை கங்காதரனுக்கு திருமணம் செய்து வைத்து விட்டார்.. அதை கார்த்திக் எதிர்பார்த்திருக்கவில்லை..

அதற்குப் பின்னால் பலமுறை பூமிகாவை திருமண வீடுகளில் கார்த்திக் சந்தித்திருக்கிறான்.. அவளின் மண வாழ்க்கை சந்தோசமாக இல்லை என்பதை அறிந்து வைத்துக் கொண்டே.. அறியாப் பிள்ளை போல...

"எப்படியிருக்க பூமிகா..?" என்று கேட்டிருக்கிறான்..

அதற்கு அவள் அழுது புலம்பியிருக்க வேண்டும்..

உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடிய வில்லையே என்று தவித்திருக்க வேண்டும்.. நீயாக இருந்தால் இப்படிச் செய்வாய்ா..? என்னைக் கட்டிக் கொண்டவன் உன்னைப் போல இல்லை.. கொடுமை செய்கிறான் என்று கதறி அழுதிருக்க வேண்டும்..

அவள் அதையெல்லாம் செய்யாமல் நிர்மலமான புன்னகையுடன்..

“எனக்கென்ன குறை..? நல்லாயிருக்கேன்..” என்று புன்னகை செய்திருக்க வேண்டாம்...

அந்த மதுரா வளர்த்த வளப்பு.. என்று கோதாவரியைப் போல மனதிற்குள் பொறுமிக் கொண்ட கார்த்திக்.. அந்த நிலைமையிலும்.. அந்த நிமிர்வை பூமிகா கொண்டிருப்பாள் என்று எதிர்பார்த்திருக்க வில்லை...

போனது எல்லாம் போகட்டும் என்று கர்மசிரத்தையாக படித்து ஐபிஎஸ் ஆனவன் பேசாமல் தன் போக்கில் இருந்திருக்கலாம்.. அதை விட்டு விட்டு என்னைப் பார்.. என் பதவியைப் பார் என்று சிதம்பரத்தின் வீட்டுப் பக்கம் போயிருக்கக் கூடாது... அப்படிப் போனதினால் தான் அவன் மாளவிகாவின் இகழ்ச்சிப் பார்வையை சந்திக்க நேர்ந்தது.. அவளை முறியடிக்கும் முயற்சியாக அவளைத் திருமணம் செய்து கொள்ளும் முடிவை எடுக்க நேர்ந்தது.. அவள் அனைத்தையும்



முறியடித்து ரமணனுடன் கம்பி நீட்டி விடுவாள் என்பதை சத்தியமாக கார்த்திக் எதிர்பார்த்திருக்கவில்லை...

இப்படி அவனுடைய எதிர்பார்ப்புகளையெல்லாம் முறியடித்து விட்ட சிதம்பரத்தின் குடும்பத்தை என்ன செய்தால் தகும் என்ற கொலை வெறியோடு இருந்தவனை கிளப்பிவிட்டுக் கொண்டிருந்தான் மணி..

“அவன்தான்னு தெரியுதில்ல.. அப்புறமும் ஏன்சார் கையைக் கட்டிக்கிட்டு இருக்கீங்க..?”

“லுக் மணி.. நீ யார்கிட்டப் பேசிக்கிட்டு இருக்கேங்கிறதை நினைவில வைச்சுக்கிட்டுப் பேசு..?” சுள்ளென்று கோபம் காட்டினான் கார்த்திக்...

“என்கிட்ட இன்னாத்துக்கு கோவிச்சுக்கறிங்க சார்.. நீங்க கோவம் காட்ட வேண்டிய இடமே வேற...”

“என் வேலையைப் பாக்க எனக்குத் தெரியும்.. நீ இடத்தைக் காட்ட வேணாம்.. முதல்ல நீ இடத்தை காலி பண்ணு..” கறாராகத்தான் பேசினான் கார்த்திக்...

அவனுடைய கறாரை.. மணி திறந்து நீட்டிய சூட்கேஸ்.. அடித்து விரட்டி விட்டது...

கற்றை.. கற்றையாக அடுக்கப் பட்டிருந்த பணக் கட்டுக்கள் நிரம்பியிருந்த சூட்கேஸை பார்த்ததும் கார்த்திக் பிரமித்து விட்டான்...

"அண்ணாச்சிக்கு அடுத்த பேட்டை ரவுடியா நான் வரனும்னு நினைச்சிருந்தேன்சார்.. அண்ணாச்சி கூட வால் பிடிச்சுக்கிட்டு ஒட்டிக்கிட்டு இருந்தேன்.. அவரைப் போட்டுத் தள்ளினவனுக்கு துப்புக் கொடுத்தது யாருன்னு நினைக்கறிங்க.. நான்தான்.. அவரு போனா.. என் கனவு நிறைவேறிரும்னு நினைச்சேன்.. அந்த ரமணன் பய எல்லாத்திலயும் மண்ணை அள்ளிப் போட்டுட்டான்..."

"ஐ.. ஸீ.. அண்ணாச்சியை வெட்டினவன இவன் போட்டுத் தள்ளிட்டானாமே.."

"ஒரு வருசம் கழிச்சுத்தான் போட்டுத் தள்ளினான் சார்..."

"எப்பன்னாலும் செஞ்சு முடிச்சிட்டானில்ல..?"

"அதை நினைச்சு பயப்படறிங்களா சார்..?"

"யோவ்.. அது அப்புறம்.. உன்னை எப்படி விட்டு வைச்சான்..? அதை முதலிலே சொல்லு..."

"உங்க மனசில அப்படி வேற ஆசை இருக்கா சார்..?"

"விசயத்துக்கு வாய்யா..."

"அவனும்.. நானும்.. ஒன்னா.. மண்ணாப் பழகினவங்க.. அண்ணாச்சிக்கு நான் பலதடவை உயிரைக் காப்பாத்தி உதவியா இருந்திருக்கேன்..."

"கடைசியில துரோகியா மாறிட்ட..."



"அதிகாரம் கைக்கு வரனும்னா... யாரு வேணும்னாலும் துரோகியா மாறுவாங்க சார்..."

"அப்படிங்கறே..? ம்ம்ம்.. அதனாலேதான் உன்னை ரமணன் உயிரோடு விட்டு வைச்சிருக்கானா..?"

"நான் அவனை விட்டு வைக்க நினைக்கலே.. நிறைய தரம் போட்டுத்தள்ளப் பார்த்து தோத்திருக்கேன்..."

"உன்னால முடியாதது என்னால முடிஞ்சிருமா..?"

"முடியும் சார்.. நீங்க அவனை ஏதாவது ஒரு கேஸில மாட்டி விட்டு உள்ளே தள்ளுங்க.. உள்ள இருக்கிற என்னோட ஆளுக அவனைப் போட்டுத் தள்ளிருவானுக.."

கார்த்திக் யோசித்தான்.. இதில் அவன் வேலை பெரிதாக இல்லை.. ரமணன் முறைத்தால் உன் மீது புகார் வந்தது அதனால் என் வேலையை நான் செய்தேன் என்று சொல்லிக் கொள்ளலாம்.. ஆனால்.. ரமணனின் மீது என்ன புகார் சொல்வது..? அதுவரை.. அவன் மீது எந்த காவல் நிலையத்திலும்.. எந்தப் புகாரும் பதிவானதில்லை.. எதிலும் மாட்டிக் கொள்ளாமல் நேர்த்தியாக அவன் வேலைகளைச் செய்து முடிப்பதாக அவனை அறிந்தவர்கள் சொன்னார்கள்..

"இதில இரண்டு கோடி இருக்கு சார்.. வேலை முடிஞ்சா.. இன்னும் இரண்டு தர்றேன்.." மணி கார்த்திக்கின் வாயைப் பிளக்க வைத்தான்..

...வந்தவனாக பெட்டியை ...துக் கொண்டான்.. அன்றைய மாலைப் பேப்பரில் குண்டு வெடிப்பில் சம்பந்த பட்டிருக்கும் பயங்கரவாதியாக ரமணனின் புகைப்படம் வெளியானது...

## 41



"என்ன சொல்ற கிருஷ்ணா..?" ரமணனின் முகம் இறுகியது..

"ஆமாண்ணே.. அந்த கார்த்திக்.. அண்ணியோட குடும்பத்தில இருக்கிற அத்தனை பேரையும் விசாரணைங்கிற பேரில ஸ்டேசனில உட்கார வைச்சிட்டான்....," செல் போனில் சொன்னான் கிருஷ்ணன்....

"எதுக்காம்..?", ரமணன் கோபத்துடன் கேட்டான்...

"தாம்பரத்தில நடந்த குண்டு வெடிப்பில.. நீங்க சம்பந்தப் பட்டிருக்கீங்களாம்.. அண்ணி உங்களோட காதலிங்கிறதினால.. அவங்களுக்கும் இதில சம்பந்த மிருக்காம்.. அண்ணியோட குடும்பமும் இதில சம்பந்த பட்டிருக்குமோன்னு போலிஸ் துப்புத் துலக்குதாம்.." கிருஷ்ணன் விலாவாரியாக எடுத்து சொன்னான்..



"இப்படியெல்லாம் கதை கட்டினது யாருடா..?"

"அந்த கார்த்திக்தாண்ணே..."

"அவனுக்கு அவ்வளவு தைரியம் எங்கிருந்து வந்துச்சு..?"

"தைரியமில்லை அண்ணே.. பணம் வந்திருக்கு.."

"பணமா..?"

"ஆமாண்ணே.. ரெண்டு கோடி கைமாறியிருக்காம்.."

"ஓ... எனக்கு விலை வைச்சிருக்கானுகளா..? எவன்.. அவன்...?"

"மணி..!"

"நினைச்சேன்.. அவன்தான் இந்த குள்ள நரி வேலையைப் பண்ணுவான்னு.. இன்னும் அவன் அடங்கலையா..?"

"அடங்க மாட்டான்னே.. உங்களை உள்ளே தள்ளி போட்டுத் தள்ளிரலாம்னு பிளான் பண்ணியிருக்கானாம்.. அவனைப் போட்டுத் தள்ளிரனும்னு நம்ம பசங்க துடிக்கிறானுக அண்ணே.. செஞ்சிரலாமான்னு கேட்கத்தான் போன் போட்டேன்..."

"செஞ்சிருங்க.." ரமணன் போனை அணைத்து விட்டான்...

சுழித்தோடிக் கொண்டிருந்த காட்டாற்றைப் பார்த்தவனின் விழிகளில் துயரம் அப்பியிருந்தது..

'கடைசி வரைக்கும் புலியிலதான் சவாரி செய்தாகனுமா..?' கசப்புடன் நினைத்துக் கொண்டான்..

ஒரு பெருமூச்சுடன்.. ஆற்றங்கரையிலிருந்து வீட்டை நோக்கி நடந்தான்.. வீட்டுக்குள் நுழையும் போதே.. குழம்பு தாளிக்கும் வாசனை அவன் மூக்கில் நுழைந்தது.. சமையலறையிலிருந்து எட்டிப் பார்த்த மாளவிகா அவனைப் பார்த்ததும் கண்சிமிட்டிச் சிரித்தாள்..

'இவளின் குடும்பமே என்னால் ஸ்டேசனில் உட்கார்ந்திருக்குன்னு தெரிய வந்தா.. இவ என்னைப் பத்தி என்ன நினைப்பா..?' அவன் மனம் வலித்தது...

'வெறுத்திருவாளோ..' அவன் கண்மூடி.. தலையைப் பிடித்தபடி சோபாவில் சரிந்தான்...

சொல்லாமல் மறைத்து விடலாம்.. மாளவிகாவை அவன் கடத்திக் கொண்டு வந்து ஆறுமாதங்களகி விட்டன.. முதல் நாளுக்குப் பின்னால்.. அதைப்பற்றி மாளவிகா அவனிடம் பேசியதேயில்லை.. திரும்பிப் போகும் எண்ணமில்லாதவளாக.. அவனுடன் அந்த வாழ்க்கையில் அவள் ஐக்கியமாகி விட்டாள்.. அவனுடன் கழிக்கும் ஒவ்வொரு வினாடியையும் அனுபவித்து.. ரசித்துக் கழித்தாள்.. அவனும்.. அவளும் மட்டும் வசிக்கும்



அந்த வீடும்.. அந்த வாழ்வும்தான் நிரந்தரம் என்பது போல வாழ்ந்து வந்தாள்...

அவளிடம் ரமணன் அந்த விவரத்தை சொல்லாமல் விட்டுவிட்டால்.. அவளுக்காய் எதுவும் தெரியப் போவதில்லை.. அவனை விட்டுச் செல்லும் எண்ணமில்லாமல் வாழ்ந்து கொண்டிருப்பவளிடம் அந்த விவரத்தைச் சொல்ல வேண்டாம் என்றுதான் ரமணனின் அறிவு அவனை எச்சரித்தது.. ஆனால் அவனின் மனம் அதை மறுத்தது..

அவளைப் பெற்றவர்களும்... கூடப் பிறந்தவனும்.. ரமணனுடன் அவள் சம்பந்தப் பட்டு விட்ட ஒரே காரணத்துக்காக துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.. அதையறியாமல் பூவாய் சிரித்து.. மகிழ்வுடன் அவனுக்காக அவள் சமைத்துக் கொண்டிருக்கிறாள்..

அப்படிப்பட்ட நேசம் கொண்டவளிடம் அவளின் குடும்பத்திற்கு நடந்து கொண்டிருக்கும் கொடுமையை மறைத்து வாழ்வதென்பது ரமணன் செய்யும் காரியம் அல்லவே..

ரமணன் பெருமூச்சுடன் விட்டத்தைப் பார்த்தான்... அவனுக்குத் தெரியும்.. அந்த விவரத்தை அவன் சொல்லிய அடுத்த நொடியிலேயே.. அவனை விட்டு அவள் பிரிந்து விடுவாள் என்பது...

சொன்னேன் பார்த்தீங்களா..' என்று கேட்பாள்.. எங்களைப் போன்ற வாழ்க்கை முறை உடையவர்கள் உன்னைப் போன்ற வாழ்க்கை முறை உடையவனுடன் சகவாசம் வைத்துக் கொண்டால் இதுதான் நடக்கும் என்று பொங்குவாள்.. உன்கூடப் பழகிய பாவத்திற்கே என் குடும்பத்தை ஸ்டேஷனில் கொண்டு போய் உட்கார வைத்து விட்டார்கள்.. இன்று உன்னைக் கல்யாணம் செய்து கொண்டால் என்குடும்பம் என்ன கதிக்கெல்லாம் ஆளாகுமோ என்று கேள்வி கேட்பாள்...

அது அத்தனையையும் ரமணன் தாங்கிக் கொண்டுதான் ஆக வேண்டும்.. அவள் பிரிவைக் கேட்டால் அதையும் கொடுத்துத்தான் ஆக வேண்டும்..

'இது எனக்கான சாபம்..' கண் சிவந்தான் ரமணன்..

'எனக்கு எதுவும் நிலைக்காது.. முதலில் அம்மா.. அடுத்து அண்ணாச்சி.. இப்ப உயிரோட இவ பிரியப் போறா.. இத்தனையையும் தாங்கிக்கிட்டு நான் வாழனும்..' தலையில் கைவைத்து மனதுக்குள் அவன் குமுறினான்...

"சாப்பாடு ரெடி.. சாப்பிட வரலாம்..."

தட்டில் கரண்டியை வைத்து அடித்தபடி சமையலறையிலிருந்து வெளியே வந்த மாளவிகா அவன் அமர்ந்திருந்த கோலத்தைக் கண்டதும் தட்டை நழுவ விட்டாள்...



"ரமணன்.." அவனருகில் பாய்ந்து ஓடி.. மண்டியிட்டு அமர்ந்து அவன் முகம் பார்த்தாள்...

கலங்கிச் சிவந்திருந்த அவனின் கண்களும்.. கலைந்திருந்த அவனின் தலைமுடியும்.. நடக்கக் கூடாத ஏதோ ஒன்று நடந்து விட்டதை அவளுக்கு உணர்த்தின..

"என்ன ஆச்சு ரமணன்..?" அவன் தோள் பிடித்து உலுக்கினாள்...

"மாலு.." தன்னை திடப் படுத்திக் கொண்ட ரமணன் முழுவிவரத்தையும் சொல்லி விட்டான்..

'இதோ விலகப் போறா.. இப்ப வெளியில ஓடிருவா.. என்னை வீட்டில கொண்டு போய் விடுடான்னு கத்தப்போறா...'

ரமணன் அவளின் முகம் பார்க்கும் தெம்பில்லாமல் எழுந்துநின்று விட்டான்.. அவளை சென்னையில் கொண்டு போய் விட்டு விட வேண்டும் என்ற நினைவோடு வெளியே பார்த்தான்...

மாளவிகாவிடமிருந்து எந்தப் பேச்சும் வராமலிருக்கவும்.. மயங்கி விட்டாளோ என்ற பதட்டத்துடன் அவளைப் பார்த்தான்.. அவள் மயங்கியிருக்கவில்லை.. முழங்கால்களைக் கட்டித் தரையில் அமர்ந்து.. தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தாள்...

"மாளவிகா.." ரமணனின் குரல் நடுங்கியது..

"என்ன செய்யலாம்..? இதைப் பத்தி நீங்க என்ன யோசிச்சிருக்கீங்க.." என்று அவள் கேட்டதும்.. அவளுக்கு திகைப்பாகி விட்டது...

"இதைச் செய்தது கார்த்திக்.. செய்யவைத்தது மணி.. அவனை போட்டுத்தள்ளப் போறதா கிருஷ்ணன் சொன்னான்.."

"எந்த அடிப்படையில உங்க பேரை இதில இன்வால்ப் பண்ணியிருக்காங்கன்னு கேட்டிங்களா..?"

அவள் அவளுடைய குடும்பத்தைப் பற்றி விசாரிக்காமல் அவனைப் பற்றி விசாரித்ததில் அவனின் ஆச்சரியம் அதிகமானது..

"இன்னும் அதைப் பத்தி எதையும் கேட்கலை..."

"முதல்ல அதைத் தானே நீங்க செய்திருக்கனும்..?"

"மாளவிகா.. அங்கே மாட்டிக்கிட்டு இருக்கிறது உன் குடும்பம்.."

"நம்ம குடும்பம்ன்னு சொல்லுங்க..."

மாளவிகாவின் தீர்க்கமான குரலில் ரமணனின் உடலில் புதுரத்தம் பாய்ந்தது.. நம்ப முடியாத பிரமிப்புடன் அவன் மாளவிகாவைப் பார்த்தான்...



'மாளவிகாவா இப்படிச் சொல்கிறாள்...?'

"என்ன அப்படிப் பார்க்கறீங்க.. சந்தோசம் வந்தா கூடச் சேர்ந்து சிரிக்கிறதுக்குப் பெயர்தான் காதலா..? கஷ்டம் வந்தா கூடச் சேர்ந்து நிற்கிறதுக்குப் பெயர்தான் காதல்..."

"மாலு.." ரமணன் நாத்தழுதழுத்தான்..

"அப்பா.. அம்மா.. அஸ்வின்னு.. நம்ம குடும்பத்து ஆளுக கஷ்டப்படறாங்கதான்.. ஆனா.. அதைப் பார்த்துக் கிட்டு நீங்க சும்மா இருப்பீங்களா..? அதில இருந்து அவங்களை வெளியே கொண்டு வந்திர மாட்டிங்களா..?"

"செய்வேண்டி.. கட்டாயம் செய்வேன்.."

"எனக்கு அந்த நம்பிக்கையிருக்கு.."

"நீ என்ன சொல்வியோன்னுதான் கலங்கிப் போயிருந்தேன்..."

"எதையும் சொல்ல மாட்டேன்.. அங்கே கஷ்டப் படறது உங்க மாமனார்.. மாமியார்.. மச்சினன்.. உங்க குடும்பம்.. எதைச் செய்து அவங்களைக் காப்பாத்தனுமோ.. அதைச் செய்ங்க.. அதை விட்டுட்டு கலங்கிப் போய் நிற்காதீங்க.. என் ரமணன் அஞ்சா நெஞ்சன்.. கலங்கி நிற்க மாட்டார்..."

ரமணன் உணர்ச்சி வசப்பட்டவனாக அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்...

'நன்றி தெய்வமே.. இவள் என்னை விட்டுப் போகமாட்டான்னு நிருபிச்சுட்டா.. இவளோட அன்பையும்.. காதலையும் எனக்கு நிலைக்க வைச்சே.. அதுக்கு உனக்கு.. என் நன்றி...'

அவளை இறுக்கியிருந்த கைகளுக்குள் சொந்தத்துடன் பிணைந்து நின்ற மாளவிகாவைப் பார்க்கப் பார்க்க அவனுக்குள் புது ரத்தம் பாய்ந்தது..

அதற்குப் பின்னால் ரமணன் மிக வேகமாக செயல்பட்டான்.. சென்னையிலிருந்த அவனின் நெருங்கிய நண்பர்களுக்குத் தகவல் போனது.. மாளவிகாவின் குடும்பத்தைக் காக்க வக்கீல் கார்த்திக்கைத் தேடிப் போனார்...

"நான் அட்வகேட் பரந்தாமன்.."

கார்த்திக் அரண்டு விட்டான்.. வந்திருப்பது சென்னையில் கலக்கிக் கொண்டிருக்கும் கிரிமினல் லாயர் என்பதில் அவனுக்குள் உதறலெடுத்தது.. இருந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் கெத்தாக இருக்க முயன்றான்..

"ஸோ.. வாட்..?"



"நிறைய இருக்கு சார்.. எதுக்காக இவங்களை ஸ்டேசனுக்கு கொண்டு வந்திருக்கீங்க..?"

சிதம்பரத்தின் குடும்பத்தைக் காட்டி பரந்தாமன் கேட்ட போது.. அவரை அனுப்பியது யாராக இருக்கக் கூடும் என்ற கேள்வியுடன் அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்..

"வந்திருக்கது.. டாப் மோஸ்டில இருக்கிற லீடிங் லாயர்ப்பா..."

"அவரு எப்படிடா நமக்காக வந்தாரு..?"

"வேணும்னா.. அவரை வேணாம்னு திருப்பி அனுப்பிருங்க..."

"எதுக்காகடா கோபிச்சுக்கறே..?"

"பின்னே என்னப்பா..? இப்ப இருக்கிற நெருக்கடியில இவரை யார் அனுப்பினாங்கங்கிற ஆராய்ச்சி நமக்கு அவசியமா..?"

"அதானே.. உங்கப்பாவுக்கு வாயைத்திறக்கறதுக்கு முன்னாலே யோசிக்கனும்கிற எண்ணமே கிடையாதுடா அஸ்வின்..."

அவர்கள் தாழ்ந்த குரலில் வழக்கடித்துக் கொண்டிருக்க.. கார்த்திக் அசிரத்தையாக முகத்தை வைத்துக் கொண்டு..

சென்னைக் கோயரி பண்ணக் கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கோம்.." என்று சொன்னான்...

"கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கேன்னு சொல்லுங்க.."

"வாட் டு யு மீன்..?"

"நீங்க இதை சொந்தப் பகைக்காக செய்கிறீங்கன்னு சொல்கிறேன்.."

"அதை கோர்ட்டில வந்து சொல்லுங்க..."

"அது எதுக்கு வேஸ்டா..? இப்பவே இதை பேசித் தீர்த்துக்கலாம்.. இவங்க பெண்ணை நீங்க மேரேஜ் பண்ணிக்க நினைச்சீங்க.. அது முடியலைங்கிறதினால இவங்களை இங்கே கொண்டு வந்து உட்கார வைச்சிருக்கீங்க..."

"வார்த்தைகளை அளந்து பேசுங்க மிஸ்டர் பரந்தாமன்.."

"ஏன் சார்..? அதைக் கொட்டிட்டா.. சூட்கேஸில் அள்ள முடியாதா..?" பரந்தாமன் இடக்காக வினவ...

'இந்த ஆளுக்கு எப்படி சூட்கேஸைப் பற்றித் தெரியும்..?' என்று மிரண்டு போனான் கார்த்திக்...

"ஊருக்கே தெரியும் கார்த்திக்.. விஜிலென்சில் உங்க வீட்டில நுழைஞ்சு.. சூட்கேஸில இருக்கிற ரெண்டு கோடியை கைப் பத்திட்டாங்க..." என்றார் பரந்தாமன்...



"என்னது.."

அடிமேல் அடிவாங்கினாலும்.. அந்த நிலைமையில் குற்றத்தை ஒப்புக் கொண்டால்.. பின் விளைவுகள் மோசமானதாக இருக்கும் என்ற நினைவில்..

"அந்த ரௌடி வேலையைக் காட்டிட்டானா..? என் வீட்டில் சூட்கேஸை வைச்சு.. விஜிலென்ஸ்க்கு தகவல் கொடுத்தா.. அந்தப் பணத்தை நான்தான் யார்கிட்ட-யிருந்தோ வாங்கினேன்னு ஆகிருமா.. இதை கோர்ட்டில் பார்த்துக்குவேன்.. நீங்க இப்ப கிளம்புங்க.. இந்தக் குடும்பத்துப் பெண்.. பயங்கரவாதி ரமணன் கூட தொடர்பா இருந்திருக்கா.. அவளுக்கும் குண்டு வெடிப்பில சம்பந்தமிருக்கு.. அதனால.. இவங்களுக்கும் அதில சம்பந்தமிருக்க சான்ஸிருக்குங்கிற சந்தேகத்தின் பேரில விசாரிச்சுக்கிட்டு இருக்கோம்.." என்று கதை பிணைந்தான் கார்த்திக்...

பொறுமையாக அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த பரந்தாமன்.. தோள்களைக் குலுக்கி...

"நீங்க பேசாம கதை எழுதப் போகலாம்.." என்றார்..

"மைன்ட் யுவர் வொர்டுஸ்.."

"பர்ஸ்ட்.. மைண்ட் யுவர் பிஹேவியர்.. நீங்க சொல்கிற ரமணன் பயங்கரவாதியில்லை.. சொஸைட்டியில மதிப்பும்.. மரியாதையுமா இருக்கிற

அப்புறம் மாளவிகா அவரோட தொடர்பில இருக்கிறவங்க இல்ல.. அவரோட மனைவி.. அதுக்கப் புறமா.. நீங்க சொல்கிற குண்டு வெடிப்புக்கும் அவங்களுக்கும் சம்பந்தமில்ல.. அந்தச் சம்பவம் நடந்தப்ப.. மிஸ்டர் ரமணன் டெல்லியில் இருக்கிற தொழில் துறை மந்திரிகூட பேசிக்கிட்டு இருந்தார்.. அதுக்கான வீடியோ கேசட்டே எங்ககிட்ட இருக்கு.."

"வாட்..?"

"யெஸ்.. ரமணன் மாஜிஸ்ட்ரேட் முன்னாலே ஆஜராகி அவருக்கும்.. மாளவிகாவுக்கும் முன்ஜாமின் வாங்கிட்டார்.. அவர் மேல இருக்கிற குற்றச்சாட்டு பொய்ன்னு கோர்ட்டில நாங்க புரூவ் பண்ணுவோம்.. இப்பவாவது இவங்களை என்கூட அனுப்பி வைக்கறீங்களா..?"

பரந்தாமன் கேட்டுக் கொண்டிருந்த போதே.. கார்த்திக்கின் செல்போன் அலறியது.. எடுத்துப் பேசியவன் முகம் வியர்த்தான்.. பேசி முடித்தவனிடம்...

"கமிஷனர் கொடுத்துக் கட்டினாரா..?" என்று கிண்டலாகக் கேட்டார் பரந்தாமன்...

பல்லைக் கடித்தபடி.. பதில் பேசாமல் சிதம்பரத்தின் குடும்பத்தை அனுப்பி வைத்து விட்டான் கார்த்திக்.. அவர்கள் வெளியேறிக் கொண்டிருந்த போது.. விஜிலென்ஸைச் சேர்ந்தவர்கள் உள்ளே வந்தார்கள்..



"உங்க கறை படியாத கையை கோர்ட்டில் புரூவ் பண்ணுங்க.." பரந்தாமன் விஜிலென்ஸை கைகாட்டி விட்டு கிளம்பினார்...

'பணமும் போய்.. விஜிலென்ஸீக்கும் பதில் சொல்லியாகணுமா..?' கார்த்திக்கிற்கு நெஞ்சு வலி வந்துவிட்டது...

அவனைக் குடைந்து விட்டு விஜிலென்ஸ் கிளம்பிய போது.. மணியின் பிணம் கூவத்தில் மிதப்பதாக அவனுக்கு தகவல் வந்தது...

'அடுத்தது நானா..?' கார்த்திக் நடுங்கிப் போனான்..

"அறிவிருக்கவன் அந்த ரமணனைப் பகைச்சுக்கு வானா..?" கோதாவரி கொதித்து விட்டாள்..

உப்பைத் தின்றவன் தண்ணீரைக் குடித்து தப்பிக்கலாம்.. உப்பு மூட்டையையே முழுங்கினவனுக்கு.. குடிக்கக் கிடைத்த ஒரு துளி தண்ணீரும் கடல் தண்ணீராக இருந்தால் என்ன பண்ணுவான்..?

கார்த்திக் மார்பை பிடித்துக் கொண்டு சரிய.. அவனை மருத்துவ மனையில் சேர்த்தார்கள்..

"இந்த சின்ன வயசிலேயே ஹார்ட் அட்டாக்காம்.." என்று சொன்னார் சிதம்பர...

"அவனுக்கு ஹார்ட் இருக்கா..?" சந்தேகம் கேட்டான் அஸ்வின்..

...கொண்டிருந்த போது.. அவர்கள் வீட்டு வாசலில் வெளிநாட்டுக் கார் ஒன்று வந்து நின்றது.. ரமணனுடன் மாளவிகா காரிலிருந்து இறங்கி நின்றாள்...

## 42



நாதஸ்வர இசை ஒலித்துக் கொண்டிருந்த அந்த திருமண மண்டபத்தில் கடுகு விழுகக் கூட இடமில்லாத வகையில் கூட்டம் கூடியிருந்தது...

"பொண்ணுக்கும்.. மாப்பிள்ளைக்கும் ரிஜிஸ்டர் மேரேஜ்தான் ஆகியிருக்கு.. அதையும்.. தேவையில்லாத கேஸில் மாட்டி விட்டுட்டாங்கன்னு அவசர.. அவசரமா பண்ணியிருக்காங்க.. முறைப்படி நீங்க கல்யாணம் செய்து கொடுத்தாத்தான் உங்க பெண்ணை என் பெண்டாட்டியா நான் கூப்பிட்டுக்கிட்டுப் போவேன்.. இல்லேன்னா.. உங்க பெண்ணா உங்க கூடவே இருக்கட்டும்ன்னு மாப்பிள்ளை சொல்லிட்டார்.. நாங்க கொடுத்து வச்சிருக்கனும்.. இப்படியாப்பட்ட மாப்பிள்ளை எங்களுக்கு கிடைக்கனும்ன்னு இருக்கு..."



மண்பத்தில் வந்திருந்த உறவினர்களிடம் மாற்றி மாற்றி இதையே சொல்லிக் கொண்டிருந்தார் சிதம்பரம்..

"அவருக்கு பாரின்லே வேலை கிடைச்சதாம்.. அப்ப போக முடியலையாம்.. இப்ப சொந்தமாவே அங்கே கம்பூட்டர் கம்பெனியொன்னை ஒபன் பண்ணிட்டாரு எங்க அத்தான்.. மேரேஜ் முடிஞ்சதும்.. அக்காவோட பிளேனில் பறக்கப் போறாரு.." முகம் மலர நண்பர்களிடம் பெருமையடித்துக் கொண்டிருந்தான் அஸ்வின்...

"ஸோ.. உனக்கும் அங்கே வேலை ரெடியாயிருக்கும்..?" நண்பன் பொறாமைப் பட்டான்...

"யெஸ்.." பூரிப்புடன் சொன்னான் அஸ்வின்...

"சென்னையில அஞ்சாறு பங்களா மாப்பிள்ளை பேரிலதான் இருக்கு.. அதில ஒன்னை உங்க பெயருக்கு மாத்திட்டேன்னு சொல்லி.. எழுதிக் கொடுத்திட்டாரு.. நாங்க இப்ப அங்கேதான் குடி போயிட்டோம்.. அஸ்வின் அப்பா வேலைக்கு வி.ஆர் கொடுத்திட்டாரு.. மாப்பிள்ளை தான் அவருக்கு ஷாப்பிங் காம்லெக்ஸே வாங்கிக் கொடுத்திட்டாரே.. அஸ்வினுக்கு கார்கூட வாங்கிக் கொடுத்திருக்கார்.." மதுரா தன் பங்குக்கு பெருமை பீற்றல் களஞ்சியமானாள்...

குறித்த நேரத்தில்... மாளவிகாவின் கழுத்தில் தாலியைக் கட்டினான் ரமணன்.. சிதம்பரத்தின் குடும்பம் அட்சதை போட்டு வாழ்த்துச் சொல்லியதில் அவன்

முகத்தில் மலர்ச்சி வந்தது.. நெஞ்சம் நிறைய மனைவியை நோக்கினான்..

'இவளால்தான்.. இது சாத்தியமானது..' அவன் மனதில் பிரியம் பொங்கியது...

அன்றைய இரவில்.. அவனிடம் தனித்து மாட்டிக் கொண்ட மாளவிகாவிடம்.. முரட்டுத்தனமாக நெருங்கினான் ரமணன்.. அவள் வெட்கத்துடன் பின் வாங்கினாள்..

"நீ தப்பிச்சு ஓட முடியாதுடி.. இது பர்ஸ்ட் நைட் ரூம்.." தாகத்துடன் சொன்னான் ரமணன்..

"நினைப்பிருந்தாச் சரி.. அதை விட்டுட்டு.. ஹீரோயினை ஸ்வாஹா பண்ணப் போற வில்லனைப் போல பில்ட் அப் பொடுத்தா எப்படி..?" வெட்கத்துடன் கேட்டாள் மாளவிகா..

"உன்கிட்ட அன்னைக்கே சொன்னேனா இல்லையா..?"

"என்னைக்கு..?" மாளவிகா திருதிருத்தாள்...

"அதாண்டி.. நாம காட்டுப் பங்களாவில குடியிருந்தோமே.. அங்கே முதல் நாளில நீ என்னை ஸ்வாஹா பண்ண நினைச்சியே.." ரமணன் கண்சிமிட்ட மாளவிகா வெட்கிப் போனவளாக.. அவன் கையைக் கிள்ளினாள்...



"அசிங்கமா பேசாதீங்க..."

"அதை விடுடி.. அன்னைக்கு நான் சொன்னேன்.. நினைவிருக்கில்ல..?" ரமணன் புருவங்களை உயர்த்தினான்...

மாளவிகாவுக்கு நினைவு வந்தது...

"என்னைக்கு உன் வாயாலே.. நான்தான் உன் புருசன்னு உன் அப்பா.. அம்மாவுக்கு துணிச்சலா அறிமுகப் படுத்தி வைக்கறியோ.. அன்னைக்குத்தான் உன்னை நான சூறையாடுவேன்.. அப்ப நீ தெரிஞ்சுக்குவடி.. இந்த ரமணன் உன்னை எந்த அளவுக்கு தேடியிருக்கான்னு.."

அன்று அவன் சொன்ன வார்த்தைகளின் நினைவில் நின்றவளை.. முரட்டுத்தனமாய் ஆக்கிரமித்து சூறையாடினான் ரமணன்.. அவனின் முரட்டுத்தனத்தில்.. அவளுக்கான அவனின் தேடுதலை உணர்ந்து கொண்ட மாளவிகா மூச்சுத்திணறிப் போனாள்.. அவள் கொடுக்க வேண்டிய அவசியமே இல்லாமல் அந்தக் கள்வன் அவளை முழுதாக எடுத்துக் கொண்டான்.. அத்து மீறிய அவனின் ஆக்ரமிப்பில் மாளவிகா கலைந்து.. கலந்து.. அவனின் மூழ்கி.. காணாமல் போனாள்.. அவன் அவள்மேல் படர்ந்து.. பரவி.. அவனுக்கு வேண்டியதைக் களவாடிக் கொண்டான்...

மறுநாளின் விடியலின் போது.. ஈரத் தலையைத் துவட்டிக் கொண்டிருந்தவளின் பின்னால் வந்து

நின்று கட்டியணைத்துக் கொண்டவன்.. காதோடு கிசுகிசுத்தான்..

"இப்பவாவது.. என் மனசும்.. உடம்பும்.. உன்னை எந்த அளவுக்கு தேடியிருக்குன்னு புரிஞ்சுக்கிட்டியா..?"

சூடான அவனின் மூச்சுக் காற்றின் வெப்பத்தில் அவள் மயங்கிப் போனவளாக கண்மூடி அவனுக்கு இசைந்து கொடுத்தாள்..

அந்த வார இறுதியில்.. ரமணன் மாளவிகாவுடன் வெளிநாட்டிற்குப் பயணமானான்..

"அண்ணே.." என்று கண்கலங்கின கிருஷ்ணனைக் காட்டி.. "இவர்தான் அடுத்த அண்ணாச்சி.." என்று மற்றவர்களுக்கு உணர்த்தி வைத்தான் ரமணன்..

ரமணனின் வலது கையாக இருந்த கிருஷ்ணனின் கட்டுப்பாட்டிற்குள் அவர்களின் குழு இடம் பெயர்ந்தது...

"இது புலிமேல சவாரி கிருஷ்ணா.. அதனாலதான் இதைக் கலைக்காம உன் கையில ஒப்படைச்சிருக்கேன்.. நீ இதுக்கு தலைவனா இரு.. ஆனா நல்லவனா இரு.. உதவின்னு யாரு வந்தாலும் உன் உயிரைக் கொடு.. ஆனா.. மத்த உயிர்களுக்கு தீங்கு நினைக்காத எந்த உயிரையும் நீ எடுக்காதே.. போட்டுத் தள்ள வேண்டிய கொடுமைக் காரண போட்டுத்தள்ளு.. வாழ வைக்க வேண்டியவங்களை வாழவை.. இதைத்தான் அண்ணாச்சி செஞ்சுக்கிட்டு இருந்தாரு.."



"நீங்க எங்கே போறீங்கண்ணே.."

"இந்த அடையாளம் இல்லாத வெளிநாட்டுக்குப் போறேன்.. என்னை நம்பி.. நல்ல குடும்பத்தில பிறந்து வளர்ந்த ஒருத்தி வந்திருக்கா.. மிச்சமிருக்கிற வாழ்க்கையை அவளுக்காக நான் வாழப் போக வேணாமா..?"


"போயிட்டு வாங்கண்ணே.. இனிமே எங்களை நாங்க பார்த்துக்கறோம்..."

அவனுக்காக உயிரையும் கொடுக்கத் துணியும் அவனின் கூட்டம் அவனை விடுதலை செய்து அனுப்பி வைத்தது.. ரமணன் மாளவிகாவுடன் விமானத்தில் ஏறினான்.. எல்லோருக்கும் கையாட்டிவிட்டு.. அவர்கள் விமானத்தில் நுழைந்து விட்டார்கள்.. விமானம் கிளம்பி புள்ளியாகி.. வானில் மறைந்தது...

கை தொட்ட கள்வனுடன்.. அவனின் மனம் தொட்ட மாளவிகா வெளிநாட்டிற்குப் பறந்து விட்டாள்.. சூழ்நிலையின் கைதியாக துப்பாக்கியை கையிலெடுத்த அந்த முரடன்.. அவளின் அன்பின் கைதியாகி.. அவளுக்கு கட்டுப்பட்டு.. அவளை கைபிடித்து அவனின் அடையாளத்தையே மாற்றிக் கொண்டு வெளிநாட்டிற்கு பறந்து விட்டான்..

இனி அவன் வாழ்வில் வன்முறையின் நிழல் படியாது.. அவனுக்காக அண்ணாச்சி கொடுத்த படிப்பு

அவன் கையில் இருக்கிறது.. அதை வைத்து சாதிக்க எதிர்காலத் திட்டங்கள் ஏராளமாக அவன் மூளையில் இருக்கின்றன.. வாழ்வு அவனுக்கு வசப்பட்டு விட்டது அவன் வாழ்ந்து காட்டுவான்...



முடிந்தது...